## தமிழக வரலாறு துவக்க காலம் முதல் கி.பி. 1336 வரை

**அலகு I:**

தமிழ்நாட்டின் புவியியல் கூறுகள் - சான்றுகள் - சங்க காலம் - அரசியல், சமூக மற்றும் பொருளாதார நிலை - சங்க இலக்கியங்கள் - சங்கம் – களப்பிரர்கள் காலம்.

**அலகு II:**

பல்லவர்கள் காலம் - தோற்றம் – முதலாம் மகேந்திரவர்மன் – முதலாம் நரசிம்மவர்மன் - கலை மற்றும் இலக்கியத்திற்கு பல்லவர்கள் ஆற்றிய பங்களிப்பு.

**அலகு III:**

சோழர்கள் – முதலாம் பராந்தகரன் - முதலாம் இராஜராஜா, முதலாம் இராஜேந்திரன் - சாளுக்கிய சோழர்கள் – குலோத்துங்கன் III- சோழர் நிர்வாகம் - சமூக, பொருளாதார மற்றும் சமய நிலைமைகள் – கலை மற்றும் கட்டிடக்கலைக்கு சோழர்கள் ஆற்றிய பங்களிப்பு.

**அலகு IV:**

பாண்டியர்கள் - முதல் பாண்டியப் பேரரசு - இரண்டாம் பாண்டியப் பேரரசு - கலை மற்றும் கட்டிடக்கலைக்கு பாண்டாக்களின் பங்களிப்பு.

**அலகு V:**

தமிழ் நாட்டில் முஸ்லீம் படையெடுப்பு - மாலிக் கஃபூரின் படையெடுப்பு - மதுரை சுல்தானியத்தின் எழுச்சி - முஸ்லிம் ஆட்சியின் தாக்கங்கள்.

**Sources:**

1. N. Subramanian, *Original sources for the History of Tamil Nadu* (Udumalaipettai: Ennes Publications, 1994).

2. K.K. Pillay, *Historical Heritage of Tamils* (Chennai: M.J.P. Publishers, 1979).

3. K.A. NilakandaSastri, *The Cholas* (Chennai: University of Madras, 1987).

4. டி.வி.சதாசிவ பண்டாரத்தார், *பிற்காலச் சோழர்களின் வரலாறு* (அண்ணாமலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1967).

5 ஜே. தர்மராஜ், *தமிழக வரலாறு* (அரசியல் சமுதாயம், பொருளாதாரம், பண்பாடு) (சங்ககாலம் முதல் 2017 வரை) (சிவகாசி: டென்சி பப்ளிகேஷன்ஸ், 2021).

6. K. Rajayyan, History of Madurai, Madurai University, Madurai, 1974

## Contents

**அலகு I:**

தமிழ்நாட்டின் புவியியல் கூறுகள்

சான்றுகள்

சங்க காலம்

அரசியல், சமூக மற்றும் பொருளாதார நிலை

சங்க இலக்கியங்கள்

சங்கம்

களப்பிரர்கள் காலம்.

**அலகு II:**

பல்லவர்கள் காலம் - தோற்றம்

முதலாம் மகேந்திரவர்மன்

முதலாம் நரசிம்மவர்மன்

கலை மற்றும் இலக்கியத்திற்கு பல்லவர்கள் ஆற்றிய பங்களிப்பு.

**அலகு III:**

சோழர்கள்

முதலாம் பராந்தகரன்

முதலாம் இராஜராஜா, முதலாம் இராஜேந்திரன்

சாளுக்கிய சோழர்கள்

கலை மற்றும் கட்டிடக்கலைக்கு சோழர்கள் ஆற்றிய பங்களிப்பு.

சமூக, பொருளாதார மற்றும் சமய நிலைமைகள்

**அலகு IV:**

பாண்டியர்கள்

முதல் பாண்டியப் பேரரசு

இரண்டாம் பாண்டியப் பேரரசு

கலை மற்றும் கட்டிடக்கலைக்கு பாண்டாக்களின் பங்களிப்பு.

**அலகு V:**

தமிழ் நாட்டில் முஸ்லீம் படையெடுப்பு

மாலிக் கஃபூரின் படையெடுப்பு

மதுரை சுல்தானியத்தின் எழுச்சி

முஸ்லிம் ஆட்சியின் தாக்கங்கள்.

# தமிழக வரலாறு துவக்க காலம் முதல் கி.பி. 1336 வரை

## அலகு - 1

### 1. தமிழக வரலாற்றில் புவியியல் கூறுகளின் தாக்கம்

ஒரு நாட்டின் அரசியல், சமுதாயம், பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம் அந்த நாட்டின் புவியியல் கூறுகளின் தாக்கத்தினால் ஏற்படுகின்றன. தமிழக வரலாறும் இதற்கு விதிவிலக்கவில்ல. தமிழகத்தின் புவியல் கூறுகள் அதன் வரலாற்றை உருவாக்கிய விதம் குறித்து காணலாம்.

**தமிழகத்தின் எல்லைகளும் - தாக்கமும்**

தமிழகம், இந்தியாவின் தென்கோடிப் பகுதியில் அமைந்துள்ளது. இதன் மூன்று பக்கமும் கடலகள் எல்லையாக உள்ளன. கிழக்கே வங்காள விரிகுடாவும், தெற்கே இந்து மகா சமுத்திரமும், மேற்கே அரபிக்கடலும் உள்ளது. இதன் வடக்கே வேங்கடமலை உள்ளது. தமிழக எல்லைகள் தமிழ்நாட்டை வட இந்தியாவிலிருந்து பிரித்து வைத்துள்ளன. இதனால் வட இந்தியாவில் ஏற்பட்ட எந்த ஒரு நாகரீகமும், தமிழ் நாட்டிற்குள் வந்து சேர பலகாலம் பிடித்தன. கி.மு. 3000-த்தில் தோன்றிய ஆரிய நாகரீகம், கி.மு. 6ம் நூற்றாண்டு அளவில் தான் தமிழ்நாட்டிற்கு வந்தது.

**களப்பிரர் படையெடுப்பு**

தமிழ்நாட்டின் வடக்கேயிருக்கும் வேங்கட மலையில் காடுகளும், மலைகளும் உள்ளன. எனவே அது பல இனக்குழுமக்கள் வாழ சரியான இடமாக அமைந்தது. இந்த இனக்குழுக்கள் ஆந்திரப் பகுதிக்கு அருகில் வசித்ததால் தமிழும் ஆந்திரமும் சேர்ந்த ஒரு கலப்பட நாகரீகத்தை கொண்டிருந்தது. எப்போதெல்லாம் ஆந்திரப் பகுதியிலிருந்து இவைகளுக்கு ஆபத்து வந்ததோ, அப்போதெல்லாம் இவைகள் கீழ் இறங்கி தமிழ்நாட்டைத் தாக்கின. அப்படி நடந்த படையெடுப்புகள் தமிழடநாட்டில் கள்பபிரர்கள் ஆட்சியையும், பல்லவர்கள் ஆட்சியையும் ஏற்படுத்தின.

**கடல் வாணிகம்**

தமிழ் நாட்டின் மூன்று பக்க கடல்கள் தமிழர்களைப் பிறவியிலேயே கடல் வாணிகர்களாக ஆக்கியது. தொண்டி, முசிறி, வஞ்சி, கொற்கை, கரூர், காவிரிப்பூம்பட்டினம், அரிக்கமேடு பேன்ற துறைமுகப்பட்டினங்கள் தோன்றின. தமிழகத்தின் மேற்கு கடற்கரை கிரிஸ், ரோம் போன்ற மேலை நாடுகளுடன் தொடர்பு கொள்ள காரணமாக இருந்தது. கிழக்குக் கடற்கரை, பர்மா, சீனா, தென்கிழக்கு ஆசியத்தீவுகள் போன்றவைகளுடன் தொடர்பு கொள்ள வைத்தது.

**கடற்கரையும், மன்னர்களும்**

கடற்கரை, பல்லவ மன்னர் முதலாம் நரசிம்ம வர்மனை, சோழ மன்னர்கள் முதலாம் இராசராசனை, முதலாம் இராசேந்திரனை இலங்கை மீது படையெடுக்க வைத்தது. மேலும் இந்த கடற்கரைகள் முதலாம் இராசேந்திரனை மற்றும் முதலாம் குலோத்துங்கனை, சீனாவுக்குத் தூதுக்குழுக்கள் அனுப்ப வைத்தது.

**மலைகளின் தாக்கம்**

தமிழ்நாட்டின் கிழக்குப் பக்கத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலையும், மேற்குப்பக்கம் மேற்கு தொடர்ச்சி மலையும் உள்ளது. கிழக்கு தொடர்ச்சி மலைகயில் சவ்வாது மலை, சேர்வராயன் மலை, கல்வராயன் மலை, கொல்லிமலை போன்றவைகள் உள்ளன. இந்த மலைகளில் "நைஸ்பாறை" என்ற ஒரு வகைப் பாறை உள்ளது. இந்த பாறையில் "மாக்னசைட்" ஏனற ஒரு கனிமப்பொருள் உள்ளது. இது கற்கால மனிதர்களை கல் ஆயுதங்களைத் தயாரித்துக்கொள்ள காரணமாக இருந்தது. மேலும் இந்த பாறைகள் குகைக்கோயில் கலைக்கட்டவும், "திராவிடக்கலை பாரம்பரியத்தை உருவாக்கவும் காரணமாக இருந்தது.

**சமண, பௌத்த வரவு**

மேற்கு தொடர்ச்சி மலையில் குதிரைமலை, குடகுமலை, ஆனைமலை போன்றவைகள் உள்ளன. இம்மலைகளில் பாலக்காடு, போடி நாயக்கனூர், செங்கோட்டை, அச்சன் கோவில் போன்ற "கணவாய்கள்' உள்ளன. இந்த

கணவாய்கள் வடநாடுகளிலிருந்து பௌத்தம், சமணம், மற்றும் பிரமாணிய சமயங்கள் தமிழ்நாட்டுக்கு வரப்பாதைகளாக அமைந்தன. இந்த மலைகள் "வேளிர்' போன்ற பல சிற்றரசுகள் தோன்றவும் காரணமாக இருந்தன.

**காடுகளின் வகைகள்**

தமிழ்நாட்டில் பல வகைகாடுகள் உள்ளன. மேற்கு தொடர்ச்சி மலை காடுகளில் உள்ள மரங்கள் நாற்பத்தைந்து மீட்டருக்கும் அதிக உயரமைாக உள்ளன. இவை "தென்வெப்ப மண்டல ஈரமான பசுமை மாறாக்காடுகள்" என்ற வகையைச் சேர்ந்ததாகும். நீலமலை, ஆனைமலை, பழனிமலையில் தேக்கு மரங்கள் முப்பது மீட்டருக்கும் மேல் உயரமாக உள்ளன. இவைகள் "பழுப்பு - உதிரும் தென்னிந்தியக் காடுகள்" என்ற வகையாகும்.

**சங்க கால காடுகள்**

சங்க காலத்தில் நிலப்பரப்பில் பாதிக்கு மேல் காடுகளே இருந்தன. அவைகளில் முள்ளூர் கானம், உம்பற்பெருங்காடு, புல்லியக்காடு போன்றவைகள் முக்கியமானவைகளாகும்.

**சீனிவாச அய்யங்கார் கருத்து**

காடுகள் பகுதி சங்க காலத்தில் "முல்லை" என்று அழைக்கப்பட்டது. இந்த காடுகள், சங்க காலத் தமிழர்களின் ஒரு பிரிவினரை "ஆயர்களாக" ஆக்கி வைத்தது. பசுமையான புல் வெளியும், தண்ணீரும் இக்காடுகளால் இருந்ததால், இங்கு கால்நடைப் பொருளாதாரம் தோன்றியது. மக்கள் மாடுகளைச் செல்வமாகக் கருதினார். தனியார் சொத்துரிமை இங்கு தோன்றி வளர்ந்தது. ஆண் மேலாதிக்க சமூகம் தோன்றவும் இக்காடுகள் காரணமாயின. இந்த காடுகள் தாம் தமிழர்களின் நாகரீகம் தோன்ற காரணமாயிருந்ததென்று "பி.டி. சீனிவாச அய்யங்கார்" கூறுகிறார்.

**ஆறுகளின் தாக்கம்**

**தமிழ்நாட்டு ஆறுகள்**

தமிழ்நாட்டில் காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, பெரியாறு, வெள்ளாறு, தாமிரபரணி போன்ற பல ஆறுகள் ஓடுகின்றன. பாலாறு கர்நாடக மாநில "நந்தி துர்க்கம்" என்ற இடத்தில் தோன்றி, தொண்டை நாடான காஞ்சிபுரப் பகுதிகளில் பாய்கிறது. தாமிரபரணி ஆறு பொதிகை மலையில் தோன்றி திருநெல்வேலிப் பகுதியில் பாய்கிறது. வைகை ஆறு "பழனி மலையில்" தோன்றி பாண்டிய நாட்டில் பாய்கிறது. காவேரி ஆறு "மைசூரில்" தோன்றி, திருச்சி, தஞ்சாவூர் பகுதிகளில் பாய்கிறது.

இந்த ஆறுகள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பாய்ந்து வங்க கடலிலே கலந்து விடுகின்றன. எனவே இந்த ஆறுகளில் நீர் எப்போதும் இருப்பதில்லை. இதனால் வட இந்தியாவில் ஏற்பட்ட சிந்து சமவெளிநாகரீகமோ, கங்கைச்சமவெளி நாகரீகமோ, தமிழ் நாட்டில் ஏற்படவில்லை.

**நாடுகள்**

தமிழ்நாட்டில் பாய்கின்ற நதிகள் தமிழ்நாட்டில் குறுக்கும் நெடுக்குமாக ஓடுவதால் தமிழ்நாட்டைப் பல பகுதிகளாக மாற்றி வைத்துள்ளன. காவிரி ஆறு சோழ நாட்டையும், வைகை ஆறு பாண்டிய நாட்டையும், பெரியாறு சேரநாட்டையும் உருவாக்கியுள்ளது.

**ஏரி, குளம் உருவாதல்**

தமிழ்நாட்டு ஆறுகளில் எ்போதும தண்ணீா் பெருக்கெடுத்து ஓடுவதில்லை. ஆகையால் தமிழ்நாட்டு மக்கள் ஏரி, குளம் வெட்டுவதில் கவனம் செலுத்தியிருந்தனர். மதுராந்தகன் ஏரி, மாமண்டூர் ஏரி, மகேந்திரவாடி ஏரி மற்றும் வீர நாராயணப்பேரேரி போன்றவைகள் நீர்ப்பாசனத் திட்டத்திற்காக உருவாக்கப்பட்டவைகளாகும்.

**நகரங்கள்**

ஆறுகள் சமவெளிப் பகுதிகளை ஏற்படுத்தியுள்ளன. இதனால் சிறந்த நகரங்கள் உறையூர், தஞ்சாவூர், மதுரை போன்றவைகள் தோன்றின. இந்த ஆற்றுப்பகுதிகளே “இந்திரவிழா“ போன்ற பெரிய விழாக்கள் சங்கம் மருவிய காலத்தில் நடைபெற காரணமாக இருந்தன.

**தட்பவெப்பநிலையும், மழையும்**

**மழைகள்**

தமிழ்நாடு பூமியில் வெப்பமண்டல இடத்தில் அமைந்துள்ளது. அதைச்சுற்றி கடல் உள்ளது. இதனால் தமிறாட்டில் குளிரும், வெயிலும் ஓரளவுக்குத் தாங்கிக்கொள்ளும் படியாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் ஜுன், ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் தென்மேற்கு பருவக்காற்று வீசுகிறது. அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் வடகிழக்கு பருவக்காற்று வீசுகிறது. இதனால் தமிழ்நாட்டுக்கு மழைபெய்கிறது. இருந்தபோதிலும் அவைகளின் அளவு தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் ஒரே சீராக இல்லை. அவைகள் அறுநூறு மில்லி மீட்டரிலிருந்து ஏழாயிரம் மில்லி மீட்டர் வரை இடத்துக்கு இடம் மாறுபடுகிறது.

**பருவகாலங்கள்**

தமிழ்நாட்டில் தட்பவெப்பநிலை மழை, காற்று, ஒரே சீராக இல்லை. இதனால் பல பருவகாலங்கள் ஏற்பட்டன. அவைகள் மழைக்காலம், குளிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனில் காலம், முதுவேனில் காலம் போன்றவைகளாகும்.

**தமிழர்களின் வாழ்க்கை**

பருவ காலத்திற்கேற்றாற் போல, சங்ககாலத் தமிழர்கள் தங்களின் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். குளிர்காலத்திலும், பனிக்காலத்திலும், தமிழர்கள் போர் செய்வதில்லை. இந்த காலங்களில் அவர்கள் இல்லற வாழ்வில் ஈடுபட்டிருந்தனர். மற்ற காலங்களில் பணம் சம்பாதிக்க வெளி இடங்களுக்குச் சென்றனர். மழைக்காலத்திற்குள் வீடு திரும்பினர்.

## 2. வரலாற்றின் ஆதாரங்கள்

வரலாற்றின் ஆதாரங்கள் இந்த அலகில் விவாதத்தின் மையமாக உள்ளன. எந்தவொரு காலகட்டத்திலும் வரலாற்று நிகழ்வுகளின் சுருக்கமான புரிதலுக்காக வரலாற்று உண்மைகளை வெளிப்படுத்தும் மற்றும் எங்களுடன் இணைக்கும் 'வரலாற்று ஆதாரங்களுடன்' இது தொடர்புடையது. ஆதாரங்கள் என்பது வரலாற்றாசிரியர்களால் கோட்பாடுகள் கட்டப்பட்ட கட்டிடங்கள். ஆதாரங்களின் ஆதாரத்துடன் உண்மைகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. கண்டுபிடிக்கப்பட்ட கருவிகள்/ஆயுதங்கள்/உபயோகப் பொருட்கள் போன்றவற்றை அறிந்துகொள்வதற்காக இலக்கியம் ஒப்பிடப்படுகிறது. ஆதாரங்கள் நிகழ்வுகளை காலவரிசைப்படி தர்க்கரீதியாக ஒழுங்கமைக்க வழிவகுத்து, வரலாற்று உண்மைகள் மற்றும் நிகழ்வுகளின் ஓட்டம் ஆகியவற்றை காலவரிசைப்படி மறுசீரமைத்து ஒரு முடிவான அவதானத்தை உருவாக்குகிறது. ஒரு சகாப்தத்தில். வரலாற்றாசிரியர்களின் தற்போதைய ஆராய்ச்சிப் பணிகளால் கூடுதல் ஆதாரங்கள் ஆராயப்படுவதால், வரலாறு புதுப்பிக்கப்பட்டு, ஆய்வின் நோக்கம் அதிகரிக்கிறது. எங்களிடம் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன, அவை தமிழ்நாடு வரலாற்றின் ஆய்வுக்கு ஆதரவளிக்கின்றன, அவை பல்வேறு ஆய்வுத் துறைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன:

### I. தொல்லியல் சான்றுகள்

1. புதைந்துள்ள சமூகச் சான்றுகள், கட்டிடங்கள் போன்றவற்றின் அகழ்வாராய்ச்சிகள்,
2. கோவில்கள், கல்வெட்டுகள் போன்ற நினைவுச் சான்றுகள்.
3. செப்புத் தகட்டின் சான்றுகள்
4. புழக்கத்தில் உள்ள நாணயங்கள்

**II. சான்றுகளின் இலக்கிய ஆதாரங்கள்**

1. உள்நாட்டு இலக்கியம்
2. வெளிநாட்டு இலக்கியம்

**III. வெளிநாட்டு ஆதாரங்கள்**

1. பயணிகளின் ஆதாரங்கள்
2. வரலாற்றாசிரியரின் வருகை குறிப்புகள்

**தொல்லியல் சான்றுகள்**

தொல்பொருள் சான்றுகள் மிகவும் பழமையான பொருள் ஆகும். அவைகள் புதைப்பொருள் ஆராய்ச்சிப்பொருட்கள், அரண்மனைகள், கோயில்கள், செப்புப்பட்டயங்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள் என்று பல வகைப்படும்.

**புதைப்பொருள் ஆராய்ச்சி**

புதைப்பொருள் ஆராய்ச்சிப் பொருட்கள் என்பவைகள் மண்ணுக்குள் புதைந்து கிடக்கும் பொருட்களாகும். இவைகளை புதைபொருள் விஞ்ஞானிகள், தோண்டி எடுத்து நமக்குத் தெரிவிக்கின்றனர். இந்த புதைபொருள் ஆராய்ச்சியை முதன் முதலாக தமிழ்நாட்டில் செய்தவர் இராபர்ட் புருஸ்ட் என்ற ஒரு ஆங்கில அறிஞர் ஆவர். இவர் 1863ம் ஆண்டில் ஆராய்ச்சியை ஆரம்பித்து வைத்தார். இவர் முதன் முதலில் சென்னைக்கு அருகில் உள்ள பல்லாவரம் என்ற இடத்தில் புதைபொருள் ஆராய்ச்சி செய்தார். இங்கு தமிழ்நாட்டின் பழைய கற்காலத்தைச் சேர்ந்த சில கற்கருவிகளை கண்டுபிடித்தார். அதற்குப்பின் தமிழ்நாட்டில் பல இடங்களில் புதைப்பொருள் ஆராய்ச்சிகள் நடைபெற்றன. இங்கு பல முக்கியமான புதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவைகள், தமிழ்நாட்டின் வரலாற்றை அறிய உதவுகின்றன.

**1. அத்திரபாக்கம் புதைபொருள் ஆராய்ச்சி**

அத்திரபாக்கம் ஊர் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்ததாகும். இந்த ஊரில் அறிஞர்கள் இராபர்ட் புரூஸ்ட், வி.டி. கிருஷ்ணசாமி, பேட்டர்சன், எச.டி. சங்கலியா போன்றவர்கள் ஆராய்ச்சி செய்தனர். இந்த ஆராய்ச்சியில், அவர்கள்

தமிழ்நாட்டின் பழைய கற்கால கருவிகளைக் கண்டுபிடித்தனர். இந்த கற்கருவிகள் “அச்சூலியன்“ என்ற தொழில்நுட்ப வகையைச் சேர்ந்தது என்று தீர்மானித்தனர். இதன் மூலம் தமிழ்நாட்டின் வரலாறு 2 லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்ற அறியப்படுகிறது.

**2. திருத்தங்கல்**

இந்த ஊர் விருதுநகர் மாவட்டம் சிவகாசிக்கு அருகில் உள்ளது. இங்கு இடைக் கற்காலத்தைச் சேர்ந்த பல நுண்ணிய கற்கருவிகள் கிடைத்துள்ளன. மேலும் இரும்புக் காலத்தைச் சேர்ந்த கறுப்பு சிவப்பு மண்பானை ஓடுகளும், ஒரு செப்புக்காசும் கிடைத்துள்ளன. அது சங்ககாலம் பாண்டிய மன்னரைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது.

**3. பையம்பள்ளிபுதைப்பொருள்ஆராய்ச்சி**

வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா, பையம்பள்ளியில் நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சியை எஸ்.ஆர்.ராவ் என்பவர் நடத்தினார். இந்த ஆராய்ச்சியில் தமிழ்நாட்டின் புதியகற்காலம் மற்றும் இரும்புக்கால மக்களின் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. தானியங்களை அரைக்கும் கருவிகளும் இங்கிருந்தது. விலைமதிப்பான கல்மணிகளையும் சுடுமண்ணால் செய்யப்பட்ட விளக்குகளையும், வளையல்களையும் இவர் கண்டுபிடித்து தந்தார். இவருடைய கண்டுபிடிப்புகள், தமிழ்நாட்டில் புதிய கற்கால மக்களைப் பற்றியும், இரும்பு கால மக்களைப் பற்றியும் அறிந்து கொள்ள உதவுகின்றன.

**4. ஆதிச்சநல்லூர்புதைபொருள்ஆராய்ச்சி**

இந்த ஆராய்ச்சி தமிழ்நாட்டில் பரபரப்பான முறையில பேசப்பட்ட ஆராய்ச்சி ஆகும். முதன்முதலில் தமிழ்நாட்டின் பழைய கற்காலம் பற்ற தகவல் தெரிவித்தது இந்த ஆராய்ச்சியாகும். 1876 ம் ஆண்டு டாக்டர் ஜாகர் என்பவர் ஆய்ச்சி செய்தார். அவர் மண்பானைகள், இரும்புப்பொருட்கள் ஆகியவைகள் இருப்பதாக கண்டுபிடித்தார். அதன்பிறகு அலெக்சாந்தர் ரீ என்பவர் அங்கு விரிவான ஆராய்ச்சியினை 1899ம் ஆண்டிலிருந்து 1906 ம் ஆண்டு வரை நடத்தினார். இதன்

மூலம் அவர் 4000-க்கும் மேற்பட்ட பழமையானப் பொருட்களை கண்டுபிடித்தார். இங்கு வெண்கலத்தால் செய்யப்பட்ட பொருட்கள் அதிகமாக கண்டுபிடிக்கப்பட்டன. அவைகள் காதுகளில் அணியும் நகை, வளையலகள், மோதிரம், மகுடங்கள் என்று பல வகைகளாக உள்ளன. ஏராளமான முதுமக்கள் தாழிகள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டன. முதுமக்கள் தாழி என்பது இறந்தவர்களை உள்ளே வைத்து புதைக்கும் பானையாகும். இந்த பானையில் மண்டை ஓடுகளும் அவர்களுக்காக படைக்கப்பட்ட பொருட்களும் இருந்தன. இங்கு இரும்பில் செய்த பொருட்கள் அதிகம் கிடைத்தன. அவைகள் அம்புகள், வாள்கள், ஈட்டிகள், உடைவாள்கள், மண்வெட்டி என்று பல வகைகளாகும்.

**நினைவுச்சின்னங்கள்மற்றும் நினைவுச் சின்னங்கள்**

தமிழ்நாடு மற்றும் ஆந்திராவில் அமைந்துள்ள பல கோட்டைகள், கோவில்கள் மற்றும் அரண்மனைகள் ஆகியன கடந்த கால சமூகத்தின் வளமான கட்டிடக்கலை நுட்பங்களையும், பாரம்பரியத்தையும் நமக்கு நினைவூட்டுகின்றன. இதுதவிர, இந்நினைவுச்சின்னங்கள் எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்லப்பட்ட விலைமதிப்பற்ற பொக்கிஷங்களாக கருதப்படுகின்றன. இந்த நினைவுச்சின்னங்கள் ராமாயணம் மற்றும் மகாபாரதம் போன்ற புராணங்களில் அமைந்துள்ள காட்சிகளைக் வெளிப்படுத்தும் கலைப்படைப்புகளைக் கொண்டுள்ளன. அதேபோல கல்வெட்டுகள் தமிழ்நாட்டின் பண்டைய வரலாறு தொடர்புடைய வரலாற்று உண்மைகளை உறுதிப்படுத்தும் செய்திகளை நிறுவுவதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டிற்கு உள்ளேயும், வெளியேயும் காணப்படுகின்ற கல்வெட்டுகள் தமிழ், பிராமி, பிராகிருதம், சமஸ்கிருதம், கன்னடம் போன்ற மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளன. (கல்வெட்டு இணைக்க வேண்டும்)

**செப்புப்பட்டயங்கள்**

செப்புப்பட்டயங்கள் மன்னர்கள் தங்களது ஆணைகளை எழுதி வெளியிட்ட சான்றுகளாகும். இவைகள் தமிழ்நாட்டின் அரசு, சமூகம் மற்றும் பண்பாடு பற்றி அறிந்து கொள்ள பெரிதும் உதவிசெய்கிறது.

**வேள்விக்குடி செப்பேடுகள்**

இது மதுரையை ஆண்ட முற்காலப் பாண்டிய மன்னர் நெடுஞ்சடையன் பராந்தகன் (கி.பி. 765 – 815) வெளியிட்டதாகும். இந்த செப்பேடு சங்ககாலத்து செய்தி ஒன்றை நமக்குச் சொல்கிறது. சங்க காலத்தில் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய மன்னர் வேள்விக்குடி என்ற கிராமத்தை பிராமணருக்கு தானமாக அளித்தார் என்று குறிப்பிடுகிறது.

இதற்குப்பிறகு கலியரசர்கள் என்னும் களப்பிரர்கள் இந்த தானத்தை அபகரித்துவிட்டனர். ஆகையால் அதை தங்களுக்கு மீண்டும் கொடுக்க வேண்டும் என்று அந்த பிராமணர்களின் வாரிசுகள் அரசனை கேட்டதாக இந்த செப்பேடுகள் சொல்லுகிறது. இந்த செப்பேடுகள் மூலம் பாண்டிய மன்னர்கள் சங்ககாலத்தில் பிராமணர்களை ஆதரித்தார்கள் என்று அறியமுடிகிறது. நெடுஞ்சடையன் பராந்தக மன்னர் காலத்தில் தான் மீண்டும் பிராமணர்களை ஆதரிக்கும் பழக்கம் ஏற்பட்டது என்று தெரிகிறது.

**பள்ளங்கோவில்செப்பேடுகள் (கி.பி. 540-556)**

இந்த செப்பேடுகள் வெளியிட்டவர், பல்லவ மன்னர் மூன்றாம் சிம்மவர்மன் (கி.பி. 540-556) ஆவார். பள்ளங்கோவில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. இந்த பட்டயம் பல்லவ மன்னர்கள் ஆரம்பத்தில் சமண சமயத்தை ஆதரித்தார்கள் என்று கூறுகிறது. மேலும் அப்போது சமூகம் என்பது நாடு என்ற நிர்வாக பிரிவுகளாக இருந்தது என்றும் தெரிவிக்கிறது.

**லெய்டன் செப்பேடுகள்**

இந்த செப்பேடு முதலாம் இராச இராச சோழ மன்னரால் (கி.பி. 985 -1012) வெளியிடப்பட்டதாகும். இந்த செப்பேடு சிதம்பரம் கோயிலை முதலாம் பராந்தக

சோழன் தங்கத்தால் அலங்கரித்தார் என்று தெரிவிக்கிறது. மேலும் அரசரின் அதிகாரிகள் நிலக்கிழார்களாக இருந்தார்கள் என்று கூறுகிறது.

**கல்வெட்டுசான்றுகள்**

இது மன்னர் கிராமச் சபைகள் மற்றும சில தனிநபர்கள் செய்த நன்கொடைகளின் விபரமாகும். இவைகள் மலைக்குகைகள், கோயில்கள் ஆகியவற்றில் காணப்படுகின்றன. இந்த கல்வெட்டுக்கள் மூன்று வகைப்படும். அவைகள் பிராமிக் கல்வெட்டுக்கள், வட்டெழுத்து கல்வெட்டுக்கள், தமிழ் கல்வெட்டுக்கள் என வகைப்படுத்தலாம்.

**தமிழ்பிராமிக்கல்வெட்டுக்கள்**

இவைகள் தமிழ் மொழியை முதன் முதலில் எழுத்துக்களாக எழுதப்பட்ட கல்வெட்டுக்களாகும். இவைகள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே எழுதப்பட்டுவிட்டன. இவைகள் தமிழ்நாட்டில் ஆனைமலை,, அழகர்மலை, திருப்பரங்குன்றம், மாங்குளம், முத்துப்பட்டி ஆகிற இடங்களில் காணப்படுகின்றன.

**1. மீனாட்சிபுரம்கல்வெட்டு**

இது மதுரை மாவட்டத்தில் உள்ளது. இந்த கல்வெட்டுக்கள் மாங்குளம் கல்வெட்டு என்றும், அரிட்டாபட்டி கல்வெட்டு என்றும் அழைக்கப்படுகிறது. இந்த கல்வெட்டு நந்தி என்ற பெயர் கொண்ட சமணத்துறவி இங்கு வாழ்ந்தார் என்று கூறுகிறது. அவரின் முதல் மாணவர் ஆதன் என்றும் கூறுகிறது. வெள்ளறை என்ற ஊர்மக்கள் இங்கு வாழ்ந்தனர். என்றும் இது தெரிவிக்கிறது. இந்த கல்வெட்டு தமிழகத்தில் சங்ககாலத்தில் இருந்த சமண சமயநிலையப் பற்றிக் குறிப்பிடுகிறது.

**2. கீழவளவு கல்வெட்டு**

இது மதுரை மாவட்டம் மேலூருக்கு அருகில் உள்ளது. இதில் வெற்றிலை வாணிகர் ஒருவர் இங்கிருந்த சமண துறவிகளுக்கு உணவு வழங்கும் தொண்டைச் செய்தார் என அறியமுடிகிறது.

**3. அழகர்மலைக்கல்வெட்டு**

இந்த கல்வெட்டில், காணம் என்ற நாணயம் பற்றியும், பல வாணிகர்களின் பேர்களும் உள்ளன. அவைகளில் சில வாணிகர்களின் பெயர்கள் மதுரை பொற்கொல்லன் ஆதன் மகன் ஆதன் "மதுரை கோ உப்பு வாணிகன்" என உள்ளது. இந்த கல்வெட்டுகள் சங்ககால வாணிகம் பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது.

**தமிழ் கல்வெட்டுக்கள்**

**1. தளவனூர் கல்வெட்டு**

இந்த கல்வெட்டு தென் ஆற்காடு மாவட்டம் செஞ்சி தாலுகா தளவானூரில் உள்ளது. இதை பல்லவ மன்னர் முதலாம் மகேந்திரவர்மன் வெளியிட்டார். இது முதலாம் மகேந்திரவர்மன், சிவன் கோவில் ஒன்றை கட்டியதாகக் குறிப்பிடுகிறது.

**2. மானூர் கல்வெட்டு (வட்டெழுத்து கல்வெட்டு)**

இது வரலாற்று ஆசிரியர்கள் அடிக்கடிச் சுட்டிக்காட்டும் கல்வெட்டு ஆகும். இது கி.பி. எட்டாம் நூற்றாண்டு முற்கால பாண்டியர்கள் காலத்து கல்வெட்டாம். இந்த கல்வெட்டு, பாண்டியர்களின் கிராம சபையில், உறுப்பினர் ஆவதற்கு வேண்டிய தகுதிகளைப் பற்றி பேசுகிறது. இந்த கல்வெட்டு பிராமணர்கள் எல்லாருமே சபை உறுப்பினர் ஆக முடியாத என்று சொல்கிறது. அதற்கு மந்திரங்களை நன்றாக படித்திருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

**3. உத்திரமேரூர்கல்வெட்டுக்கள்**

இது வரலாற்று ஆசிரியர்கள் அடிக்கடிக் குறிப்பிடும் கல்வெட்டு ஆகும். இது செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது. சோழ மன்னர் முதலாம் பராந்தகன் காலத்தில் (கி.பி. 907-955) வெளியிடப்பட்டது. இது வரலாற்று சிறப்புமிக்க கிராம தல ஆட்சி பற்றி குறிப்பிடுகிறது. இந்த கல்வெட்டுக்கள் பிராமணர்கள் வாழும் கிராமத்து நிலம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்று கூறுகிறது. ஒவ்வொரு நில பிரிவும் ஒரு குடும்பு என்றழைக்கப்பட்டது. இதிலிருந்து தான் கிராமத்து சபைக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று கூறுகிறது.

**4. ஸ்ரீரங்கம் கோயில் கல்வெட்டுக்கள்**

ஸ்ரீரங்கம் கோயில் கல்வெட்டுக்கள் திருச்சியில் உள்ள ஸ்ரீரங்கநாத சுவாமி கோயிலில் காணப்படுபவைகளாகும். இதில் பிற்கால பாண்டிய மன்னர்களான முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன், இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன், வீரபாண்டியன் போன்றவர்கள் வெளியிட்ட கல்வெட்டுக்கள் உள்ளன. இந்த கல்வெட்டுக்கள், ஸ்ரீரங்கநாத சுவாமி கோயிலின் நிர்வாக சீர்திருத்தம் பற்றி குறிப்பிடுகிறது.

**நாணயச்சான்றுகள்**

தமிழ்நாட்டின் வரலாற்றை அறிய நாணயங்கள் பெரிதும் உதவிபுரிகின்றன. இவைகளைப் பற்றி விரிவாகக் காண்போம்.

**சங்ககால காசுகள்**

இந்த காலத்தில் காணப்பட்ட காசுகள், செப்புக்காசுகளாகவும், தங்க காசுகளாகவும் உள்ளன. இவைகளில் பல வகைகள் உள்ளன. இவைகள் பெருவழுதி காசுகள், ஆண்டிபட்டி காசுகள், மாக்கோதைக் காசுகள் என வகைப்படும். புலி உருவம், பனைமரம் பொறிக்கப்பட்ட காசுகளும் கிடைத்துள்ளன. இந்த காசுகள் கி.மு. நான்காம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்றன. பூம்புகார், அழகன்குளம், ஆண்டிபட்டி, நாகை, காயிதே மில்லத், காட்டுச்சேரி போன்ற இடங்களிலுமிருந்தும் காசுகள் கிடைத்துள்ளன.

ரோமானிய காசுகள், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது, கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்றன. இந்த காசுகள், ரோமானிய மன்னர்கள் டைபீரியஸ் காலத்திலிருந்து கிடைக்கின்றன. இவைகள் சங்ககால பொருளாதார நிலையைப்பற்றி அறிந்து கொள்ள உதவுகின்றது.

**பல்லவர் காசுகள்**

பல்லவர்கள் காலத்து காசுகளில் சில ஸ்ரீபர, ஸ்ரீநிதி, மானபர என் எழுத்துக்கள் உள்ளன. இவைகள், மகேந்திரவர்மப் பல்லவனைப் பற்றியும், இராஜசிம்மன்

மற்றும் மூன்றாம் நந்திவர்மனைப் பற்றியும் அறிந்து கொள்ள உதவுகிறது. பல்லவர்கால காசுகள், ஒருபுறம் காளை, மற்றொருபுறம் இரண்டு பாய் மரங்களோடு கூடிய கப்பல் உருவங்களைக் கொண்டுள்ளது. மேலும் ஸ்வதிகா, சிம்ம் ஆகிய உருவகங்களை கொண்டுள்ளது.

**முற்கால பாண்டியர் காசுகள் (கி.பி. 862-885)**

இரண்டாம் வரகுண பாண்டியர் வெளியிட்ட ஸ்ரீவரகுண என்ற கிரந்த எழுத்துள்ள ஒரு காசு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

**சோழர் காசுகள்**

சோழர்கள் காசுகளில் பல மன்னர்கள் வெளியிட்ட காசுகள் கிடைத்துள்ளன. முதலாம் பராந்தகன் காலத்திலிருந்தே காசுகள் கிடைத்துள்ளன என்று முன்னாள் தொல்பொருள்துறை இயக்குனர் நடன காசிநாதன் கூறியுள்ளார். முதலாம் இராஜராஜன் காசுகள், இரண்டு மீன்களையும், கொற்றக்குடைகளையும், கொண்டு விளங்குகிறது. இந்த மன்னரின் காலத்தில் வெளியிட்ட பன்ற உருவக்காசும் கிடைத்துள்ளன. முதலாம் இராஜேந்திரனின் காசுகளில் கங்கை கொண்ட சோழன் என்ற பெயர் உள்ளது. இந்த வகை நாணயங்கள் சோழர்கள் காலப் பொருளாதாரத்தைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது.

**பிற்கால பாண்டியர் காசுகள்**

மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1216-1238), ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (1251-1274) போன்ற மன்னர்கள் வெளியிட்ட காசுகள் கிடைத்துள்ளன. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் காசுகளில் சோணாடு கொண்டான் என்ற வாசகம் உள்ளது. முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காசுகளில் கச்சி வழங்கும் பெருமாள் என்று எழுதப்பட்டுள்ளது. இவைகள் அக்காலப் பொருளாதார நிலையை அறிய உதவிபுரிகின்றன.

***சீனர் காசுகள்***

சீனக் காசுகள் தமிழ்நாட்டில் பல இடங்களில் கண்டெடுக்கப்பட்டன. இவைகள் தஞ்சை மாவட்டம், திருநெல்வேலி மற்றும் பெரியகுளம் பகுதியில்

கிடைத்துள்ளன. இந்த காசுகளில் ரீயுபின் டாங்க்போ என்ற எழுத்துக்கள் சீனமொழியில் எழுதப்பட்டுள்ளன. சீனநாட்டு மிங் வமிசத்தைச் சார்ந்த சீன காசுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த காசுகள், சீனத்துக்கும், தமிழ்நர்ட்டிற்கும் இடையே கி.பி. 15ம் நூற்றாண்டிலிருந்து 17ம் நூற்றாண்டிலிருந்து வாணிக தொடர்பு இருந்ததைத் தெரிவிக்கிறது. மேலும், சீன வாணிகம் தென்பாண்டி நாட்டின் உட்பகுதிகளிலும் பரவியிருந்தது என்றும் தெரிவிக்கிறது.

தமிழ் சமூகத்தில் கி.பி 7 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு, செப்புத் தகடுகளைப் பயன்படுத்துவது என்பது அதிகரித்துள்ளது. பாண்டியர்கள், சாளுக்கியர்கள் மற்றும் பிற மன்னர்கள் செப்புப்பட்டயங்களை வெளியிட்டனர். செப்புப்பட்டயங்கள் சமூக, அரசியல், சமயம் மற்றும் போர்கள் குறித்த பல விவரங்களைத் தருகின்றன. எடுத்துக்காட்டாக, அன்பில் செம்பு தட்டு பதிவுகள் சோழ மன்னன் செங்கணன் பற்றிய தகவல்களை வெளிப்படுத்துகின்றன. பல்லவர்களின் செப்புப்பட்டயங்கள் பிராகிருதம் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் இருந்தன. நரசிம்மவர்மன் III பள்ளன் கோவில் தட்டு பதிவுகளை வெளியிட்டார், இது அந்த சகாப்தத்தில் சமணர்களுக்கு ஆதரவாக இருந்தது என்பதைக் குறிக்கிறது. சோழர்களின் செப்புத் தகடுகள் மிக நீளமாக இருந்தன. முதலாம் இராஜராஜ சோழன் லைடன் தட்டுகளை வெளியிட்டான்; முதலாம் இராஜேந்திர சோழன் திருவாலங்காடு, கரந்தை தகடுகளை வெளியிட்டார்; வீர ராஜேந்திரனின் சரளா தட்டுகள்; இவை அனைத்தும் சோழர் வரலாற்றை பரந்த விவரங்களுடன் வெளிப்படுத்துகின்றன.

விஜயநகர இராச்சியத்தின் முதலாம் ஹரிஹரன் பங்கனப்பள்ளி செப்புத் தகடுகளை வெளியிட்டார்; கிருஷ்ண தேவராய மன்னர் அமராவதி செப்புத் தகடுகளை வெளியிட்டார்; தேவராய II ஸ்ரீரங்கம் செப்புப் பதிவுகளை வெளியிட்டார்; இவை அனைத்தும் விஜய நகர மன்னர்களின் சாதனைகள் மற்றும் அவர்களின் ஆட்சியின் பல்வேறு திட்டங்களை விவரிக்கின்றன.

**நாணயவியல்**

தொல்பொருள் ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட எந்த வயது நாணயங்களும் சகாப்தம், பிரதேசம், பொருளாதார நிலை, அச்சிடப்பட்ட ஆண்டு மற்றும் பெயர் அல்லது உருவத்தின் மூலம் ஆட்சியாளர் பற்றிய தகவல்களை வெளிப்படுத்துகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேடு: இந்த இடத்தில், மார்டிமார் வீலர் தொல்லியல் ஆய்வு மற்றும் ஆராய்ச்சியை மேற்கொண்டார். இந்த இடத்தில் இருந்து ஏராளமான தங்க காசுகள் மீட்கப்பட்டுள்ளன. இது தமிழகத்துக்கும் ரோம் நகருக்கும் இடையே உள்ள வர்த்தக உறவை வெளிப்படுத்துகிறது. இந்த நாணயங்கள் பேரரசர் அகஸ்டஸ் சீசருக்கு சொந்தமானது. தமிழ்நாட்டு நாணயங்களைப் பொறுத்தவரை, அவை மிகவும் கச்சா மற்றும் கரடுமுரடானவை மற்றும் கிடைப்பது அரிது. மற்ற நாணயங்கள் ராஜ்யத்தின் சமகால நிலைகள், வர்த்தக உறவுகள் மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் உட்பட பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. ஆரம்பத்தில் நாணயங்கள் முத்திரையுடன் தாமிரத்தில் வெளியிடப்பட்டாலும், பின்னர் கி.பி மூன்றாம் நூற்றாண்டில் புழக்கத்தில் இருந்த நாணயங்கள் தங்கத்தில் உள்ளன. அவை தமிழில் ‘பணம்’ அல்லது ‘வராகன்’ என்று அழைக்கப்பட்டன.

பெரிய பட்டினம் அகழ்வாராய்ச்சி: இப்பணியை தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் மேற்கொண்டது. தஞ்சை, திருநெல்வேலி, பெரியகுளத்தில் சீன நாணயங்களும், சீன மண் பானைகளும் மீட்கப்பட்டன. இந்த நாணயங்களில் ‘RIUBIN’ மற்றும் ‘TANGBO’ என்ற சீன வார்த்தைகள் உள்ளன. இது சீனாவுக்கும் தமிழகத்துக்கும் இடையிலான வர்த்தக உறவை வெளிப்படுத்துகிறது. சீன நாணயங்கள் வர்த்தகம் பாண்டிய இராச்சியத்தின் தெற்கு வரை பரவியிருந்ததைக் குறிக்கிறது. சீனாவின் MING வம்சத்தைச் சேர்ந்த சீன நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டன

பல்லவ நாணயங்கள் ஒரு பக்கத்தில் காளை மற்றும் இரண்டு பாய்மரக் கப்பல் படங்கள். பல்லவ நாணயங்களில் ஸ்வஸ்திகா மற்றும் சிங்க உருவங்களும் காணப்படுகின்றன.

சேர, சோழ மற்றும் பாண்டிய கால நாணயங்கள் கலைநயமிக்கதாகவும், கல்வெட்டுகள் மற்றும் உருவங்களுடன் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. சேர நாணயங்கள் வில் மற்றும் அம்பு விளையாட்டு; சோழர்களின் காசுகள் புலி மற்றும் பாண்டிய நாணயங்களில் மீன் உருவங்கள் உள்ளன; இந்த நாணயங்கள் பொருளாதாரத்தின் வலிமை, சமூக வளர்ச்சி நிலை மற்றும் அவர்களின் வாழ்க்கை முறையின் செழுமை ஆகியவற்றை வெளிப்படுத்துவதன் மூலம் அதிகமான அல்லது சொல்லக்கூடிய விளைவைக் கொண்டுள்ளன.

ராஜராஜ சோழனின் நாணயங்கள் கோதாவரி நதிக்கரையில் உள்ள தெல்லேஸ்வரத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டன. கோதாவரி கரைகள் வரை இந்த விதி நீட்டிக்கப்பட்டதை இது குறிக்கிறது.

பெரிய ஆராய்ச்சித் திட்டங்கள் தவிர, கொற்கை, உறையூர், மதுரை மற்றும் அமராவதி ஆகிய இடங்களில் சிறிய திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. இந்த வரலாற்றுச் சான்றுகள் வரலாற்றாசிரியர்களால் முடிவெடுக்கப்பட்ட வரலாற்று உண்மைகளின் பல்வேறு தத்துவார்த்த நிலைப்பாடுகளை உறுதிப்படுத்துகின்றன. இதில், அகழாய்வு செய்து, ஆட்சியாளர்கள் வெளியிட்ட நாணயங்கள் மீட்கப்பட்டன. அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள் சகாப்தத்தின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார காரணிகள் பற்றிய தகவல்களின் சாளரத்தைத் திறக்கின்றன, மேலும் தமிழ்நாட்டின் வம்சத்துடன் நாணயத்தின் வயதை வரைபடமாக்குகின்றன, இது மற்ற இடங்களில் உள்ள சமகால ஆட்சியாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**இலக்கிய சான்றுகள்**

இலக்கிய ஆதாரங்கள் அரசியல் விருப்பம் மற்றும் வலிமையால் வழங்கப்பட்ட கலாச்சாரம் மற்றும் பொருளாதார நிலைமைகளின் பிற

வளர்ச்சிகளால் கல்வியறிவு காரணமாக சமூக வளர்ச்சியை பிரதிபலிக்கும் முக்கிய ஆதாரமாக இலக்கியம் உள்ளது. தவிர, இலக்கிய ஆதாரங்கள் வாழ்க்கை முறையின் நிலை பற்றிய தெளிவான விளக்கத்தை அளிக்கின்றன; உள் மற்றும் வெளிப்புற கலாச்சார விதிமுறைகள், தடைகள், சமூகப் பிளவுகள், சாதிவெறி, பொருளாதார நடவடிக்கைகள், வறுமை, முதன்மையான தொழில் போன்றவை, பரந்த கிளைகளைக் கொண்ட இலக்கியம் அரசனின் நீதிமன்றங்கள் மட்டுமல்ல, அரண்மனைகளுக்கு வெளியே இருந்த நிஜ வாழ்க்கை அமைப்புகளையும் உள்ளடக்கியது. கவிதைகள், எழுத்துக்கள், கதைகள், நாடகம் போன்ற இலக்கியப் பங்களிப்புகளின் பல்வேறு ஆதாரங்களில் இருந்து காலவரிசை நிகழ்வுகளை பதிவு செய்வதன் மூலம் வரலாற்றைக் கற்றல் மற்றும் அதன் நிகழ்வுகளின் ஓட்டம் இலக்கியத்தால் எளிதாக்கப்படுகிறது.

வரலாற்றாசிரியர்களுக்கு ஆதாரமாக இருக்கும் இலக்கியங்கள் மூன்று முக்கிய வகைப்பாடுகளாக பிரிக்கப்பட்டுள்ளன:

1. உள்நாட்டு இலக்கிய ஆதாரங்கள்: இந்திய பரிசு பெற்றவர்களிடமிருந்து பிறந்த இலக்கியம்.
2. வெளிநாட்டு இலக்கிய ஆதாரங்கள்: தென்னிந்திய ராஜ்ஜியங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய குறிப்புடன் வெளிநாட்டில் பிறந்த இலக்கியம்.
3. வெளிநாட்டுப் பார்வையாளர்கள், அறிஞர்கள் மற்றும் தூதர்களின் சிறப்புக் குறிப்புகள் மற்றும் பயணக் குறிப்புகள் வெளிநாட்டவர் கணக்குகள்.

**உள்நாட்டு இலக்கியங்கள்:**

உள்நாட்டு இலக்கிய சான்றுகள் தமிழ்நாட்டின் வரலாற்றிற்கு சங்ககாலத்திலிருந்து விசயநகரம் காலம் வரையிலும் அறிந்து கொள்ள அதிக எண்ணிக்கையில் உள்ளன. அவைகளில் முக்கியமானவைகளை காணலாம்.

**சங்ககால இலக்கியங்கள்:**

சங்ககால இலக்கியங்கள் பத்துப்பாட்டு. எட்டுத்தொகை, தொல்காப்பியம் போன்றவையாகும்.

**பத்துப்பாட்டு:**

பத்துப்பாட்டு பத்து நூல்களைக் கொண்ட ஒரு தொகுப்பாகும். இந்த தொகுப்பில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை, நெடுநெல்வாடை, மதுரைக்காஞ்சி, சிறுபானாற்றுப் படை பெரும் பானாற்றுப் படை, மலைபடு கடாம், குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு போன்றவைகள் உள்ளன. .

**1. திருமுருகராற்றுப்படை**

இந்த நூலை எழுதியவர் நக்கீரர், ஆவார். இந்தநூல் சங்க காலம் முடியும் பொழுது எழுதப்பட்டதாகும். ஆகையால் இதில் ஆரியர்களின் பண்பாடு பற்றிய செய்தி அதிகமாக காணப்படுகிறது. தமிழர்களின் பண்பாடு பற்றியும், ஆரியர்களின் பண்பாடும் பற்றியும் அறிந்து கொள்ள இந்த நூல் ஒரு சிறந்த சான்றாகும். உதாரணமாக முருகக்கடவுளை, குறத்தி பெண்கள் 'வேலன் வெறியாடல்' என்ற ஆடல் மூலமாக கும்பிட்டார்கள். ஆனால் அதே சமயத்தில் பிராமண முனிவர்கள், தங்கள் உடம்பின் எலும்பு தெரியும் படியாக உண்ணாவிரதமிருந்து கும்பிட்டார்கள் போன்ற செய்திகள் இதில் உள்ளன.

**2. பொருநராற்றுப்படை**

இந்த நூலை 'முடத்தாமக் கண்ணியார்' எழுதியுள்ளார். அவர் இந்த நூலில் சோழ மன்னர் கரிகாலனைப் பற்றிப் பாடியுள்ளார். இது மிகவும் ஏழ்மையில் இருக்கும் கலைஞன் ஒருவனுக்கு கரிகால் மன்னனிடம் சென்றால் நல்ல பரிசு கிடைக்கும் என்று சமாதானப் படுத்தி எழுதப்பட்டுள்ளது. இந்த நூல் சங்க காலத்தில் காணப்பட்ட நெசவுத் தொழில்; விவசாயம், பண்பாடு ஆகியவைகளைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது. நூல் போன வழி தெரியாத படி சங்க கால ஆடைகள் நெய்யப்பட்டது என்று இந்த நூல் குறிப்பிடுகிறது. ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைந்ததாகவும் இந்த நூல் குறிப்பிடுகிறது. இது அரசின் தன்மையைப் பற்றியும் அறிந்து கொள்ள உதவுகிறது.

**3. பட்டினப்பாலை**

இந்த நூலை எழுதியவர் 'கடியலூர் உருத்திரங்கண்ணனார்' ஆவார். இந்த நூல் காவிரிப்பூம்பட்டினம் என்ற நகரத்தைப் பற்றி அதிகமான தகவல்களைச் சொல்லுகிறது. இந்த நூல் சங்ககால வாணிகம், கடைகள், திருவிழாக்கள் போன்றவைகளைப் பற்றி குறிப்பிடுகிறது. கடவுளை தெய்வமாகக் கும்பிட்டார்கள் என்றும் கூறுகிறது. மேலும் ஆட்டுக் கிடாய் சண்டை, பறவைச் சண்டை, போன்றவைகள் நடைபெற்றன என்று இந்த நூல் குறிப்பிடுகிறது.

**4. நெடு நல்வாடை**

இந்த நூலை எழுதியவர் 'நக்கீரர்' ஆவார். இது மன்னர் நெடுஞ்செழியனைப் பற்றி பாடிய நூலாகும். சங்க காலத்தில் போர் முன்னேற்பாடுகள் பற்றி இந்த நூல் விளக்குகிறது. மக்கள் நெல்லையும் மலரையும் தூவி தங்கள் வீடுகளில் வசிக்கும் தெய்வத்தை வணங்கினார்கள் என்று குறிப்பிடுகிறது. மேலும் மக்கள் இரும்பில் செய்யப்பட்ட விளக்குகளை பயன்படுத்தினார்கள் என்று கூறுகிறது. சங்க காலத்தில் வீடு கட்டும் முறையைப் பற்றி இந்த நூல் குறிப்பிடுகிறது. வீடு கட்ட அஸ்திவாரம் தோண்டுவதற்கான பூஜை மத்தியான வேளையில் நடைபெற்றது என்று இந்த நூல் கூறுகிறது.

**5. மதுரைக்காஞ்சி**

இந்த நூலை எழுதியவர் 'மாங்குடி மருதனார்' ஆவார். இது தலையானங்கானத்து செருவென்ற பாண்டிய மன்னர் நெடுஞ்செழியனைப் பற்றி கூறுகிறது. இந்த நூல் சங்ககால மதுரையைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் முக்கிய சான்றாகும். மதுரையில் குன்றுகளைப் போல வீடுகள் இருந்தன என்று கூறுகிறது. மேலும் பணக்காரர்கள் பாதுகாப்பிற்காக, காவலாளிகளுடன் சென்றார்கள் என்றும் இது குறிப்பிடுகிறது. மதுரையில் இருந்த கடைத்தெருக்களைப் பற்றியும் இந்த நூல் விபரமாகச் சொல்கிறது.

**6. சிறுபாணாற்றுப்படை**

இந்த நூலை எழுதியவர் இடைக்கழி நாட்டு 'நாட்டு நல்லூர் நத்தத்தனார்' ஆவார். இது ஒய்மா நாட்டு நல்லியக்கோடன் என்ற சிற்றசரரைப் பற்றி கூறுகிறது. இந்த நூல், சங்க காலத்தில் இருந்த வஞ்சி, மதுரை, கொற்கை, எயிற்பட்டினம், வேலூர் போன்ற முக்கிய நகரங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. மேலும் இந்த நூல் வாணிகர்களின் ஒரு பிரிவினர் தாம் 'உமணர்கள்' என்றும், அவர்கள் முத்தையும் விற்றார்கள், அதேசமயம் உப்பையும் விற்றார்கள் என்றும் குறிப்பிடுகிறது. மேலும் இந்த நூல் கடை ஏழு வள்ளல்களான பேகன், பாரி, காரி, ஆய், அதிகமான், நள்ளி, ஓரி, போன்ற வர்களைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது. சிற்றரசுகள் தோன்றிய விதம் பற்றி அறிந்துகொள்ள இந்த நூல் உதவுகிறது.

**7. பெரும்பாணாற்றுப்படை**

இந்த நூலை எழுதியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆவார். இது காஞ்சிபுரம் தொண்டைமான் இளந்திரையனைப் பற்றி கூறுகிறது. இந்த நூலின் மூலம் சங்ககாலத்து வாணிகம், பிராமணர்களின் வீடுகள், காஞ்சி மாநகரம் போன்றவைகளைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. உப்புவண்டிகளை 'உமணப் பெண்கள்' என்னும் வாணிகப் பெண்கள் ஓட்டிக் கொண்டுச் சென்றார்கள் என்று இந்த நூல் தெரிவிக்கிறது. மேலும் ஆண் உமண வாணிகர்கள், எருமை மாடுகளுடன் வண்டிக்குப் பாதுகாப்பாகச் சென்றார்கள் என்று இந்த நூல் குறிப்பிடுகிறது. பல பாதைகள் கூடு மிடத்தில் வண்டிகளுக்கு 'சுங்கவரி' வசூலிக்கப்பட்டது ' என்று இந்த நூல் நமக்கு தெரிவிக்கிறது. பிராமணர்களின் வீடுகளில், கோழிகள், மற்றும் நாய்கள் போகாமலிருந்தது என்று இந்த நூல் தெரிவிக்கிறது.

**8. மலைபடுகடாம்**

இந்த நூலை எழுதியவர் 'பெருங்கௌசிகனார்' ஆவார். அவர் நன்னன் என்ற வள்ளலைப் பற்றிப் பாடியுள்ளார். இது 'கூத்தராற்றுப்படை' என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நூல் சங்க கால உள் நாட்டு வாணிகம், கடல் வாணிகம்,

தொண்டை நாட்டுத் துறைமுகங்கள் மற்றும் பிராமணர்களின் செல்வாக்கு ஆகியவைக வைகளைப் பற்றி தெளிவாகக் குறிப்பிடுகிறது. இந்த நூல் சங்ககாலத்தில் மத்தளம், சிறுபறை, வெண்கலதாளம், மற்றும் ஊது கொம்பு ஆகிய இசைக் கருவிகளை மக்கள் பயன்படுத்தினார்கள் என்று கூறுகிறது. மேலும் இந்த நூல் ‘நடுகற்களைப் பற்றி அறிந்து கொள்ள உதவிபுரிகிறது. மருத நிலத்தில் தான் தவம் செய்தவர்கள் அதிகமாக இருந்தார்கள் என்ற தகவலையும் இது கூறுகிறது. மேலும் இந்த நூலின் மூலமாக, சங்க காலத்து மக்களின் வீர வாழ்க்கை, துறவு வாழ்க்கை ஆகியவைகளைப் பற்றி அறிய முடிகிறது.

**9.குறிஞ்சிப்பாட்டு**

இந்த நூலை எழுதியவர் 'கபிலர்' ஆவார். இது ஆரிய அரசன் பிகரத்தனுக்கு தமிழ் சொல்லிக் கொடுப்பதற்காக எழுதப்பட்டது. இந்த நூல் குறிஞ்சி நில மலையும் மலைசார்ந்த இடத்தில் வாழ்ந்த மக்களின் சமூக வாழ்க்கை, மற்றும் கலாச்சாரம் ஆகியவைகளைப் பற்றி விளக்கமாகக் கூறுகிறது. சங்ககாலத்து மக்கள் உயர்ந்த குடியில் பிறந்தவர்களை போற்றினார்கள் என்று இந்த நூல் குறிப்பிடுகிறது. மக்கள் கடவுளை பல உருவங்களில் கும்பிட்டார்கள் என்று இந்த நூல் குறிப்பிடுகிறது. சபதம் செய்பவர்கள், முருகனின் முன்னால் அருவி நீரைக் குடித்து விட்டு சபதம் செய்தார்கள் என்றும் இந்த நூல் தெரிவிக்கிறது.

**10. முல்லைப்பாட்டு**

இந்த நூலை எழுதியவர் ‘நப்பூதனார் ' ஆவார். மன்னர்கள் பாடி வீடு கட்டிய முறையைப் பற்றி இந்த நூல் குறிப்பிடுகிறது. மன்னர் முதலில் பகைவர்களின் நகரத்துக்குப் பாதுகாப்பாக இருந்த காடுகளை வெட்டினார். பின்னர் அந்த காட்டிலிருக்கும் வேடர்களை அழித்தனர். அதன் பிறகு முட்களை கோட்டையாக வளைத்து, தாங்கள் தங்குவதற்குரிய ஏற்பாடு களைச் செய்தனர். அது 'பாடி வீடு' என்று அழைக்கப்பட்டது.இப்படி போர்முறைச் செய்திகளை பற்றி இந்த நூல் குறிப்பிடுகிறது. பெண் போர் வீரர்களும் இருந்ததாக இந்த நூல் குறிப்பிடுகிறது.

## எட்டுத்தொகை

எட்டுத்தொகை எட்டு நூல்களைக் கொண்ட ஒரு தொகுப்பாகும். இதில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு. புறநானூறு போன்ற நூல்கள் உள்ளன.

### 1. நற்றிணை

நற்றிணை என்பது நானூறு செய்யுள்கள் கொண்ட ஒரு தொகுப்பு நூலாகும். இது பாண்டிய மன்னர் 'பன்னாடு தந்த மாறன் வழுதி' என்பவரின் ஆணையால் தொகுக்கப்பட்டதாகும் இந்த நூல் சங்க காலப் பெண்களின் நிலைமை பற்றியும் மக்களின் பழக்க வழக்கங்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள உதவும் முக்கிய சான்றாகும். இந்த நூல் குறிஞ்சி நிலத்தில் இருந்த ஊர்களில் 'ஊர்க்காவல்' முறை இருந்தது எனக் குறிப்பிடுகிறது மேலும் தமிழ். மக்கள் சொந்த உறவு முறையை அதிகமாகப் போற்றி வாழ்ந்தார்கள் என்று இந்த நூல் குறிப்பிடுகிறது அதாவது ஒருவர் விஷம் கொடுத்தாலும் மற்றொருவர் அதை நம்பிச் சாப்பிட்டு விடுவார்கள் என்று இந்த நூல் கூறுகிறது. மேலும் தமிழ் மக்களின் உள்ளத்தைப் பற்றி ( Psychology) அறிந்து கொள்ள உதவும் நூலாகவும் இது இருக்கிறது. தை மாதம் முதல் நாளில் குளித்து நோன்பு இருந்து சாப்பிடும் பழக்கமும் மக்களிடமிருந்தது என்று இந்த நூல் குறிப்பிடுகிறது.

### 2. குறுந்தொகை

குறுந்தொகை, இருநூற்று ஐந்து புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு ஆகும். இதில் இருக்கும் பாடல்கள் 'நான்குவரி' மற்றும் 'ஐந்து வரிகளுக்கு' மேல் போகாமல் சிறியதாக இருப்பதால் இது குறுந்தொகை என்று அழைக்கப்படுகிறது. இதனை தொகுத்தவர் 'பூரிக்கோ' என்பவர் ஆவார். இந்த நூல் சங்க கால மக்களின் பண்பாட்டினை பற்றி விளக்குகிறது. சங்க கால அரசர்கள், நாணயம், மற்றும் கோயில் போன்றவைகளைப் பற்றி அறிந்து கொள்ள இந்த நூல் உதவுகிறது. இந்த நூல் குறிப்பிடும் சில செய்திகளைப் பார்ப்போம்.

1. படைத்தலைவர்களுக்கு 'ஏனாதி' என்ற பட்டம் இருந்தது.

2. நாணயங்களை அரசாங்க அலுவலர் ஒருவர் பரிசோதித்தார், அவர் 'வண்ணக்கண்' என்று அழைக்கப்பட்டார்.
3. பெண்கள் தங்கள் தோள் மீதும், மார்பு மீதும் சந்தனக் குழம்பால் பூ கோலம் போட்டிருந்தார்கள்.
4. கோவில்கள் 'தேவர்குலம்' என்று அழைக்கப்பட்டது.
5. ஊர்களில், நேரத்தைக் கணக்கிட்டு சொல்லும் முறை இருந்தது. அப்படிச் சொன்னவர்கள் 'நாழிகைக் கணக்கர்கள்' என்று அழைக்கப்பட்டார்கள்.

**3. ஐங்குறுநூறு**

ஐங்குறுநூறு, ஐந்நூறுப் பாடல்களைக் கொண்ட தொகுப்பாகும். இதனைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்' ஆவார். யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும் பொறை என்ற மன்னர் இதை தொகுக்க ஆணையிட்டார். இந்த நூல் சங்க காலத்தில் தேனூர் ஆமூர், இருப்பை, தொண்டி, கொற்கை போன்ற நகரங்கள் தலைசிறந்து இருந்தன என்று தெரிவிக்கிறது. இந்த நூல் மூலமாக சங்ககாலத்தில் அந்தணர்கள் வேதங்கள் ஓதி வந்தனர் என்றும் அவர்கள் குடுமி வைத்திருந்தனர் என்றும் அறிய முடிகிறது. சங்க காலப் பெண்கள், எல்லாமக்களும் பசியின்றியும் நோயின்றியும் வாழ வேண்டும் என்று விரும்பினார்கள் என்று இந்த நூல் குறிப்பிடுகிறது.

**4. பதிற்றுப்பத்து**

இந்த நூல் சேர நாடு பற்றியச் செய்திகளைத் தெரிவிக்கிறது. பின்பு சங்க கால சேர மன்னர்களை பற்றியும், சேர நாட்டு விவசாயம், வாணிகம், பற்றியும், அறிந்து கொள்ள இந்த நூல் பெரிதும் உதவுகிறது.

1. உழவர்கள் ஏரைப் பயன்படுத்தி உழாமல், கால்களிலேயேக் குழப்பி விதைகளை விதைத்தார்கள்.
2. ஆடைகள் மிகவும் மெல்லிய நூலில் நெய்யப்பட்டன.
3. ஆட்டு வாணிகர்கள் 'பாசவர்' என்ற பெயரால் அழைக்கப் பட்டனர்.
4. இரும்பில் செய்யப்பட்ட கோடாரிகளை மக்கள் பயன்படுத்தினர்.

**5. பரிபாடல்**

பரிபாடல் குறிஞ்சி நிலத்து வாழ்க்கை பற்றியும், முல்லை நிலத்து வாழ்க்கை பற்றியும் தெரிவிக்கிறது. இந்த நூல் சங்க காலத்தின் கடைசிக கட்டத்தில் எழுதப்பட்டதாகும். 'திருமால்' மற்றும் ‘முருகன் தெய்வங்களைப் பற்றி அறிந்து கொள்ள இந்த நூல் ஒரு முக்கிய சான்றாகும். இந்த நூல் மூலமாக சங்க காலத்தில் இருந்த நகரங்கள் இருந்தையூர், திருப்பரங்குன்றம் போன்றவைகளைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் ஆரியர்களின் பண்பாடு, தமிழர்களின பண்பாட்டின் மீது ஏற்படுத்திய தாக்கம் பற்றி அறிந்து கொள்ள இந்த நூல் முக்கிய உதவி புரிகிறது.

**6. கலித்தொகை**

கலித்தொகை பல பாடல்கள் கொண்ட ஒரு தொகுப்பு நூல் ஆகும் இந்த நூல் சங்க காலத்தில் வாழ்ந்த மக்களுடைய பண்பாடு பற்றி தெரிவிக்கிறது. குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் மூங்கிலிருந்து நெல் எடுத்தார்கள். பாறையையே உரலாகப் பயன்படுத்தினார்கள். யானைக் கொம்பை உலக்கையாகப் பயன்படுத்திக் குத்திப் புடைத்தார்கள். அப்போது அவர்கள் வள்ளைப் பாட்டு' என்ற ஒரு வகை பாட்டைப் பாடினார்கள் என்று இந்த நூல் குறிப்பிடுகிறது. மேலும் பெண்கள் மகரக் குழை, முத்துவடம், மேகலை, தெள்ளரிச் சிலம்பு போன்ற பல வகை நகைகளை அணிந்திருந்தார்கள் என்று கூறுகிறது.

**7. அகநானூறு**

அகநானூறு , நானூறு பாடல்களின் தொகுப்பு நூலாகும். இந்த நூலைத் தொகுத்தவர் 'உருத்திரசன்மர்' என்னும் புலவர் ஆவார். இதனை தொகுக்க ஆணையிட்ட மன்னர் 'உக்கிரப் பெருவழுதி ' ஆவார். இந்த நூல் சங்க காலத் தமிழர்களின் குடும்ப வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது. இந்த நூல் மூலமாக சங்க காலப் பெண்கள் 'ஐம்படைத்தாலி' என்ற ஒரு வகைத் தாலியை அணிந்திருந்தார்கள் என்று அறிய முடிகிறது. மேலும் கப்பல்கள் பெரிய

அளவில் இருந்ததாக இந்த நூல் குறிப்பிடுகிறது. பெண்களின் நடனம் பற்றியும், 'குறிஞ்சிப்பண்' என்ற இசைச் செய்திப் பற்றியும் இந்த நூல் விளக்குகிறது.

**8. புறநானூறு**

புறநானூறு என்பது நானூறு செய்யுட் தொகுப்பு நூலாகும். இந்த நூல், சங்க கால மக்களின் போர் வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் முக்கிய சான்றாகும். கணவனை இழந்த பெண்கள் நிலைமை பற்றி, இந்த நூல் குறிப்பிடுகிறது. இறந்தவர்களைத் 'தாழியிலிட்டு புதைக்கும் பழக்கம் என்பது 'பெருங்கற்கால' நாகரீக பழக்கமாகும். அதைப் பற்றிய விளக்கம் இந்த நூலில் கிடைக்கிறது. சங்ககால மக்களின் ஆடை வகைகள் மற்றும் உணவு வகைகள் பற்றியும் இந்த நூல் தெரிவிக்கிறது. பிராமணர்கள் மாலை நேரத்தில் மூன்று தீ வளர்த்து வேள்வி செய்து வந்தார்கள் என்று இந்த நூல் குறிப்பிடுகிறது. தெற்குத் திசையை இறந்தவர்கள் வசிக்கும் இடமாக சங்ககால மக்கள் கருதினார்கள். என்றும் இந்த நூல் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம்.

**தொல்காப்பியம்**

இந்த நூலை எழுதியவர் தொல்காப்பியர் ஆவர். இது ஒரு இலக்கண நூலாகும். இந்த நூல் சங்க காலத்தில் மக்கள் ஐந்து வகையான நிலங்களில் வாழ்ந்தார்கள் என்று குறிப்பிடுகிறது. ஒவ்வொரு நிலத்திலும் வாழ்ந்த மக்கள் வணங்கிய தெய்வம், செய்த தொழில் மற்றும் அவர்களின் பழக்கங்கள் ஆகியவைகள் பற்றி இந்த நூல் தெரிவிக்கிறது. 'கனகசபை போன்ற அறிஞர் இந்த நூல் பிராமணர்களின் கலாச்சாரத்தை தமிழர்கள் பண்பாட்டில் புகுத்திய நூல் என்று குறை கூறுகிறார்.

**சங்கம் மருவிய காலம் இலக்கியச்சான்றுகள்**

சங்கம் மருவிய காலம் பற்றி அறிந்து கொள்ள சிலப்பதிகாரம் , மணிமேகலை, ஆகிய நூல்கள் உதவிபுரிகின்றன.

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரம் நூலை எழுதியவர் 'இளங்கோவடிகள்' ஆவார்.' நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்று பாரதியார் இந்த நூலைப் பற்றி வியந்து கூறுகிறார். இந்த நூல் சங்க காலத்திற்குப் பின்னால் வாழ்ந்த தமிழ் நாட்டு மக்களின் பண்பாடு பற்றி தெரிவிக்கிறது. சங்கம் மருவி, காலத்திலே தமிழ்நாட்டில் சமயம் பல பிரிவுகளைக் கொண்டிருந்தது. சமணம், பௌத்தம், வைஷ்ணவம், சைவம், என்று மக்கள் வேறு வேறு கடவுள்களை வணங்கினார்கள் என்று சமய நிலையைப் பற்றித் தெரிவிக்கிறது. காவிரிப்பூம்பட்டினம் சங்கம் மருவிய காலத்தில் பெரிய வாணிக நகரமாக விளங்கியது. அங்கு பட்டிலும், பருத்தி நூலிலும் நெசவு செய்த ஆடைகளை வாணிகர் விற்றார்கள். பல்வேறு நவதானியங்களை விற்பனை செய்யும் வாணிகர்கள் இருந்தார்கள். தச்சுவேலை செய்பவர், ஓவியர், பொன் செய்யும் கொல்லர்கள் போன்றோர் இருந்தார்கள் என்று இந்த நூல் கூறுகிறது. அரசர்களின் ஆட்சி முறையைப் பற்றியும் இந்த நூல் கூறுகிறது.

கடவுள் வழிபாடுகள் பற்றி பல தகவல்களை இந்த நூல் தருகிறது. இந் நேரத்தில் பெண்கள் தங்கள் வீடுகளின் முல்லை மலர்களை நல்லோடு தூவினார்கள். விளக்கை ஏற்றி வழிபட்டார்கள். அதுபோல மறக்குடியைச் சேர்ந்த பெண்கள் பூதத்தை வழிபட்டார்கள். அவர்கள் கள்ளையும், பூவையும், மாமிசத்தையும் 'பலிப் பொருளாக படைத்தார்கள். மேலும் ஆட்டவகைகளில் ஒன்றான துணங்கை கூத்து' என்ற ஆட்டத்தை ஆடி வணங்கினார்கள் என்றெல்லாம் இந்த நூல் தெரிவிக்கிறது.

காவிரிப்பூம்பட்டினத்தில் பல மன்றங்கள் இருந்தன. அவைகளில் "இலஞ்சி மன்றம், என்பது உடல் ஊனமுற்றவர்களின் நோயை தீர்க்கும் மன்றமாகும். மேலும் இந்த நூல் ஒரு 'பூகோள இயல்' நூலாகும். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து மதுரைக்குச் செல்லும் வழிகளைப் பற்றி இந்த நூல் தெரிவிக்கிறது. உழவர்களின் வாழ்க்கையைப் பற்றியும், பணக்காரர்களின் வீடுகள் பற்றியும் இந்த நூல்

தெரிவிக்கிறது. எனவே சங்கம் மருவிய காலத்தைப் பற்றி தெரிவிக்கும் முக்கிய இலக்கியச் சான்று இது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

**மணிமேகலை**

மணிமேகலை என்ற நூலை எழுதியவர்'கூல வாணிகன் சாத்தனார் ஆவார். இந்த நூலில் உள்ள தமிழ் மொழியின் நடை ஆற்று நீர் ஓடுவது போலஇருக்கிறது. இந்த நூல் சமூகம் என்பது பல 'வருணங்களாக பிரிந்து இருந்தது எனக்குறிப்பிடுகிறது. சிறு தொழில் செய்யும் தொழிலாளர்கள் அந்த காலத்தில் அதிகம் இருந்தார்கள் என்று இந்த நூலின் மூலம் அறிந்து கொள்கிறோம்.அவர்கள் உப்பு விற்பவர்களாகவும், கள் விற்பவர்களாகவும், இருந்தனர். மேலும் பிட்டு விற்பவர்கள் மற்றும் தோல்தைப்பவர்கள் மற்றும் தையற்காரர்கள் அதிகமிருந்தனர் என்று இந்த நூல் குறிப்பிடுகின்றது.

காவிரிப் பூம்பட்டினம் பற்றி அறிந்து கொள்ள இந்த நூல் ஒரு முக்கிய சான்றாகும். செங்கற்களால் வீடுகள் கட்டப்பட்டிருந்தன. அந்த வீடுகளின் வெளிப்புறச் சுவர்களில் தெய்வங்கள், மக்கள், மற்றும் உயிர்கள் ஆகியவைகளின் உருவம் இருந்தது.

சங்கம் மருவிய காலத்து இருந்த புத்த மதம் நிலைமை பற்றி இந்த நூல் விளக்குகிறது மக்கள் புத்தரின் பாதம் போன்ற பீடம் ஒன்று செய்து அதனை வணங்குகிறார்கள். அப்படி புத்தரின் பாதம் இருந்த பீடம் ‘புத்த பீடிகை' என்று அழைக்கப்பட்டது. புத்தர் பல சிறப்பு தன்மை உடையவர் என்று மக்கள் கருதினார்கள். அவர் தாமாகத் தோன்றியவர் என்றும், தனக்கென்று வாழாதவர் என்றும் மக்கள் நினைத்தார்கள். மேலும் புத்தரைப் பல தோத்திரங்கள், அதாவது பல பாடல்களை பாடி கும்பிடவும் செய்தார்கள். இந்த நூல் சங்கம் மருவிய காலத்தில் ஒரு கடுமையான பஞ்சம் இருந்தது என்று கூறுகிறது.

**களப்பிரர் காலம்**

களப்பிரர்காலத்து இலக்கிய சான்றுகள் பதினெண் கீழ்கணக்கு ஆகும்.

**1. பதினெண்கீழ்கணக்குகள்**

பதினெண் கீழ்கணக்குகள் என்பவைகள் பதினெட்டு சிறிய நூல்கள் ஆகும். அவைகள்: நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், ஏலாதி, முதுமொழிக்காஞ்சி, ஐந்திணை ஐம்பது, களவழிநாற்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கார்நாற்பது, கைந்நிலை, திருக்குறள் ஆகியவைகளாகும்.

பதினெட்டு நூல்களும் களப்பிரர்காலத்தைப் பற்றி பல செய்திகளை வெளிப்படுத்துகின்றன. மக்கள் விவசாயம் செய்து ஒரே இடத்தில் நிலையாக வாழ்க்கை நடத்தினார்கள் என்று இந்த நூல்கூறுகிறது. அவர்கள் சிவன், பலராமன், முருகன், போன்ற தெய்வங்களை வணங்கினார்கள். பிராமணர்களை மதித்தார்கள், அவர்களுக்குமக்கள் கடைபிடித்து வந்த பல விரதங்களைப் பற்றியும் இந்த நூல் குறிப்பிடுகிறது. கார்த்திகை, மற்றும் மார்கழி மாதங்களில் மக்கள் விரதமிருந்தனர். விரதமிருப்பதிலும் ஐந்து வகைகள் இருந்தன. உச்சி வேளையில் மட்டும் சாப்பிடுவது, ராத்திரி மட்டும் சாப்பிடுவது, உறங்காமலிப்பது, நான்கு தடவை பூக்களை வைத்து இறைவனைக் கும்பிடுவது போன்ற விரதங்களை அவர்கள் செய்து வந்தனர். அமாவாசையில் சோம வார நோன்பு என்ற விரதம் இருந்தனர். திங்கட் கிழமை விரதமும் மக்கள் கடைபிடித்த நோன்புகளில் ஒன்றாகும் என இந்த நூல் குறிப்பிடுகிறது.

**வெளிநாட்டார்இலக்கியங்கள்: மெகஸ்தனீஸ்**

இவர் கிரேக்க நாட்டு தூதர் ஆவார். இவர் கி.மு. நான்காம் நூற் றாண்டைச் சேர்ந்தவர் ஆவார். இவர் எழுதிய நூலின் பெயர் 'இண்டிகா' என்பதாகும். இந்த நூல் கி.மு. நான்காம் நூற்றாண்டில் பாண்டிய நாடு முன்னூற்று அறுபத்தைந்து ஊர்களாக இருந்தது என்று கூறுகிறது. மேலும் அதை ஒரு பெண் இளவரசி (மதுரை மீனாட்சி) ஆண்டு வந்தார் என்றும் கூறுகிறது. ஒவ்வொரு ஊரும், ஒவ்வொரு நாளைக்கு அரசிக்குரிய வரியை கொடுத்தது என்றும் இந்த நூல் கூறுகிறது.

**பிளினி**

இவர் ஒருகிரேக்க பயணி ஆவார். இவர் இயற்கை வரலாறு' என்ற நூலை எழுதியுள்ளார். இது கி. பி முதல் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இந்த நூலில் தமிழ் நாட்டு மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களைப் பற்றி குறிப்பிடுகின்றார். இவர் முசிறி, மற்றும் மதுரை போன்ற துறைமுகங்களைக் குறிப்பிடுகிறார். முசிறியில் அதிகமாக கொள்ளைக் கூட்டத்தார்கள் வசித்தார்கள் என்று கூறுகின்றார். மேலும் இவர் மதுரை துறைமுகத்தை 'நியாசிண்டன்' என்றும் 'பிகாரே' என்றும் அழைத்ததாகக் குறிப்பிடுகின்றார்.

**பெரிபுளூஸ்**

இது 'கடற்படம்' எல்லது' செங்கடற்பயணக் கையேடு' என்றழைக்கப்படுகிறது. இந்த நூல், கொற்கை, உறையூர், தொண்டி போன்ற நகரங்களைக் குறிப்பிடுகிறது. இந்த நூல், பலவண்ணமுள்ள கல், மெல்லியதுணிகள் போன்றவைகளைதுறைமுகங்கள் இறக்குமதி செய்தது என்று குறிப்பிடுகிறது. பல கப்பல் வகைகளைப் பற்றியும் இந்த நூல் குறிப்பிடுகிறது. நீளமான மரத்துண்டுகள் ஒன்றோடொன்று சேர்த்துக் கட்டப்பட்டதால், அது 'சங்கரா' 'சொலாண்டியா' என்றும் அழைக்கப்பட்டன என்றும் இந்த நூல் குறிப்பிடுகிறது.

**டாலமி**

இவர் கி.பி.இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் எழுதிய நூலின் பெயர் 'புவியியல்' என்பதாகும். இவர், தொண்டி, முசிறி, குமரிமுனை, உறைபூர், போன்ற துறைமுகங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

**பான் கௌ**

இவர் ஒரு சீன ஆசிரியர் இவர் எழுதிய நூலின் பெயர் 'சியன் ஹான்கௌ' என்பதாகும். இந்த நூல் சீன நாட்டிற்கும், காஞ்சிபுரத்துக்கும் இருந்த தொடர்பைபற்றி அறிந்து கொள்ள உதவுகிறது.

**மகாவம்சம்**

இது சிலோன் நாட்டு வரலாற்று களஞ்சிய நூலாகும். இந்த நூல் சிலோனை ஆண்ட அரசர்கள் பட்டியலைக் கொண்டுள்ளது. இந்த நூலானது சிலோன் நாட்டு மன்னர் கஜபாகு தமிழ்நாட்டில் சேரன் செங்குட்டுவன் கட்டிய கண்ணகி கோயில் விழாவில் கலந்து கொண்டார் என்று குறிப்பிடுகிறது. இதன்மூலம், தமிழ் மன்னர் செங்குட்டுவன்காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்று அறிந்து கொள்ள உதவுகிறது. மேலும் இந்த நூல் கி.பி.12, 13-ம் நூற்றாண்டு காலத்தில் பாண்டிய அரசர் இலங்கை மன்னருக்கும் இடையே ஏற்பட்ட போர்களைப் பற்றியும் விளக்குகிறது.

**யுவான் சுவாங்கின் குறிப்புகள்**

இவர் ஒரு சீனப்பயணி ஆவார். இவர் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் முதலாம் நரசிம்மவர்மன் ஆட்சிக்காலத்தில் காஞ்சிபுரம் வந்திருந்தார். '. அங்கு பல புத்த பள்ளிகள் இருந்தது என்று குறிப்பிடுகிறார். இவரது குறிப்புகள் கி.பி.7-ஆம் நூற்றாண்டில் பல்லவ நாட்டு பௌத்த மத நிலை பற்றி அறிந்து கொள்ள பெரிதும் உதவுகிறது. இவர் பாண்டிய நாட்டுக்குச் செல்லவில்லை. இருந்தாலும் அங்கு கடுமையான பஞ்சம் நிலவியதாகக் குறிப்பிடுகின்றார்.

***சீன* அரண்மனை 'சங்வம்ச குறிப்புகள்**

*சீன* அரண்மனை குறிப்புகள், *சீனா*விற்கும், தமிழ்நாட்டிற்கும் நடந்த வாணிகம் பற்றிக் கூறுகிறது. அது போலவே , காஞ்சி அரசர்க்கும் *சீன* அரசர்க்குமிடையில் நடைபெற்ற வாணிகத்தைப் பற்றி குறிப்பிடுகிறது. இதன் மூலம் பல்லவ மன்னர் கி.பி. எட்டாம் நூற்றாண்டு இரண்டாம் நரசிம்மவர்மன் *சீன* அரண்மனைக்கு தூது அனுப்பினார் என்றும் அறிந்து கொள்ள முடிகிறது. அது போல முதலாம் இராஜ இராஜன் கி.பி. 1015 ல் ஒரு தூதுக்குழுவை அனுப்பினார். கி.பி.1033ல் முதலாம் இராசேந்திரன் ஒரு தூதுக்குழுவை அனுப்பினார். கி.பி.1077ல் முதலாம் குலோத்துங்கன், *சீனா*விற்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பினார் என்று அறிந்து கொள்கிறோம்.

**அல்பர்னி**

இவர் முகமது கஜினியுடன் இந்தியாவிற்கு வந்த அரேபியர் ஆவார். இவர் எழுதிய நூல் 'தர்க்கிகி - ஹிந்த்' என்பதாகும். இவர் தென்னிந்தியாவைப் பற்றி கேள்வி ஞனாத்திலே இந்த புத்தகத்தை எழுதியுள்ளார்.

**மார்க்கோபோலோவின் குறிப்புகள்**

மார்க்க போலா- வெனீஸ் நாட்டைச் சேர்ந்தவர். இவர் சீனாவிலிருந்து பாரசீகம் போகிற வழியில் தமிழ் நாட்டுக்கு வந்தார். இவர் கி.பி.1293ல் பாண்டிய நாட்டில் பயணம் செய்தார். இந்த நூல் பாண்டிய நாட்டு அரசியல், கலாச்சாரம் போன்ற செய்திகளையெல்லாம் கூறுகிறது. இவர் பாண்டிய நாட்டில் தையற்காரரைப் பார்த்ததே இல்லை என்று கூறுகிறார். மேலும் முத்து வாணிகம் பற்றி அறிந்து கொள்ள இது ஒரு நல்ல நூலாகும்.

**வாசாப் குறிப்புகள்**

இவர் ஒரு இஸ்லாமிய வரலாற்றாசிரியர் ஆவார். இந்த குறிப்புகள், டில்லி சுல்தான் அலாவுதீன் தளபதி மாலிக்கபூர் பாண்டிய நாடு வரை படையெடுத்த விபரங்களைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது. பிற்கால பாண்டிய மன்னர், மாறவர்மன் குல சேகரனைப் பற்றியும், சடையவர்மன் சுந்தர பாண்டினைப் பற்றியும் அறிந்து கொள்ள வாசப் குறிப்புகள் உதவிபுரிகின்றன. மேலும் இவர் மதுரை நகர் கருவூலத்தில் 1200 கோடி பொன் நாணயங்களுக்கு மேலிருந்தன என்று கூறுகின்றனர்.

**இபின்பதுதாவின்குறிப்புகள்**

இவர் வடஆப்பிரிக்காவில் உள்ள மொராக்கோ நாட்டில் பிறந்தவர் ஆவார். இவர் முகமுது பின் துக்ளக் காலத்தில் டெல்லி வந்தார். இவருடைய குறிப்புகள் தமிழ்நாட்டில் முஸ்லீம் படையெடுத்த போது ஏற்பட்ட நிகழ்ச்சிகளையும், முஸ்லீம் ஆட்சியைப் பற்றியும் அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் இபின்பதுதா, சுல்தானை ஆட்சியிலிருந்து விரட்ட ஹொய்சாள மன்னன் மூன்றாம் வல்லாளன்

பெருமுயற்சி செய்தார் என்றும் அவர் இறுதியில் கொடுமைக்குள்ளாக்கப்பட்ட நிகழ்ச்சிகளையையும் குறிப்பிடுகிறார்.

**டொமின்கோ பெய்ஸ் மற்றும் பெர்னா நூனிஷ் குறிப்புகள்**

இவர்கள் இரண்டு பேரும் போர்ச்சுகீசியர் ஆவர். இவர்களின் இரண்டு குறிப்புகளும் விஜயநகர ஆட்சிக்காலத்தைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது. நாயக்குகள், விஜயநகர அரசர்களுடன் மிகுந்த நெருக்கமான உறவுடையவர்கள் எனக் குறிப்பிடுகின்றது. நாயக்குகள் மட்டுமே பல்லக்குகளை உபயோகப்படுத்தினர் என்று நூனிஷ் குறிப்புகள் கூறுகின்றன. இந்த குறிப்புகள், நாயக்குகள், மற்றும் அவர்கள் ஆட்சி செய்த 'நாயக்கத் தனம் என்ற நிர்வாகத்தைப் பற்றி அறிந்து கொள்ள பெரிதும் உதவுகிறது.

**நிக்கோலோ கான்டி**

இவர் இத்தாலி வெனிஸ் நாட்டு வழிபோக்கர் ஆவார். இவர் விஜய நகரத்தின் பெயரை பிஸ்ன காலியா' என்று கூறுகிறார். இந்த நகரத்தைச் சுற்றி மதிற் 'சுவர்கள் கருங்கற்களிலில் அமைக்கப்பட்டுள்ளன. விஜய நகரத்தின் சேனையில் 90,000 க்கு மேற்பட்ட படை வீரர்கள் உள்ளனர். 'விஜயநகர அரசர்' மற்ற அரசர்களை விட செல்வாக்கும் அதிகாரமும் உடையவராவர். விஜய நகரத்தில் தீபாவளி, நவராத்திரி காமன் பண்டிகை முதலிய தினங்களை மக்கள் கொண்டாடிய விதம் குறித்தும் எழுதியுள்ளார்.

**அப்துல்ரசாக்**

இவர் பாரசீக நாட்டின் தூதர் ஆவார். இரண்டாம் தேவராயர்காலத்தில் கி.பி. 1443-ஆம் ஆண்டில் வந்து தங்கினார். இவர் விஜய நகரமன்னர்கள். செல்வமிகுந்த மன்னர்கள் எனக் குறிப்பிடுகிறார். விஜய நகர மன்னரின் அரண்மனை ஏழாவது கோட்டை சுவர்களுக்குள் இருந்தது எனக் குறிப்பிடுகின்றார். மற்றும் மகாநவமி அல்லது தசரா பண்டிகையைப் பற்றிக் கூறும் இவர் குறிப்புகள், மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

## 3. சங்க காலம் - கால வரையறை (SANGAM - AGE)

தமிழ் நாட்டில், தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்று சங்கங்கள் இருந்து தமிழை வளர்த்து வந்தன என்று கூறப்படுகிறது. தலைச்சங்கம் தென் மதுரையிலும், இடைச் சங்கம் கபாடபுரத்திலும், கடைச்சங்கம் இன்றைய மதுரையிலும் நிறுவப்பட்டன. இக்காலங்களில் தமிழில் எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றி தமிழுக்குப் பெருமை சேர்த்தன. சங்கம் என்ற சொல்லுக்கு புலவர்களின் ஒருங்கிணைந்த அமைப்பு என்று பொருள்படும். இச்சொல் வடமொழியிலிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. முதன் முதலாகச் சங்கம் என்ற சொல் தான் காணப்படுகிறது. சங்கம் என்ற சொல் பிற்காலத்தைச் சார்ந்ததாகவே இருக்க வேண்டும். சங்கங்களைப் பாண்டிய மன்னர்கள் போற்றி வளர்த்தனர். இச்சங்கங்கள் வளர்ச்சி பெற்றிருந்த காலத்தைத்தான் சங்க காலம் என்றழைக்கிறோம். சங்க காலம் எது என்று நிர்ணயம் செய்வதில் வரலாற்றாசிரியர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. இரண்டாயிரம் வருடங்கட்கு முற்பட்டதாகும் என்று கருத்து தெரிவிக்கிறார்.

VR.ராமசந்திர கட்சிதர், சங்க காலம் கிமு ஆறாம் நூற்றாண்டி துவங்கி, கிபி.ஐந்தாம் நூற்றாண்டு வரை ஏறத்தாழ ஆயிரம் ஆண்டும் வரை செயல்பட்டது என்று கருதுகிறார். K.R.சீனிவாச அய்யங்கள் மற்றும் சில அறிஞர்கள் இக்கருத்தினை ஏற்றுக் கொள்கிறார்... ஆனால் KA நீலகண்ட சாஸ்திரியார், சங்கம் என்பது கிறிஸ்துவுக் பின் முதல் மூன்று நூற்றாண்டுகளில் நிலவியிருந்தது என்று கருதுகிறது இவ்வாறு சங்கம் செயல்பட்டு வந்த காலம் பற்றி அறிஞர்களிடை கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

**சங்க கால ஆரம்ப வரையறை**

சங்க காலத்தின் ஆரம்பத்தினைப் பற்றியும், அதனுடைய காலத்தினைப் பற்றியும் அறிந்து கொள்வதற்குக் கல்வெட்டுகள் உது செய்கின்றன.

1) தமிழ்நாட்டில் பல இடங்களில் காணப்படும் பிராமி கல்வெட்டுகளே தமிழகச் சான்றுகளில் மிகவும் பழமையானது ஆகும் அந்த கல்வெட்டுக்களின் காலம் கி.மு.2-ம் நூற்றாண்டு என மொழியில் என வல்லுனர்கள் மூலமாகவும், கல்வெட்டு அமைப்புகளில் வளர்ச்சியினைக் கண்டுபிடிப்பவர்களின் மூலமாகவும் நிர்ணயம் செய்யப்படுகிறது. பிராமிக் கல்வெட்டுகளுக்கும் தொன்மையான கல்வெட்டுகளோ, இலக்கியக் குறிப்புகளோ கிடைக்கப் பெறவில்லை.

எனவே சங்க காலத்தின் தொன்மைக் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு என உறுதி செய்யப்படுகிறது. இந்தக்கால வரையறை மேலும் சில கல்வெட்டுக்களின் மூலம் தெளிவாக்கப்படுகிறது.

2) அசோகரின் கல்வெட்டுக்களின் காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு ஆகும். இக்கல்வெட்டுக்களில் தமிழகத்திலுள்ள சேர சோழ, பாண்டிய அரசுகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன எனவே தமிழ்ச்சங்கமும் அக்காலத்தில் இருந்திருக்கக் கூடும் என்று கருத முடிகிறது

3) கலிங்க மன்னன் காலவேலன் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சி புரிந்தவன் ஆவான். அவன் வெளியிட்ட ஹதிகும்பா கல்வெட்டு வரலாற்றுச் சிறப்பு மிக்கது ஆகும் அதன் காலம் கி.மு.155 ஆகும். இதில் ஆண்டுகளுக்கு முன்ன அமைக்கப்பட்ட தமிழ் அரசுகளின் கூட்டமைப்பு பற்றியும், அதனை காரவேலன் வெற்றி கொண்டது பற்றிய செய்திகள் காணப்படுகின்றன

இதிலிருந்து, தமிழக அரசுகளின் தோற்றம் 113 ஆண்டுகளுக்கு முன்பாக இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. எனவே சங்க காலத்தின் ஆரம்ப காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு எனத் தீர்மானிக்கப்படுகிறது.

**சங்க காலத்தின் கால வரையறை**

சங்ககாலம் பற்றிய வரையறைகளை இலங்கை நாட்டின் இலக்கியமான மகாவம்சமும் மற்றும் சிலப்பதிகாரமும் விளக்குகின்றன. சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவன் என்ற மன்னன் கண்ணகிக்கு எடுத்த விழாவின் போது, இலங்கை மன்னன் கயவாகு கலந்து கொண்டு சிறப்பித்தான் என்று குறிப்பிடுகிறது.

இலங்கை நாட்டைச் சேர்ந்த மகாவம்சம் என்ற நூலும் கண்ணகிக்கு எடுக்கப்பட்ட விழாவில் கயவாகு கலந்து கொண்டான் என்று குறிப்பிடுகிறது. மகாவம்ச நூலினை ஒழுங்குபடுத்தியர்கள், கயவாகு என்ற மன்னன் கி.பி.180, 198-ம் ஆண்டுகளில் ஆட்சி புரிந்திருக்க வேண்டும் என்று கருத்து தெரிவிக்கின்றனர். ஆகவே சேரன் செங்குட்டுவனின் காலம் இரண்டாம் நூற்றாண்டின் கடைசிப்பகுதி என்று முடிவாகிறது. இதுவே கடைச் சங்கத்தின் காலம் என்றும் நிர்ணயித்துக் கொள்ளலாம்.

இதுதவிர எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற இலக்கியங்களில் குறிக்கப்படும் துறைமுகப்பட்டிணங்களான கொற்கை, முசிறி, புகார் ஆகியவற்றின் இருப்பிடங்கள் பற்றியும், ரோமானியப் பயணிகளான பிளினி, டாலமி போன்றோர்கள் குறிப்பிடுகின்றனர். அவர்களுடைய காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு ஆகும். எனவே சங்க காலத்தின் இறுதி வரையறையை கி.பி.இரண்டாம் நூற்றாண்டாகக் கருதலாம். சங்க கால இலக்கியங்களில் ஒன்றான பதிற்றுப்பத்து என்ற நூலில் உள்ள பதிகங்கள் ஒவ்வொரு சேர மன்னனைப் பற்றியும் குறிப்புகள் தந்துள்ளன. அந்தப் பதிகங்களில் தரப்பட்டுள்ள மன்னர்களைக் கீழ்க் கண்டவாறு முறைப்படுத்தலாம்.

1) உதயன் சேரல், 2) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், 3) பல்யானை செங்கெழுகுட்டுவன், 4) களங்காயக் கண்ணி நார்முடிச்சேரல், 5) செங்குட்டுவன், 6) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், 7) செல்வக்கடுங் கோவாழியாதன், 8) பெருஞ்சேரல் இரும்பொறை, இரும்பொறை, 9) இளம்சேரல் இரும்பொறை

மேற்கண்ட அரசர்களில் செங்குட்டுவனது காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு நான்கு அரசர்கள் ஆட்சி புரிந்திருக்கின்றனர். ஒவ்வொரு அரசனும் சராசரியாக 25 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர் என்று எடுத்துக் கொண்டால், கி.பி.3-ம் நூற்றாண்டில் சேர மன்னர்களின் ஆட்சி முடிவடைகிறது. எனவே கி.பி. மூன்றாம் நூற்றாண்டோடு சங்க காலம் முடிவுறுகிறது என்று கூறலாம். இவ்வாறு சங்க

காலத்தின் துவக்க காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு எனவும், அது முடிவுற்ற காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு எனவும் ஆதாரங்கள் மூலமாக நிர்ணயம் செய்யப்படுகிறது.

**சங்க காலம் – சான்றுகள் (Sangam Age - Sources)**

சங்க காலத்தைப் பற்றிய அடிப்படைச் செய்திகளை அறிவதற்கு நமக்கு பல ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஒரு நாட்டின் வரலாறு அந்த நாட்டில் கிடைக்கின்ற வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையிலேயே எழுதப்படுகின்றன. கி.பி. 7-ம் நூற்றாண்டைச் சார்ந்த அப்பர் என்று அழைக்கப்பட்ட திருநாவுக்கரசர் தன்னுடைய பாடல்களில் சங்கம் பற்றிய செய்தியைக் குறிப்பிடுகிறார். இறையனார் அகப் பொருள் பாயிரம் என்ற நூல் சங்கத்தினைப் பற்றிய விரிவான செய்திகளைக் கொண்டிருக்கிறது. அதுதான் மூன்று சங்கங்கள் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. சங்க கால தமிழகத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்குக் கீழ்க்கண்ட ஆதாரங்கள் நமக்குப் பெரிதும் உதவுகின்றன.

**1) கல்வெட்டுச் சான்றுகள்**

**பிராமி கல்வெட்டுக்கள்**

இவைகள் தான் தமிழகத்தின் முதன்மைக் கல்வெட்டு ஆகும். இவை அறிவர் என அழைக்கப்படும் சமணத் துறவிகள் தங்கியிருந்த குகைகளில் காணப்படுகின்றன. இவைகளது காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு ஆகும்.

**அசோகரது கல்வெட்டுகள்**

அசோகர் காலத்து 2-ம் நம்பர் குகைக் கல்வெட்டுகள் தமிழகத்தில் ஐந்து தனி நாடுகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. அவை சோழர், பாண்டியர், சத்திய புத்திரர், கேரளபுத்திரர், தாமிரபரணி ஆகியவை ஆகும். இவைகளின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு என்று உறுதி செய்யப் படுகிறது. இவை தவிர கலிங்கத்து காரவேலரின் கெம்பா கல்வெட்டு களிலிருந்தும் சங்க கால தமிழகத்தைப் பற்றிய என் செய்திகளை அறிய முடிகிறது.

**வேள்விக்குடி கல்வெட்டுகள்**

பராந்தக நெடுஞ்சடையனின் வேள்விக்குடி கல்வெட்டுகள் சங்க அரசன் பாண்டியன் முதுகுடும்பி பெருவழுதியிடமிருந்து சமாகப் பெறப்பட்ட பிரம்மதேய கிராமங்களைத் திரும்பவும் நஞ்சடையனால் பிற்காலத்தில் தானமாக வழங்கப்பட்டதை உறுதி செய்கிறது.

**திருக்கோவிலூர்கல்வெட்டு**

இக்கல்வெட்டு கபிலர் என்ற சங்ககாலப் புலவர் வடக்கிருந்து உயிர் விட்டதைப் பற்றிக் கூறுகிறது. மேலும் நடுகல் அல்லது வீரக்கல் என்பவை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கிடைக்கிறது. அவைகளில் கிடைக்கும் செய்திகள் சங்க காலத்தில் காணப்படும் செய்திகளோடு ஒத்திருக்கின்றன.

**நாணயங்கள்**

சங்ககாலம் என்று வரையறுக்கக்கூடிய நாணயங்கள் எதுவும் கிடைக்கவில்லை. மதுரைக்கு அருகில் பல ரோமானிய நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகள் ரோமானிய அரசர் அகஸ்டஸ் சீசர் காலத்தில் வெளியிடப்பட்டவை. இதன் காரணமாக ரோமானியப் பேரரசிற்கும் தமிழகத்திற்குமிடையே நிலவிவந்த வாணிபத் தொடர்பு அறியப்படுகிறது.

**தொல்பொருள்சான்றுகள்**

பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேடு கிராமத்தில் கிடைத்துள்ள தொல்பொருள் சான்றுகள் சங்க காலத்தில் தமிழர்களுக்கும், ரோமானியர்களுக்குமிடையே நடைபெற்று வந்த , வாணிபத் தொடர்பை வலியுறுத்துகின்றன.

**இலக்கியச் சான்றுகள் (சங்க கால இலக்கியங்கள்)**

கால பல சங்க இலக்கியங்கள் மூலமாக பண்டைக்கால தமிழ் பயத்தைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. பொதுவாக சங்க தியங்கள் என்று நூல்கள் குறிப்பிடப்பட்டாலும், தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரண்டு மட்டுமே சங்க

காலங்கள் என்று கூறப்படுகிறது. இவை இரண்டும் கிறிஸ்துவ "த்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என்று அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டு உள்ளன. எட்டுத் தொகையில் தனித்தனியே பின்வரும் எட்டு நூல்கள் அடங்கியுள்ளன.

**நற்றிணை**

இந்த நூல் 400 பாடல்களைக் கொண்டது. இது சிற்றரசர்களான ஓழு, பாமு, அதிகன், நின்னன், மலையன், பாணன் ஆகியோரைப் பற்றிக் குறிப்பிடுகிறது. மேலும் தொண்டி, கொற்கை, மருதூர்பட்டினம், புனல்வாயில், இரப்பையூர், குடந்தை ஆகிய ஊர்களைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகிறது. ஐந்து திணைகளில் வசிக்கும் மக்களின் உணவு, உடை, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன.

**குறுந்தொகை**

குறுந்தொகையைத் தொகுத்தவர் பூரிக்கோ என்பவர் ஆவார். இது 402 பாடல்களைக் கொண்டது ஆகும். இதில் சமணர்களின் சில பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன.

**ஐங்குறுநூறு**

இதனைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் என்ற புலவர் ஆவார். இது ஐநூறு வரிகளைக் கொண்டது. ஐந்து நிலப் பாகுபாடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு நிலத்திற்கும் நூறு பாடல்கள் இடம் பெறுகிறது. பல பாண்டிய மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

**பதிற்றுப்பத்து**

சேர மன்னர்களைப் பற்றிய பல்வேறு புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பே பதிற்றுப்பத்து ஆகும். இதில் முதல் பாடலும் கடைசிப் பாடலும் காணப்படவில்லை. இவைகளில் சங்க சமூக பொருளாதார நிலை பற்றிய குறிப்புகளும், கொற்கை, தொண்டி போன்ற இடங்களைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

பரிபாடல் கால கால சமய திருமால், முருகன், கொற்றவை, வைகை நதி ஆகியவை பற்றிய பாடல்களின் தொகுப்பே பரிபாடல் ஆகும். சங்க வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் உதவுகிறது.

**கலித்தொகை**

கலித்தொகை சங்க இலக்கியம் யாவற்றிலும் காலத்தால் பிற்பட்டது என்று கருதப்படுகிறது. இது 250 பாடல்களைச் கொண்டது. ஐந்து புலவர்கள் மூலம் பாடப்பட்டது. இது ஐந்து நிலங்களில் நடக்கக் கூடிய காதல் நிகழ்ச்சிகளைப் பற்றிக் படுகிறது. இதன் மூலம் சங்க காலத்தில் காணப்பட்ட அக வாழ்கையை அறிந்து கொள்ள முடிகிறது. கண்ணன் என்ற ஆரியக் வள் முதன் முதலாக இந்த இலக்கியத்தில் தான் குறிப்பிடப்படுகிறான்.

**அகநானூறு**

அகத்துறை பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டது. நானூறு பாண்டிய மன்னன் உக்கிரப் பெருவழுதியின் கீழ் இந்த ல் தொகுக்கப்பட்டது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை , உான்ற ஐந்து வகையான நிலங்களின் தன்மையை விளக்குகிறது. மேலும், மௌரியர்களின் படையெடுப்பு, தொண்டை மண்டல இரையர்கள், சங்க காலத் தமிழரின் உள்ளாட்சி நிறுவனம், திருமணச் சங்குகள் போன்ற வரலாற்று உண்மைகளும் இடம் பெற்றுள்ளன.

**புறநானூறு**

சங்ககால அரசர்கள், சிற்றரசர்கள் பற்றிய செய்திகளைத் தருகிறது புறநானூறு. ஒவ்வொரு பாடலின் அடியிலும் பாடப்படும் மன்னரின் பெயரும் பாடும் புலவரின் பெயரும் உள்ளது. தமிழர்களின் போர்த்திறன், கொடைத்திறன் பற்றி அறியலாம். ஆரியர்களின் ஆதிக்கம் தமிழ் நாட்டில் எந்த அளவிற்கு வியாபித்திருந்தது என்பதை அறிய முடிகிறது.

**பத்துப்பாட்டு**

பத்துப்பாட்டில் தொகுக்கப்பட்ட பத்து நூல்களும் எட்டுத் தொகை நூல்கள் இயற்றப்பட்ட காலத்திலேயே பாடப்பட்டவை என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

**திருமுருகாற்றுப்படை**

இதனைப் பாடியவர் நக்கீரர். இவர் முருகனின் திருவருளைப் பெற்று உயர்ந்தவர். முருகனிடமிருந்து தான் பெற்ற திருவருட் செல்வத்தை மற்றவர்களும் பெற்று பேரின்பம் அடையுமாறு அவர்களை ஆற்றுப் படுத்துவதாக அமைந்துள்ளது இந்தப் பாடல்கள். 2) பொருநராற்றுப்படை இதனைப் பாடியவர் முடத்தாம கண்ணியார். அரசன் அல்லது சளல் ஒருவனிடம் பரிசில்கள் பெற்று வந்து பொருநர், மற்றொரு "பொருநனை தான் பெற்று வந்த வள்ளலிடம் சென்று பரிசில் மாறு வழிப்படுத்துகிறான். பொருநராற்றுப்படையில் கரிகால "ழேன் பற்றிய பல செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன.

**பெரும்பாணாற்றுப்படை**

இதனைப் பாடியவர் நல்லூர் கடியலூர் உருத்திரங்கண்ணார் ஆவர். இதில் காஞ்சி மன்னன் தொண்டைமான், யாழின் வர்ணனை போன்ற செய்திகள் காணப்படுகின்றன.

**சிறுபாணாற்றுப்படை**

இதனைப் பாடியவர் நல்லூர் நத்தத்தனார். இவர் கடையேழு வள்ளல்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இப்பாடல்கள் சங்கப் பாடல்கள் பலவற்றிற்கு காலத்தால் பிற்பட்டது என்று தெரிகிறது. மொத்தம் 269 வரிகளைக் கொண்டது சிறுபாணாற்றுப் படை.

**முல்லைப்பாட்டு**

இதனை இயற்றியவர் நிப்பூதனார். இது பெரும்பாலும் முல்லை நிலத்தின் தன்மையைப் பற்றியும், அதில் வாழும் மக்களின் வாழ்க்கையைப் பற்றியும் விவரிக்கிறது.

**மதுரைக் காஞ்சி**

மிகவும் அதிகமான வரிகளையுடைய நூல் இது. மதுரை மாநகர் பற்றியும், அதனைச் சுற்றி வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் பற்றியும், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் போர் நடவடிக்கைகள் பற்றியும் இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நெடுநெல்வாடை**

இதன் ஆசிரியர் நக்கீரர் ஆவார். இது புறத்துறையைச் சார்ந்த மற்றுமொரு பாடல் ஆகும். நெடுநெல்வாடையில் பாட்டுடைத் தலைவன் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவான். இவனும் நக்கீரரும் சம காலத்தவர் ஆவர்.

மேற்கண்ட ஆதாரங்கள் சங்க காலத் தமிழர்களின் எல்லா நிலைகளையும் அறிந்து கொள்ள உதவுகிறது. இந்த ஆதாரங்களை வைத்துக் கொண்டு சங்க காலத்தின் அரசியல், சமூகப், பொருளாதார வரலாறு பற்றி பல ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்கிறது. K.A.நீலகண்ட சாஸ்திரி எழுதிய தென்னிந்திய வரலாறு, K.K.பிள்ளை எழுதிய தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், கனகசபை எழுதியுள்ள 1800 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் சமூகம், N.சுப்பிரமணியம் எழுதியுள்ள Sangam Polity ஆகிய நூல்கள் சங்க காலத்தைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் கொண்டுள்ளன.

**சங்ககால அரசு (Sangam State)**

சங்ககாலத்தில் மூன்று வகை அரசுகள் இருந்தன. இவைகள் 'கிழார் அரசு; சிற்றரசு; 'வேந்தர் அரசு' என்பவையாகும். கிழார் அரசு குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து வகை நில 'கிராமங்களிலும் இருந்தது. சிற்றரசுகள் கிராமத்தைவிட பெரிய நிலப்பரப்பான 'நாடுகளில்' காணப்பட்டது. வேந்தர் அரசு; பல நாடுகள் கொண்ட பகுதிகளில் இருந்தது.

**கிழார் அரசு: (Lineage Leader)**

இது ஒரு 'கிராம அளவில் இருந்தது. இந்த கிராமத்தில் பல கூட்டுக்குடும்பங்கள் வசித்தன. இவைகளின் மூத்த தலைமுறையைச் (Senior

Lineage) சேர்ந்தவர். 'கிழார்' ஆக இருந்தார். இவர் இந்த கிராமத்தின் முழுச் சொந்தக்காராக இருந்தார். இவர் அனுமதி இல்லாமல் யாரும் எதுவும் செய்ய முடியாது. கடலுக்குச் சென்று மீன் பிடிக்கவுவம் இவருடைய அனுமதி வேண்டும். இது போல, திருமணம் செய்து கொள்ளவும் இவர் தயவு வேண்டும். இவர் கிராமத்து மக்களுடன் ஒன்றாகச் சேர்ந்து பாடுபட்டார். (Communal labour) அதில் வந்த பொருளைச்சமமாக பங்கு வைத்தார். இந்த தலைவர்கள் புகழுக்காகவும் வீரத்துக்காகவும் இரத்த உறவுக்காகவும் போரிட்டார்கள்.

**சிற்றரசு அரசு (Chiefdom)**

சிற்றரசு முறை கிழார் அரச முறையிலிருந்து வளர்ச்சியடைந்த ஒன்றாகும். இது மக்கள் நாடுகளில் கூடி வசித்த போது தோன்றியது. இங்கு பல பரம்பரை குடும்பங்கள் ஒன்றாகச் சேர்ந்து வசித்தன. (Segemented lineages) இவர்கள் கால்நடை, மற்றும் விவசாயம் தொழில் செய்து வாழ்ந்தனர். இவர்களின் மூத்த பரம்பரை குடும்பம் தலைவராக இருந்தது. அவர்கள் தங்களுடைய வீரத்தைக் காட்டி கால்நடைகளுக்குத் தேவையான நிலங்களைக் கைப்பற்றினர். இங்கு வாழ்ந்த மக்கள் 'இரும்பைப் பயன்படுத்தி பல தொழிற்கருவிகளைச் செய்தனர். அதனால் உற்பத்தியில் 'உபரிபெருள் (Surplus) ஏற்பட்டது. அந்த உபரியை தலைவர் 'காணிக்கையாக'ப் பெற்றார். காணிக்கையை வைத்து படையைப் பெருக்கினார். அதன் மூலம், வியாபாரிகளின் நடமாட்ட பாதைகளையும், சந்தை ஊர்களையும் கைப்பற்றினர். இதனால், தலைவர் பரம்பரைசெல்வத்தில் உயர்ந்தது. அந்த தலைவர் சிற்றரசராக உயர்ந்தார். ஆவர் 'கோ' என்றும் 'கோமான்' 'பெருமகன்' என்றும் அழைக்கப்பட்டார். இவர்கள் வீட்டில் நெல்லும் பொருளும் விலையுயர்ந்த அதிகமாகயிருந்தது. இவர்கள் மூவேந்தர்அரச பரம்பரையை ஏற்றுக் கொள்ளாமல், அவர்களிடம் அடிக்கடிச் சண்டை போட்டனர். தோற்ற பின்பு அரசர்களிடம் இவர்கள் படைத்தனவர்களாக பணியாற்றினர். இவர்கள் பொருளுக்காகப் போரடி அதைச் சேமித்தனர். ஆகவே சிற்றரசரும், அவரைச் சார்ந்த குடும்பங்களும் மற்ற மக்களைவிட உயர்ந்த அந்தஸ்து (Status) கொண்ட குடும்பங்களாக இருந்தது.

**வேந்தர் அரசு (Kingdom)**

இது சங்க காலத்திலிருந்த 'கிழார் அரசு', ' 'சிற்றரசு' போன்றவைகளைக் காட்டிலும் வலிமையான அரசாகும். இது செழிப்பான மருதம், நிலப்பகுதியில் தோன்றியது. இது தோன்றும் பொழுது ஒரு 'மூத்த தலைமுறைக் குடும்பங்களாகத் ஒரு ஊரில் தான் தோன்றியது. பிறகு போரைக் காரணமாக காட்டி, பல கிளைக் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஒரு வலுவான 'தலமுறையை' உருவாக்கிக் கொண்டன. இவர்கள் மற்ற கூட்டுக் குடும்பங்களை ஒன்றன் பின் ஒன்றாகத் தோறகடித்து அவர்களின் பொருள்களையெல்லாம் அபகரித்தனர். இதன் மூலம் அவர்கள் பெரும்படையையும் ஏற்படுத்திக் கொண்டனர். அவர்கள் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, மறவர் படை என்று நால்வகைப் படைகளை ஏற்படுத்தினர். கடல் வாணிகத்தை கைப்பற்ற ஒரு கப்பற்படையையும் தயாரித்தனர். கப்பல் வாணிகத்தை அதிகரிக்க. துடுப்பு இல்லாமல், கடற்காற்றைப் பயன்படுத்திச் செல்லும் கப்பல்களை உருவாக்கி தந்தனர். வணிகர்களுக்கு உதவி புரிந்து அவர்களிடமிருந்து பொருட்களைப் பெற்றனர். விவசாயிகளுக்கு உதவிபுரிய கால்வாய்கள், குளம் அமைத்துக் கொடுத்தனர்.

இவர்கள் முற்றிலும் புதிய பொருளாதாரத்தைப் பலத்தையும், போர் படையையும் வைத்திருந்தனர். ஆகவே இவர்கள் மற்ற எல்லா சிற்றரசர்களையும் விட உயர்ந்திருந்தனர். இவர்கள் கிழார்களின் கூட்டுச் சொத்துக்குப்பாதுகாவலாக இருந்தனர். அவர்களிடமிருந்து 'திறை' (Tribute) பெற்றுக் கொண்டனர். இவர்கள், சிற்றரசர்களைப் போல, உற்பத்திப் பொருட்களை மட்டும் கைப்பற்ற வில்லை, உற்பத்தி செய்ய உதவும் (Means of Production) நிலம், வணிகம் ஆகியவைகளையும் கைப்பற்றினர்.

**சங்க கால சமூக அமைப்பு** (Social Stratification -- Caste Occupation Group)

சங்க காலத் தமிழர்களிடம் இனக்குழு சமூகம் (Tribal society) குடிகள் சமூகம் (Lineage society) தொழில் செய்வோர் சமூகம் (Occupational group) என்று மூன்று வகைகளிலிருந்தன.

**இனக்குழு சமூகம் (Tribal Society)**

இனக்குழு சமூகம் என்பது மக்கள் பெருங்கூட்டம் கூட்டமாக நாடோடிகளாக வசிப்பதாகும் . இவர்கள் காலத்தால் மிகப்பழமையான மக்களாக இருந்தனர். ஆகையால் இவர்கள்' முதுகுடி மக்கள் என்றும், இவர்கள் வாழ்ந்த ஊர்கள் 'மூதூர்கள்' என்று அழைக்கப்பட்டன. சங்க காலத்தில் வடவர், அருவர், கருநாடர், பொதுவர், ஒளியர், கிளையர், சென்னி போன்றவர்கள் இந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இந்த சமூகத்தில் 'சமூகவுடமை (Communal Ownership) இருந்தது. எல்லாப் பொருட்களையும் எல்லோரும் சொந்தமாக அனுபவித்தனர். இவர்கள் 'உணவு சேகரிக்கும்' நிலையில் இருந்தனர். காய்களையும், கனிகளையுமே முக்கிய உணவாக உண்டனர். இலைகள், கிழங்குகளும் இவர்களுக்கு உணவாக இருந்தது.

இந்த சமூகத்து மக்கள் போர்புரிதல், வேட்டையாடுதல், கால்நடைகளை மேய்த்தல் ஆகியத் தொழில்களைச் செய்தனர். பெண்கள் கால்நடைகளை வளர்க்க விவசாயம் செய்தனர். எனவே இந்த சமூகத்தில் பெண்களின் அதிகாரம் உயர்ந்திருந்தது. ஆகவே இந்த சமூகம், 'தாய்வழிச் சமூகம்' (Matiarchy) என்றழைக்கப்பட்டது. இவர்கள் 'கொற்றவை' யை தெய்வமாக வணங்கினர்.

**குடிகள் சமூகம் (Lineage society)**

குடிகள் சமூகத்தில் ஒரே ரத்த கலப்பைச் சார்ந்தவர்கள் மட்டும் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்துவந்தனர். ஒரே பரம்பரையை (Descent) இந்தக் குடும்பங்கள் சேர்ந்திருந்தது. இவைகள் தங்களுக்குள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து கொண்டது. அவர் சொல்படி வாழ்ந்துவந்தனர். தலைவர், உரைன், நாடன், வெற்பன் என்று அழைக்கப்பட்டார். இந்த குடும்பங்கள் சங்க காலத்தில் அதிகம் இருந்தன. இந்த குடும்பங்கள், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து வகை நிலங்களிலும் பரவி இருந்தது. இவர்கள் அந்தந்த நிலங்களுக்கேற்றவாறு தொழில்களை செய்தனர். பண்பாடுகளையும் ஏற்படுத்தியிருந்தனர். இந்த சமூகத்தில் தலைவரின் அதிகாரம் உச்ச கட்டத்திலிருந்தது. எனவே இந்த சமூகம்

'தந்தை வழிச் சமூகம்' (Patiarchy) என்றழைக்கப்பட்டது. இந்த சமூகத்தில் பல குடும்பங்கள் தனித்தனியாக இருந்தன. ஆனால் அனைவரும் தலைவருக்காகப் பாடுபட்டனர். தலைவருக்காகச் செய்யும் காரியங்கள் 'குடிமை' என்றழைக்கப்பட்டன. ஐந்து வகை நிலங்களிலும் மக்களின் வாழ்க்கை அமைப்புகள் வித்தியாசமாக இருந்தன. அவைகளை விரிவாக காண்போம்.

**குறிஞ்சிநிலம்**

குறிஞ்சி நிலம் என்பது மலையும் மலைசார்ந்த பகுதியாகும். இங்கு வாழ்ந்த மக்கள் 'குறவர்கள்' 'கானவர்கள்' என்று அழைக்கப்பட்டனர். இவர்களின் தலைவன், ' மலைநாடன்' 'கிழவன்' 'வெற்பன்' என்றழைக்கப்பட்டார். இவர்கள் வில், அம்பு, வேல்,கவண், பன்றி பிடிக்கும் இயந்திரம் போன்ற ஆயுதங்களை வைத்திருந்தனர். இவர்கள் வேட்டையாடுதல், தினப்பயிர் விவசாயம் செய்தல் போன்ற தொழில்களைச் செய்தனர்.

இவர்களிடம் 'கொடிச்சியர்கள்; வேட்டுவர்கள்' என்ற இரு பிரிவு இருந்தது. இவைகளில் 'வேட்டுவகுலம், உயர்ந்ததாகக் கருதப்பட்டது. இவர்கள் வணங்கிய தெய்வம் 'முருகன்' ஆகும். 'வேலன் வெறியாடல்' என்ற திருவிழாவை நடத்தினர்.

இவர்களுடைய வீடுகள் ‘கல்லால்' கட்டப்பட்டிருந்தன. இந்த மக்களிடம் சில நம்பிக்கைகளும், பழக்கங்களு மிருந்தன. தலைவனுடைய அம்பு குறி தவறியதற்கு ஒரு நம்பிக்கையிருந்தது. அது மலை தெய்வம் கோபமாக உள்ளது என்று கருதினார்கள். அதற்காக மலையை வலம் வந்தனர். மலை தெய்வம் கோபம் தணிந்து குளிர மழை வரும்படி பிரார்த்தனை செய்தனர்.

இவர்களிடம் நல்ல நாள் பார்த்து திருமணம் செய்யும் பழக்கமிருந்தது. குடும்பத்திலுள்ள பெரியவர்கள் தலைவர் சொல்லியபடி பொருளை எடுத்துக் கொண்டு பெண் கேட்டனர். இந்த நிலத்தில் கைத் தொழில் செய்யும் பொற்கொல்லன், இரும்புக் கொல்லன், நெசவு செய்பவர், மருத்துவச்சி, ஓவியன், புலையன் போன்ற மக்கள் வசித்தனர். இவர்கள் குறவர்களுக்குத் தேவையானப் பொருட்களைச் செய்து கொடுத்து வாழ்ந்தனர்.

**முல்லைநிலம்**

முல்லை நிலம் என்பது காடும் காடு சார்ந்த பகுதியாகும். இங்கு வாழ்ந்த மக்கள் 'கோவலர்கள்' 'இடையர்கள்; 'ஆயர்கள்' என்பவர்களாவர். இவர்கள் கால்நடை மேய்த்தல், சிறிய அளவு கொல்லை விவசாயம் செய்தல் போன்ற தொழில்களைச் செய்தனர். இவர்களுடைய தலைவர் 'கோவலன்' என்றழைக்கப்பட்டார். இவர்கள் பெரிய நகரங்களைப் போன்ற வீடுகளையும் கட்டியிருந்தனர். ஆகையால் இவர்களின் தலைவர் 'பெருநகரத்தான்' என்றழைக்கப்பட்டார். இவர்களுடைய முக்கியமான ஆயுதங்கள் காட்டில் தீயை மூட்டக் கடையும் கோல், பனையோலைப் பாய், ஈட்டி, வளைந்த கோல் முதலியவையாகும். தலைவர், இவர்களை 'ஏவி' வேலை வாங்கினார்.

இந்த நிலத்தில், பிராமணர்கள், உப்பு வியாபாரிகள், உமணர்கள், பொன் செய்யும் கொல்லன் போன்ற தொழில் செய்யும் மக்கள் வசித்தனர். இங்குள்ள பெண்கள், பூவையும் தயிரையும் எடுத்துக் கொண்டு விலைக்கு கூவி விற்று வந்தனர். இந்த மக்கள் தாங்கள் விற்ற நெல்லுக்கு கட்டிப் பொன்னே கிடைத்தாலும் வாங்க மாட்டார்கள். அதற்குப்பதிலாக எருமை, பசு, கன்றையே வாங்கினார்கள்.

இவர்கள், தெய்வத்துக்கு கருணைக்கிழங்கை பொரியல் பண்ணினார். சிவப்பு அரிசியில் சோறு ஆக்கிப் 'படையல்' செய்தனர். இவர்கள் ‘படுமலை' என்ற இராகத்தை இசைத்தனர்.

**மருதநில மக்கள்**

மருத நிலம் என்பது வயலும் வயல் சார்ந்த பகுதியாகும். இங்கு வாழ்ந்த மக்கள் 'உழவர்கள்' என்றழைக்கப்பட்டனர்.இவர்கள் விவசாயம் தொழில் செய்தனர். இவர்களின் தலைவர் 'கிழார்' 'ஊரன்' என்றழைக்கப்பட்டார்.

இந்த மக்களின் வீடுகளுக்கு காவல் இருந்தது. அதில் மணிகள் கட்டித் தொங்க விடப்பட்டிருந்தன. இவர்கள் பால் மாடு நிறைய வைத்திருந்தனர். இவர்கள் விரால் மீனை சிறு சிறு துண்டுகளாக வெட்டி குழம்பு வைத்து சோறுடன் சாப்பிட்டனர். இவர்கள் பனை ஓலையில் வீடு கட்டியிருந்தனர். அதைச் சுற்றி

வேலி போட்டிருந்தனர். இந்த நிலத்தில் சேரிப் பெண்கள் அதிகம் வசித்தனர். அதனால் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் பல பிரச்சினைகள் எழுந்தன.

**நெய்தல்**

இது கடலும் கடல்சார்ந்த பகுதியாகும். இங்கு வாழ்ந்த மக்கள் பரதவர்கள் ஆவார். இவர்களின் தலைவன் 'சேர்ப்பன்' என்பவராவர். இங்கு சிறிய ஊர்களுமிருந்தன. பெரிய துறைமுகங்கள் கொற்கை. சாயக்காணம், கழுமலம் போன்ற ஊர்களுமிருந்தன தந்தைமார்கள், தம் பிள்ளைகளைப் படகில் (திமில்) ஏற்றிக் கொண்டு கடலுக்குச் கூட்டிச் சென்றனர். அங்கு விளக்கு வைத்து. 'இந்த இந்த இடத்தில்' மீன்க் கூட்டங்கள் இருக்குதுபார் என்று சொல்லிக் கொடுத்தனர். இவர்கள் பெண்களிடம் பணிந்து போவதை இழிவாகக் கருதினர். இந்த நிலத்து தலைவர் எல்லா பொறுப்புகளையும் கவனித்தார். அவர் கடலில் மீன்பிடிக்கும் அதிகாரம் கொடுத்தார். யாரேனும் வழிப்போக்கர்கள் வந்துவிட்டால் கூட, இவர்கள் ஓடிப்போய் உபசாரம் செய்தனர். கடல், தெய்வத்தை கும்பிட்டனர். 'தேவராட்டி, என்னும் பூசாரி 'வெறியாடுதல் என்னும் ஆட்டம் செய்தாள். இவர்கள் வீட்டிலிருந்து செய்யும் காரியங்கள் 'மனைக்கிழமை' என்றழைக்கப்பட்டது.

**பாலை**

பாலை என்பது மழையில்லாமல் இருக்கும் பகுதியாகும். இங்கு மறவர்கள் வாழ்ந்தனர். இவர்கள் 'துவர்த்த' நிற ஆடையணிந்தனர். கையில் வைத்திருந்த அம்பு இலை வடிவாக இருந்தது. அன்னியர்களை (வம்பலர்) கொன்று போட்டனர். மண்பானைகளைப் பயன்படுத்தினர். கடவுள் ஆலமரத்திலிருந்தார் என்று நம்பினர். பொன்னால் ஆனகாசுகளை இவர்கள் வைத்திருந்தனர். ஈச்சமர இலைகளைக் கொண்டு வீடுகள் கட்டியிருந்தனர். நல்ல உறுதியான கால்களை கட்டி, பந்தல் போட்டும் வீடுகளை கட்டினர். குறுணை அரிசியில் சோறு ஆக்கிச் சாப்பிட்டனர்.

**சங்க காலத்தில் மற்ற மக்கள்**

**அந்தணர்கள்**

சங்ககாலத்தில் இவர்களின் குடும்பங்கள் மிகக் குறைவாக இருந்தது. அவர்கள் புகார், மதுரை போன்ற நகரங்களிலும் வாழ்ந்தனர். அது போல மருதம் முல்லை குறிஞ்சி நில கிராமத்திலும் வாழ்ந்தனர். இவர்கள் கக்கத்தில் கரகம் என்ற ஒரு உறிப்பானையும் 'முக்கோல்' என்றழைக்கப் பட்ட கம்பும் வைத்திருந்தனர். காலில் செருப்பு அணிந்திருந்தனர். வெயிலுக்காக குடை வைத்திருந்தனர். வெயில் காலங்களில் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பயணம் செய்வது இவர்கள் பழக்கமாகயிருந்தது. காலையிலும் மாலையிலும் தீ வளர்த்துவேள்வி செய்து வந்தனர். வேத நூல்களில் இவர்களுக்கு புலமையிருந்தது. கடவுள் ஒருவரே என்று இவர்கள் கருதினர். மன்னருக்கு யாகங்களைச் செய்தனர். தங்களுடைய கருத்துக்களை (Varuna idelogy) தமிழர்களிடம் பரப்பினர். இதனால், தமிழர்களிடம் ஆரியப் பழக்கங்கள் அதிகமாயின. தமிழர்கள் ஆரியக் கடவுள் சிவனையும், திருமாலையும் இந்திரனையும் தங்கள் கடவுளாக ஏற்றுக் கொண்டனர். வேதங்களின் மகத்துவத்தை ஏற்றுக் கொண்டுப் போதித்துப் புகழ்ந்தனர். அவர்களின் நால்வருணப் பாகுபாடான பிராமணர், கூத்திரியர், வைசியர், சூத்திரர் என்பதை தமிழ் புலவர்களும் கடைபிடித்தனர். நக்கீரர் போன்ற புலவர் தமிழர்கள் கலாச்சாரத்தையும், ஆரியர்கள் கலாச்சாரத்தையும் ஒன்று படுத்தி புதிய சைவமதம் ஒன்றை ஏற்படுத்தினார்.

இதன்படி தாய்தெய்வ கொற்றவையை, சிவனின் மனைவியாகவும் குறிஞ்சி நிலக்கடவுள் குமரனை இவர்களின் பிள்ளையாகவும் மாற்றி சித்தரித்து திருமுருகாற்றுப்படை எழுதினார். இதன்படி குறிஞ்சி நிலக்கடவுள் குமரன், ஆரியக்கடவுள் கார்திகேயனாக ஆறுமுகமும், பன்னிரெண்டு கைகளும் உடையவரானார். அவருக்கு கட்டிய முதல் கோயில்தான் திருச்சொந்தூர் கோயிலாகும்.

**தொழிலாளர்சமூகம்**

தொழிலாளர் சமூகத்தில் பலவிதமான தொழில்களைச் செய்யும் மக்கள் வாழ்ந்தனர் இது முதலாளி , தொழிலாளி என்று பாகுபாடுகள் இல்லாமலிருந்தது. எல்லோருமே முதலாளியாக இருந்து தொழில்களைச் செய்து வந்தனர். இந்த சமூகத்தில் இருந்த சில தொழில் மக்கள் கீழ்கண்டவர்களாவர்.

**கம்மியர்கள்**

தாமிரம், செம்பு, இரும்பு, வெள்ளி, பொன், போன்ற உலோகத் தொழிலை கம்மியர்கள் செய்து வந்தனர். இவர்கள் நகரங்களில் மட்டும் சிவக்காமல், முல்லை, குறிஞ்சி, மருதநில கிராமங்களிலும் வசித்தனர்.

**கொல்லர்கள்**

இவர்கள் ஊது உலை மூலம் தொழில் செய்தனர். இரும்புக் கொல்லர் பனை ஓலையை நீரில் முக்கி, அதை வைத்து உலை நெருப்பைக் குறைத்தனர்.

**நெசவாளிகள்**

பெண்கள் தாம் இதில் அதிகம் ஈடுபட்டனர். ஆண்கள், தாங்களே துணிகளுக்கு சாயம் போட்டுக் கொண்டனர். இவர்கள் உறையூர், மதுரை, காஞ்சி போன்ற நகரங்களில் வசித்தனர்.

**வாணிகர்கள்**

சங்ககாலத்தில் வாணிகம் செய்யும் மக்கள் முக்கியமான பிரிவினர் இவர்கள் கூட்டமாகவும், குழுவாகவும், வாழ்ந்தனர். கூட்டத்திற்குப் பெயர் 'சாத்து' என்றும், குழுவுக்குப் பெயர் 'நிகமம்' என்றுமிருந்தது.

கரூர்,மதுரை, வஞ்சி போன்ற நகரங்களில் வசித்தனர். இவர்கள் கப்பலில் பல நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்தனர். சமண மதத்தை இவர்கள் ஆதரித்தனர். இவர்கள், தங்களுடைய தலையில் பூவைச் சூடியிருந்தனர். மேலும் இவர்கள் பல குலங்களாகவும் இருந்தனர். ஒவ்வெரு குலத்தினரும் ஒரு மாலையை அணிந்திருந்தனர். இவர்கள் சமணர்களுக்குப் பாறைகளைக் குடைந்து வசதி செய்து கொடுத்தனர்.

**சாதிப் பாகுபாடுகளும், சமூகப்பிரிவுகளும் குலப்பாகுபாடுகள் (Castes and social Stratiication) குலப்பாகுபாடுகள்**

சங்க காலத்து மக்களிடம் 'சாதிப் பாகுபாடுகள்' கிடையாது. 'குலப்பாகுபாடுகள் (Lineage Division) இருந்தன. ஒவ்வொரு குலமும், தங்களின் குலத்தையும், தங்களின் பழக்கவழக்கங்களையும் உயர்வாக நினைத்தன.

**சமூக உடைமை**

இவர்களிடம் 'சமூக உடைமை, (Community ownership) நிலவி இருந்தது. இது தன் சொத்து, இது அயலார் சொத்து என்று தனி உடமை சொத்து முறைகள் தோன்றவில்லை.. ஒவ்வொரு குலமக்களும் தனித்தனியான தெருக்களில் வாழ்ந்தனர்.

**நகரப்பாகுபாடு**

நகரங்களில் இந்த பாகுபாடுகள் தெளிவாக இருந்தன. ஒவ்வொரு தொழில் செய்தவர்களும், தனித்தனி தெருவில் வசித்தனர். காஞ்சிபுரத்தில், பார்ப்பனர்கள் வசித்ததெரு முதல் தெருவாக இருந்தது. அதற்கடுத்து பரதவர்கள் வசித்தனர். மூன்றாவது வணிகர்கள் வசித்தனர். இவற்றைச்சுற்றி உழவர்கள் வாழ்ந்தனர். ஒரு கோடியில் இடையர்களும், அதற்கடுத்து எயினார் மற்றும் பறையர்களும் வாழ்ந்தனர் என்று எம். சீனிவாச அய்யங்கார் கூறுகிறார்.

**சங்ககால சமூக தன்மை**

சங்ககால சமூகம், சாதி (Caste) சமூகமாகவோ, வருண சமூகமாகவோ (Varuna), அல்லது வர்க்க சமூகமாகவோ (Classes) இருக்கவில்லை ஒரு குல மக்கள் மற்ற குலத்தை உயர்வானதாக கருதும் பழக்கமாயிருந்தது. எனவே இது மக்களை வரிசை (Rank Society) செய்யும் சமூகமாக இருந்தது என்று வரலாற்று ஆசிரியை ஆர். சண்பகலட்சுமி கருதுகிறார்கள். பிறப்பினால் சில மக்கள் இழிந்தவர்களாக கருதப்பட்டனர். முக்கியமாக தோல் வேலை செய்யும் மக்கள்

இழிந்தபிறப்பாளராகக் கருதப்பட்டனர். உயர்ந்தவர், இழிசினர், என்ற பிரிவுகள் இங்கிருந்ததாகத் தெரிகிறது.

**சங்ககாலப் பெண்கள்** (The Position of Women)

சங்க காலத்திலேயே பெண்கள் ஒழுக்கமுள்ள வாழ்வு வாழ வேண்டும் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. அது ஆண்களின் மேலாதிக்கம் ஏற்பட்ட நிலையை காட்டுகிறது. தொல்காப்பியர் பெண்கள், அச்சம், மடம், நாணம் கொண்டவர்களாகயிருந்தனர் எனக்குறிப்பிடுகின்றார். சங்ககாலத்தில், ஆண்கள் வீரத்திற்குப் பேர்பெற்றது போலவே பெண்கள் அன்பிற்கும், பெருந்தன்மைக்கும் பேர் போனவர்களாக இருந்தனர்.

**விளையாட்டுக்கள்**

சங்ககாலப் பெண்கள் அதிகமாக மன மகிழ்ச்சியுடன் விளையாட்டுப் பழக்கம் உடையவர்களாகயிருந்தனர். இவர்கள் பூக்களைப் பறிப்பதும், குளங்கள் ஆறுகளில் மூழ்குவதும் போன்ற விளையாட்டுகளில் ஈடுபட்டனர். பந்துகள் எறிந்து விளையாண்டனர். மண்வீடு கட்டினார்கள் இதை தவிர பலவித பழக்கங்களையும் இவர்கள் செய்து வந்தனர்.

**பழக்கங்கள்**

குறிஞ்சி நிலப் பெண்கள் பறவைகளை, தட்டைகள் மூலம் துரத்தினர். முல்லை நிலப் பெண்கள் மாட்டுச் சண்டையில் வெற்றி பெற்றவர்களை திருமணம் செய்தனர். மலர்களை மாலையாக கட்டும் பழக்கம் இருந்தது.அவர்கள் எப்பொழுதும் துக்கத்துடன் இருந்ததில்லை. இப்படி விளையாடும் தன்மை 'ஆயம்' அல்லது 'சூரை' என்றழைக்கப் பட்டது. கோரைப்புல்லில் பொம்மை செய்து விளையாடினர். அவர்கள் 'தைநோன்பு' இருந்தனர். அதன் மூலம் நல்ல கணவன் கிடைப்பார் என நம்பினார்கள். தாயும், செவிலித் தாயுமே இவர்களுக்கு ஆசிரியர்களாக இருந்தனர்.

**பெண்பால் புலவர்கள்**

அல்லூர் நன்முலையார், ஆதி மந்தையார், ஊட்டியார் போன்றோர்கள் புலவர்களாக இருந்தனர். பெண்கள் குறிஞ்சிப்பண், பாலைப்பண் போன்றவைகளைப் பாடும் திறமை பெற்றிருந்தார்கள். இவர்களில் நடனமாடுபவரும், விறலியர்களும் இருந்தனர்.

**சங்க கால பொருளாதரம் (Economic Conditions - Trade and Commerce)**

சங்க கால மக்களிடம் மூன்று வகை பொருளாதார வாழ்க்கை இருந்தது. அவைகள் வமிசாவளி உற்பத்தி முறை (Lineage Production) சிறு பொருள் உற்பத்தி (Petty Commodity Economy) மற்றும் சந்தைப் பொருளாதார முறை (Market ecnomecy) போன்றவைகளாகும்.

**வமிசாவளி உற்பத்தி முறை** (Lineage Production)

வமிசாவளி உற்பத்தி முறையில் 'ஒரே வமிசத்தைச்' சேர்ந்த குடும்பங்கள் ஒன்று சேர்ந்து உற்பத்தி செய்தன. இவர்களுக்கு ஒரு 'தலைவர்' இருந்தார். தலைவர் கட்டுப்பாட்டின் கீழ் எல்லோரும் ஒன்றாக பாடுபட்டனர். தலைவர் உற்பத்தியான பொருளை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தார். இந்த குடும்பங்கள் தங்களுக்குத் தேவைக்கதிகமான பொருட்களை விற்பனை செய்து கொண்டனர். இந்த வமிசாவளி உற்பத்தி முறை, சங்க காலத்தில் நிலவியிருந்த குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்துவகை நிலங்களிலும் இருந்தது

**குறிஞ்சி நிலப் பொருளாதாரம்**

குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த பகுதியுமாகும். இங்கு வாழ்ந்த மக்கள் குறவர்களாவர். இவர்கள் மூன்று தொழில் மூலம் பொருளை உற்பத்தி செய்தனர். இவர்கள் காடுகளை தீ வைத்து எரித்து விவசாய நிலமாக மாற்றினர். முள்ளம் பன்றி தன் கொம்பில் கீறிச் சென்றதை உழவாக கருதினர். அதன்மேல் விதை விதைத்தனர். நீரை சேமித்து வைக்கத் தெரியாமல் மழை பெய்யும் போதே விதை விதைத்தனர். இவர்கள் 'தினை' 'ஐவனம்' என்னும் நெல்லைப் பயிர்

செய்தனர். தினையை அறுத்தபிறகு அந்த இடத்தில் 'அவரை, மொச்சை' போன்ற பருப்பு வகைகளைப் பயிர் செய்தனர்.

**வேட்டையாடுதல்**

இவர்கள் வேட்டையாட அம்பையும், வில்லையும் பயன்படுத்தினர். வேட்டை நாய்களை வைத்திருந்தனர். இவர்கள் வில்லை இடது கையில் பிடித்திருந்தனர். யானையை வேட்டையாடி தந்தம் எடுத்தனர், முள்ளம் பன்றியை வேட்டையாடினர். தலைவி அதை எல்லோருக்கும் பங்கு போட்டுக் கொடுத்தாள்.

**மது தயாரித்தல் மற்றும் பல தொழில்கள்**

இவர்கள் பலவகை மதுக்களை தயாரித்தனர். பலாப்பழத்திலிருந்தும், மாம்பழத்திலிருந்தும், தேனிலிருந்தும் தனி தனியாக மதுவைத் தயார் செய்தனர். இந்த மூன்றையும் ஒன்று சேர்த்தும் மது தயார் செய்தனர். யானைத் தந்தத்தால் பூமியை தோண்டி 'தங்கம் மற்றும் விலை உயர்ந்த கல் மணிகளை' எடுத்தனர். மேலும் இவர்கள் எறும்பு புற்றுக்களை தோண்டி தானியங்களைச் சேகரித்தனர்.

**முல்லை நிலப் பொருளாதாரம்**

முல்லை என்பது காடும் காடு சார்ந்த பகுதியாகும் இதில் வாழ்ந்த மக்கள் 'இடையர்கள்' அல்லது ' கோவலர்களாவர்.

**ஆடு மாடு மேய்த்தல்**

இவர்கள் மாடு, எருமைகளை விரட்டிக் கொண்டு காட்டிற்குச் சென்றனர். மாலை நேரத்தில் வீடு திரும்பினர். தீயை உண்டாக்கி கால் நடைகளைப் பாதுகாத்தனர். இவர்கள் கையில் எப்போதும் ஒரு கோலும் கக்கத்தில் தோல் பையும், முதுகில் ஓலையும் இருந்தது. இவர்கள் தோலால் ஆன படுக்கையில் தான்' படுத்தனர். இசைக்கருவி ஊதி மகிழ்ந்தனர். கன்று குட்டிகள், ஓநாய்கள் கடிக்கவந்தால் சப்தமாக விசில் அடித்து விரட்டினர்.

**பால் பொருட்கள்**

இவர்கள் பாலிலிருந்து தயிர், மோர், வெண்ணெய், நெய்களை உற்பத்தி செய்தனர். இதை விற்று நெல் வாங்கினார்.

**பொருளாதாரம்**

இவர்கள் மாட்டை முக்கிய செல்வமாக கருதினார். நெய்க்கு விலையாக கட்டிப் பொன் கொடுத்தாலும் வாங்காமல், எருமை, பசுவைத் தான் வாங்கினார்கள். இவர்கள் ஆட்டுப்பாலை வீட்டில் கொடுத்து விட்டு, வீடுகளிலிருந்த 'கூழை' வாங்கிச் சென்றனர்: மதுரைப் பகுதியிலும் கொங்குப் பகுதியிலும் இவர்கள் அதிகமாக வாழ்ந்தனர்.

**மருதநிலப்பொருளாதாரம்**

விவசாயம் பிறந்தது ஆறும் ஆறுசார்ந்த பகுதி மருத நிலமாகும். இங்கு வாழ்ந்த மக்கள் உழவர்களாவர். இவர்கள் விவசாயத் தொழிலை செய்தனர். இங்கு விவசாயம் குறிஞ்சி நிலத்தை விட நன்றாக முன்னேறியிருந்தது.

மக்கள் இரும்பால் செய்த கலப்பையில் உழுதனர். எருமை மாடுகளைப் பூட்டி, கலப்பையின் கொழு, நிலத்தில் மறையும் படி ஆழமாக உழுதனர். நெல்லை விதைக்காமல் நன்றாக பயிர் செய்தனர். பயிரை அறுத்த பின்பு, அது ஈரமுள்ள போதே உழுதனர். அது 'மறுகால் உழுதல்' என்றழைக்கப்பட்டது.

**நீர்பாசனமும் - பயிர் வகைகளும்:**

நிலத்தை மென்புலம் 'வன்புலம்' என்று இரண்டாகப் பிரித்தனர். மென்புலம் என்பது நீர்வளம் நிறைந்த நிலமாகம் வண்புலம் என்பது நீர் இல்லாமல் வானம் பார்த்த பூமியாகம். இவர்கள் ஆறுகள் மூலமும், குளங்கள் மூலமும் நீர் பாய்ச்சினர். வரிசையாக நின்று மட்டைகளால் வயலுக்கு நீரை இறைத்தார்கள்.

குளத்துக்கு கீழேயே நெல்லைப் பயிர் செய்யும் பழக்கமிருந்தது. வெண்ணெய், செந்நெல் என்ற இரண்டு நெல்வகைகளை விதைத்தனர். நன் செய் நிலங்களில் நெல்லை அறுத்து முடித்தவுடன் மறுமுறை நெல் பயிரிடும் வரையில் உளுந்து போன்ற பயறு வகைகளை விதைத்தனர். பருத்தியைப் பயிர் செய்தனர். இவர்கள் உழுவதற்குப் பயன்படுத்திய கருவிகள் கலப்பை, உருளை கொடுப்பு போன்றவைகளாகும்.

**நெய்தல் நிலப் பொருளாதாரம்**

கடலும் கடல் சார்ந்த பகுதி நெய்தலாகும். இங்கு வாழ்ந்த மக்கள் 'பரதவர்'களாவர். இவர்கள் மீன் பிடித்தலையும்' 'முத்து குளித்தலையும்' முக்கியத் தொழிலாகச் செய்தனர்.

**மீன்பிடித்தல்**

நெய்தல் நில மக்கள் மீன்களைப் பிடிக்க தூண்டில்கள், வலைகள் கூர்மையான உளிகளைப் பயன்படுத்தினர். வகைளை நூலினாலும் நாரினாலும், தாங்களேப் பின்னிக் கொண்டனர். மீனைப் பனை ஓலைப்பை ஒன்றில் போட்டு வைத்துக் கொண்டனர்.

மீன்பிடிக்க கட்டு மரங்களிலும் படகுகளிலும் சென்றனர். அந்த படகு 'திமில்' என்றும் அம்பி' என்றும் அழைக்கப்பட்டது. இவர்கள் மீன் பிடிக்க நடு இரவில் கூட்டம் கூட்டமாகச் சென்றனர். தலைவன் தான்பிடித்த அயிரை மீனை மற்றவர்களுக்குப் பிரித்து கொடுத்தனர்.

**மீன் வகைப் பொருட்கள்**

மீனை நெய்தல் நிலமக்கள் மூன்று வகைகளில் பயன்படுத்தினர். 1. மீன் அவர்களுக்கு முக்கிய உணவாகும். 2. மீனைக் கொடுத்துத் தானியத்தைப் பெற்றனர். 3. மீனிலிருந்துப் பல பொருட்களைத் தயாரித்தனர். மீனிலிருந்து எண்ணெய் எடுத்தனர். மீன்களில் உப்பு போட்டு காய வைத்து கருவாடாக்கினார். கருவாட்டைத்துண்டு துண்டாக அறுத்து உப்புக் கண்டம் போட்டனர். மீண் எண்ணெயை விளக்கெரிக்க பயன் படுத்தினர். மேலும் இவர்கள் உப்பங் கழிகளை ஏற்படுத்தி கடல் நீரைப் பாய்ச்சி ஆவியாக்கி உப்பு தயாரித்தனர்.

**சிறு வியாபாரப்பொருள் உற்பத்தி முறை (Petty Commodity Production)**

சங்ககால மக்களில் பலர் பல கைத் தொழில்கள் செய்து சிறு பொருட்களை உற்பத்தி செய்தனர். இதில் முதலீடு செய்ததும் இவர்களே, உழைத்ததும் அவர்களேயாவர்.

**நெசவுத் தொழில் (Weaving)**

சங்க காலத்தில் நெசவுத் தொழில் முக்கியமான தொழிலாக இருந்தது. நெசவாளிகள் பருத்தி, பட்டு, எலிமயிர் ஆகிய மூன்று நூல்களைக் கொண்டு ஊசியால் துணிகளை நெய்தனர். பெண்களும் நூல் நூற்றனர். அவர்கள் 'பருத்தி பெண்டிர்கள்' என்றழைக்கப்பட்டனர்.

இவர்கள் நெய்த ஆடைகள் 'கலிங்கம் என்றழைக்கப்பட்டது. அவைகளில் 'ஒண்பூங்கலிங்கம்', 'கோடிக் கலிங்கம்' முருங்காக் கலிங்கம் என்று பல வகைகளிருந்தன. இவர்கள் வேட்டி, துண்டு போன்றவைகளை நெய்தனர்.

இவர்கள் நெய்த ஆடைகள் 'பாம்புச் சட்டை' போலவும், 'ஆவி' போலவும், மெல்லிதாக யிருந்தது. இவ்வளவு மென்மையிலும், அதன் மேல் பூ வேலைப்பாடு செய்தார்கள் கலர் கொடுத்தார்கள். சில்க், கம்பளி போன்றவைகளை எந்த நூலு மில்லாமல் நெய்தார்கள்.

**கைவினைத் தொழில்கள்**

சங்க காலத்தில் அரசர்கள், சிற்றரசர்கள், நிலக்கிழார்கள், வணிகர்கள் போன்ற பெரும் செல்வந்தர்கள் வாழ்ந்தனர். எனவே அவர்களுக்கும், அவர்கள் வீட்டுப் பெண்களுக்கும் பல நகைகளைத் தயாரிக்கும் தொழில் இருந்தது. இவர்கள் தங்கம், வெள்ளி போன்றவைகளில் நகைகளைச் செய்தனர். இவர்களுக்குக் கென்று தனியாக ஊது உலை இருந்தது. இவர்கள் அரசர் அணியும் கீரிடம், பெண்கள் அணியும் தலையணி (சுரிதகம்) காதணி (குழை) வளையல்கள், காலணி (சிலம்பு) போன்றவைகளைத் தயார் செய்தனர்.

**தச்சுத் தொழில்**

தச்சுத் தொழில், கொல்லன் தொழிலின் ஒரு பகுதியாக இருந்தது. தச்சர்கள் ஒரு நாளைக்கு எட்டு தேர்கள் செய்தனர். இவர்கள் பெரிய கோபுர வாசல்களையும், அரண்மனையிலுள்ள தந்தக் கட்டில்களையும் செய்தனர். இவர்கள் சிறுவர்கள் விளையாட, மூன்று சக்கர தேர்கள், மயையானைகளைச் செய்தனர்.

உப்புகளை ஏற்றிச்செல்ல வண்டிகளைத் தயாரித்தனர். தேர்களின் ஆரக்கால்கள், வட்டைகள் போன்றவைகளைச் செய்தனர். இது தவிர, தச்சர்கள், கப்பல்களின் பல வகைகளாக அம்பி, வங்கம், நாவாய் போன்றவைகளைத் தயார் செய்தனர்.

**பிறதொழில்கள்**

சங்க கால மக்கள், மேற்கண்ட தொழில்களைத் தவிர வேறு பல தொழில்களையும் செய்தனர். அவைகள் சங்கங்களுக்கும் தொழில் துணிவிற்கும் தொழில், செம்புத் தொழில், ஓவியத் தொழில், யானைதந்தம் கடைதல், வீடு கட்டுதல், மணிகளை அணிகலன்களாக கோர்த்து துளையிடுதல் போன்ற தொழில்களாகும்.

**சந்தைப்பொருளாதாரவாணிகம்**

இதில் உள்நாட்டு வாணிகம், வெளிநாட்டு வாணிகம் என்ற இரு பிரிவுகள் இருந்தன. சங்க கால வாணிகம் பண்டமாற்று முறையிலேயே நடைபெற்றுள்ளது. வெளிநாட்டு வாணிகம் கூட தங்க காசுகளுக்கும், மது கிண்ணங்களுக்குமாக நடைபெற்றுள்ளது. நாணயங்களைத் தங்கத்திற்காகவே மக்கள் மதித்தனர்.

**உள்நாட்டுவாணிகம்**

உள்நாட்டு வாணிகத்தில் மூன்று முறைகளிருந்தன. அவை தினை வாணிகம், வணிகக்குழு வாணிகம், அங்காடி வாணிகம் போன்றவைகளாகும்.

**திணை வாணிகம்**

இது குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல் போன்ற நிலங்களில் நடைபெற்றதாகும். இதில் வாழ்ந்த மக்கள் தாங்கள் உற்பத்தி செய்த்தப் பொருட்களை, மற்ற நிலத்து மக்களின் பொருட்களோடு பண்டமாற்று செய்தனர். நெய்தல் நிலமக்கள் உப்பையும் மீனையும் குடுத்து நெல்லைப் பெற்றுக் கொண்டனர். குறிஞ்சி நில மக்கள் மான்கறியையும் யானைத் தந்தத்தையும் கொடுத்து நெல்லைப் பெற்றனர். இவர்களில் சிலர் பொருட்களைக் கூவி கூவி விற்றனர்.

**வணிகக்குழுவாணிகம்**

சங்க காலத்தில் உற்பத்தி செய்த பொருட்களை வாங்கி விற்க பல வாணிகர்கள் இருந்தனர். அவர்கள் குழுக்களாக வாணிகம் செய்தனர். குழு சாத்து நிகமம்' என இருவகைப்பட்டது. சாத்து வணிகர்கள், (உமணர்கள்) உப்பு வாணிகர்கள் ஆவார்கள். இவர்கள் கூட்டமாகச் சென்றதால் 'வாணிகச் சாத்து' என்றழைக்கப்பட்டனர். இவர்கள் கடற்ப் பகுதிகளுக்கு சென்று உப்புகளை மூட்டைகளில் ஏற்றி ஊர் ஊராகச் சென்று விற்றனர். இவர்கள் 'வெண்ணெயல்லை கொடுத்து 'உப்பை வாங்கினார்கள். நிகமம்' என்பது மற்றுமொரு உள்நாட்டு வணிககுழு என்று 'மீனாட்சிபுரம்' கல்வெட்டு கூறுகிறது. இவர்கள் பொருளை கழுதைகளிலும் வண்டிகளிலும் மூட்டை மூட்டையாகக் கொண்டு சென்றனர்.

**அங்காடி வாணிகம் (நகர வாணிகம்)**

சங்க காலத்தில் பொருட்களை விற்கவும், வாங்கவும் பெரிய நகரங்களிருந்தன. அவைகள் வஞ்சி, காவிரிப் பூம்பட்டினம், மதுரை போன்றவைகளாகும்.

**அங்காடித்தெருக்கள்**

கடைகள் 'ஆவணம் என்றழைக்கப்பட்டன. மதுரையில் இரண்டு கடை வீதிகள் இருந்தன. அவைகள் 'நாளங்காடி' 'அல்லங்காடி' என்பதாகும். நாளங்காடி என்பது பகல் வியாபாரமாகும். அல்லங்காடி என்பது இரவு வியாபாரமாகும். இங்கு தானிய வகைகள் இயற்கைப் பொருட்கள், பூக்கள், பூமாலைகள், நறுமண சுண்ண வகைகள், அணிகள், ஆடைகள் அலங்காரப் பொருட்கள விற்கப்பட்டன.

**வாணிகர்களின்வியாபாரத்தன்மை**

இந்த கடைவீதிகளில் பொன் வாணிகர்கள், அறுவை வாணிகர்கள் (துணி வியாபாரிகள்) இருந்தனர். இவர்கள் தங்கள் குழுவை அடையாளம் காட்ட இலச்சினைப் பறித்த கொடிகளைக் கடைகளில் பறக்க விட்டிருந்தனர். இவர்கள் கொள்ளை இலாபம் அடிக்க வேண்டும் என்ற முறையில் பொருட்களை

விற்கவில்லை. அளவைக் குறைக்கவுமில்லை விலையைக் கூட்டவுமில்லை. பிறர் பொருட்களையும் தம் பொருளாகக் கருதி விற்றனர்.

**வெளிநாட்டு வாணிகம் (துறைமுக வாணிகம்)**

தமிழக வரலாற்றில் சங்க மக்கள் அதிகமான வெளிநாடுகளுடன் வாணிகம் செய்தனர். அவர்கள் கிரேக்கம், ரோம், எகிப்து, அராபியா, மாலாய உள்ளிட்ட கிழக்கிந்திய தீவுகள், சீனம், ஈழம் ஆகிய நாடுகளுடன் வாணிகம் செய்தனர். முசிறியிலிருந்து எகிப்துக்குப் பொருட்கள் அனுப்பப்பட்டன. கடல்வாணிகம் நடைபெற பல காரணங்களிருந்தன. அவைகளாவன:

1. தமிழகத்தின் கிழக்கு, மேற்கு கடற்கரையில் பல துறைமுகங்களிலிருந்தது.
2. ரோமிலிருந்து கடல்காற்று தமிழகப் பகுதிகளை நோக்கி வீசியது.
3. கப்பல் கட்டும் தொழில் வளர்ந்திருந்தது.
4. ரோமானிய வணிகர்கள், தமிழ்நாட்டு வாசனைப் பொருட்கள் மீது ஆர்வம் காட்டினர்.
5. தமிழ்நாட்டில் இயற்கைப் பொருள்கள் அதிகமாக விளைந்தது.

**துறைமுகங்கள்**

**மேற்கு கரை துறைமுகங்கள்**

**தொண்டி**

இது 'சேர நாட்டு துறைமுகமாகும். 'எரித்திரையக் கடற்செலவு', என்ற நூல் அதை ‘திண்டீஸ்' என்று குறிப்பிடுகிறது. இது வடக்கிலிருந்து வந்தவர்களுக்க முதல் சந்தையாக இருந்தது. இது ஆரம்பத்தில் சாதாரண ஊராக இருந்து பெரிய நகரமாக மாறியது.

**முசிறி**

இது தொண்டிக்கு தெற்கே இருந்தது: இது பெரியாறு கடலில் கலக்கும் இடத்தில் அமைந்திருந்தது. ஆகவே ஆழமில்லாமலிருந்தது. அதனால் கப்பல்கள் கடலில் வெகு தொலைவிலேயே நின்று விட்டன. அங்கிருந்து, சிறிய படகுகள் மூலம் கரைக்கு சரக்குகள் வந்தன. இங்கு ரோமானியக் கப்பல்களும், அரேபியக்

கப்பல்களும் வந்தன. முசிறி வாணிகர்கள், எகிப்து, அலெக்ஸ்ாந்திரிய வாணிகர்களோடு வாணிகத் தொடர்பு வைத்திருந்தனர். இந்த துறைமுகத்தில் கிரேக்க கப்பல்கள் தங்கத்தைக் கொடுத்து வட்டி மிளகை ஏற்றிக் கொண்டு சென்றன.

**கிழக்குகரைத்துறைமுகங்கள்**

**கொற்கை**

கொற்கையை 'கடற்செலவு' என்ற நூல் 'கோல்சி' என்று குறிப்பிடுகிறது. இங்கிருந்து முத்துக்கள் அதிகம் ஏற்றுமதி செய்யப்பட்டது. பரதவர்கள் சங்குகளுக்காக கடலில் மூழ்கினார். மீன் பிடிப்பவர்கள் முத்துச்சிப்பிகளை கள்ளுக்கு விற்றனர். இங்கு முத்து, சங்கு வளையல், உப்பு மீன் ஆகியவைகள் விற்கப்பட்டன. இங்குள்ள முத்து முசிறிக்குச் சென்று அங்கிருந்து ஏற்றுமதியாகியது.

**காவிரிப்பூம்பட்டினம்**

டாலமி இதை 'காபேரீஸ்' என்று கூறுகிறார். இந்த துறைமுகம் கடலிலிருந்து உள்ளே தள்ளி இருந்தது. ஆனால் இதில் பெரிய கப்பல்கள் வந்து தங்கம் அளவுக்கு இடமிருந்தது. இங்க இருந்த 'கடற்கழிகள்' இயற்கையானப் படகுத் துறைகளாக இருந்தன. கப்பல்கள் முசிறித் துறைமுகம் போலில்லாமல் நேரடியாக துறைமுகத்திற்கு வந்தன. இங்கு பண்டகசாலைகள் இருந்தது. சோழ அரசர்களின் அதிகாரிகள் பண்டகச் சாலைப் பொருட்களைச் சோதனையிட்டு தங்கள் முத்திரையைப் பொறித்தனர். இங்கு பெரிய கப்பல்கள், பாய்களை மடக்காமல், பொருட்களைக் குறைக்காமல் வந்து நிற்கக் கூடிய அளவுக்கு வசதிகளிருந்தன.

**மாமல்லபுரம்**

இது சங்க காலத்தில் 'நீர் பெயற்று' என்றழைக்கப்பட்டது. இங்க மேலைநாடுகளிலிருந்த வெள்ளை ஜாதிக் குதிரைகளும், வாசனைத் திரவியங்களும் வந்து இறங்கின. கங்கையிலிருந்து பொருட்கள் இங்கு வந்து

இறங்கின. இந்த துறை முகத்தில் கப்பல்கள் அதிகம் நின்றன. இங்க ஒரு 'கலங்கதை விளக்கம்' இருந்தது. அது கடலில் திசை தப்பிய கப்பல்களுக்க அடையாளம் காட்டியது. இந்த நகரில் இருந்த வீட்டு மாடங்களிலும் விளக்குகள் எரிந்து கபப்கல்களுக்கு அடையாளம் காட்டின.

**அரிக்கமேடு**

இந்த துறைமுகம் பாண்டிச்சேரிக்கு அருகில் இருந்தது.இதைக் 'கடற்ச் செலவு நூல்' 'பொதுக்கா' என்று குறிப்பிடுகிறது. இங்க ஒரு பண்டகசாலை (Ware House ) இருந்தது. இங்கு ரோமனியர்கள் குடியிருப்புகளை ஏற்படுத்தி வாழ்ந்தனர். இவர்கள் மது வகைகள் விளக்குகள் ஆகியவைகளைப் பண்டமாற்றுப் பொருளாகப் பயன்படுத்தினார்கள்.

**கப்பல்கள்**

சங்ககாலத்தில் தமிழர்கள் பல வகையான கப்பல்களைக் கட்டியிருந்தனர். அவைகளில் 'திமில்' 'தோணி' 'அம்பி' என்பவைகள் சிறிய கப்பல்கள். இவை மீன்பிடிக்கப்பயன்பட்டது. 'தோணி' என்ற ஒரு வகை படகு, கடலில் நிற்கும், பெரிய கப்பலிருந்து பொருட்களை ஏற்றிக் கொண்டு கரை சேர்ந்தது என்பது கடற்கரை ஓரமாகச் சென்ற கப்பலாகும். இது உப்பை ஏற்றி விற்று விட்டு நெல்லை கொண்டு வந்தது. காவிரிப்பூம்பட்டினத்தில் இந்தகப்பல்கள் அதிகமாக இருந்தன.

வங்கம், நாவாய் என்ற கப்பல்கள் அதிக தூரம் செல்லப்பயன் படுத்தப்பட்டது. நாவாய் என்ற கப்பல் ஒரு யானையைப் போலப் பெரியதாக இருந்தது. 'சங்கரா' என்பது பெரிய கப்பல். அது பலமரங்களை கொண்டு கட்டப்பட்டதாகும். 'சொலாண்டியா' என்ற ஒரு வகை கப்பல் கங்கையாற்றுப் பகுதிக்கும், கீழை நாடுகளுக்கும் சென்று வந்தன. இவர்கள் கடலில் மீன் பிடிக்கும் போது 'திமில்' படகுகளில் விளக்குகளை வைத்திருந்தார்கள்.

காற்று அடிக்கும் திசையிலே போக, கப்பல்கள் பாய் மரங்களைப் பயன்படுத்தினார்கள். மேலும் காற்று எந்த பக்கம் அடித்தாலும் தான் போகும் திசையை நோக்கிக் கப்பலை ஓட்டிச் செல்லும் ஆற்றல் தமிழர்களுக்கு இருந்தது.

**ஏற்றுமதிப்பொருட்கள்**

மிளகு, இஞ்சி, காட்டுப்பூக்கள் முக்கியமாக ஏற்றுமதியாயின. மரங்களில் தேக்கு, சந்தன மரங்களும், முத்துக்களும், பவளங்களும் ஏற்றுமதியாயின. இவைகள் தவிர, ஏலக்காய், யானைத்தந்தம், வயிரம், சிறுத்தை, மான் போன்றவைகள் ஏற்றுமதியாயின. ரோமுக்கு அதிகம் ஏற்றுமதியாயின. ஆடம்பர பொருள்களே அதிகம் ஏற்றுமதியாயின என்று சண்பகலட்சுமி அம்மையார் கூறுகிறார். பல தமிழ்நாட்டு வாணிகர்கள் பொருட்களை வாங்கி இடைத்தரர்களாக இருந்து ஏற்றுமதி செய்தனர்.

**இறக்குமதிப்பொருட்கள்**

'புஷ்ப ராகம்' என்னும் அரிய கல்வகையும் மெல்லிய துணிகள், சித்திரவேலைகள் தீட்டப் பெற்ற லினன்துணி போன்றவைகள் இறக்குமதி செய்யப்பட்டன. பவளம், வேலைப்பாடு கொண்ட கண்ணாடி வகைகள், மதுவும், ரோமானிய நாணயங்களும் இறக்குமதியாயின.

**நாணயங்கள்அல்லது காசுகள்**

சங்ககால மக்கள் மூன்று வகை காசுகளைப் பயன்படுத்தினர். அவைகள் முத்திரை காசுகள் (Punch-marked Coins) சங்க கால மன்னர்கள் வெளியிட்ட காசுகள், ரோமானிய காசுகள் போன்றவைகளாகும்.

**முத்திரை காசுகள்**

முத்திரை காசுகள் என்பவைகள் வட இந்திய காசுகளாகும். இவைகள் கோவை, தருமபுரி, மதுரை மாவட்டங்களில் அதிகம் கிடைத்துள்ளன. இந்த காசுகள் ஆறு வகையாக உள்ளன. அஜாத சத்ரு, சிசுநாதன், நந்தர்கள், பிந்துசாரன், மன்னர்கள் வெளியிட்ட காசுகள் என ஆறு வகைப்படும்.

இந்த காசுகளில் பல உருவங்கள் உள்ளன. சூரியன், நாய், காளை, கொடி, மயில் போன்ற உருவங்கள் அதில் உள்ளன. இந்த காசுகள் வெள்ளியால்

செய்யப்பட்டவை ஆகும். இந்த காசுகள் தமிழகத்திலும் செய்யப்பட்டுள்ளன என்று காஞ்சிபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நாணய வார்ப்பு கூடுகள் தெரிவிக்கின்றன.

**சங்ககால மன்னர்கள் காசுகள்**

சங்க காலமன்னர்கள் தங்கள் சின்னங்களுடன் பல காசுகளை வெளியிட்டனர். சேரர்கள் காசுகள் பனைமரத்தையும், யானை சின்னத்தைக் கொண்டுள்ளது. சோழர்கள் காசுகள் எலி உருவத்தையும், பாண்டிய காசுகள் மீன் உருவமும் கொண்டுள்ளன. குட்டுவன் கோதை என்னும் காசுகள், கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் வெளியிடப் பட்டுள்ளன. பூம்புகாரிலும் அழகன் குளப் பகுதியிலும் காசுகள் அதிகமாகப் புழக்கத்தில் இருந்தன.

**ரோமானியக்காசுகள்**

காசு பரவலாக சங்க காலத் தமிழர்கள் ரோமானியக் களையும் வியாபாரத்திற்குப் பயன்படுத்தினர். இவைகள் வெட்டுப்பட்டக் காசு, வெட்டுபடாத காசுகள் என்று இரண்டு வகையான இருந்தது. வெட்டப்பட்ட காசை நகையாகவும், வெட்டுப்படாத நாணயமாகவும் பயன்படுத்தினர். இந்த காசுகள், தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களால் செய்யப்பட்டவை ஆகும். இந்த் காசுகளை தமிழ்நாட்டு மக்கள் எல்லா இடங்களிலும் பயன்படுத்தியுள்ளனர்.

**நாணயங்களும்வாணிகமும்**

சங்ககால நாணயங்கள் எல்லாம் பொன்னால் ஆனவையாகும். அவைகள் வேப்பம் பழ வடிவிலும் நெல்லிக்காய் போன்ற உருண்டையான வடிவிலுமிருந்தன. அவை வாணிகத்துக்காகப் பயன் படுத்தப்பட்டன. ரோமானியர்கள் தங்க காசுகளைக் கொடுத்ததே மிளகு போன்ற பொருட்களை வாங்கினார். ரோமானியக் காசுகளைத் தமிழர்கள் நகைகளாகப் பயன்படுத்தினர்.

**சேரமன்னர்கள்**

**1. உதியஞ்சேரல்**

உதியஞ்சேரல், சேரமன்னர்களின் முதல் மன்னர் ஆவார். இந்த மன்னர் 'முதியர்' என்னும் பழங்குடிகளுக்கு உதவியாகப் போர் செய்து வெற்றி பெற்றார்.

**2. நெடுஞ்சேரலாதன்**

நெடுஞ்சேரலாதன் சங்ககால சேர மன்னர்கள் வரிசையில் இரண்டாவது மன்னன் ஆவார். இவர் கடல் தீவில் வாழ்ந்த 'கடம்பர்களை' வெற்றி பெற்றார். மேலும் இவர் யவனர்களைத் தோற்கடித்து அவர்களைக்குமட்டூர் கண்ணணார் கைது செய்தார். அவரைப் பற்றி 'புலவர்' பாடியுள்ளார்.

**3. பல்யானைசெல்கெழுகுட்டுவன்**

பல்யானை செங்கெழுகுட்டுவன், மூன்றாவது சேரமன்னர் ஆவார். இவர் நெடுஞ்சேரலாதனின் தம்பியாவார். தன்னுடைய இளவயதில் 'பூழி நாட்டில், இருந்து ‘நாடு காவல்' செய்தார். ஆகவே இவர் 'பூழியார் கோ' என்றழைக்கப்பட்டார். இவர் பல சிறப்பான வெற்றிகளை அடைந்தார் அவைகளாவது:

1. உம்பற்காட்டின்' மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றார்.
2. அகப்பா கோட்டையைத் தகர்த்து வெற்றி பெற்றார்.
3. இவர் பெரிய படை ஒன்றை வைத்திருந்தார்.

**4. களங்காய்கண்ணிநார்முடிச்சேரல்**

களங்காய் கண்ணி நார்முடிச் சேரல், சேரர்களின் நான்காம் மன்னர்' ஆவார். இவர் களங்காய்களை ஒரு நாரில் கட்டி முடி சூட்டிக் கொண்டதால், இவர் 'களங்காய்கண்ணி நார் முடிச் சேரல்' என்றழைக்கப்படுகிறார். இவர், நன்னன் என்ற சிற்றரசரை 'வாகைப்பறந் தலையில் ' தோல்வியடையச் செய்தார். இவர், எவ்வி என்ற சிற்றரசருக்கு உதவியாக, 'நெடுமிடல்' என்ற பாண்டியத் தலைவனை வெற்றி பெற்றார். மேலும் இவர் 'கொடுமிடல் என்ற மற்றொரு பாண்டிய மன்னரையும் வெற்றி பெற்றார்.

**5. செங்குட்டுவன்**

இவர் சங்ககால ஐந்தாம் சேரமன்னர் ஆவார். இவருடைய தந்தை நெடுஞ்சேரலாதன் ஆவார். இந்த மன்னர் மோகூரை' ஆட்சி செய்த சிற்றரசர் 'பழையன் அறுகையைத் தாக்கி வென்றார். இவர் 35 ஆண்டுகள் ஆட்சி செய்தார்.

மோகூர் அரசரின் நண்பர்களான பல சிற்றரசர்களை 'குரலாம் பறந்தலை' என்று மிடத்தில் தோற்கடித்தார். இவர் சோழ மன்னர் கிள்ளி வளவனுக்காக 'நேரி வாயிலில்' என்னும் இடத்தில் போரிட்டு வெற்றி பெற்றார். வியலூர், கொடுகூர், இடும்பில் போன்ற இடங்களில் போர் நடத்தி வெற்றி பெற்றார். கொங்கு நாட்டில் சோழ அரசனையும் பாண்டிய அரசனையும் வெற்றி கண்டார். இவர் ஒரு கடல் போரும் செய்தார். பின் தகடூர் போர் செய்தார். இவர் வேங்கடமலையின் வாழ்ந்த பல குலங்களை வென்றார். இவர் பத்தினி கண்ணகிக்கு சிலை செய்து கோயில்கட்டி வழிபாடு செய்தார்.

**6. ஆடு கோட்பாட்டுச்சேரலாதன்**

இவர் சேரமன்னர்கள் வரிசையில் ஆறாவது ஆவார். இவருடைய தந்தை நெடுஞ்சேரலாதன் ஆவார். இவர் செய்த போர்களில் முக்கியமானது கரந்தைப் போர் ஆகும். ஆடுகளைக் களவு செய்த மக்களிடமிருந்து திரும்பவும் ஆடுகளை மீட்டுக் கொண்டு வந்தார்.

**7.அந்துவன்**

இம்மன்னர் 'கரூரைத் தலைநகரமாக கொண்டு ஆண்டார். ஏணிச்சேரி மூடமோசியார் என்னும் புலவர் இவர் நண்பர் ஆவார்.

**8. செல்வக்கடுங்கோவாழியாதன்**

இவர் ஆரம்பத்தில் பூழி நாட்டை ஆண்டு வந்தார். பின்பு கரூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டார். பின்பு இவர் பல வெற்றிகளை அடைந்தார். வேள்விகள் பல செய்துள்ளார். இவரை பற்றி கபிலர் பாடியுள்ளார்.

**9. பெருஞ்சேரல்இரும்பொறை**

இவரது தந்தை செல்வக் கடுங்கோ வாழியாதன் ஆவார். இவர் ''தழுவுள' மன்னரது கோட்டையைத் தாக்கி தீக்கிரையாக்கினார். கொல்லிமலை ஊரைத்தாக்கி வெற்றிபெற்றார். இவர் அதியமானின் தலைநகர் தகடூரைத் தாக்கினார். ஆகையால் இவர் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும் பொறை என்றழைக்கப்பட்டார்.

**10. இளஞ்சேரல் இரும்பொறை**

இவர் பச்சை மலைப்பகுதி விச்சிக்கோ என்பவரைத் தோற்கடித்தார். மேலும் பொதியை ஆண்ட சோழ மன்னர் கோப்பெருஞ்சோழனையும் இவர் தோற்கடித்தார்.

**சோழ மன்னர்கள்**

சோழர்கள் 'உறையூரை' தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்தனர். இவர்கள் ஆட்சியில் காவிரிப்பூம்பட்டினம், கும்பகோணம், ஆர்க்காடு போன்றவைகள் முக்கிய நகரமாகயிருந்தன. இவர்களில் பல மன்னர்கள் இருந்தனர்.

**1. பெருநற்கிள்ளி**

பெருநற்கிள்ளி சோழ வமிசத்தின் முதல் மன்னர் ஆவார். இவர் ஆமூர் நாட்டு அரசர் 'மல்லனுடன்' போர் புரிந்து வெற்றி பெற்றார். இந்த போர் நடந்த இடம் 'ஆமூராகும்'.

**2. கோப்பெருஞ்சோழன்**

கோப்பெருஞ்சோழன், சேரஅரசன் இளஞ்சேரல் இரும் பொறையுடன் போர் புரிந்து தோற்றுப் போனார். இவரும் பிசிராந்தையார் என்ற தமிழ் புலவரும் நண்பர்களாகயிருந்தார்கள். இவர் வடக்கு திசையில் இருந்து உயிர் விட்டார்.

**3. கரிகாலன்**

சோழ அரசர்களினல் முக்கியமானவர் கரிகாலச் சோழ மன்னர் ஆவார். இவருடைய தந்தை உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி ஆவார். இவர் தன்னுடைய அரச பதவியை மிகுந்த எதிர்ப்புகளுக்கிடையில் அடைந்தார். இவர் பல போர்களைச் செய்தார். அவைகளாவன:

**வெண்ணிப்போர்**

இந்தப் போரைப் பற்றி 'பட்டினப்பாலை' குறிப்பிடுகிறது. கரிகால் மன்னர் இந்தப் போரில் பதினொரு வேளிர்களை எதிர்த்துப் போரிட்டார். இவர் சேர அரசர் பெருஞ்சேரலாதனையும் முறியடித்தார்.

**வாகைப்பறந்தலைப்போர்**

வாகைப்பறந்தலைப்போர் கரிகால மன்னனுக்கும் ஒன்பது மன்னர்களுக்குமிடையே நடைபெற்ற போராகும் இதில் கரிகால மன்னர் குதிரைப் படையைப் பயன்படுத்தி வெற்றி பெற்றார்.

**சிலோன் போர்**

கரிகால மன்னர் சிலோன் நாட்டின் மீது படையெடுத்து அங்கு வெற்றி பெற்று சிலோன் மக்களைகைதிகளாகத் தமிழ்நாட்டுக்கு கொண்டு வந்தார்.

**இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி**

இந்த மன்னரின் காலம் தமிழ் நாட்டின் பொற்காலமாகும். சங்கம் மருவிய கால மன்னர் என்று இவரைச் சொல்வதுண்டு. சிலப்பதிகாரம், மூன்று மன்னர்களையும் பற்றி குறிப்பிட்டு தமிழக ஒற்றுமையினை பறை. சாற்றுகிறது. அது போலவே, இம்மன்னரின் ஆட்சி காலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவரும் ஒன்று சேர்ந்து வாழ்ந்தனர். சோழ அரசர் 'இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி' சேர அரசர் 'மாரிவெண்கே' பாண்டிய அரசர் கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி' ஆகியவர்கள் ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

**சோழ மன்னர் செங்கணான்**

செங்கணான், சோழ அரசர்களின் கடைசி மன்னர். இவர், கொங்கு நாட்டை ஆண்ட 'கணைக்கால் இரும் பொறையுடன் போர் புரிந்தார். இது'போர்' என்றும் ஊரில் நடந்தது. இதில் கோச் செங்கணான வெற்றி பெற்றார். இம்மன்னர் ஒரு சிறந்த சிவ பக்தராக விளங்கினார். காவிரிக் கரையில் எழுபது சிவன் கோயில்களைக் கட்டினார்.

**பாண்டிய மன்னர்கள்**

**தலையாலங்கானத்துசெருவென்றநெடுஞ்செழியன்:**

பாண்டிய மன்னர்களில் முக்கியமான மன்னர் ஆவார். இவர் கொற்றைகையைத் தலைநகரமாக கொண்டு ஆட்சி செய்தார். இவர் பல போர்களைப் புரிந்து பெரும் வீரராக இருந்தார். இவர் செய்த போர்களாவது.

**தலையாலங்கானப்போர்**

தலையாலங்கானப் போர், பாண்டிய மன்னர் நெடுஞ்செழியனால் செய்யப்பட்டதாகும். இந்தப் போரில் நெடுஞ்செழியன் ஏழு அரசர்களை ஒன்றாக தாக்கி வெற்றி பெற்றார்.

**மதுரையை கைப்பற்ற போர்**

இந்தப் போர், கொற்கை நெடுஞ்செழியன், மதுரையைக் கைப்பற்ற நடத்திய போராகும். இந்தப் போரில், சோழனும், சேரனும் இவரை எதிர்த்து தோல்வியடைந்தனர்.

**2. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்**

இவரைப் பற்றி சிலப்பதிகாரம் கூறுகிறது. இவர், ஆரியர்கள் என்ற வடநாட்டு மக்களை வென்றதால், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்றழைக்கப்படுகிறார்.

**3. சித்திர மாடத் துதுஞ்சிய நன்மாறன்**

இவர் சங்கம் மருவிய கால மன்னர் ஆவார். மணிமேகலை நூல் இவரைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

**4. கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி**

இவருடைய காலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஒற்றுமையாயிருந்தனர். சங்க காலப் பாடல்களைத் தொகுத்தது இம்மன்னர் தாம் என்று கூறப்படுகிறது.

## 4. களப்பிரர்கள் (KALABHRAS)

தமிழக வரலாற்றில் சங்க கால சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வாரிசுகள் இறந்த பின்பு தமிழகத்தின் அரசு முறை தமிழ் பண்புகளுக்கு ஒவ்வாத ஒரு பரம்பரையினரிடம் சுமார் மூன்று நூற்றாண்டுகள் சிக்கித் தவித்தது. கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரையிலான அந்தக் காலத்தை தமிழகத்தின் இருண்ட காலம் என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். இக்காலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள் களப்பிரர் என்று அழைக்கப்பட்டனர்.

களப்பிரர்கள் யார்? அவர்கள் எங்கிருந்து, எப்போது தமிழகத்தில் நுழைந்தார்கள் என்பதைத் தெளிவாக அறிய முடியவில்லை அவர்கள் திருவேங்கிடம் முதல் குமரிமுனை வரையிலான நிலப்பரப்பினை ஆட்சி செய்தார்கள். கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டியர்களாலும், பல்லவர்களாலும் களப்பிரர் தோற்கடிக்கப்பட்டனர். இவர்களது ஆட்சிக் காலம் கி.பி.250 முதல் கி.பி.575 வரை இருந்தது. தமிழ் வேந்தர்களின் வீழ்ச்சிக்காலம் சமயத்தின் உயிர்ச்சிக்காலம், வடமொழி ஆதிக்கத்தின் உச்சகாலம் ஆகும். சமண

**சான்றுகள் (Sources)**

களப்பிரர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இலக்கியங் களும், கல்வெட்டுக்களும் பெரிதும் உதவுகின்றன. அவை வருமாறு:

**இலக்கிய ஆதாரங்கள்**

தமிழ் நாவலர் சரிதையில் களப்பிரரைப் பற்றி 154-157 வரையிலான நான்கு பாடல்கள் குறிப்பிடப்படுகின்றன. யாப்பெருங் கலகம் என்ற இலக்கண நூலின் விருத்தியுரை நந்தி மலையில் ஆட்சி புரிந்து வந்த அச்சுதக் களப்பாளன் என்ற களப்பிர அரசனைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இந்த அரசன் சோழ நாட்டில் இருந்து கொண்டே தமிழகம் முழுவதும் ஆட்சி புரிந்தான் என்று அறிய முடிகிறது. மேலும் இந்த விருத்தியுரையில் சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தரும் ,

களப்பிரருக்கு அடிபணிந்த செய்தி உறுதிப்படுத்தப்படுகிறது. b)பெரிய புராணத்தில் வரும் கூற்றுவநாயனார் களப்பிர மரபைச் சேர்ந்தவர் சொல்லப்படுகிறது. அறுபத்தி மூன்று

நாயன்மார்களில் ஒருவரான இந்த கூற்றுவநாயனாரைப் பற்றி நம்பியாண்டார் நம்பி களப்பாளன் என்று குறிப்பிடுகிறார். c)கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் பூம்புகாரில் வாழ்ந்து வந்த புத்தகத்தர் என்ற தமிழ் பௌத்தர் பாலி மொழியில் விநயவி நிச்சயம் என்ற நூலை எழுதினார். இந்த நூலில் சோழ நாட்டை ஆட்சி புரிந்து வந்த அச்சுத விக்கிராந்தன் என்ற களப்பிர மன்னரைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அந்த நூலில் அந்த மன்னன் களபகுலநந்தன் என்று போற்றப்படுகிறார். இவை தவிர அகநானூறு, கல்லாடம் ஆகிய நூல்களிலும் களப்பிரரைப் பற்றிய குறிப்பு உள்ளது.

**செப்பேடு மற்றும் கல்வெட்டு ஆதாரங்கள்**

களப்பிரரைப் பற்றிக் குறிப்பிடும் செப்பேட்டு சாசனங்களில் முதன்மையானவை வேள்விக்குடி செப்பேடுகள் ஆகும். பாண்டியன் பராந்தக நெடுஞ்சடயனின் இந்த வேள்விக்குடி செப்பேடு கடுங்கோன் என்ற பாண்டிய நாட்டு நாட்டு வீரன் களப்பிரரை வென்று பாண்டியர் ஆட்சியை புத்துயிர் பெறச் செய்த செய்தியை விரித்துரைக்கின்றன. களப்பிரரை வென்றவன் மாக்கடுங்கோன் என்று குறிப்பிட்டு இச்செய்தியை உறுதி செய்கின்றன.

முதலாம் பரமேஸ்வர மன்னரின் மன்னரின் கூரம் செப்பேடு களப்பிரரை பல்லவர்கள் வென்ற செய்திகளைக் கூறுகின்றன. சிம்ம விஷ்ணு களப்பிரரிடமிருந்து சோழ நாட்டை மீட்டான் என்று வேலூர்பாளையம் செப்பேடும் பள்ளங்கோவில் செப்பேடும் கூறுகின்றன. இரண்டாம் . விக்கிரமாதித்தன் என்ற சாளுக்கிய வேந்தனின் நேரூர் நன்கொடைப் பட்டயம் களப்பிரரைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

காஞ்சி வைகுண்டப் பெருமாள் கல்வெட்டில் நந்திவர்ம பல்லவ மன்னரது முடிசூட்டு விழாவிற்கு முத்தரயன் என்பவன் வந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்த முத்தரையர்களே களப்பிரர்கள் என்பது அறிஞர்கள் கருத்து ஆகும்.

d)செந்தலைத்தூண் கல்வெட்டில் காணப்படும் பெரும் பிடுகு முத்தரயன் கள்வர் கள்வன் எனப்படுவதால் அவன் களப்பிரருடன் இணைத்துப் பேசப்படுகிறான். திருப்புகழூர் கல்வெட்டு நெற்குன்றம் கிளார் என்ற களப்பாள அரசனைப் பற்றித் தெரிவிக்கிறது. மேலும் கொற்ற மங்கலம் செப்பேடுகள், வினயாதித்தனது ஹரிஹரர் சாசனம் ஆகியவைகளும் களப்பிரரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

மேற்கூறப்பட்ட செப்பேடுகளில் களப்பிரர்களைப் பற்றிய விரிவான செய்திகள் கூறப்படவில்லை. களப்பிரர்களால் வெளியிடப் பட்ட கல்வெட்டுகளோ, செப்பேடுகளோ, நாணயங்களோ இதுவரை ஒன்று கூடக் கிடைக்கவில்லையாதலால், மேற்கூறப்பட்டுள்ள ஆதாரங்களையே நாம் அடிப்படையாகக் கொள்ள வேண்டியுள்ளது. களப்பிரர்களின் காலம்

களப்பிரர்கள் யார்? அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பதில் வரலாற்றறிஞர்களிடையே பலத்த கருத்து வேறுபாடுகள் நிலவி வருகிறது. அவர்கள் கூறும் கருத்துக்கள் பற்றி விரிவாகக் காணலாம்.

**டி.ஏ. கோபிநாதராவின்கருத்து**

காஞ்சி வைகுண்டப் பெருமாள் கல்வெட்டை அடிப்படையாகக் கொண்டு களப்பிரர்கள் என்பவர்கள் முத்தரையர்கள் ஆவார்கள் என்கிறார் டி. ஏகோபிநாதராவ். இந்தக் கல்வெட்டில் நந்திவர்ம பல்லவ மன்னனின் முடிசூட்டு விழாவில் கலந்து கொண்டசுவரன் மாறனாகிய இரண்டாம் பெரும்பிடுகு முத்தரயன் என்பவன் குறிப்பிடுகிறான். இவன் கள்வர் காவலன் என்று செந்தலைக் கல்வெட்டில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளான். கள்வர் என்ற சொல்லே களப்பிரர் என்று வடமொழியில் திரிந்துள்ளது. எனவே களப்பிரர் என்பவர் முத்தரையரே என்று கருதினார் கோபிநாதராவ்.

**மு. இராகவ ஐயங்காரின் கருத்து**

முத்தரையரும், களப்பிரரும் ஒருவரே என்ற கோபிநாதராவின் கருத்தை மறுக்கிறார் இராகவ ஐயங்கார். இவர் களப்பிரர் என்போர் வெள்ளாள களப்பாளரே என்று வாதிடுகிறார். சிவஞானபோதத்தின் ஆசிரியரான மெய்கண்டாரின் தந்தை அச்சுதக்களப்பாளர்

ஆனால், அண்மையில் கிடைத்துள்ள தளவாய்புரச் செப்பேட்டில் கற்றறிந்தோர் திறல் பரவக் களப்பாழரைக் களைகட்ட மாற்றிரடோள் மாக்கடுங்கோன் என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனால் களப்பிரர் என்னும் கலியரசன் என்று சின்னமனூர் செப்பேடு குறிப்பிடுவதும், களப்பாளர் என்று தளவாய்புரச் செப்பேடு குறிப்பிடுவதும் ஒருவரையே என்பது புலனாகிறது. இதனால் களப்பாளரும், களப்பிரரும் வேறானவர்கள் என்ற சதாசிவ பண்டாரத்தாரின் கூற்று வலிமை இழக்கிறது.

**டி.வி.மகாலிங்கம்.**

பேராசிரியர் டி.வி.மகாலிங்கம் என்பவர் பண்டைக்கால தென்னிந்திய வரலாற்றில் காஞ்சிபுரம் என்ற தனது நூலில் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த ஒளியரே களப்பிரர் என்று கூறுகிறார். இதற்கு ஆதாரமாக வேள்விக்குடி செப்பேட்டைச் சுட்டிக் காட்டுகிறார். ஆனால் இந்தக் கருத்தை ந.சுப்பிரமணியன் மறுக்கிறார். தமிழகத்தின் தென்கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ஒலிநாடு ஒளியருக்குரியது என்று தொல்காப்பியம் கூறுகிறது. எனவே வேங்கடப் பகுதியிலிருந்து வந்த களப்பிரர்களுக்கும், ஒளியர்களுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்கிறார் ந.சுப்பிரமணியன்.

**பிற கருத்துக்கள்**

டாக்டர் பன்னீர்செல்வம் என்பவர் களப்பிரர்கள் வட வேங்கடலைச் சாரல் பகுதியினை ஆண்டு வந்த ஒரு ஒரு அரச குடியினராக இருந்திருக்க வேண்டும் என்று கருதுகிறார். களப்பிரரும், முத்தரையரும் ஒருவரே என்ற கருத்தையும் இவர் ஏற்றுக் கொள்கிறார். களப்பிரர் தமிழரே என்ற கருத்தை க.ப.அறவாணன்

வலியுறுத்துகிறார். களப்பிர் என்பவர்கள் மைசூரின் தெற்குப் பகுதியிலும் தமிழகத்தின் எல்லையுமான பகுதிகளில் வாழ்ந்து வந்தவர்கள் என்றும், அவர்கள் வேளிர் மரபினைச் சேர்ந்தவர்கள் என்றும் திரு.நடனகாசிநாதன் கருதுகிறார்.

சில ஆய்வாளர்கள் களப்பிரர்கள் சாதவாகன வழியினர் என்று கருதுகிறார்கள். தக்காண நாட்டினை ஆண்டு வந்த சாதவாகன மன்னரான சதகர்னியின் வீழ்ச்சிக்குப் பின் அவனது கிளையினரே தமிழகத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்திருக்கக் கூடும் என்றும், அவர்களே களப்பிரர் என்றும் சிலர் கருதுகின்றனர். தமிழ் நாட்டிலிருந்த குறும்பர் என்ற சிற்றரசர்கள் தம்முள் ஒன்றுபட்டு முடிமன்னரை வென்று தமிழகத்தில் தமது ஆட்சியை நிறுவினரென்றும், அவர்களே களப்பிரர் என்றும் சிலர் கருதுகின்றனர்.

இப்படி பல கருத்துக்கள் கூறப்பட்டாலும், இறுதியில் களப்பிரர்கள் இன்வைறைய கோலார் மாவட்டத்தைச் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கன்றும் , அவர்கள் தீவிர சமணர்கள் சமணர்கள் என்றும், அவர்கள் வடவேங்கடப் பகுதியிலிருந்த தொண்டை மண்டலம், சோழ நாடு வழியாகப் பாண்டி காட்டினுள் புகுந்தனர் என்றும் தெரிகிறது. இவர்கள் அங்கு நிலவி வந்த நிலையற்ற அரசியலைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சியைப் பிடித்து பின்னர் தமிழகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டனர் என்பதே வராய்ச்சியாளர்களின் இறுதியான கருத்து ஆகும். களப்பிரர் என்ற சொல்

களப்பிரரின் பூர்வீகம் கன்னட நாடு ஆகும். கன்னடக் கல்வெட்டுகளில், களவரநாடு, களவாப்பு, கள்போரா போன்ற பெயர்கள் காணப்படுகின்றன. களவரநாட்டைச் சேர்ந்தவர்கள் களவர் என்று அழைக்கப்பட்டனர். காளத்தி மலைப்பகுதியில் வாழ்ந்து வந்த மக்களும் களவர் என்றே அழைக்கப்பட்டனர். இந்தக் களவர் என்ற சொல் வடமொழியில் களப்ரா என்று மாற்றம் பெற்றது. இது தமிழில் களப்பிரர் எனப்பட்டது. களவர் என்பது தமிழ் இலக்கியங்களில் கள்வர் என்றாகி பின்பு களப்பிரர் என்று பெயர் பெற்றிருக்க வேண்டும்.

**களப்பிரர் அரச குடியினரே என்ற கருத்து**

களப்பிரர் அரச குடியினரா இல்லையா என்பது பற்றி வரலாற்றாய் வாளர்களிடையே கருத்து வேறுபாடு நிலவி வருகிறது. இவர்கள் அரச குலத்தினரே என்று கிருஷ்ண சாஸ்திரியும் அரச குடியினர் அல்ல என்று டாக்டர் ராசமாணிக்கனாரும் கருதுகின்றனர். ஆனாலும் கீழ்க்கண்ட பல சான்றுகளின் அடிப்படையில் களப்பிரர் அரச குடியினரே என்பதை அறிய முடிகிறது.

ஹோஸ்கட்டில் காணப்படும் வீரக்கல் ஒன்றில் களவரநாடு என்ற சொல் காணப்படுகிறது. இதனால் களப்பிரர் தங்களுக்கென ஒரு நாட்டினைப் பெற்றிருந்தனர் என்பது தெரிய வருகிறது. எனவே தவாகள் அரச குலத்தினர்தான் என்பதில் ஐயமில்லை

கதம்பகுல வேந்தனான காகுஸ்தன் (கி.பி.425-450) என்பவர் போரா என்ற பழங்குடியின் பகைவன் என்று கல்வெட்டில் குறிக்கப் டுள்ளான். ஒரு வேந்தனது பகைவன் வேந்தனாகவே இருக்க முடியும். எனவே களப்பிரர் அரச குடியினரே ஆவர்.

களப்பு நாட்டை ஆண்டு வந்த திண்டீகன் என்பவர் மேலைக் வேந்தனான மகதிராயனுக்குப் பின் கங்க அரசினையும் தனதாக்கிக் ண்டார் என்ற செய்தி கொங்கு தேச ராஜாக்கள் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் களவர்கள் நந்தி மலைப் பகுதிக்குத் தலைவர்களாக இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

மேற்கூறியவற்றிலிருந்து களப்பிரர்கள் தென் கன்னடப் பகுதியினைத் தாயகமாகக் கொண்ட ஒரு மலை வாழ் அரச குடிமக்கள் என்பது தெரிய வருகிறது.

**தமிழகத்தில் களப்பிரர் ஆட்சி நிறுவப்படுதல்**

தங்கள் பூர்வீக நாட்டிலிருந்து கடம்பர்களால் துரத்தப்பட்ட புல்லியின் வழியினரான களப்பிரர் வடவேங்கடப் பகுதியிலிருந்து புறப்பட்டனர். தமிழகத்தில் நுழைய வேண்டும் என்றால் களப்பிரர் தொண்டை மண்டலம் வழியாகவே நுழைய முடியும். அங்கு பல்லவர்கள் ஆட்சி செய்து செய்து வந்தனர். ஆரம்பத்தில் தொண்டை மண்டலத்தில் களப்பிரர் ஊடுருவல் செய்ய முயன்று தோல்வியைத்

தழுவினர். முதன் முதலாக பப்பதேவன் என்ற பல்லவ வேந்தன் இவர்களை எதிர்த்துப் போரிட்டு விரட்டியடித்தான். அடுத்து சிவஸ் கந்தவர்மன் காலத்திலும் களப்பிரர் பல்லவ நாட்டில் நுழைய முடியவில்லை.

படை ஆனால் ஆந்திர அரசர்களின் வீழ்ச்சியாலும், பல்லவ அரசர்களின் அதிகார உயர்வாலும், சமுத்திர குப்தனின் எழுச்சியாலும் தொண்டை நாட்டில் குழப்பம் நிலவியது நிலவியது. இந்தக் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கி.பி.3-ம், 4-ம் நூற்றாண்டளவில் தொண்டை மண்டலத்தைக் களப்பிரர் கைப்பற்றினர். தொண்டை நாட்டில் உள்ள களந்தை என்னுமிடத்தில் கூற்றுவன் என்ற பெயரைக் கொண்ட அரசன் ஒருவன் ஆட்சி புரிந்தான் எனவும், அவனே திருத்தொண்டத் தொகையில் குறிக்கப்பட்டுள்ள கூற்றுவ நாயனார் என்று பெரிய புராணம் கூறுகிறது.

தொண்டை மண்டலத்தில் ஊடுருவல் செய்த களப்பிரர்கள் பின்னர் அங்கிருந்து தெற்கு நோக்கி வந்து சோழ நாட்டிற்குள் புகுந்தனர். அப்போது சோழ நாட்டில் நிலையான ஆட்சி இல்லை. உள்நாட்டுக் குழப்பமும், வாரிசுத் தகராறும் நிலவியது. வலிமைமிக்க மன்னர் யாரும் இல்லை. இப்படிப்பட்ட சோகமான சூழ்நிலையில்தான் களப்பிரர் புகுந்து ஆட்சியைக் கைப்பற்றினர். நிலையான ஆட்சியை அமைத்தனர். மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்தனர்.

**அச்சுதக் களப்பாளன்**

சோழ நாட்டில் ஆட்சி புரிந்த களப்பிர மன்னர்களுள் அச்சு விக்ராந்தன் என்ற களப்பிர மன்னன் மிகவும் புகழ் பெற்றவனாக விளங்கினான். இவனது ஆட்சிக் காலம் கி.பி.நான்காம் நூற்றாண்டு ஆகும். இவனது அவைக்களத்தில் புத்ததத்தர் என்ற புத்த மதத் துறவி நான் எழுதிய அபிதம்மாவதாரம் என்ற நூலை அரங்கேற்றினார். தமிழகத்தில் ஆட்சி புரிந்த களப்பிர மன்னர்களுள் சோழ நாட்டில் ஆட்சி புரிந்த அச்சுதனின் பெயரே நமக்குத் தெரிகிறது. மற்ற பகுதிகளில் ஆட்சி புரிந்த களப்பிர மன்னர்களின் மன்னர்களின் பெயர்களோ, அவர்களின் ஆட்சிச் சிறப்போ நமக்குக் கிடைக்கவில்லை. இந்த அச்சுதக் களப்பாளனின் தலைநகர்

புகார் ஆகும். இங்கிருந்து கொண்டு கான் தமிழக மூவேந்தரையும் வெற்றி கொண்டு தனது மேலாண்மையை நிலவச் செய்தான். தமிழகம் முழுவதும் அவன் காலடியில் கிடந்தது. அவன் ஏகபோக சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தான். தமிழக மூவேந்தர்களின் சின்னங்களாகிய புலி, வில், கயல் ஆகிய மூன்றையுமே தனது அரச சின்னங்களாக வைத்துக் கொண்டான். அவைகளை தனது கொடியிலும் பொறித்துக் கொண்டான். இந்தச் செய்திகளை யாப்பெருங்கல விருத்தியுரையில் விளக்கத்தனார் இயற்றிய விளக்கத்தார் கூத்து என்ற நூலிலிருந்து மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்ட பாடல் ஒன்றிலிருந்து அறிந்து கொள்ளலாம். மேலும் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் பூம்புகாரில் வாழ்ந்து வந்த புத்த தத்ததேரர் என்ற தமிழ் பௌத்தர் தாம் எழுதிய விநய விநிச்சயம் என்ற பாலி மொழியில் எழுதிய நூலில் இந்த அச்சுத விக்கிராந்தனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

சேர, சோழ, சோழ, பாண்டியரை வென்ற அச்சுதக் களப்பாளன் சிதம்பரத்தில் அவர்களைச் சிறையிலிட்டு அவர்களது காலில் விலங்கு பூட்டினான் என்றும், அப்போது அந்த மூவேந்தர்களும் களப்பாளனைப் புகழ்ந்து பாடினார் என்றும் கூறப்படுகிறது. அப்படி அவர்கள் பாடிய பாடல்கள் யாப்பெருங்கலம் விருத்தியுரையில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இந்தப் பாடல்கள் மூலம் அச்சுதனின் ஆட்சி சிறப்பாக அமைந்திருந்தது என்று நாம் அறிந்து கொள்ளலாம்.

அச்சுதனின் ஆட்சி புலவர் பலரால் பாராட்டப்பட்டது. இவன் ஒரு வேற்றரசன் என்பதால் என்பதால் மக்களுக்கும், , தமிழ் மொழிக்கும் கேடு விளைவித்தான் என்று கூறுவது முறையாகாது. இந்த அச்சுதக் களப்பாளன் காலத்தில் புத்த மதமே உயர் நிலையில் இருந்தது. இதனால் ஆரம்பத்தில் களப்பிரர் பௌத்த மதத்தினையும், பிற்பகுதியில் சமயத்தையும் ஆதரித்தனர் என்று கூறலாம். களப்பிரரின் வீழ்ச்சி

எண்ணற்ற அரச பெருங்குடியினரை வென்று தமிழகத்தின் பெரும் பகுதியினை ஏறத்தாழ இரண்டரை நூற்றாண்டுகள் ஆட்சி செய்தார்கள்

களப்பிரர்கள். இவ்வளவு நீண்ட கால ஆட்சிக் காலத்தில் வைதீக . சமயத்தையும், பிரமணியத்தையும் எதிர்த்தார்கள். இந்த அந்நிய ஆட்சிக்கு எதிராகப் புரட்சிகள் ஏற்பட்டாலும் அவை அனைத்தையும் களப்பிரர் தங்கள் படை வலிமையால் ஒடுக்கினர்.

ஆண்டாண்டு பாண்டிய நாட்டை ஆண்டு வந்த பாண்டிய மரபின் வழியினராக விளங்கியவர் கடுங்கோன் ஆவார். இவர் அந்நிய ஆட்சியில் பாண்டிய மரபினர் அடங்கி ஒடுங்கிக் கிடப்பதைக் கண்டு வீறுகொண்டு எழுந்தார். களப்பிரர் ஆட்சிக்கெதிராக மறவர்களை ஒன்று திரட்டினார். அனைவருக்கும் படைப்பயிற்சி அளித்தார். அந்தப் படைக்குத் தலைமை தாங்கி தானே புரட்சிக் கொடியை உயர்த்தினார். கடுமையான போருக்குப் பிறகு கடுங்கோனின் படை பல வெற்றிகளைப் பெற்றது. களப்பிரர்கள் பாண்டி நாட்டை காலமாக ஆட்சி விட்டு விரட்டப்பட்டனர். அடிமையிருள் அகன்றது. பாண்டியர் ஆட்சி பிறந்தது. இதனை வேள்விக் குடி செப்பேடுகள் களப்ரன் என்னும் கலியரசனை வென்றடக்கிய வேந்தன் என்று குறிப்பிடுகின்றன. இந்தச் செய்தியை தளவாய்புரச் செப்பேடுகளும் உறுதி செய்கின்றன. பாண்டிய நாட்டை களப்பிரரிடமிருந்து கடுங்கோன் மீட்டுக் கொண்ட அதே காலத்தில் தொண்டை மண்டலத்தைக் காஞ்சிமா நகரிலிருந்து செய்து வந்த பல்லவ மன்னன் சோழ நாட்டைக் களப்பிரரிடமிருந்து மீட்டுக் கொண்டான் என்று பல்லவர் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. வேலூர்ப்பாளையம் செப்பேடுகள் சிம்ம விஷ்ணுவை (கி.பி.575-615) களப்பிரரை முறியடித்த பெருவீரன் என்று குறிப்பிடுகிறது இதே செய்தியை பள்ளன்கோவில் செப்பேடுகளும் தெரிவிக்கின்றன.

படையெடுப்பாளர்களாகத் தமிழகத்தில் நுழைந்து கி.பி.300 முதல் கி.பி.575 வரை தங்கள் மேலாண்மையை ஏற்படுத்தியிருந்தனர் களப்பிரர். பேரரசர்களாகத் திகழ்ந்த களப்பிரர் தங்கள் மேலாண்மையை இழந்த பின்பு முத்தரையர்கள் என்ற பெயரில் குறுநில மன்னர்களாக சில காலம் தமிழகத்தின் சில பகுதிகளில் ஆட்சி செய்து வந்தனர். பின்னர் சேர, சோழ, பாண்டிய மன்னர்களிடம் படைத்

தலைவர்களாகவும், செல்வாக்கு பெற்ற அரசியல் தலைவர்களாகவும் படை வீரர்களாகவும் பணிபுரிந்தனர். இவர்களுள் சிலர் முத்தமிழ் வித்தகர்களாகவும், தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் புரவலர்களாகவும் விளங்கினர். முத்துராஜஜழகுகள், அம்பலக் காரர்கள் போன்ற பல்வேறு பெயர்களைக் கொண்டு நம்மிடையே வாழ்ந்து வரும் இவர்கள் களப்பிரரின் வழிவந்தவர்களே ஆவர். இவர்கள் தமிழ்ச் சமுதாயத்துடனும், பண்பாட்டுடனும் இணைந்து விட்டனர். *

இவ்வாறு களப்பிரர் தமிழர் வாழ்வுடன் இணைந்து தமிழகப் பகுதிகளிலேயே நிலைத்து வாழ்ந்து வருவது தமிழகத்தின் தனித்த உயர்ந்த பண்பாட்டுச் சிறப்பினை வெளிப்படுத்துவதாக உள்ளது. தமிழக அரசியல் சமுதாய வரலாற்றில் களப்பிரர்களின் படையெழுச்சி ஒரு திருப்பு முனையாகவே அமைந்துள்ளது.

**அலகு - 2**

## 1. பல்லவர்கள்- தோற்றம்

கி.பி.மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை தமிழ்நாடு களப்பிரர்கள் ஆட்சிக்கு உட்பட்டு அழகு இழந்து இருளில் மூழ்கிக் கிடந்தது. கி.பி ஆறாம் நூற்றாண்டில் வடக்கே காஞ்சிப் பல்லவர் களும், தெற்கே மதுரைப் பாண்டியர்களும் மீண்டும் உண்மையான தமிழ் ஆட்சியை ஏற்படுத்தினர். காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு கி.பி.900 வரை வலிமையான அரசாட்சியைத் தந்த பல்லவ வம்சம், எங்கு எவ்வாறு தோன்றியது என்பதில் வரலாற்று அறிஞர்களிடையே முரண்பட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றன.

**சான்றுகள்**

பல்லவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இலக்கியங்களும், கல்வெட்டுகளும் உதவி செய்கின்றன.

**இலக்கியச் சான்றுகள்**

பல்லவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு தமிழ் இலக்கியங்களும் சமஸ்கிருத மொழி நூல்களும், வெளிநாட்டுக் குறிப்புகளும் பெரிதும் உதவுகின்றன.

**a)தேவாரம்**

இது ஒரு சமய நூலாகும். அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய வரும் சேர்ந்து பாடிய பக்திப் பாடல்களின் தொகுப்பாகும். இந்த வாரப் பாடல்களிலிருந்து பல்லவர் நாட்டில் சமண சமயம் இருந்தது தெரிய வருகிறது. பல்லவ மன்னர் முதலாம் மகேந்திரவர்மன் முதலில் சமணராக இருந்தார். அப்பர் அடிகளின் தொடர்பின் காரணமாகவே சைவராக மாறினார். ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த சுந்தரர் திருத்தொண்ட தொகையில் மூன்றாம் நந்திவர்மனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்

**பெரிய புராணம்**

இதுவும் சைவசமய இலக்கியமாகவே கருதப்படுகிறது. இந்த நூலில் பல்லவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகிறது. இந்த நூலை எழுதியவர் சேக்கிழார் ஆவார். இந்த நூலில் சேக்கிழார் குறிப்பிடும் சில நாயன்மார்கள் பல்லவ அரசர்கள் ஆவர். உதாரணமாக மூன்றாம் சிம்மவர்மன் என்ற ஐயடிகள் காடவர் கோனும், மூன்றாம் நந்திவர்மன் என்ற கழற்சிங்கனும் பல்லவ அரச நாயன்மார்கள் ஆவர். சிறுத்தொண்டர் என்று போற்றப்பட்ட பரஞ்சோதியார் பல்லவ படைத்தலைவராக பணி புரிந்தவர் ஆவார். மேலும் பெரிய புராணத்தில் பல்லவர் காலத்தில் ஆட்சி செய்த சிற்றரசர்கள் பற்றிய குறிப்புகளும் உள்ளன.

**நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம்**

இது ஒரு வைணவ நூலாகும். இதை எழுதியவர் ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கை ஆழ்வார், இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் வாழ்ந்தவர் ஆவார். இந்த நூலில் பல்லவ மன்னர் நந்திவர்மன் நேரடியாகப் பங்கு கொண்ட நென்மேனிப் போரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மேலும் பல்லவர் படை, பல்லவர் பயன்படுத்திய போர்க் கருவிகள், இசைக் கருவிகள் பற்றிய குறிப்புகளும் நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் காணப்படுகின்றன.

லோகவிபாகா, இது ஒரு சமண நூலாகும். இதனை எழுதியவர் சர்வந்தி என்பவர் ஆவார். இந்த நூல் பல்லவ அரசர் சிம்மவர்மனின் ஆட்சித் தொடக்கத்தின் காலக் கணிப்பை வரைவதற்குப் பயன்படுகிறது.

**நந்திக் கலம்பகம்**

இந்த நூலை எழுதியவர் பெயர் கிடைக்கவில்லை. இந்த நூல் மூன்றாம் நந்திவர்மனின் வீரச் செயல்கள் பற்றிக் குறிப்பிடுகிறது. . இவனே தொள்ளாறு எறிந்த நந்தி போத்தரையன் புகழப்படுகிறான். இந்த மன்னரின் ஆட்சிப் பரப்பு தலைநகர் மற்றும் அவரால் ஆதரிக்கப்பட்ட புலவர்கள் ஆகியவை பற்றிய செய்திகளை இந்த நூல் தருகிறது.

பாரத வெண்பா என்ற மற்றொரு தமிழ் நூலும் மூன்றாம் ந்திவர்மன் பங்கு கொண்ட தொள்ளாற்றுப் போரைப் பற்றிய செய்திகளைத் தருகிறது.

**சமஸ்கிருத நூல்கள்**

அவந்தி சுந்தர கதாசாரா என்ற நூலில் காஞ்சி மன்னர் சிம்ம விஷ்ணு புலவர் பாரவி என்பவருக்கு நன்கொடை அளித்த அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது. மேலும் இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சாளுக்கிய, கங்கை மன்னர்களைப் பயன்படுத்தி பல்லவ மன்னர் சிம்ம விஷ்ணுவின் . காலத்தைக் கணிக்கலாம். அப்பர் காலத்தில் ஆட்சி புரிந்தவர் முதலாம் மகேந்திரவர்மன் ஆவார். இவர் மத்தவிலாச பிரஹசனா என்ற சமஸ்கிருத நாடக நூலை எழுதினார். இந்த நூலில் காஞ்சியில் வாழ்ந்து வந்த சமணர்கள், கபாலிகர்கள், பௌத்தர்கள், பாசுபதர் ஆகியோர் பற்றிய குறிப்புகளை நாம் அறிய முடிகிறது. பகவத் அஜிகியாம் என்ற நூலையும் முதலாம் மகேந்திரவர்மன் எழுதியுள்ளார். இவ்வாறு மேற்கண்ட இலக்கிய சான்றுகள் மூலம் பல்லவ அரசர்களைப் பற்றியும் அவர்கள் காலத்திய நிகழ்ச்சிகளைப் பற்றியும் நாம் அறிய முடிகிறது

**கல்வெட்டுகள்**

கல்வெட்டுகளும், பட்டயங்களும் பல்லவர்களைப் பற்றி அறிய உதவுகின்றன. ஆர்.கோபாலன் என்பவர் பல்லவர் காலக் கல்வெட்டுகளை பிராகிருத கல்வெட்டுகள், சமஸ்கிருத கல்வெட்டுகள், சமஸ்கிருதமும், தமிழும் கலந்த கல்வெட்டுகள் என்று மூன்று பிரிவாகப் பிரிக்கிறார். பெரும்பான்மையான கல்வெட்டுகள் பல்லவ மன்னர்கள் அளித்த அன்பளிப்பு, பரிசுக்கொடை, சமய அறத்துறை மானியம் ஆகியவற்றைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. கோவில்களுக்கு மன்னர் அளித்த நன்கொடைகள் பற்றியும் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

சிம்மவர்மனின் மஞ்சிகல்லு கல்வெட்டுகள் கி.பி.நான்காம் அற்றாண்டைச் சேர்ந்தவையாகும். அடுத்து இளவசரன் சிவஸ்கந்தவர்மனால் அவரது தந்தையின் பத்தாவது ஆண்டில் அளிக்கப்பட்ட நன்கொடைப் பட்டயங்கள் பல்லவர் காலத்திய பல பதிகளைத் தெரிவிக்கின்றன. சிவஸ்கந்தவர்மன் அரசனான பிறகு அவரது

எட்டாம் ஆட்சியாண்டில் கிராகத கல்லி ப்புத் தகடுகள் வெளியிடப்பட்டது. இவை தவிர பிரிட்டிஷ் அருங்காட்சியில் உள்ள ராணி சாருதேவியின் செப்புத் தகடுகள் தகருத மொழியில் உள்ளன. இந்தத் தகடுகளில் விஜயஸ்கந்தவர்மன், விஜயபுத்தவர்மன், புத்தான்குரன் ஆகிய பெயர்கள் காணப்படுகின்றன.

பிராக்கிருத மொழிப் பட்டயங்களைத் தவிர சமுத்திரகுப்தர் வெளியிட்ட அலகாபாத் கல்வெட்டும் பல்லவர்களைப் பற்றி அறியப் பயன்படுகிறது. இக்கல்வெட்டில் விஷ்ணுகோபரின் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டுகள் மூலம் பல்லவ மன்னர்களின் பெயர் களையும் அவர்கள் புரிந்த வீரச் செயல்களையும் அறிய முடிகிறது.

**பல்லவரின்தோற்றம்**

பல்லவர்களின் தோற்றம் பற்றிய கருத்துக்கள் ஆராய்ச்சியாளர் களால் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அவர்களுக்குள் உடன்பாடான கருத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை. பல்லவர்களின் தோற்றம் பற்றிய வெவ்வேறான கருத்துக்களை இனி காணலாம்.

**பல்லவர்கள்மத்திய ஆசியாவிலிருந்துவந்தவர்கள்**

பல்லவர்கள் வம்சம் மத்திய ஆசியாவிலிருந்து தோன்றி இருக்கலாம் என்ற கருத்தை வரலாற்றறிஞரான லெவிஸ்ரைஸ், லூவேதூப்ராய், வெங்கையா மற்றும் வெங்கிட சுப்பையா போன்றோர் வலியுறுத்துகின்றனர். லெவிஸ்ரைஸ் என்பவர் பல்லவர்களும் யவனர்களும் மத்திய ஆசியாவைச் சார்ந்தவர்கள் என்பதற்குத் தெளிவான புராணச் சான்றுகளைத் தருகிறார். பாரசீக வேதத்திற்கும், பிராக்கிருத மொழிக்கும் ஒற்றுமை இருப்பதாக அவர் கருதுகிறார். பாரசீகப் பார்த்தியாரின் பஹ்லவர் என்ற சொல்லே மருவி பல்லவர் என வந்துள்ளது என்று துப்ராய் கூறுகிறார். பேராசிரியர் வெங்கையா அவர்கள் பல்லவர்களின் செப்புப் பட்டயங்களும், பாரசீக மொழியின் தன்மையும் இறுக்கமாக ஈர்ப்பதாகக் கருதுகிறார்.

**பல்லவர்களின்தாயகம் வட இந்தியா**

முற்காலப் பல்லவர்கள் தமிழகத்திற்கு வெளியே சில நூற்றாண்டுகள் வாழ்ந்திருப்பதால் அவர்கள் வட இந்தியாவில் அல்லது மத்திய இந்தியாவில் வாழ்ந்த வாக்காடக மரபினர்களாக இருக்கலாம் என்று டாக்டர் ஜெயசுவால் கருதுகிறார். ஏனெனில் பல்லவர்களும் வாக்காடர்களும் பாரத் வாஜ கோத்திரப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இருபிரிவினருமே பிராமண குலத்தவர்கள். இந்த இரண்டு பிரிவினரும் சாதவாகனப் பேரரசு அழிந்தவுடன் அப்பேரரசின் வெவ்வேறு பகுதிகளில் தொடர்ந்து இருந்து வந்தார்கள். இதன் அடிப்படையிலேயே ஜெயசுவால் தனது கருத்தைக் கூறுகிறார்.

**பல்லவர்கள் ஆந்திராவைச்சேர்ந்தவர்கள்**

பல்லவர்கள் ஆந்திராவைச் சார்ந்தவர்கள் என்று K.A.நீலகண்ட சாஸ்திரி, R.கோபாலன், C.மீனாட்சி, மகாலிங்கம் ஆகியோர் கருதுகின்றனர். கிழக்கு ஆந்திராவில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி காரணமாக பல்லவர்கள் தங்கள் தாயகத்தை விட்டு நீங்கி தொண்டை மண்டலத்தை அடைந்தார்கள். அங்கு அவர்கள் புதிதாக அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார்கள் என்று கருதுகிறார்கள். பல்லவர்கள் நாக வம்சத்தினரே!

பேராசிரியர் M.சீனிவாச அய்யங்கார், பல்லவர்கள் பண்டைய நாகர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதுகிறார். நாக நாட்டைச் சேர்ந்த மணிபல்லவத் தீவை தாயகமாகக் கொண்டவர்கள் பல்லவர்கள். இதனை இலங்கை பேராசிரியர் ராஜநாயகமும் ஆதரித்துப் பேசுகிறார்.

**பல்லவர்கள்புலிந்தர் அல்லது குறும்பர்கள்**

பேராசிரியர் R.சத்திய நாதய்யர், பல்லவர்கள் புலிந்தர்களே என்கிறார். மாமன்னர் அசோகரது கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் புலிந்தர்கள் பல்லவர்களே ஆவர். புலிந்தர் என்ற சொல்லிலிருந்தே பல்லவர் என்ற சொல் மருவி வந்தது. பல்லவ நாட்டில் புலியூர், புலியூர்க் கோட்டம் போன்ற பிரிவுகள்

இருந்ததால் அவை புலிந்தர்களுடன் தொடர்பு உள்ளவைகளாகத் தெரிகின்றன. பல்லவர் என்ற அடைமொழிச் சொல்லின் திரிபே குறும்பர் என்றும் கூறப்படுகிறது.

**பல்லவர்களின்தாயகம்தமிழகமே!**

பல்லவர்கள் தமிழர்கள் தான் என்று பேராசிரியர்கள் K.ராஜய்யன், N.சுப்பிரமணியன் ஆகியோர் தெளிவாகக் குறிப்பிடுகின்றனர். இதற்கு இவர்கள் தரும் விளக்கம் வருமாறு:

பல்லவர்கள் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த தமிழர்களே ஆவர். பெரும்பாணாற்றுப்படை என்ற சங்க இலக்கியத்தின் பாட்டுடைத் தலைவனான, தொண்டைமான் இளந்திரையன் காலனுடைய மகன் வழிப் பேரனான கிள்ளிவளவனுக்கும் நாகநாட்டு இளவரசியான பீலிவளைக்கும் பிறந்தவன். அவனே சிப் பல்லவர்களின் . முதல் மன்னன் என்ற கருத்து தெளிவாக துவப்பட்டு விட்டது. மேலும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பக்கத்தில் புகாரிலிருந்த உறையூரை சோழர்கள் தமதாக்கினர் என்று பேராசிரியர் N.சுப்பிரமணியன் தெளிவாகக்கூறுகிறார்.

மேற்கண்ட பல்வேறு பேராசிரியர்களின் கருத்துக்களைப் பார்க்கும் போது, பல்லவர்கள் சங்க கால மூவேந்தர்களின் வழித் தோன்றல்களே என்பது புலப்படும். ஆனால் பல்லவ வம்சம் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவாகப் பிரிந்து ஆந்திரப் பகுதிகளிலும், நாக நாட்டிலும், இந்தோனேஷியா போன்ற கிழக்காசிய நாடுகளிலும் வாழ்ந்து வந்தார்கள் என்பது மறுக்க முடியாத வரலாற்று உண்மை இறுதியாக பல்லவ அரச குலம் தமிழக குலமே என்ற கருத்து நிலை பெறுகிறது

**முதலாம்மகேந்திரவர்மன்(கி.பி.600-630) (MAHENDRA VARMAN I)**

பிற்காலப் பல்லவர்களின் ஆட்சி சிம்ம விஷ்ணுவின் காலத்திலிருந்து தொடங்குகிறது. இவருடைய காலத்திலிருந்து பல்லவ அரசர்களின் பெயர்கள் தெளிவாகக் கிடைக்கிறது. இவரைப் பற்றி அவந்தி சுந்தர கதை, மத்தவிலாசப் பிரகசனம் ஆகிய நூல்களிலிருந்தும், வேலூர்ப் பாளையம் செப்பேடு மற்றும் கஞ்சனூர் பட்டயத்திலிருந்தும் அறிய முடிகிறது. இவர் பல்லவ மரபின் தூண்

போல விளங்கினார். சேர, சோழ, பாண்டியரை வென்று தமிழகத்தில் பல்லவ ஆட்சியை நிலை நாட்டினார். சிம்ம விஷ்ணு களப்பிரர்களிடமிருந்து காஞ்சியைக் கைப்பற்றினார். இவருடைய பல ஆட்சியின் எல்லை காஞ்சியிலிருந்து கும்பகோணம் வரைப் பரவியிருந்தது. இவர் தீவிர வைணவனாக விளங்கினார். சிம்மவிஷ்ணுவுக்குப் பின் அவர் மகனான முதலாம் மகேந்திர வர்மன் அரியணையேறினார். இவர் மிகவும் திறமைவாய்ந்த அரசர். சத்துரு மல்லன், மத்தவிலாசன், குணபரன், விசித்திரசித்தன், கலகப்பிரியா போன்ற பல்வேறு விருதுகளைத் தனக்குச் சூட்டிக் கொண்டார். சிறந்த கட்டிடக்கலை வல்லுநராகவும், கவிஞராகவும் விளங்கினார். இவருடைய காலம் துறைகளிலும் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. சமயம், கலை, இலக்கியம், போர், நிர்வாகம் ஆகிய துறைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது.

**சாளுக்கியருடன்போர்**

இவருடைய காலத்தில் பல்லவ சாளுக்கியப் போர்கள் நடைபெற்றன. அப்போது வாதாபியைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய மேலைச் சாளுக்கியப் பேரரசை ஆண்டு வந்தவன் இரண்டாம் புலிகேசி, இரண்டாம் புலிகேசி மகேந்திரவர்மனைத் தோற்கடித்தான் என்றும், மகேந்திரவர்மன் ஓர் கோட்டைக்குள் போய் ஒளிந்து கொண்டார் என்றும் புலிகேசியின் அய்கோல் கல்வெட்டு கூறுகிறது. வெற்றி பெற்ற புலிகேசி காவிரி வரை சென்று திரும்பி வரும் போது மகேந்திரனின் படைகள் சாளுக்கியரை காஞ்சிக்கு அருகிலுள்ள புள்ளலூர் என்னுமிடத்தில் அழித்தது என்று கசக்குடி செப்பேடுகள் கூறுகின்றன. இவ்வாறு பல்லவ -சாளுக்கியப் போர் நடைபெற்றது.

**சமயம்**

மகேந்திரவர்மன் முதலில் சமண சமயத்தைப் பின்பற்றினார். பின்னர் சைவத்திற்கு மாற்றப்பட்டார். தீவிர சைவனாக மாறிய மகேந்திரவர்மன் சமண சமயத்தை வெறுத்தார். சமணப் புள்ளிகளை அழித்து அங்கே சைவக் கோவில்களைக் கட்டினார். சிவலிங்கத்தை வழிபட்டார். சிவனுக்குப் பல

கோயில்களைக் கட்டினார். மகேந்திர வாடியில் மகேந்திர விஷ்ணுகிரகம் என்ற விஷ்ணு கோவிலை அமைத்தார்.

**கட்டிடக்கலை**

தமிழகக் கட்டிடக்கலை வரலாற்றில் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் ஒரு புது திருப்பம் ஏற்பட்டது. மகேந்திரவர்மனுக்கு முன்பு இருந்த மன்னர்கள் காலத்தில் கற்கோவில்கள் இல்லை. இருந்த கோவில்களும் அழியும் பொருட்களான செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் முதலியவைகளால் கட்டப்பட்டன. ஆனால் மகேந்திரவர்மன் காலத்தால் அழிக்கமுடியாத கற்கள் மூலம் கோயில்கட்டும் புதிய பாணியினை ஆரம்பித்து வைத்தார். மகேந்திரவர்மனின் கோவில்களைக் கண்டவுடன் எளிதில் இவை மகேந்திரன் கட்டியவை என்று கூறிவிடலாம். இக்கோவில்கள் அனைத்தும் மலைச் சரிவுகளில் குடைந்து அமைக்கப்பட்டவை. இவை மலை உச்சியிலும் இருக்காது. அடிவாரத்திலும் இருக்காது. மலையின் நடுப்பகுதியிலே இருக்கும். இப்படிக் குடைந்து அமைக்கப்பட்ட கோவில்கள் குகைக் கோவில்கள் என்று அழைக்கப்பட்டன. மகேந்திர வர்மனின் குகைக் கோவில்களில் தூண்கள் மேல் பக்கமும், கீழ் பக்கமும், சதுரமாக இருக்கும். அந்த சதுரத்தில் தாமரை மலர்கள் வரையப் பட்டிருக்கும். தூணின் பக்கங்களில் மகேந்திரவர்மனின் பட்டப் பெயர்கள் செதுக்கப்பட்டிருக்கும். கோவில் சுவர்களில் சித்திர வேலை காணப்படும். அத்துடன் புராணக் கதைகளைக் குறிக்கும் அழகிய சிலைகள் செதுக்கப்பட்டிருக்கும். இவரது கோவில்கள் பலவற்றில் மகேந்திரன் காலத்துக் கல்வெட்டுகள் இருக்கும்.

மாமண்டூர், மகேந்திரவாடி, சிங்கவரம், நாமக்கல் இடங்களில் குடையப்பட்டவை பெருமாள் கோவில்கள் ஆகும் சீயமங்கலம், பல்லாவரம், வல்லம், தளவானூர், திருக்கழுக்குன்றம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் குடையப்பட்டவை சிவன் கோயில்கள் ஆகும். மண்டப்பட்டில் மும்மூர்த்தி கோயிலும், சித்தன்ன வாசலில் சமணர் கோவிலும் குடையப்பட்டன. இவைகளில் சில முக்கிய கோவில்களைக் கீழே காணலாம்.

**பல்லாவரம்குகைக்கோவில்**

சென்னைக்கு அருகே உள்ள பல்லாவரம் என்ற ஊரில் ஜமீன் பல்லாவரம் என்ற பகுதியில் உள்ள குன்றில் மகேந்திரவர்மனின் குகைக் கோயில் உள்ளது. இது 24 அடி நீளம், 12 அடி அகலம் உள்ளது. ஐந்து கற்றூண்களை உடையது. ஐந்து உள் அறைகள் உள்ளன. குகைக்கோவில் முழுவதும் சுண்ணாம்பு அடிக்கப்பட்டுள்ளது. மேல் விட்டத்தில் கல்வெட்டுகள் உள்ளன. அக்கல்வெட்டுகளில் மகேந்திரனின் விருதுப் பெயர்கள் வடமொழியிலும், தெலுங்கிலும் உள்ள ன.

**வல்லம் குகைக் கோவில்கள்**

செங்கல்பட்டுக்குக் கிழக்கே இரண்டு மைல் தூரத்திலுள்ள வல்லத்தில் சிறிய குன்று உள்ளது. அதில் மூன்று குகைக் கோவில்கள் உள்ளன. இதிலுள்ள ஒரு பெரிய குகைக் கோவிலில் உள்ள தூண்களில் தமிழ் கல்வெட்டு காணப்படுகிறது. அக்கோவிலின் உள் அறையில் வட்ட வடிவிலான லிங்கம் ஒன்று உள்ளது. உள்ளறையின் இரு பக்கங்களிலும் நேரே பார்த்தபடி வாயிற் காவலர்கள் நிற்கின்றனர். இக்கோவில் வசந்தேசுவரம் என்ற பெயர் பெற்றுள்ளது.

**தளவானூர்குகைக்கோவில்**

இங்கே மகேந்திரவர்மன் குடைவித்த சத்துரு மல்லேஸ்வராலயம் என்ற பெயர் கொண்ட கோவில் உள்ளது. கோவிலின் உள்ளறையில் லிங்கம் உள்ளது. தூண்கள் மீது ஒருவகைத் தோரணம் செதுக்கப் பட்டுள்ளது. அது திருவாசி எனப்படும். அது இருபக்கங்களிலுமுள்ள மகர மீன்களின் வாய்களிலிருந்து கிளம்பி நடுவில் உள்ள ஒரு சிறிய மேடையில் கலக்கிறது. அந்த மேடையில் இசைவாணர்கள் அமைந்துள்ளனர். திருவாசியில் இரண்டு வளைவுகள் உள்ளன. எனவே அது இரட்டைத் திருவாசி எனப்படும்.

**மண்டகப்பட்டுகுகைக் கோவில்**

இந்தக் குகைக் கோவிலிலுள்ள கல்வெட்டில்தான் மரம், உலோகம், சுண்ணாம்பு இல்லாமல் பல்லவன் கோவில் அமைத்தான் என்ற குறிப்பு உள்ளது. இக்குகைக் கோவிலில் மூன்று அறைகள் உள்ளன. அவை பிரமன், திருமால், சிவன்

என்ற மூவருக்கும் உரியன. காவலர் தடிகளில் பாம்புகள் சுற்றி வளைத்து கொண்டிருப்பதாகச் செய்துள்ளவை கவனிக்கத்தக்கவை ஆகும்.

திருச்சி மலைக்கோவில், திருச்சிராப்பள்ளிக் குன்றின் நடுவே குடைந்து அமைக்கப்பட்ட சிவன் கோவில் சிறந்த வேலைப்பாடு கொண்டதாகும். வேலைப்பாடு கொண்டதாகும். இதன் மேற்புறச் சுவரில் கண்ணையும் கருத்தையும் கவரும் பல சிற்பங்கள் செதுக்கப் பட்டுள்ளன. அவைகளில் நடுநயமாக விளங்கும் கங்காதரன் மிகச் சிறப்பு அம்சங்களைக் கொண்டது. கங்கை அணிந்த சிவருமொனே நேரில் நிற்பது போன்று தோற்றம் அளிக்கிறது. இச்சிலை சிவபிரானின் சடையிலிருந்து விழும் கங்கையை வலக்கையில் தாங்கியும், பூணுலாகப் போட்டுள்ள பாம்பின் தலையை மற்றொரு கையாலும் பிடித்தும், கண்மணி மலையை இடக்கை ஒன்றில் பிடித்தும், மற்றொரு இடக்கையை இடுப்பில் வைத்தும் நிற்கின்ற காட்சி காண்பவரைப் பரவசப்படுத்துவதாகும். இதுபோன்ற சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த இக்கோவிலைக் கண்டு வியப்படையாதவர் யாரும் இல்லை. இப்படிப் பல குகைக் கோவில்களை எழுப்பியதுடன் நிற்காமல் பல நகரங்களையும் உருவாக்கினார் மகேந்திரவர்மன். மகேந்திரவாடி என்ற நகரம் மிகச் சிறப்பானது. இங்குள்ள ஏரி மகேந்திரன் அமைத்ததாகும்.

**ஓவியக்கலை**

மகேந்திரவர்மனின் ஆட்சிக் காலம் இசை, நடனம், சிற்பம், ஓவியம், நாடகம் ஆகியவற்றில் சிறப்புற்று விளங்கியது. புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள சித்தன்னவாசல் குகைக்கோயில் இவர் காலத்தைச் சேர்ந்தது. அதில் உள்ள காரைச் சுவர்க்கோலங்கள் (Farcoes) கி.பி.7-ம் கி.பி.7-ம் நூற்றாண்டின் தமிழ்நாட்டின் ஓவியக் கலையை உலகிற்கு உணர்த்துவதாக அமைந்துள்ளன. இங்குள்ள ஓவியங்களைக் கண்டு வியப்படையாதவரே இல்லை எனலாம். இந்த ஓவியங்கள் அழகின் இருப்பிடமாகவும், ஓவியக் கலையின் உறைவிடமாகவும் உள்ளது.

பல சித்தன்னவாசல் குகைக் கோவிலிலுள்ள தூண்கள் மீதும், மேற்கூரை மீதும் மகேந்திரன் அழகுமிக்க ஓவியங்களைத் தீட்டச் செய்தான். முன் மண்டபத் தூண்கள் இரண்டிலும் நாட்டியமாடும் மகளிர் உருவங்கள் அழகாக உள்ளன. அந்த அழகிகளின் தலை அழகிய வேலைப்பாடுகள் கொண்டு காணப்படுகிறது. நடுவில் பிரிக்கப்பட்ட தலை மீது முடியப் பட்டுள்ளது. அந்த முடிப்புகள் மலர் கொத்துக்களால் அணி செய்யப் பட்டுள்ளன. காதணிகள் பாதிக்கப்பட்ட வளையங்களாக உள்ளன. கையில் கடகங்களும் வளையல்களும் காணப்படுகின்றன. விரல்களில் மோதிரம் அணியப்பட்டுள்ளது. இந்த நடன அழகிகளை அடிகள்மார் என்றும் அப்சரப் பெண்மணிகள் என்றும் சிலர் கருதுகின்றனர்.

ஒரு தூணின் உட்புறத்தில் ஓர் அரசனின் தலையும் அவர் மனைவியின் தலையும் வரையப்பட்டுள்ளது. அரசனின் கழுத்தில் மணிமாலைகளும் காதுகளில் குண்டலங்களும் உள்ளன. தலையில் மணி மகுடம் உள்ளது. சில அறிஞர்கள் இந்த உருவத்தை மகேந்திரவர்மன் என்றே கருதுகின்றனர். இதுதவிர முன் மண்டபத்தில் மேற்கூரை முழுவதிலும் அழகுமிக்க ஓவியங்கள் காணப்படுகின்றன. ஒரு தாமரைக் குளம், அதில் தாமரை மலர்கள், தாமரை இலைகள் அவைகளுக்கு நடுவே மீன்கள், அன்னங்கள், யானைகள் இவற்றுடன் கையில் தாமரை மலர்களைத் தாங்கியுள்ள சமணர் இருவர் ஆகிய ஓவியங்கள் காணப்படு கின்றன, இந்த ஓவியங்களில் குளத்து இயற்கை மலர்களைப் போலவே உள்ளன. மற்றவை உயிர் உள்ளவை போலவே தெரிகின்றன. இப்படி கற்பாறைகள் மீது வரையப்பட்ட இந்த அழகிய ஓவியங்கள் பல்லவரின் ஓவியக்கலையின் புகழைப் பறைசாற்றுகின்றன

**இசை**

மகேந்திரவர்மன் ஒரு ஒரு இசை வல்லுநர். பல்லாவரம் குகைக் கோயில் கல்வெட்டில் தன்னைச் சங்கீரண சாதி என்று கூறியுள்ளார் இவர் ஐந்து தாள வகைகளான சதுரஸ்ரம், திஹரம், மிஸ்ரம், கண்டம் சங்கீரணம் ஆகியவற்றில்

சங்கீரணம் என்பதனைப் புதிதாக அமைத்தவன் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இவரது குடுமியான் மலைக் கல்வெட்டு ஒன்று சித்தம் நமசிவாய என்று தொடங்கி பலவகைப் பண்களையும் தாளவகைகளையும் விளக்குகிறது. இந்தக் கல்வெட்டு இசை மாணவர் நன்மைக்காகப் பண்களை வகுத்துத தந்த உருத்திராச்சாரியார் என்பவரின் அரசன கட்டளைப்படி வெட்டப்பட்டது என்பதே அக்கல்வெட்டின் சாரம் மகேந்திரவர்மன் இசையில் வல்லவனாக இருத்தல் வேண்டும் என்பதே ஆராய்ச்சியாளர் களின் கருத்து இலக்கியம்

மகேந்திரவர்மன் வடமொழியில் சிறந்த புலமையுடையவன். அவன் வடமொழியில் எழுதிய மத்தவிலாசப் பிரகசனம் என்ற நூலே தெற்குச் சான்று. இந்த நூலில் மகேந்திரவர்மன் காலத்தில் புத்த மதம், காபலிகம், பாசுபதம் ஆகிய மதங்கள் இருந்த நிலை விளக்கப்பட்டுள்ளது. காஞ்சியிலுள்ள புத்த பள்ளிகளைப் பற்றி விவரிக்கிறது. இந்த நூலை மதத்தில் சேர்ந்த பின்னர் மகேந்திரவர்மன் எழுதியுள்ளார். சத்ருமல்லன், அவநபாஜன், குணபரன், மத்தவிலாசன் ஆகிய விருதுப் பெயர்களைக் கொண்ட மகேந்திரவர்மனின் ஆட்சிக் காலம் பல வகையிலும் சிறப்புப் பெற்று விளங்கியது.

**முதலாம் நரசிம்மவர்மன் (கி.பி.630-668) (NARASIMHA VARMANI)**

முதலாம் மகேந்திரவர்மனுக்குப் பிறகு அவருடைய மகன் முதலாம் நரசிம்மவர்மன் பட்டத்துக்கு வந்தார். பல்லவ மன்னர்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்த அரசர் இவர். மாமல்லன், வாதாபி கொண்டான், இரணஜயன், நயனன்குரு சிறப்புப் பட்டங்களைச் சூட்டிக் கொண்டார். வெற்றிகளைப் பெற்றார். ஆகிய பல பல தன்னுடைய தந்தையைப் போலவே கட்டிடக்கலை வளர்ச்சிக்குப் பேராதரவு அளித்தார்.

**பல்லவ சாளுக்கியப்போர்**

நரசிம்மவர்மன் காலத்தில், வாதாபிச் சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிகேசி, புள்ளலூர்ப் போர்க்களத்தில் தான் பெற்ற தோல்விக்குப் பழி வாங்க மீண்டும் காஞ்சி மீது படையெடுத்து வந்தான். நரசிம்மவர்மன் பரஞ்சோதி

என்பவரின் தலைமையில் பெரும்படை ஒன்றைத் திரட்டினார். பரியலாம், சூரமாரம் ஆகிய இடங்களில் நடைபெற்ற போரில் நரசிம்மவர்மன் வெற்றியடைந்தார். இறுதியாக காஞ்சிக்கு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மணிமங்கலம் என்னுமிடத்தில் நடைபெற்ற கடும் போரில் தோல்வியுற்ற சாளுக்கியப்படை வாதாபி நோக்கி பின்வாங்கி ஓடியது. ஆனால் அப்படை யை விடாது விரட்டி சாளுக்கிய நாட்டிற்குள் நுழைந்தது பல்லவப் வாதாபி நகர் கைப்பற்றப்பட்டுத் தீக்கிரையானது. இரண்டாம் புலிகேசி போர்க் களத்திலேயே இறந்தார். இவ்வாறு தன் தன் தந்தைக்கு முதலில் தோல்வியினால் ஏற்பட்ட களங்கத்தை நீக்கினார். வாதாபி கொண்டான் என்ற விருதுப் பெயரைச் சூட்டிக் கொண்டார்.

**இலங்கைபடையெடுப்பு**

மானவர்மன் என்ற சிங்கள இளவரசனுக்கு, அரசுரிமை பெற்றுக் கொடுப்பதாக கி.பி.631-ல் நரசிம்மவர்மன் ஒரு பெரிய கப்பற் படையைத் திரட்டி இலங்கை மீது படையெடுத்தார். போரில் வெற்றி பெற்று இலங்கையின் அரசுரிமையை மானவர்மனுக்கு வழங்கினார். சிங்கள இலக்கியமான மகாவம்சத்தில் இச்செய்திகள் கிடைக்கிறது.

**பாண்டியருடன்போர்**

நரசிம்மவர்மன் காலத்தில் பாண்டிய நாட்டை அரிகேசரி பராங்குசன் என்ற பாண்டிய மன்னன் ஆண்டு வந்தான். நரசிம்மவர்மன் வாதாபிக்கு படையெடுத்துச் சென்ற நேரத்தில் அரிகேசரி பல்லவர்களின் படையை சங்கரமங்கை என்ற இடத்தில் தோற்கடித்ததாக சின்னமனூர்ப் பட்டயம் கூறுகிறது. இதனைக் கேள்விப்பட்ட நரசிம்மவர்மன் வாதாபிப் படையெடுப்பை தளபதி பரஞ்சோதியிடம் ஒப்படைத்துவிட்டு தானே நேரில் வந்து பாண்டியர் படையைத் தோற்கடித்து விரட்டினார்.

**யுவான் சுவாங்கின் வருகை**

சீன யாத்திரிகன் யுவான்சுவாங் கி.பி.642ல் காஞ்சி நகருக்கு வந்தார். இவர் குறிப்புகளிலிருந்து பல்லவ அரசைப் பற்றிய பல செய்திகள் நமக்குக் கிடைக்கிறது. காஞ்சிபுரத்தின் அமைப்பைப் பற்றி விரிவாகக் கூறியுள்ளார். காஞ்சியைச் சுற்றியுள்ள நாட்டை திராவிடம் என்று குறிப்பிட்டுள்ளார். பல்லவ நாட்டு மக்களின் குண இயல்புகளையும் அவர்களின் சமயப் பற்றையும் கூறுகிறார்.

**கலையும் கட்டிடக்கலையும்**

முதலாம் நரசிம்மவர்மன் தனது தந்தையைப் போலவே கோவில் களையும் சிற்பங்களையும் அமைத்து அழியாப் புகழ் பெற்றான். இவன் அமைத்த குகைக் கோவில்களும், மகாபலிபுரம் சிற்பங்களும் வரலாற்றில் இவனுக்கு அழியாப் புகழைத் தேடித் தந்துள்ளன. இவை பல்லவர்களின் கட்டிடக் கலை மற்றும் சிற்பக் கலையின் பெருமையை உணர்த்துகின்றன.

**குகைக் கோவில்கள்**

நரசிம்மவர்மன் தனது தந்தை மகேந்திரவர்மனைப் பின்பற்றிக் குகைக் கோவில்களை அமைத்தார். இவர் அமைத்த குகைக் கோயில்களில் பல சிறப்பு அம்சங்களைக் காணலாம். கோவில்களில் ஓவிய வேலை மிகுதியாக இருக்கும். குகைக் கோவிலின் முன் மண்டபச் சுவர்களில் அழகுமிக்க சிலைகளும், அணி அணியாக அன்னப் பறவைகளும், சிறுமணிக் கோவைகளும் பொறிக்கப்பட்டிருக்கும்.

மகேந்திரன் அமைத்த கோவில் தூண்கள் சதுரமாகவும், கனமாகவும் இருக்கும். ஆனால் நரசிம்மவர்மன் அமைத்த கோயில் தூண்களின் பொதிகைகள் உருண்டு உருண்டு காடிகள் வெட்டி . இருக்கும். பொதிகைக்குக் கீழ்த்தூணின் அடியில் சுமார் இரண்டு முழ அகலமும் இரண்டு முழ உயரமும் கொண்டு திறந்த வாயுடன் இருக்கும் சிங்கங்கள் தூண்களை தம் தலைமீது தாங்கியிருத்தல் போன்ற வேலைப்பாடு காணப்படும் மகேந்திரவர்மன் அமைத்த இவ்வகைக் கோவில்கள் உண்டு. நாமக்கல் மலையடியில் இருக்கின்ற நரசிங்கப் பெருமாள் குகைக்

கோவில், திருச்சிராப்பள்ளி மலையடியில் தென்மேற்கு மலையிலுள்ள் குகைக்கோயில், திருவெள்ளறையில் முடியாமல் பாதியிலேயே உள்ள பெரிய குகைக்கோயில், திருமைய்யத்தில் உள்ள வைணவக் குகைக்கோவில் ஆகியவை நரசிம்மன் அமைத்தனவாகும்.

**பல்லவர் கால கோயில்கள்**

பல்லவர்கள் காலத்தில் கோயில்கள் கற்களினால் கட்டப்பட்டன. பல்லவ மன்னர் முதலம் மகேந்திரவர்மன் இதற்கு காரணமாவார். பல்லவர்கள் காலத்தில் 'குகைக் கோயில்கள்' 'ஒற்றைக்கல் கோயில்கள்' மற்றும் ‘கட்டுமாணக் கோயில்கள்' என்று மூன்று வகையானக் கோயில்கள் கட்டப்பட்டன.

**குகைக்கோயில்கள்(Cave Temples)**

குகை கோயில்கள் இரண்டு வகைப்படும். ஒன்று 'மகேந்திரவர்மன் பாணி', மற்றொன்று மாமல்லன் அல்லது 'நரசிம்மவர்மன் பாணி' ஆகும்.

**மகேந்திரவர்மன்பாணி**

மகேந்திரவர்மன் பாணிகுகை கோயில்களில் ஒருமண்டபமும், சில தூண்களும், சிறிய கருவறையும் உள்ளன. கோயில் செவ்வக வடிவமாக உள்ளது. இதன் தூண்கள் குட்டையாகவும் பருமனாகவுமுள்ளன. தூண்களின் மேல் பகுதியும் அடிப்பகுதியும் ‘சதுரமாக உள்ளது. நடுப்பகுதியில் எட்டு முகங்கள் உள்ளன. தூண்களின் உச்சிப் பகுதியைச் சுருள் சுருளாகச் செதுக்கியுள்ளார்கள். இது 'தரங்க பொதிகை' என்றழைக்கப்படுகிறது.

**மண்டப கோயில்**

மண்டபத்தில் இரண்டு அல்லது மூன்று படிகள் உயரத்தில் ஒரு கர்ப்பக்கிரகம் (Sanctium - Sanctorium) உள்ளது. இந்த கர்ப்பகிருகத்தின் கீழ் 'அதிஷ்டானம்' என்ற ஒரு அடித்தளம் உள்ளது. கர்ப்பகிரகத்தின் முன்பக்க சுவரில் பாதியும் வெளியில் பாதியுமாகத் தெரியக்கூடிய நான்கு பக்க 'அரைத்தூண்கள்' உள்ளன. கர்ப்ப கிருக கதவோரத்தில் இரண்டு 'துவாரப் பாலகர்' சிற்ப உருவங்கள்

உள்ளன. இப்படிப்பட்ட கோயில்கள் மண்டகப்பட்டு, திருக்கழுக்குன்றம், திருச்சி, மாமண்டூர் போன்ற இடங்களில் உள்ளன.

**மாமல்லன்பாணி**

மகேந்திரவர்மனுடைய கோயில் முகப்புகளில் அலங்காரமில்லை. ஆனால் முதலாம் நரசிம்மவர்மன், கோயில் முகப்புகளில் ஒரு புதிய இடுக்கை கட்டினார். அது 'பிரஸ்தாரமாகும். பிரஸ்தாரப் பகுதி ஒரு வேலைப்பாடுடன் முடிந்துள்ளது. அந்தப்பகுதி 'கபோதம்' என்றழைக்கப் படுகிறது. கபோதப் பகுதி குதிரை லாடம் போன்ற கூடுகளால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. அதற்கு மேல் 'ஹாரம்' எனப்படும் சிறு கோயில் அமைப்புகள் உள்ளன.

**தூண்கள்**

பல மாமல்லன் தூண்களில் மாறுதல்களைச் செய்தார், மகேந்திரவர்மன் தூண்கள் குள்ளமாக, பருமனாகயிருந்தன. அனால் மாமல்லன் தூண்கள் நீண்டதாக மெல்லியதாக உள்ளது. தூண்களின் அடிப்பாகத்தில் கால்களை மடக்கி அமர்ந்த 'சிம்ம உருவங்கள்' உள்ளன. தூணின் மேற் பகுதி நன்றாக அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. அதில் பல புதிய பாகங்களை மன்னர் சேர்த்துள்ளார். அவைகள் 'மலஸ்தானம்', 'பத்மபந்தம்' , 'கலசம்', 'தடி', 'கும்பம்பலகா' போன்றவைகளாகும்.

**மண்டபங்கள்**

மண்டபத்தை முன்பகுதி என்றும், பின்பகுதி என்றும் இரண்டாகப் பிரித்தார். கருவறையை மண்டபத்தின் பின் பகுதியில் அமைத்தார். இவருடைய கோயில்களில், அதிஷ்டானம், அரைத் தூண்கள் உள்ளன. இந்த கோயில்கள் கோனேரி மண்டபம், வராக மண்டபம், மகி சுராமர்த்தனி போன்றவைகளாகும். இந்த கோயில்களின் அதிஷ்டானம் பல மடிப்புகளைக் கொண்டுள்ளது. இந்த கோயிலில் துவாரப் பாலகர்' சிற்பங்கள், புராணக் கதையின் சிற்பங்களும் உள்ளன.

**ஒற்றைக் கல் கோயில்கள் (Monolithic Temples)**

ஒற்றைக் கல் கோயில்கள் என்பவைகள் ஒரே கல்லில் கட்டப்பட்டவைகளாகும். இவைகள் கல்லின் மேலிருந்து கீழே குடைந்து கொண்டே போய் கட்டியுள்ளார்கள். இந்த கோயில்களின் மாதிரிகள் பல்லவர்காலத்திற்கு முன்பு மரங்களில் கட்டப்பட்டிருந்தன. அதைத்தான் கற்களில் பல்லவர்கள் வெட்டியுள்ளார்கள் என்று கோயில் கலை அறிஞர் கே. ஆர். சீனிவாசன் கூறுகிறார். இந்த கோயில்களை இராசசிம்மன் என்ற இரண்டாம் நரசிம்மன் கட்டினார்.

**கோயிலின் அமைப்பு**

இந்த கோயில்கள் மிகச் சிறியவையாக உள்ளன. இதில் ஒரு விமானமும், அர்த்த மண்டபமும் உள்ளது. விமானத்தில், அதிஷ்டானம், பாதம், பிரஸ்தாரம் கீரிவலம், சிகரம், மற்றும் ஸ்தூபி போன்ற பல பாகங்கள் உள்ளன: ஒற்றைக் கல் கோயில் வகைகள்:

இந்த ஒற்றைக்கல் கோயில் வகைகள், மகாபலிபுரத்தில் உள்ள பஞ்சபாண்டவ தேர்களில் உள்ளன. பஞ்சபாண்டவ தேர்கள், திரௌபதி, அர்ஜுனன் தேர், தர்மராஜதேர், நகுல சகா தேவ தேர்களாகும்.

**திரௌபதி தேர்**

இது பஞ்ச பாண்டவ தேர்களில் மிகச்சிறிய வகையாகும். இது ஒரு 'குடிசை' போல் உள்ளது. இதில் ஒருவிமானமும், சதுரமான அடித்தளமும் உள்ளது. விமானத்தில் அதிஷ்டானம், பாதம், பிட்டி, சிகரம், மற்றும் ஸ்தூபி போன்றவைகள் மட்டுமே உள்ளன. விமானத்தின் மற்ற பகுதி பிரஸ்தாரம்' 'கீரிவம்' இதில் இல்லை. இது 'சதுர்வற்க' வகையைச் சேர்ந்தது. இது துர்க்கை அம்மனுக்காகக் கட்டப்பட்டுள்ளது. வாசல் முகப்பில் அழகான தோரணம் உள்ளது.

**அர்ஜுனன் தேர்**

அர்ஜுனன் தேர் 'இரண்டுதளம்' வகையைச் சேர்ந்தது. இரண்டு, தளங்களிலும் சிறிய சன்னதிகளான 'ஹராம் பகுதி உள்ளது. இதன் 'சிகரம்'

எட்டுப்பட்டைகளைக் கொண்டுள்ளது. இதன் நான்கு பக்க மூலைகளில் 'நாசிகள்' என்னும் மூக்குப் பகுதித் துருத்திக் கொண்டுள்ளது.

**தர்மராஜ தேர்**

தர்மராஜ தேர் மூன்று தளம் வகையைச் சேர்ந்தது. இதன் ஆரம்ப பெயர் 'அத்யந்த காமபல்லவேச்சுர' என்பதாகும். இதன் அடித்தளம் சதுரமாகவும், கீரிவம் மற்றும் சிகரப் பகுதிகள் எட்டு கோணமாகவும் அமைந்துள்ளது. சிறிய சன்னதி 'ஹார'ப் பகுதிகள் - தளங்களிலிருந்து பிரிந்து காணப்படுகின்றன. ஆகவே அது 'அனர்பிதா' என்ற வகையைச் சேர்ந்தது என்று அறிஞர் கே.ஆர். சீனிவாசன் கூறுகிறார். இதன் மேல் தளத்தில் கருவறை உள்ளது. அதன் சுவரில் சோமஸ்கந்தர் உருவம் உள்ளது. சோமஸ் கந்தர் உருவம் என்பது சிவனும் பார்வதியும், குழந்தை வடிவ ஸ்கந்தனுடன் இருக்க பிரம்மா விஷ்ணு கடவுள்களும் கூட இருப்பார்கள்.

**பீமதேர்**

பீம இரதத்தின் கூரைப் பகுதி விமானம் 'சாலா' வகையைச் சேர்ந்ததாகும். இது கவிழ்த்தி வைக்கப்பட்ட 'படகைப் 'போல் உள்ளது. இங்குள்ள தூண்கள் சிம்ம உருவங்களை கொண்டுள்ளது.

**நகுல-சகாதேவ தேர்கள்**

நகுல-சகாதேவ தேர்கள் ஒரு நிற்கும் யானையைப் போலுள்ளது. இதனுடைய கூரை விமானப் பகுதி ஆங்கில எழுத்து 'U' வடிவம் போல் அமைந்துளது. இது ஒரு 'வேசர வகையைச் சேர்ந்த கோயிலாகும். இது திறந்த வெளியையும், முக மண்டபத்தையும் கொண்டுள்ளது. மண்டபத்தின் முன்னாலுள்ள இரண்டு தூண்களின் அடிப்பகுதியில் சிம்ம உருவங்கள் உள்ளன.

**கட்டுமான கோயில்கள் (Structural Temples)**

கட்டுமாண கோயில் என்பது பல கற்களை அடுக்கிக் கட்டப் பட்டதாகும். இது இரண்டாம் நரசிம்ம வர்மனால் துவக்கப்பட்டதாகும். இந்த வகையில் உள்ள கோயில்கள் 1. மாமல்லபுரம் கடற்கரை கோயில் 2. காஞ்சி கைலாச நாதர் கோயில்

3. காஞ்சி வைகுந்த பெருமாள் கோயில் போன்றவைகள் முக்கியமானவைகளாகும்.

**கடற்கரை கோயில் மகாபலிபுரம்**

இது இரண்டாம் நரசிம்மவர்மனால் கட்டப்பட்டது. இதில் மூன்று விமானங்கள் உள்ளன. இது மண்டபம், பிரகாரம், கோபுரம் போன்றவைகளைக் கொண்டுள்ளது. இவைகள் எல்லாமே சுவருக்குள் உள்ளன. இதன் சிறிய விமானத்தின் இரண்டாம் தளத்திலும், அர்த்த மண்டபத்தின் மேலும் 'ஹாரா' சன்னதிகள் உள்ளன. சுவரிலுள்ள அரைத்தூண்களை 'உறுமும் சிம்ம சிற்பங்கள்' தாங்கியுள்ளது. இதன் மேல் தளத்தில் ‘பூத கண வரிசைகள் உள்ளன. இங்குள்ள விமானத்தில் மூன்று அடுக்குகள் உள்ளன. இதன் கழுத்து பகுதி கீரிவமும், சிகரமும் மற்றும் ஸ்தூபியும் எண் கோணமாக' உள்ளது. மேல் தளத்தின் நான்கு பக்க மூலைகளிலும் உட்கார்ந்த நிலையில் சங்கு ஊதும் பூத சிற்பங்கள் ஒரு பிரகாரம் உள்ளன.

இதன் கர்ப்ப கிருகத்தின் நடுவில் பதினாறு பக்கம் கொண்ட 'லிங்கம்' ஒன்றுள்ளது. அத்துடன் சோமஸ்கந்த சிற்ப உருவங்களும் இதன் சுவரில் வெட்டப்பட்டுள்ளன.

**காஞ்சிபுர கைலாச நாதர் கோயில்**

இந்த கோயிலை இரண்டாம் நரசிம்மவர்மன் மற்றும் அவருடைய மகன் மூன்றாம் மகேந்திரன் கட்டினார்கள். இதன் விமானம் கிழக்கு நோக்கி நான்கு அடுக்குகளுடன் உள்ளது. கழுத்துப் பாகம் வரைச் சதுரமாகவும் அதற்கு மேல் உள்ள பகுதி சிகரம் எட்டு கோணத்திலும் அமைந்துள்ளது. இதன் கர்ப்பகிருகத்தில் பதினாறு முகம் லிங்கம் அமைந்துள்ள கர்ப்பகிரகச் சுவரில் சோமஸ்கந்த சிற்ப உருவங்கள் உள்ன. இதன் இரண்டாம் தளத்திலுள்ள 'ஹாரா' என்ற சிறிய சன்னதிகளில் முக்கிய பாகங்கள் 'கூடம்', 'சாலா' மற்றும் 'பஞ்சரம்' போன்றவைகள் உள்ளன. மண்டபம் தனியாக பல தூண்களுடன் உள்ளது. இந்த அரைத் தூணின் அடிப்பாகத்தில் 'சிம்மவரிகள்' உள்ளன.

**வைகுந்த பெருமாள் கோயில்**

இந்த கோயிலை இரண்டாம் நந்திவர்மன் 'கட்டியுள்ளார். இது விஷ்ணு கோயிலாகும். இதன் விமானம் சதுரமாயும், நான்கு அடுக்குகளையும் கொண்டுள்ளது. நான்காம் அடுக்கு தவிர மூன்று அடுக்கிலும் கர்ப்ப கிரகம் உள்ளது. இதில் திருமாலின் மூன்று வடிவம் ஸ்தானிக (நிற்றல்) ஆசன (அமர்ந்திருத்தல்) சயன (சாயந்திருத்தல்) உருவங்கள் உள்ளன.

கர்ப்பகிரகத்தைச் சுற்றி இரண்டு 'சுற்றுப் பாதைகள்' உள்ளன. மூன்று தளத்திலும் கூடம், சாலா, மற்றும் பஞ்சார அமைப்புகள் உள்ளன. நான்காவது தளம் மட்டும் சதுரமாக உள்ளது. இதில் எட்டு கோண கீரிவமும், சிகரமும், உலோகத்தால் ஆன ஸ்தூபியும் உள்ளது. இதன் நான்கு பக்க மூலைகளில் சிம்ம உருவங்கள் இருந்தன. ஆனால் தற்சமயம் அவைகள் 'கருட' உருவங்களாக மாற்றப்பட்டுள்ளன. .

இதன் விமானத்திலும், அர்த்த மண்டபத்திலும் பல கடவுள் உருவங்கள் உள்ளன. அவைகளை யெல்லாம் விட முக்கிய மானது இரண்டாம் நந்திவர்மன் பதவிக்கு வரும் வரையிலிருந்த பல்லவர்கால வரலாறு இங்கு சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளது.

**இரண்டாம் நந்திவர்மன் காலத்துக்குப் பிற்பட்ட கோயில்கள்**

தந்திவர்மன் கட்டிய கோயில்கள் உத்தரமேரூரில் உள்ளன. அவைகள் வைகுந்த பெருமாள் கோயிலும், சுந்தர வரதபெருமாள் கோயிலுமாகும். இந்த கோயில்களில் சுடுமண் பொம்மை உருவங்கள் வைப்பதற்காக பல சிறிய சன்னதிகள் உள்ளன. திருத்தணியில் உள்ள வீராட்டானேஸ்வர கோயில் ஒரு அடுக்கை கொண்ட விமானமாகும். இதை அபராஜிதவர்மன்' கட்டியுள்ளார்.

**பல்லவர்கள் சிற்பக்கலை**

பல்லவர்களின் சிற்பக் கலை உலகப் பிரசித்தமானதாகும். இவர்களின் சிற்பங்கள், அமராவதி' 'எல்லோரோ' சிற்பங்களை விட நுணுக்கம் கொண்டவைகள்

என்று சிற்பக் கலை அறிஞர்கள் எ.ஏல். பாஷம், மற்றும் ஏ., கே. கூமாராசாமி போன்றவர்கள் வியந்து கூறுகின்றார்கள்.

**தமிழ்நாட்டு சிற்பகலை வளர்ச்சி**

பல்லவர் சிற்பங்கள் ஏற்கனவே மரத்தினாலும், சுண்ணாம் பினாலும் செய்யப்பட்டவைகளிலிருந்து தோன்றியதாகும். மரப் பொம்மைகள் பாவை' என்றழைக்கப்பட்டன. சுண்ணாம்பு பொம்மைகள் ‘சுடுமண் பொம்மை என்று அழைக்கப்பட்டன.

**சுண்ணாம்பு சிற்பங்கள்**

முதலாம் மகேந்திரவர்ம மன்னர் கோயில்களைக் கற்களில் கட்டும் பழக்கத்தை ஆரம்பித்து வைத்தார். ஆகவே சிற்பங்களைச் சுண்ணாம்பால் செய்து, பிறகு கோயில் சுவர்களில் அதைப் பொருத்தி வைத்தார்.

**இரண்டாம் நரசிம்மவர்மனும் - சிற்பக்கலை மாற்றமும்**

இரண்டாம் நரசிம்மவர்மன் காலத்தில் சிற்பங்களைச் சுடுமண் பொம்மைகளாகச் செய்து கோயில்களில் ஒட்டி வைக்கவில்லை. அதற்குப்பதில் நேரடியாகவே கோயில் சுவர்களில், சிற்பங்களைச் செதுக்கும் பழக்கம் வந்தது. அப்படிப்பட்ட சிற்பங்கள் 'புடைப்பு சிற்பங்கள் (Bas Relief) ' தனி சிற்பங்கள் (Sculptures ) என்று அழைக்கப்ட்டன. அவைகளில் முக்கியமான சிற்பங்களை மட்டும் நாம் பார்ப்போம்.

**கங்காதர மூர்த்தி சிற்பம்**

இது திருச்சிக் குடைவரை கோயிலில் உள்ளது. முதலாம் மகேந்திர வர்மன் காலத்தில் செதுக்கப்பட்ட இது ஒருபுடைப்பு சிற்பமாகும். இந்த சிற்பம் இறைவன் சிவன் ஆகாயத்திலிருந்து வரும் கங்கையை தனது ஒரே ஒரு சடைமுடியில் தாங்குவது போலிருக்கிறது. இதில் சிற்பி தனது முழு வேலைப்பாட்டையும் காட்டிச் செதுக்கியுள்ளார்.

**சிற்பக்காட்சி**

சிவபெருமானின் வலது கால் ஒரு சிறிய பூதத்தை மிதித்துக் கொண்டுள்ளது. அப்போது அவரின் இடதுகை இடுப்பில் உள்ளது. சிவனுக்கு வலதுகைகள் பல உள்ளன. ஒரு வலது கை சீறிவரும் பாம்பை பிடித்துக் கொண்டுள்ளது. இன்னொரு வலதுகை சிவன் தன்னுடைய தலை சடாமுடியில் ஒரே ஒரு முடியை மட்டும் பிரிப்பது போல உள்ளது. அந்த ஒரு சடா முடியில் 'கங்காதேவி' ஒரு பெண் உருவத்தில் மேலிருந்து வந்து உட்காருவதைப் போலுள்ளது. சிவபெருமானின் காலடியில் இரண்டு மனிதர்கள் மண்டியிட்டு உட்கார்ந்துள்ளனர். இரண்டு தேவர்கள் . சிவபெருமானுக்கு இரண்டு பக்கமும் ஆகாயத்தில் பறந்து கொண்டுள்ளனர்.

**சிற்ப அமைப்பு**

இந்த சிற்பங்களில் சிற்பி தத்ரூபமாக உணர்ச்சிகளைக் கொண்டு வந்துள்ளார். சிவபெருமானின் முகம் பொங்கி வரும் கங்கையைத் தாங்க எனது ஒரு சடா முடி போதும் என்று அலட்டிக்காமல் சொல்வது போல் உள்ளது. கங்கா மாதா முகத்தில் சிவனின் ஒரு சடா முடியைக் கூடத்தாண்டிப் போக முடியவில்லையே என்று கர்வம் இழந்து, கவலைப்படுவது தெரிகிறது. மற்றவர்கள் முகத்தில் சிவனை உருக்கமாகக் கும்பிடும் உணர்ச்சி தெரிகிறது.

**அர்ச்சுன் தபசு என்னும் கிராதார் ஜீனிய சிற்பம்**

இது மகாபலிபுரத்தில் திறந்த வெளிப்பாறையில் உள்ளது. இரண்டாம் நரசிம்மவர்மன் என்ற இராசசிம்மன் காலத்தில் இது செதுக்கப்பட்டதாகும். உலகில் தோற்றுவிக்கப்பட்ட சிற்பங்களில் ஒப்பற்ற சிற்பம் இதுவே என்று *Wonder That was India* புத்தக ஆசிரியர் ஏ.எல்.பாஷம் கூறுகிறார்.

**சிற்ப காட்சி**

இங்கே பெரிய பாறையைச் சிற்பிகள் செதுக்கியுள்ளனர். முதலில் அதை ஒரு சிறிய இடைவெளியுடன் இரண்டாகக் கீறியுள்ளார்கள். அந்த இடைவெளி

ஆகாயத்திலிருந்து கங்கை நீர் வருவது போல் உள்ளது. இதன் வடக்கு பக்கமும், தெற்கு பக்கமும் சிற்பக் காட்சிகளை அமைத்துள்ளனர்.

**பாறையின் வடக்கு பக்க சிற்பங்கள்**

இதில் உலகத்து உயிர்கள் நடப்பன, ஊர்வன, பறப்பன மற்றும் விலங்கு வகை உருவங்கள் உள்ளன. இதில் கந்தர்வர்கள், கின்னரர்கள், சித்தர்கள், சாரணர்களின் உருவங்கள் உள்ளன. கந்தர்வர்கள் என்று சொல்ல ஆணும் பெண்ணும் ஜோடியாகப் பறந்து வருவது போலச் சிற்பங்கள் உள்ளது. கின்னரர்கள் என்று அடையாளம் காட்ட, பாதி மனித உருவமும் பாதி பறவை உருவமும், செதுக்கப்பட்டுள்ளது. "சித்தர்' என்று சொல்ல தாடி வைத்த முகம் உள்ளது. 'சாரணர்' என்று அடையாளம் காட்ட தாடியில்லாமல் சிற்பங்கள் உள்ளன. இவர்கள் ஒவ்வொருவர்க்கும் ஒரு முக பாவத்தையும் முடி அலங்காரத்தையும் வைத்துள்ளனர்.

**பாறை, தெற்கு பக்க சிற்பங்கள்**

இதில் ஒருகாடு சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இங்கு வேடர்கள் உருவங்கள் உள்ளன. இவர்கள் மீசை, தாடி வைத்துள்ளனர். காட்டு மிருகங்கள், முயல், கலைமான், பன்றி , புலி,ஆமை,புலிக்குட்டி ஆகிய உருவங்கள் உள்ளன.

**அர்ச்சுனன் தபசு**

இது இடது பக்க சிற்பங்களில் முக்கிய மானதாகும். அர்ச்சுனன் இங்கு எலும்பும் தோலுமாய் உள்ளார். அவர் இரண்டு கைகளையும் உயரத் தூக்கி ஒரு காலில் நின்று தவம் செய்கின்றார். பக்கத்தில் சிவன் உள்ளார். அவருக்கு நான்கு கைகள் உள்ளன. வலதுகை நீண்ட சூலத்தைக் கொண்டுள்ளது. அர்ச்சுனன் தவம் செய்யும் நேரம் கடுமையான நடுப்பகல் என்று குறிக்க உச்சி சூரியன் உருவம் உள்ளது.

**அறிஞர்கள் கருத்து**

இந்தபாறைச் சிற்பத்தைப் பற்றி அறிஞர்களிடம் பல கருத்துக்கள் உள்ளன. திரு மா. இராசமாணிக்கனார், இது கங்கை கரைக் காட்சியைக் குறிப்பிடுகிறது

என்றார். மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் சமணர்களின் 'சகரசாகர்' சிற்பமென்று கூறுகிறார். ஆர். நாகசாமி இதை அர்ச்சுனன் தவம் என்று கூறுகிறார்.

**மகிசாசூரமர்த்தினிசிற்பம்**

இது மகாபலிபுரத்தில் மகிசாசூரமர்த்தினி குகை கோயிலில் உள்ளது. இது இரண்டாம் நரசிம்மன் காலமாகும். இது 'பாய்கலைப் பாவை' என்றும் சொல்லப்படுகிறது

**சிற்பகாட்சி**

இதில் அன்னை உறுதியான டது கையால் வில்லைப் பிடித்துள்ளார். அன்னையின் வலது கை, தோளுக்குப் பின்னால் அம்பை எடுக்க வளைந்துள்ளது. மற்றொரு கை ஒரு நீண்ட ஆயுதத்தை வைத்துள்ளது. இந்த் தோற்றத்தைப் பார்த்து மகிசாசுர அரசனும் மற்றவர்களும் 'தலைதப்பினால்' போதும் என்று ஓடிக்கொண்டுள்ளனர். இந்த சிற்பத்தைப் பார்த்தவர்கள் எவரும் அன்னையின் கோபத்தைக் கண்டு பயப்படாமல் இருக்கமுடியாது.

**வைகுந்த பெருமாள் கோவில் சிற்பங்கள்**

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. இது இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் செதுக்கப்பட்டது. இது சரித்திர நிகழ்ச்சியைச் சிற்பமாகச் செதுக்கப்ட்டதாகும். மன்னர் இரண்டாம் பரமேஸ்வரருக்குப் பின்னர் காஞ்சிபுரமக்கள் இரண்ய வர்மனைச் சந்திக்கின்றனர். இரண்டாம் நந்திவர்மன் மன்னனாக ஆகும் வரை நடந்த நிகழ்ச்சிகள் சிற்பமாக உள்ளன.

.

## அலகு - 3

## 1. பிற்காலச் சோழர்கள் (LATER CHOLAS)

தமிழக வரலாற்றில் கி.பி.850 முதல் 1279-ம் ஆண்டு வரை மேன்மை பெற்று விளங்கியது சோழப் பேரரசு ஆகும். சங்க காலத்தில் சோழ நாட்டை மேன்மையுடன் ஆட்சி செய்த கரிகாலனுடைய சந்ததியில் வந்த இந்த சோழ குலத்தவர்கள் களப்பிரர் படையெடுப்பிற்குப் பிறகும் பல்லவர் ஆட்சிக் காலத்திலும் தங்கள் சிறப்பை இழந்து குறுநில மன்னர்களாக சோழ நாட்டில் இருந்து வந்தனர். பல்லவர்களுடைய ஆட்சி முடிந்து அவர்கள் பெருமை மங்கிய பிறகு இந்தச் சோழர் குலத்தவர் மீண்டும் தலையெடுத்தனர், இவர்கள் பிற்காலச் சோழர் எனப்படுகின்றனர். இவர்களை தஞ்சாவூர் சோழர்கள், கங்கை கொண்ட சோழர்கள், சாளுக்கிய சோழர்கள் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

இந்த சோழப் பேரரசு நிலை பெற்றிருந்த காலத்தில் சைவம், வைணவம் ஆகிய இரு உயர் சமயங்களும் நாடு முழுவதும் பரவின. சமய வளர்ச்சியுடன் மத்திய, மாகாண, கிராம ஆட்சி முறைகளும் மேன்மையடைந்தன. வாணிபமும் கலையும் வளர்ச்சியடைந்தன. வங்கக் கடலுக்கு கிழக்கே உள்ள தீவுகளிலும், தீபகற்பங்களிலும் தமிழர்களின் அதிகாரம் பரவியது.

### வரலாற்று ஆதாரங்கள்

பிற்காலச் சோழர்களின் வரலாற்றை எழுதப் போதுமான ஆதாரங்ககள் கிடைத்துள்ளன. கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள், இலக்கியங்கள் ஆகியவை மூலம் பிற்காலச் சோழரின் வரலாற்றை அறிந்து கொள்ளலாம்.

### கல்வெட்டுகள்

சோழர் கால கல்வெட்டுகளும் சாசனங்களும் இதுவரை ஆயிரக் கணக்கில் கிடைத்துள்ளன. இவை சோழ வரலாற்றை அறிய உதவும் வரலாற்றுக் குறிப்புகளாக அமைந்துள்ளன. இவை பெரும்பாலும் தமிழ் மொழியிலும், சில வடமொழியிலும் எழுதப்பட்டுள்ளன. சோழ மன்னர்களின் குடிவழிப் பட்டியல்,

அவர்கள் ஆட்சி புரிந்த ஆண்டுகள் முதலியவற்றை வரையறை செய்வதற்கு இந்தக் கல்வெட்டுகள் உதவுகின்றன. சோழர் கால சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலை பற்றி அறிந்து கொள்வதற்கும் இவை மிகவும் உதவியாக உள்ளன. பலவகை வரிகள், அரசாங்க உத்தரவுகள், ஊர்ச்சபை அமைப்பு முறை, பலதரப்பட்ட சமூகத்தினரிடையே ஏற்பட்ட உடன்படிக்கைகள், தீர்ப்புகள் போன்றவை பற்றிய செய்திகள் கல்வெட்டுகள் மூலம் கிடைத்துள்ளன.

தஞ்சை பெருவுடையார் கோவிலில் உள்ள ராஜராஜ சோழனின் 61 கல்வெட்டுகள் சோழர் காலத்தில் சைவ சமயம் இருந்த நிலை பற்றி விளக்குகிறது. முதலாம் பராந்தக சோழரின் உத்திரமேரூர் கல்வெட்டு பிரமதேய ஊராட்சி முறை பற்றி விளக்குகின்றன. உக்கல், திருச்சேய்ஒலூர் கல்வெட்டுகளும் ஊராட்சி முறையின் வளர்ச்சி பற்றி விளக்குகின்றன. பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டின் மூலம், ரண்டாம் ராஜராஜன் நோய்வாய்ப்பட்ட போது அமைச்சர்களால் ! இரண்டாம் ராஜாதி ராஜன் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி நமக்குக் கிடைக்கிறது. முதலாம் ராஜராஜன் காலத்தின் ஆரம்பத்திலிருந்து கல்வெட்டுகளின் ஆரம்பத்தில் மெய்கீர்த்தி என்ற பகுதி சேர்க்கப்பட்டது. அரசர்களின் புகழைக் கூறும் இந்த மெய்க்கீர்த்திகள் மூலம் காலத்தைக் கணக்கிட முடிகிறது.

சோழர்களின் வரலாற்றை அறிய சேர, பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகளும் துணை செய்கின்றன. இராஷ்டிரக்கூட மன்னர் மூன்றாம் கிருஷ்ணரின் சாசனங்கள், சாளுக்கியர் மற்றும் ஹொய்சாள மன்னரின் சாசனங்களும் சோழப் பேரரசு பற்றிய செய்திகளைத் தருகின்றன.

**செப்பேடுகள்**

பொதுவாக செப்பேடுகள் மன்னர்களாலேயே வெளியிடப் பட்டன. இரண்டாம் பராந்தகன் வெளியிட்ட அன்பில் செப்பேடுகள் அன்பில் ஊரைச் சேர்ந்த அநிருத்தணன் என்ற அந்தணர் குல அதிகாரிக்கு ஒரு கிராமத்தையே முற்றூட்டாக வழங்கியதைப் பற்றிக் குறிப்பிடுகிறது. திருவாலங்காட்டுச் செப்பேடுகள்

ராஜராஜசோழனின் மகனான முதலாம் ராஜேந்திர சோழன் மேற்கொண்ட கங்கைப் படையெழுச்சி பற்றிக் கூறுகின்றன. பிற்காலத்தில் தமிழகம் வந்த டச்சுக்காரர்கள் ராஜராஜன் கால செப்பேடுகளை எடுத்துச் சென்று ஹாலந்திலுள்ள லெய்டன் நகர அருங்காட்சியகத்தில் வைத்துள்ளார்கள். இதனை லெய்டன் செப்பேடுகள் என்று குறிப்பிடுகிறோம். ராஜராஜசோழன் நாகப்பட்டினத்திலுள்ள புத்த கோயிலுக்கு ஆனைமங்கலம் என்ற ஊரை முற்றூட்டாக வழங்கிய சமயப் பொறை பற்றிய செய்தி லெய்டன் செப்பேடுகளில் தான் காணப்படுகிறது. இவ்வாறு செப்பேடுகளும் சோழர் வரலாற்றைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன.

இவை தவிர 'சோழர்கள் கட்டிய கோவில்களும், மண்டபங்களும் சோழ வரலாற்றுக் கருவூலங்களாக உள்ளன. இவை சோழப் பேரரசர்களின் கலை உணர்வையும், கற்பனைத் திறனையும் வெளிப்படுத்துகின்றன.

**நாணயங்கள்**

சோழ மன்னர்கள் வெளியிட்ட பொன், வெள்ளி, செம்பு நாணயங்களும், சோழர் வரலாற்றை அறிய உதவுகின்றன. சோழர் காலத்தில் நிலவிய வாணிப வளர்ச்சியின் காரணமாகவும், செல்வச் செழிப்புடன் விளங்கிய மக்கள் அதிகமாக வாழ்ந்த காரணத்தினாலும் உள்நாட்டு வாணிபத்தில் நாணயங்களின் சேவை இன்றியமையாததாகக் காணப்பட்டது. ராஜராஜன்மாடை, மதுராந்தகத் தேவர் மாடை, குலோத்துங்கன் நாணயங்கள் போன்றவை வழக்கிலிருந்தன. ஆனால் அவை இப்போது கிடைக்கவில்லை. ஈழக்காசு, கருங்காசு, பொறகாசு, செப்புக்காசு ஆகியவை நமக்குக் கிடைத்துள்ளன. உத்தம சோழனுடைய நாணயம் தான் சோழர் காலத்தைச் சேர்ந்த முதலாவது நாணயமாக நமக்குக் கிடைத்துள்ளது.

ராஜராஜன் காலத்திய நாணயத்தில் அரசன் உடையோடு காணப்படும் ஓர் ஆண் உருவம் இடது கையில் திரிசூலத்தையும், வலது கையில் தாமரையையும் கொண்டு நிற்கிறது. இதில் திரிசூலம் போர்த் திறனையும், தாமரை செல்வச் சிறப்பையும் காட்டுகிறது என்று கருதலாம். இந்த நாணயத்தின் பின்புறத்தில் ராஜராஜன் கம்பீரமாக நிற்கிறான். குழல் ஊதும் கண்ணன் உருவம் சோழரின்

நாணயங்களில் காணப்படுவதிலிருந்து சைவ சமயத்தைச் சார்ந்த சோழ மன்னர்களின் ஆட்சியில் நிலவிய சமயப் பொறையை நம் அறிந்து கொள்ளலாம். சோழ நாணயங்களில் பெருமளவில் தேவநாகரி எழுத்து உள்ளது. அவைகளில் மன்னர்களின் இயற்பெயரோ, ஆட்சி ஆண்டுகளோ குறிக்கப்படவில்லை. இதனால் தான் நாம் வரலாற்றுச் செய்திகளைக் கோர்வைப்படுத்த முடியவில்லை. குலோத்துங்கன் நாணயத்தில் திமிலோடு கூடிய நந்தியும் அதற்கு மேலே அர்த்தசந்திரன் ஒரு பக்கத்திலும், மறுபக்கத்தில் அரசன் தனது ராஜ உடையோடும் காணப்படுகிறார்கள். 1946-ல் கிழக்கு கோதாவரிப் பகுதியின் தவனேஸ்வரத்தில் 78 சோழ நாணயங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. இந்த நாணயங்கள் மூலம் நாம் சோழ வரலாற்றைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

**இலக்கியங்கள்**

இலக்கியங்களும் சோழ வரலாற்றை அறிய உதவுகிறது. ஒட்டக்கூத்தர் எழுதிய தக்கயாகப்பரணி, கம்பனின் கம்பராமாயணம் ஆகிய இலக்கியங்களில் சோழ மன்னர்கள், மக்கள் பற்றிய சில குறிப்புகள் உள்ளன. ஜெயம்கொண்டாரின் கலிங்கத்துப்பரணியில் சோழர் குல வரலாற்றை உருவாக்கிய கரிகாலன் போன்ற மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே வருகின்றன. ஒட்டக்கூத்தர் எழுதிய விக்கிரமச் சோழனுலா, குலோத்துங்க சோழனுலா, ராஜராஜ சோழனுலா ஆகிய மூன்று நூல்கள் மூலம் சோழர் காலத்தில் நிலவிய செல்வச் செழிப்பு, மன்னர்களின் மாண்பு, மக்களின் வாழ்க்கை, புலவர்களின் வாழ்வு, நெறியின் மேம்பாடு போன்றவைகளை அறிய முடிகிறது.

மேலும் விக்கிரமசிங்க சோழ சரித்திரம், திவ்விய சூரி சரித்திரம், தமிழ் நாவலர் சரிதை, கொங்கு தேசராஜாக்கள், சூரிய சித்தாந்தம், புத்த மித்திரரின் வீர சோழியம், ஒட்டக்கூத்தர் எழுதிய தண்டியலங்காரம், நாதமுனி எழுதிய நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், அமிதசாகரர் எழுதிய யாப்பெருங்கலக்காரிகை, ஒட்டக் கூத்தரின் குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் போன்ற இலக்கியங்கள் மூலம் சோழர் காலத்தைப் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது. ஹொய்சாள

அரசர் ஒருவர் எழுதிய கத்யகர்ன. மிருதம் என்ற நூல் ஹொய்சாளர்களும் பாண்டியர்களும் சோழ நாட்டின் மீது படையெடுத்த நிகழ்ச்சி பற்றித் தெரிவிக்கிறது.

**மெய்க்கீர்த்திகள்**

சோழர் காலத்தைப் பற்றிய முக்கியமான செய்திகளை சோழ மன்னர்களின் மெய்க்கீர்த்திகளிலிருந்து அறிந்து கொள்கிறோம். மெய்க்கீர்த்தி எழுதும் வழக்கத்தை ஆரம்பித்து வைத்தவர் ராஜராஜ சோழன் ஆவார். சோழ மன்னர்களின் இந்த மெய் (உடல்) கீர்த்தி (புகழ் அவர்களது உலகியல் சாதனைகளின் புகழுரையாகும். தங்கள் காலத்திலேயே நிகழ்ச்சிகளை மெய்க்கீர்த்தியில் குறித்து வைக்க அனுமதி வழங்கியது சோழர்களின் வரலாற்று உணர்வைத் தெரிவிக்கிறது. சோழர் வரலாற்றைக் கோர்வையாக்கிப் பார்க்கப் பெரிதும் உதவுகிறது. சங்க கால பதிற்றுப்பத்தில் உள்ள பதிகங்களைப் பின்பற்றியே இந்த மெய்க்கீர்த்திகள் இயற்றப்பட்டன.

ராஜராஜ சோழனுடைய மெய்க்கீர்த்தி 'திருமகள் போல பெருநிறை செல்வி' என்று ஆரம்பிக்கிறது. குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தி ‘புகழ் மாது விளங்க செயல் மாது விரும்ப' என்று தொடங்குகிறது. வீர ராஜேந்திர சோழனின் காலத்தில் பரவிஜயப் பேரரசுக்கு சோழர் படை சென்றதை அவனது மெய்க்கீர்த்தி மூலம் அறிந்து கொள்ளலாம். மேலும் சோழ மன்னர்கள் ராஜ கேசரி, பரகேசரி போன்ற பட்டங்களைப் புனைந்து கொண்டதையும் மெய்க்கீர்த்தி மூலமே நாம் அறிய முடிகிறது. ஒவ்வொரு சோழ மன்னர்களின் ஆட்சிக் காலச் சிறப்பிற்குரிய தனித்தன்மையை இந்த மெய்க்கீர்த்திகள் எடுத்துக் கூறுகின்றன.

**வெளிநாட்டுக்குறிப்புகள்**

வெளிநாட்டுக் குறிப்புகள் மூலமும் சோழர்களைப் பற்றி அறிய முடிகிறது. ஈழ நாட்டின் புத்த சமய குருக்களால் தொகுக்கப்பட்ட மகாவம்சம் என்ற நூல் கரிகால சோழனின் ஈழப் படையெடுப்பைப் பற்றிக் கூறுகிறது. மேலும் விஜயாலய சோழனின் ஆதிக்கப் போர்களினால் நாட்டுரிமையை இழந்து நின்ற ஈழ மன்னர்களின் துன்பங்கள் இந்த நூலில் விவரிக்கப்பட்டுள்ளது. பல்லவர் காலத்தில்

காஞ்சிபுரத்திற்கு வந்த யுவான்சுவாங் தெற்கே சோழர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்ததைக் குறிப்பிடுகிறார். சௌ-.ஹீவா என்ற சீன யாத்ரீகர் சோழ மன்னர் அரண்மனையில் மூவாயிரம் பெண்கள் பணியாளர்களாக இருந்தனர் என்று குறிப்பிடுகிறார்.

அபுசாயித் (Abu-zaid) என்ற முஸ்லீம் வரலாற்றாசிரியர் சோழ நாட்டில் காணப்பட்ட கப்பல் திறன் பற்றி வர்ணித்துள்ளார். ஸ்பெயின் நாட்டிலுள்ள டுடேலா என்ற இடத்தைச் சார்ந்த பெஞ்சமின் என்பவர் சோழ நாட்டினரின் கடல் வாணிபம் பற்றி சிறப்பித்துக் கூறுகிறார். சுமத்திரா தீவில் பாசறை அமைத்து சோழ நாட்டு வாணிபர்கள் வாணிபம் செய்ததை கி.பி.1010-ம் வருடத்தைச் சேர்ந்த லோபோடுவோ என்ற இடத்திலுள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது. மேலும் 1312-ல் தமிழ் நாட்டுக்கு வந்த மார்க்கோபோலோ என்ற வெனிஸ் நகர அரசின் வர்த்தகன் பாண்டிய நாடு, சோழ நாடுகளில் நிலவிய கடல் வாணிபம் பற்றிக் குறிப்பிடுகிறார். இவ்வாறு வெளிநாட்டுக் குறிப்புகள் மூலம் அழைக்கப்பட்டது. திருவெறும்பியூரில் உள்ள கோவிலும் இவர் காலத்தில் கட்டப்பட்ட தாகும்.

இம்மன்னரது பெயரில் இராஜகேசரி சதுர்வேதி மங்கலம் என்ற ஊர் இருந்தது. அது இன்று ராஜகிரி என்று அழைக்கப்படுகிறது. ஆதித்த சோழருக்கு இளங்கோப்பிச்சி, திருபுவனமாதேவி என்ற இரு மனைவியர் இருந்தனர். இவரது மகனான பராந்தக சோழரின் தாய் இவர்களில் யார் என்பது தெரியவில்லை. காளத்திக்கு அருகில் உள்ள தொண்டைமான் ஆற்றூரில் ஆதித்த சோழர் கி.பி.907-ல் இறந்தார். இவர் மரணத்தின் போது சோழப் பேரரசு, சோழ மண்டலத்தையும், தொண்டை மண்டலத்தையும் கொங்கு நாட்டையும் உள்ளடக்கிய பேரரசாகத் திருக்காளத்தி வரை பரவியிருந்தது.

**முதலாம் பராந்தகன் (கி.பி.907-953)**

முதலாம் ஆதித்த சோழன் இறந்தவுடன் அவர் மகனான முதலாம் பராந்தக சோழன் தஞ்சை மாநகரில் சோழ ராஜ்யத்திற்கு மன்னராக முடிசூட்டிக் கொண்டார்.

இவர் பரகேசரி என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். சோழ ராஜ்யத்தைப் பரப்பவும், வலிமைப்படுத்தவும் முயற்சிகளை மேற்கொண்டார்.

**1) பாண்டிய நாட்டின் மீது படையெடுப்பு**

கி.பி 910-ம் ஆண்டு முதலாம் பராந்தகன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தார். அப்போது ஆண்ட பாண்டிய மன்னரின் பெயர் மூன்றாம் ராஜசிம்ம பாண்டியன் என்பதாகும். இவர் தனக்கு ஆதரவாக இலங்கை அரசன் ஐந்தாம் காசிபன் என்பவரை வரவழைத்தார். ஆனால் பாண்டிய நாட்டுப் படைகளையும், ஈழப்படையையும் வென்னூர் என்ற இடத்தில் முதலாம் பராந்தகன் தோற்கடித்தார். மதுரை மாநகரைக் கைப்பற்றினார். இதனால் மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மன் என்று புகழப்பட்டார்.

**2) இலங்கை படையெடுப்பு**

தோற்கடிக்கப்பட்ட ராஜசிம்ம பாண்டியன் சிங்களத்திற்கு ஓடி விட்டான். அப்போது அங்கு அரசனாக இருந்த நான்காம் தப்புலன் என்பவரிடம் தனக்குக் கிடைத்த சுந்தரமுடியையும் பிற அரசு சின்னங்களையும் அடைக்கலமாகக் கொடுத்து விட்டு சேர நாட்டிற்கு விட்டான். இதனை அறிந்த பராந்தகன் அவற்றைக் கைப்பற்றுவதற்காக ஈழ நாட்டிற்கு பெரும்படை ஒன்றை அனுப்பினார். போரில் ஈழநாட்டு அரசன் தோற்கடிக்கப்பட்டாலும் அரச முடியையும், பிற சின்னங்களையும் எடுத்து வரமுடியவில்லை. சென்று அழைக்கப்பட்டது. திருவெறும்பியூரில் உள்ள கோவிலும் இவர் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

இம்மன்னரது பெயரில் இராஜகேசரி சதுர்வேதி மங்கலம் என்ற ஊர் இருந்தது. அது இன்று ராஜகிரி என்று அழைக்கப்படுகிறது. ஆதித்த சோழருக்கு இளங்கோப்பிச்சி, திருபுவனமாதேவி என்ற இரு மனைவியர் இருந்தனர். இவரது மகனான பராந்தக சோழரின் தாய் இவர்களில் யார் என்பது தெரியவில்லை. காளத்திக்கு அருகில் உள்ள தொண்டைமான் ஆற்றூரில் ஆதித்த சோழர் கி.பி.907-ல் இறந்தார். இவர் மரணத்தின் போது சோழப் பேரரசு, சோழ மண்டலத்தையும்,

தொண்டை மண்டலத்தையும் கொங்கு நாட்டையும் உள்ளடக்கிய பேரரசாகத் திருக்காளத்தி வரை பரவியிருந்தது.

**3) வாணி மன்னர்கள் தோற்கடிக்கப்படுதல்**

மேலும் பாலாற்றுக்கு வடக்கே சித்தூர் ஜில்லா வரையில் அமைந்திருந்த நிலப்பரப்பாகிய வாணகப்பாடி நாட்டை ஆண்டு கொண்டிருந்த ரண்டு வாணர் குல வேந்தர்களான இரண்டாம் விஜயாதித்தன், இரண்டாம் விக்கிரமாதித்தன் ஆகியோரை வல்லம் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் தோற்கடித்தார் முதல் பராந்தகச் சோழன். வைதுங்க மன்னரையும் இவர் போரில் வென்றார்.

**4) வைதும்பர்கள் தோற்கடிக்கப்படுதல்**

பராந்தகன் வைதும்பர் என்ற தெலுங்கு மன்னரின் எதிர்ப்பை முறியடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. வைதும்பர்கள் ரேநாண்டு என்ற நாட்டை ஆண்டு வந்தார்கள். பராந்தக சோழனின் கடுந்தாக்குதலைத் தாங்க முடியாதவனாய் வைதும்ப அரசனும் இராஷ்டிரக்கூடர்களிடம் சரணடைந்தான்.

**5) தக்கோலப்போர்**

பராந்தக சோழனின் பேரரசு வெகு விரைவில் வளர்ந்து வந்து விரிவடைந்து விட்டது. ஆனால் இவரிடம் தோற்று ஓடிய மன்னர்கள் பராந்தகன் மீது பழிவாங்கத் துடித்தனர். இராஷ்டிரக்கூடர்கள், கீழைச் சாளுக்கியர்கள், வாணர்கள், வைதும்பர்கள் ஆகியோர் நெஞ்சில் வஞ்சம் தோன்றியது. மேலைக் கங்கர்களும் பராந்தகனுக்குத் தொல்லை கொடுக்க ஆரம்பித்தனர்.

இவ்வாறு சோழ நாட்டின் மீது புரண்டு வீசப்போகும் பகைப் புயலை நன்றாக அறிந்து கொண்ட பராந்தகன் முன்னதாகவே தற்காப்பு நடவடிக்கைகளில் இறங்க முற்பட்டார். தனது மகன் இராஜாதித்தனின் தலைமையில் ஒரு பெரும் படையைத் தயார் நிலைப்படுத்தினார். இப்படை திருநாவலூரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இராஷ்டிரக்கூட மன்னர் மூன்றாம் கிருஷ்ணதேவன் கங்க மன்னரின் ஆதரவுடன் தனது படைகளை தக்கோலம் என்ற இடத்தில் நிறுத்தி வைத்தார். தக்கோலம் என்ற

ஊர் வடஆற்காடு மாவட்டத்தில் அரக்கோணத்திலிருந்து பத்து கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இந்த ஊருக்கு திருவூறல் என்ற பெயரும் உண்டு.

போர் தக்கோலம் என்ற ஊரில் கடுமையாக நடைபெற்றது. சோழப் படைகள் தங்கள் வீரத்தையும் ஆற்றலையும் வெளிப்படுத்தின. ஆனால் போரின் போது இராஷ்டிரக்கூடத் தளபதி பூதுகன் என்பவன் இராஜாதித்தியரைக் கத்தியால் குத்திக் கொன்றான். இராஜாதித்தியன் உயிரிழக்கவே சோழ வீரர்கள் நிலைகுலைந்தனர். போரின் முடிவில் இராஷ்டிரக்கூடர்கள் வெற்றியடைந்தனர். தக்கோலப் போரில் இராஜாதித்தியன் வீர சொர்க்கம் அடைந்ததாக திருவாலங்காட்டுச் செப்பேடும், லெய்டன் செப்பேடும் கூறுகின்றன. தொண்டை நாடும் திருமுனைப்பாடி நாடும் இராஷ்டிரகூடர் வசமானது. சோழப் பேரரசு சுருங்கிய நிலையடைந்தது. ஆனாலும் தன் உயர் நிலையிலிருந்து சிறிதும் வீழ்ச்சியடையவில்லை.

முதலாம் பராந்தகன் மக்களுக்கு தன் ஆட்சிக் காலத்தில் செய்த நன்மைகளை பல கல்வெட்டுக் குறிப்புகளால் அறிகிறோம். ஊராட்சி முறையத் திருத்தியமைத்து அதனுடைய நடைமுறை விதிகளையும் அறுதியிட்டார் என்று உத்திரமேரூர் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவர் பாசனக் கால்வாய்கள் பல வெட்டி விவசாய வளர்ச்சியை ஏற்படுத்தினார். இவர் இரணியகருப்பம், துலாபாரம் பல புரிந்தார், பிராமணருக்கு பிரமதேயங்கள் வழங்கினான். தில்லையம்பலத்துக்கு பொன் கூரை வேய்ந்தார். தனது தந்தை ஆதித்தனைப் போல பராந்தகனும் சிவபெருமானுக்கெனப் பல கோவில்களைக் கட்டினார். இவ்வாறு பல பல துறைகளிலும் பராந்தகனின் செங்கோல் சிறப்புற்று விளங்கியது. முதலாம் பராந்தகன் இறந்த பின்பு அவரது இரண்டாம் புதல்வன் கண்டராதித்தன் முடி சூட்டப்பட்டு சோழ நாட்டிற்கு மன்னரானார்.

**இராஜராஜசோழன்(கி.பி.985-1014)**

சோழ மன்னர்களில் புகழ் பெற்றவர் ராஜராஜ சோழன் ஆவார். இராஜராஜ சோழனின் இயற்பெயர் அருள்மொழி வர்மன். இவர் இரண்டாம் பராந்தகன் சுந்தர சோழனுடைய இரண்டாவது மகனாவார். இவர் காலத்தில் சோழப் பேரரசு

தென்னிந்தியா முழுவதையும் தன்னகத்தே கொண்ட பேரரசாக விளங்கியது. இவர் பல போர்களில் பங்கு கொண்டு சோழப் பேரரசை விரிவுபடுத்தினார். இவர் காலத்தில் சிற்பம், ஓவியம், இசை ஆகியவை வளர்ந்தது. ஒப்பற்ற வீரமும், ஆற்றலும், நுண்ணறிவும் படைத்த இராஜராஜன் காலத்தில் தமிழகம் மேன்மை பெற்று விளங்கியது.

இராஜராஜ சோழன் தனது ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளைத் தொகுத்து இனிய தமிழ் மொழியில் கல்வெட்டுகளில் பொறிக்கும் பழக்கத்தை ஆரம்பித்தார். இதுவே மெய்கீர்த்தி எனப்படும். இந்த மெய்க்கீர்த்திகளின் துணை கொண்டு இவரது ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளை அறிய முடியும்.

**இராஜராஜ சோழனின் வெற்றிகள்**

**1) சேர நாட்டின் மீது படையெடுப்பு**

இராஜராஜன் பதவி ஏற்றபின் சோழநாட்டின் எல்லையை விரிவு படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். கி.பி.988-ல் சேர நாட்டின் மீது படையெடுத்தார். அப்போது சேர நாட்டில் ஆட்சி புரிந்தவர் பாஸ்கர இரவிவர்மன். இராஜராஜன் தனது ஆட்சியின் துவக்கத்தில் அனுப்பிய தூதுவன் ஒருவனை, பாஸ்கரவர்மன் உதகை என்ற இடத்தில் சிறையிட்டு, அவமதித்ததாக மூவருலா என்ற நூலை எழுதிய ஒட்டக்கூத்தர் கூறுகிறார். அந்தத் தூதனை மீட்பதற்காகவே இப்படையெடுப்பு நடந்ததாகவும், போர் திருவனந்தபுரத்துக்கு அருகே உள்ள கந்தளூர்ச் சாலையில் நடைபெற்றது. அங்கிருந்த சேரரின் கடற்படைத்தளம் அழிக்கப்பட்டது, தோற்கடிக்கப் பட்டது. உதகை என்னுமிடத்தைக் கைப்பற்றி, சிறையிலிருந்த தூதுவரை மீட்ட பிறகு மீண்டும் சேரர் படையை விழிஞம் என்ற இடத்தில் தோற்கடித்தரர்.

**2) பாண்டியருடன்போர்**

நாடு சேர நாட்டின் மீது படையெடுத்த போது இராஜராஜ ஜனின் படைகள் பாண்டிய நாட்டின் வழியாகச் சென்றது. அப்போதுபாண்டிய நாட்டு மன்னராக

இருந்த அமரபுயங்கன் சேரமன்னன் பாஸ்கரவர்மனின் நண்பனாக இருந்ததால், சோழப் படைகள் தன் நாட்டின் வழியாகச் சென்ற போது தடங்கல் செய்தான். இதனால் தான் இராஜராஜன் அமரபுயங்கன் மீது கோபம் கொண்டு பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தார். போரில் அமரபுயங்கன் தோற்கடிக்கப்பட்டு பாண்டிய சோழ நாட்டுடன் இணைக்கப்பட்டது. அதன் பிறகு இரண்டாம் முறையாக சேர நாட்டின் மீது படையெடுத்து கொல்லம், கொடுங்களூர் ஆகிய இடங்களைக் கைப்பற்றினார்.

அதன் பின்னர் இராஜராஜ சோழன் குடகு நாட்டின் மீது படையெடுத்து அந்த நாட்டு அரசனைப் பனசோகை என்னுமிடத்தில் தோற்கடித்தார். குடகு நாடு சோழப் பேரரசுடன் சேர்க்கப்பட்டது. பின்னர் மேலைக் கங்கர் நாடாகிய கங்கவாடியையும் வென்று சோழப் பேரரசுடன் இணைத்தார். இந்தப் போர்களில் இராஜராஜ சோழனின் மகன் இராஜேந்திரன் தலைமை வகித்து வெற்றி பெற்றார்.

**3) இலங்கைபடையெடுப்பு**

இராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்திகளிலிருந்து அவர் ஈழ நாட்டையும் வென்றார் என்று அறியப்படுகிறது. இலங்கையை வென்று சோழப் பேரரசுடன் இணைத்துக் கொள்ளும் பொருட்டே இப்படையெடுப்பு நிகழ்ந்தது. அப்போது இலங்கையை ஐந்தாம் மகிபன் என்பவர் ஆண்டு வந்தார். இராஜராஜ சோழனின் படை வலிமையைக் கண்ட மாத்திரத்திலேயே அஞ்சிய மகிபன் தன் தலைநகரை விட்டு தென் பகுதியிலுள்ள ரோகண நாட்டிற்கு ஓடிவிட்டான். இராஜராஜ சோழன் இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்றி தனது ஆட்சிக்கு உட்படுத்தினார். அதற்கு மும்முடி சோழ மண்டலம் என்று பெயரிட்டு பொலன்னருவா என்ற நகரத்தைத் தலை நகராக்கினார். அங்கே கருங்கல்லினாலும் சலவைக் கல்லினாலும் ஆன வானவன் மாதேவீச்சுரம் என்ற சிவன் கோவிலைக் கட்டினார்.

**4) மேலைச் சாளுக்கியருடன்போர்**

மேலைச் சாளுக்கிய சத்தயாசிராயனுக்கும் இராஜராஜனுக்கும் இடையே சுபத்திரா நதிக்கரையில் நடைபெற்ற பெரும் போரில் தோல்வியுற்ற

சத்தியாசிராயன் போர்களத்தை விட்டே ஓடினான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. சாளுக்கியப் படைத் தளபதி கேசவன் சிறைபிடிக்கப்பட்டான். அதன்பின் சாளுக்கிய நாடு சூறையாடப்பட்டதாகச் சாளுக்கிய கல்வெட்டு தெரிவிக்கிறது.

**வெங்கிச் சாளுக்கியருடன்போர்**

வெங்கிச் சாளுக்கிய நாட்டைப் பிடிக்க சத்தியாசிராயன் தகுந்த சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருந்ததால், இராஜராஜன் வெங்கியில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட தீவிரமாக ஈடுபட்டான். அங்கு நிலவிய குழப்பமான சூழ்நிலையில் படையெடுத்து, அந்த நாட்டை ஆண்டு வந்த ஜடா சோழவீமனை வென்று, அரியணைக்குரிய சக்திவர்மனை வெங்கி நாட்டிற்கு வேந்தனாக முடி சூட்டினார். சக்திவர்மனின் தம்பியான விமலாதித்தியனுக்கு தனது மகள் குந்தவையை மணமுடித்துக் கொடுத்தார். இதனால் வெங்கி நாட்டில் இராஜராஜனின் செல்வாக்குப் பரவியது. பின்னர் இந்த மண உறவு இரண்டு நாடுகளும் ஒன்று சேர வழி வகுத்தது. இவை தவிர கலிங்கத்தையும், மால் தீவுகளையும் இராஜராஜன் வென்றார்.

இராஜராஜ சோழன் ஆட்சியில் சோழ சாம்ராஜ்யம் மிக உன்னதமான நிலையில் இருந்தது. பாண்டி மண்டலமும், சேர மண்டலமும், கொங்கு மண்டலமும், நுளம்பப்பாடி நாடு, ஈழமாகிய மும்முடி சோழ மண்டலமும் இவரது ஆட்சிக்குட்பட்டிருந்தது.

இராஜராஜ சோழனுக்கு மும்முடி சோழன், சிவபாத சேகரன், நித்திய வினோதன், ஜெயங்கொண்டான், கீர்த்தி பராக்கிரமன் போன்ற பல சிறப்புப் பெயர்கள் வழக்கத்தில் இருந்தன. இராஜராஜன் உயர்ந்த பண்புகளைக் கொண்டிருந்தார். இவர் பல நாடுகளைக் கைப்பற்றிய ஒரு ஏகாதிபத்தியவாதிதான். ஆனால் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே ஆட்சி புரிந்தார். எனவே தான் மக்கள் தங்கள் உடல், பொருள், ஆவி அத்தனையையும் இராஜராஜனுக்காகத் தர முன் வந்தனர்.

இராஜராஜன் தன்னுடைய தலைநகரான தஞ்சாவூரில் மாபெரும் கோயில் ஒன்றை எடுப்பித்து அதற்கு இராஜராஜேசுவரம் என்று பெயரிட்டார். இந்தக் கோயில் பிற்கால சோழர் காலத்து சிற்பக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இராஜராஜன் தலைசிறந்த நிர்வாகியாக விளங்கினார். இவருடைய ஆட்சிக் காலத்தில் தான் சோழ நாடு முழுவதும் முதன் முதலாக அளக்கப்பட்டது. சோழ அரசர்களில் மட்டும் அல்லாது தமிழ் மூவேந்தர்களிலும் தலைசிறந்த மன்னராக விளங்கினார் இராஜராஜசோழன்.

**முதலாம் இராஜேந்திர சோழன் (கி.பி.1014 – 1044)**

கி.பி.1014-ல் இராஜராஜன் இறந்தவுடன் அவரது மகனான முதலாம் இராஜேந்திரன் சோழப் பேரரசராக முடிசூட்டப்பட்டார். இவர் தனது தந்தையின் கொள்கைகளைப் பின்பற்றினார். அவரைப் போலவே தனது சாதனைகளையும், கல்வெட்டுகளின் மூலமாக வெளியிட்டார். இராஜேந்திரனைப் பற்றிய செய்திகளை திருவாலங்காட்டு செப்பேடுகள் விரிவாகத் தெரிவிக்கின்றன.

**முதலாம் இராஜேந்திர சோழனின் படையெடுப்புகள்**

முதலாம் இராஜேந்திர சோழன் தனது தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே பல போர்களில் நேரடியாகப் பங்கு கொண்டு வெற்றி அடைந்தார். இவரது மெய்க்கீர்த்தி இவரடைந்த வெற்றிகளை பறைசாற்றுகிறது. இவர் தனது மூன்றாவது ஆட்சி ஆண்டுக்குள் சோழ நாட்டின் வடமேற்கில் உள்ள இடைதுறை நாடு, வனவாசி, கொள்ளிப் பாக்கை, மண்ணைக்கடக்கம் போன்ற நாடுகளைத் தாக்கிக் கைப்பற்றினார்.

**1) இலங்கை படையெடுப்பு**

இவருடைய ஈழ நாட்டு படையெடுப்பைப் பற்றி, இவருடைய மெய்க்கீர்த்தி விரிவாகத் தெரிவிக்கிறது. இராஜராஜன் காலத்தில் இழந்த வடபகுதியைக் கைப்பற்ற சிங்கள அரசன் ஐந்தாம் மகிந்தன் சோழர்கள் மீது போர் தொடுத்தான். எனவே இராஜேந்திர சோழன் இலங்கையின் மீது படையெடுத்தார். போரில் வெற்றி பெற்று இலங்கை முழுவதும் சோழர்களின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.

**2) சேரர்களையும்பாண்டியர்களையும்வெல்லுதல்**

இராஜேந்திரன் சேர நாட்டின் மீது படையெடுத்து தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தினார். சேர நாட்டை சோழ அரச பிரதிநிதியின் ஆதிக்கத்தின் கீழ் வைத்தார். நாட்டின் மீதும் படையெடுத்துச் சென்று அங்கே தனது மகன் இராஜாதிராஜனை சோழப் பாண்டியன் என்ற பட்டத்துடன் பாண்டிய நாட்டை ஆட்சி புரியும்படி ஏற்பாடு செய்தார்.

**3) சாளுக்கியருடன்போர்**

இராஜேந்திர சோழர் மேலைச் சாளுக்கியர் மீதும் வெங்கி சாளுக்கியர் மீதும் போர் தொடுத்தார். மேலைச் சாளுக்கிய மன்னரான ஜெயசிம்மனை போரில் தோற்கடித்தார். இவர் இரட்டைப்பாடி ஏழரை இலக்கத்தை கைப்பற்றினார் என்று இவரது மெய்க்கீர்த்தி கூறுகிறது. வெங்கி நாட்டில் தனது தங்கை குந்தவையின் கணவன் விமலாதித்தன் இறந்த பிறகு, விமலாதித்தனுக்கும் குந்தவைக்கும் பிறந்த மகனான, இராஜ இராஜ நரேந்தனை வெங்கியின் அரசராக்க அங்கு தலையிட்டார். குழப்பம் விளைவித்த ஜெயசிம்மன் தோற்கடிக்கப்பட்டு விரட்டப்பட்டார்.

**4) கங்கைப்படையெடுப்பு**

வெங்கியில் அமைதியை ஏற்படுத்தச் சென்ற இராஜேந்திரனின் படைகள் வட நாட்டின் மீது படையெடுத்துச் சென்றன. சக்கரக் கோட்டம், மன்னனைக் கோணம், பஞ்சப்பள்ளி, கோசலநாடு ஆகியவை சோழப் படையால் கைப்பற்றப்பட்டன. பின்னர் வங்காளத்தின் அரசனான மகிபாலன் தோற்கடிக்கப்பட்டார். கங்கை ஆற்றின் நீரை எடுத்துக் கொண்டு சோழப் படைகள் நாடு திரும்பின இந்த வெற்றிகளால் இராஜேந்திரன் கங்கை கொண்ட சோழன் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். இந்தப் படையெடுப்பின் விளைவாக தமிழர் நாகரிகம் வங்கத்தில் புகுந்ததாகக் கூறப்படுகிறது.

5) கடாரப் படையெடுப்பு

இராஜேந்திர சோழனின் கடாரப் படையெடுப்பைப் பற்றி அவருடைய மெய்க்கீர்த்தியும், திருவேலங்காடு செப்பேடுகளும் தெரிவிக்கின்றன. இவர் தென் கிழக்காசியாவில் உள்ள கடாரம் எனப்படும் ஸ்ரீவிஜய நகரப் பேரரசு மீது படையெடுத்துச் சென்றார். ஸ்ரீவிஜயப் பேரரசு என்பது மலேசியா, சுமத்ரா, ஜாவா ஆகியவற்றை தன்னகத்தே கொண்டது ஆகும். இராஜேந்திரனின் இந்தப் படையெடுப்புக்கான காரணம் என்ன வென்று தெளிவாகத் தெரியவில்லை. கடாரத்தின் மீது இராஜேந்திரன் பெற்ற வெற்றிக்கு சிறந்த கப்பற்படையே காரணம். இவ்வெற்றியினால் கடாரம் கொண்டான் என்ற பெயரைப் பெற்றார் இராஜேந்திரன்.

இராஜேந்திர சோழர் பல சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தார். அவை உத்தமசோழன், விக்கிரம சோழன், முடிகொண்ட சோழன், கடாரம் கொண்டான், பண்டித தோழன், கங்கை கொண்ட சோழன் ஆகியவையாகும். இராஜேந்திர சோழன், கங்கை கொண்ட சோழபுரம் என்ற புதிய நகரை அமைத்தார். இந்த நகரில் கங்கை கொண்ட சோழேச்சுரம் என்ற திருக்கோவிலைக் கட்டினார். சிற்பத்திறனில் இக்கோயில் தஞ்சை பெரிய கோவிலுக்கு ஒப்பானதாகும். இவர் சைவ சமயத்தில் பெரிதும் ஈடுபாடு உடையவராக இருந்து வந்தாலும், பிற சமயங்களை மதித்தும் ஆதரித்தும் வந்தார். இவருடைய காலத்தில் சோழப் பேரரசு மிகப் பெரியதாகவும், பெருமைமிக்கதாகவும் விளங்கியது.

**முதலாம் இராஜேந்திரசோழருக்குப்பின் வந்த சோழ மன்னர்கள்**

**முதலாம் இராஜாதிராஜன் (கி.பி. 1044-1054)**

முதலாம் இராஜேந்திர சோழரின் மூத்த மகனான முதலாம் இராஜாதிராஜர் இராஜகேசரி என்ற பட்டம் பூண்டு 1044-ல் மன்னரானார். இவர் அரசராவதற்கு 26 ஆண்டுகளுக்கு முன்பே இளவரசர் பட்டம் சூட்டப் பட்டதாக செங்கற்பட்டு மாவட்டத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. இவரது வரலாற்றை திங்களேர் தரு, திருக்கொடியோடு, திங்களேர் பெறவளர் ஆகிய மூன்று மெய்க்கீர்த்திகள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

**இலங்கையில்போர்**

இலங்கையின் தென் பகுதியில் இருந்த உரோகண நாட்டில் மகாலான கித்தியின் மகன் விக்கிரமபாண்டு என்பவர் ஆட்சி செய்து வந்தார். சோழரிடமிருந்த வடபகுதிகளை மீட்க வேண்டுமென்று தொடர்ந்து போராடினார். கி.பி.1046-ல் இராஜாதிராஜரின் படைகள் இவரைத் தோற்கடித்தன. ஜெகதிபாலர் என்ற அயோத்தி இளவரசன் விக்கிரமபாண்டுவைக் உரோகண நாட்டின் ஆட்சியுரிமையைப் பெற்றார் என்றும், அவரையும் கி.பி.1051-ல் சோழர்கள் கொன்றனர் என்றும் மகாவம்சம் என்ற நூல் தெரிவிக்கிறது. இவ்வாறு இலங்கையில் சோழருக்கும் சிங்கள அரசர்களுக்கும் போர்கள் தொடர்ந்து நடைபெற்றன. ஆனால் கி.பி. 1070 முதல் இலங்கையில் சோழரின் ஆதிக்கம் குறைந்து கொண்டே வர ஆரம்பித்தது.

**மேலைச் சாளுக்கியருடன்போர்**

கி.பி.1046-ம் ஆண்டு முதல் மேலைச் சாளுக்கியருடன் போர் ஆரம்பித்தது. துங்கபத்திரைக்கருவில் நடைபெற்ற போரில் சாளுக்கியப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. கம்பிலி நகரம் கைப்பற்றப்பட்டது. தனது வெற்றியின் நினைவாக அந்த நகரில் வெற்றித் தூண் ஒன்றை நிறுவினார் இராஜாதிராஜன். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 1048-ல் மீண்டும் சாளுக்கியர் மீது போர்

## 2. சோழர் கால கலை, இலக்கிய வளர்ச்சி (CHOLA ART AND LITERATURE)

சோழ மன்னர்கள் கலை வளர்ச்சிக்கு ஊக்கமளித்தார்கள். கட்டிடக் கலை, சிற்பக்கலை, ஓவியம், நாட்டியம் ஆகியவை வளர்ச்சியடைந்தன. முக்கியமாக சோழ மன்னர்கள் தங்களது வருவாயின் பெரும்பகுதியை ஆலயங்கள், அரண்மனைகள் மற்றும்பெரிய கட்டிடங்கள் கட்டுவதற்குச் செலவு செய்தனர். இவர்களது கட்டிடக்கலை பல்லவர்களின் கட்டிடக் கலை அடிப்படையில் அமைந்திருந்தாலும் தங்களுக்கெனத் தனித் தன்மையையும் வகுத்துக்

கொண்டார்கள். இவர்கள் காலத்தில் ஏராளமான ஆலயங்கள், அரண்மனைகள் கட்டப்பட்டன.

**கட்டிடக்கலை வளர்ச்சி**

சோழ மன்னர்கள் கட்டிய கோவில்கள் அவர்களது கட்டிடக் கலை வளர்ச்சிக்கு சிறந்த சான்றுகளாகும். சோழர்களின் கோவில்களை அதன் அமைப்பு, காலம், தன்மை ஆகியவைகளின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

**1) முற்காலச் சோழர் கோவில்கள்**

கி.பி.850-க்கும் கி.பி.985க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப் பட்டவை முற்கால கோவில்கள் ஆகும். இந்தக் காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்கள் அளவில் சிறியவை. ஆனால் ஒரு திட்டவட்டமான வடிவத்தைப் பெற்றிருந்தன. அவைகளில் முக்கியமானவை வருமாறு:

1) நார்த்த மலையில் கட்டப்பட்ட விஜயாலய சோழேஸ்வரம். இந்த ஆலயம் சோழ சாம்ராஜ்யத்தை நிறுவிய சோழனால் கட்டப்பட்டது. இந்த ஆலயத்தின் முன்பகுதியில் காணப்படும் தூண்கள் பல்லவர் கால பாணியைச் சார்ந்தது ஆகும். கர்ப்ப கிரகத்தின் மேல் அடுக்கு விமானங்கள் அமைக்கப்பட்டிருந்தது.

2) கண்ணனூர் என்ற இடத்தில் கட்டப்பட்ட பாலசுப்பிரமணிய ஆலயம், கும்பகோணத்தில் கட்டப்பட்ட நாகேஸ்வர ஆலயமும் குறிப்பிடத் தகுந்தவை. இந்த ஆலயங்களில் சோழ அரசர், அரசி உருவங்கள் காணப்படுகின்றன. முதலாம் ஆதித்தன் காலத்தில் கட்டப் பட்ட திருக்காட்டுத் தலையிலுள்ள சுந்தரேஸ்வரர் ஆலயமும், திருசெந்துரையில் உள்ள மகாதேவர் ஆலயமும் குறிப்பிடத்தக்கவை.

3) கொரங்கநாதர் ஆலயம்: இதனைக் கட்டியவர் முதலாம் பராந்தக சோழன் ஆவார். இது திருச்சி மாவட்டத்தில் ஸ்ரீனிவாசநல்லூரில் அமைந்துள்ளது. இது மிகவும் அழகான ஆலயமாகும். ஐம்பது அடி நீளமுள்ள இந்தக் கோவிலில் ஆண், பெண் தெய்வங்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. சரஸ்வதி, லட்சுமியின்

சிற்பங்கள் புகழ் பெற்றவை. முற்கால சோழர்களின் கட்டிக் கலைக்கு இந்தக் கோயில் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

4) இவை தவிர தஞ்சாவூர் மாவட்டத்தில் புள்ளமங்கை என்ற ஊரில் முதலாம் பராந்தகனால் கட்டப்பட்ட பிரம்மபுரீஸ்வரர் ஆலயம் புகழ் பெற்றது ஆகும். திருவிடைமருதூரில் கட்டப்பட்ட மகாலிங்க சுவாமி ஆலயம், கொடும்பாலூரில் உள்ள முக்குண்டேஸ்வரர் ஆலயம் ஆகியவை முற்கால சேசாழர்கால கட்டிடக் கலை வளர்ச்சியைப் பறைசாற்றுகின்றன

**2) இடைக்காலசோழர் கோவில்கள்**

கி.பி.985-க்கும் கி.பி.1070-ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்ட கோவில்கள் இடைக்கால கோவில்கள் எனப்படுகிறது.

1) தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில். இந்தக் கோவில் முதலாம் ராஜராஜ சோழனால் கட்டப்பட்டது. இது சோழர் காலக் கட்டிடக் கலையை வெளிப்படுத்துகிறது. இக்கோவில் கட்டப்படுவதற்கான எல்லாப் பொருட்களையும் ராஜராஜ சோழன் தானமாக வழங்கினார். இக்கோவிலில் திராவிடக் கட்டிடக் கலைப் பாணியைக் காணலாம். தங்கம், பித்தளை ஆகியவற்றால் செய்யப்பட்ட பல சிற்பங்கள் காணப்படுகின்றன. இந்தக் கோவிலின் முதல் அடுக்கின் உள் சுவரில் ஏராளமான நாட்டியப் பெண்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. இந்தக் கோவிலின் சுற்றளவு 4572 சதுர மீட்டர்கள் ஆகும்.

இந்தக் கோவிலின் மத்தியில் உள்ள கோபுரம் 2.6 அடி உயரம் உடையது. கோபுரத்தின் உச்சியில் 81.284 டன் எடையுள்ள ஒரு பெரிய ல்வைக்கப்பட்டுள்ளது. கோவிலுக்கு முன்னால் ஒரு பிரமாண்டமான நந்தி உள்ளது. இதன் உயரம் 12 அடி ஆகும். இந்தக் கோவிலுக்கு கேரளத்தங்கன் இராஜராஜ திருவனுக்கன் போன்ற நுழைவு வாயில்கள் காணப்படுகின்றன. தஞ்சைப் பெரிய கோவிலைப் பற்றி குருவூர்தேவர் என்பவர் புகழ்ந்து பல பாடல்கள் பாடியுள்ளார்.

2) கங்கை கொண்ட சோழபுரம் கோவில்: இக்கோவில் திருச்சி மாவட்டத்தில் ஜெயங்கொண்டான் என்ற ஊருக்கு அருகே உள்ளது. இது முதலாம் ராஜேந்திர

சோழனால் கட்டப்பட்டது. இது தஞ்சைப் பெரிய கோவிலைப் போன்ற வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோவில் 340 அடி நீளமும் 100 அடி அகலமும் உடையது. இதன் கோபுரம் 160 அடி உயரமுடையது. இக்கோவில் உள்ள வெண்கலச் சிற்பங்கள் அக்கலைத் திறனுக்கு உதாரணமாக விளங்குகின்றன.

3) பிற்காலச் சோழர் கோவில்கள்: கி.பி.1070-க்கும் 1250-க்கும் இடையே கட்டப்பட்டவை பிற்காலக் கோவில்களாகும். இக்காலத்தில் கட்டப்பட்ட கோவில்கள் அனைத்தும் அளவில் சிறியவை ஆகும். முதலாம் குலோத்துங்கன் கட்டிய அமிர்தகாஸ்வரர் கோவிலும், தஞ்சாவூரில் கட்டிய சூரிய தேவன் கோவிலும் சிறப்பானவை. ரண்டாம் இராஜராஜன் கட்டிய தாராசுரம் ஆலயத்தில் காணப்படும் திருமண்டபம் ரதத்தின் வடிவத்தையுடையது. இந்த ஆலயத்தின் உட்சுவர்களில் பெரிய புராணக் காட்சிகள் மிக அழகாகத் தீட்டப்பட்டுள்ளன.

இவை தவிர மூன்றாம் குலோத்துங்கன் திருப்புவனத்தில் கட்டிய காமேஸ்வரர் ஆலயம் சோழர் கட்டிடக் கலையை முழுமையாகப் பின்பற்றிக் கட்டப்பட்டது ஆகும். இவ்வாறு சோழர் காலத்தில் கட்டிடக் கலை வளர்ச்சியடைந்து காணப்பட்டது.

**சோழர் கால ஓவியங்கள்**

சோழர்களின் ஆட்சிக் காலம் ஒரு கோவில் சகாப்தமாகும். இந்த சகாப்தத்தில் எழுந்த கோவில்களில் வண்ண ஓவியங்களை சோழர்கள் தீட்டி மகிழ்ந்தனர். பாரிபாடலில் சோழரின் கோநகரமான காவிரிப்பூம் பட்டிணத்திலிருந்த கோவில் சுவர்களில் ஓவியங்கள் இருந்தன என்ற குறிப்பு காணப்படுகிறது.

a) சோழர்கால ஓவியங்களில் மிகவும் பழமையானவை நார்த்தா மலைக் குன்றிலுள்ள விஜயாலயச் சோழேச்சுவரம் கோவிலில் உள்ளவை யாகும். இந்தக் கோவிலின் அகநாளிகைச் சுவர்களிலுள்ள காளியின் நடன ஓவியம், கோவிலின் பக்க அறைக் கூறைகளில் காந்தர்களின் ஓவியம் ஆகியவை சிறப்புடையது ஆகும். இவை தவிர முதலாம் ஆதித்தன் காலத்திய கண்ணனூர் பாலசுப்ரமணியர்

கோவிலிலும் ஓவியச் சின்னங்கள் காணப்படுகின்றன. இவை தொடக்க காலச் சோழரின் ஓவியங்களாகும்.

b) தஞ்சை பெரிய கோவிலில் குறிப்பிடத்தக்க சோழர் கால ஓவியங்களைக் காணலாம். இந்த ஓவியங்களை முதன் முதலாக வெளி உலகிற்கு அறியச் செய்தவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் எஸ்.கே.கோவிந்தசாமி ஆவார். 1930-ல் இவர் சோழரின் ஓவியத் தொகுப்புகளைக் கண்டுபிடித்தார்.

c) பெரிய கோவிலின் மேற்குச் சுவரில் சுந்தரமூர்த்தி நாயனாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. சிவபெருமான் ஒரு திருமண மண்டபத்தில் வயோதிக உருவத்தில் உள்ளார். அவரது ஒரு கையில் தாழங்குடையும், மற்றொரு கையில் பனையோலையும் உள்ளன. அருகில் பலர் காணப்படுகின்றனர். அவர்களின் முகத்தில் வியப்பு, ஐயம், கோபம் முதலிய மாறுபட்ட மணமகன் சுந்தரர் தனது உணர்ச்சிகள் காணப்படுகின்றன. திருமணத்தைத் தடுக்க வந்த கிழவரை வியப்போடு பார்க்கிறார். இவ்வாறு தடுத்தாட் கொண்ட வரலாறு ஓவியமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. யானை மீது சுந்தரர் கயிலைக்குச் செல்லும் காட்சியும் சித்தரிக்கப்பட்டுள்ளது. சுந்தரர் வெள்ளை அமர்ந்துள்ளார். சேரமான் பெருமாள் சோடிக்கப்பட்ட குதிரை மீது முன் செல்கிறார். பின்னால் யானை மீது அமர்ந்து வரும் சுந்தரரைத் திரும்பிப் பார்க்கிறார். மேலே வான வீதியில் தேவர்கள் ஆடியும் பாடியும் இவர்களை வரவேற்கின்றனர். கீழே மீன்கள் நிரம்பிய அலைகடல் காட்சியளிக்கிறது. இந்தக் காட்சிகள் அற்புதமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

d) மற்றொரு ஓவியமும் சிறப்பாக உள்ளது. சிவபெருமான் தட்சிணாமூர்த்தியாக புலித்தோல் மீது அமர்ந்துள்ளார். அருகில் பூத கணங்கள் அமர்ந்துள்ளன. நந்தி ஒன்று படுத்துள்ளது. தேவமாதர் இருவர் நடனமாடுகின்றனர். இந்தக் காட்சியும் அழகாக வரையப்பட்டுள்ளது.

e) எல்லாவற்றிற்கும் மேலாக முப்புரத்தை எரிக்கச் சிவபெருமான் நிற்கும் காட்சி சிறப்பானதாகும். மூன்று கண்களும் எட்டு தோள்களும், கைகளிலேந்திய

பல படைகளும், வில்லை வளைத்து அம்பை எய்யாமலேயே தன் புன்முறுவலால் முப்புரத்தை எரிக்கும் காட்சியும், எரிந்த பின் வெற்றி கண்ட அவர் பெருமிதமும் அழகாக வரையப் பட்டுள்ளன. அசுரர்கள் எதிர்த்துத் தாக்கும் முகபாவனைகள், துர்க்கை, முருகன் ஆகியோரின் ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன.

இறுதியாக, சோழர்கால ஓவியங்களில் குறிப்பிடத்தக்கவை நடனப் பெண்களின் ஓவியமாகும். பெரிய கோவிலில் பல்வேறு கோணங்களில் நடனப் பெண்களின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன. இந்தப் பெண்களின் பெரிய வட்டமான கொண்டைகள், சுருள் சுருளாகத் தொங்கும் மயிர்த்திரள்கள், கையிலேந்தியிருக்கும் இசைக்கருவிகள், நடன ஆடை, மற்றும் அணிகலன்கள் ஆகியவை சோழர் காலத்தில் நடனக் கலை பெற்றிருந்த மேம்பாட்டை அறிய உதவுகின்றன.

சுருக்கமாகக் கூறினால், சோழர் காலப் பண்பாட்டு வரலாற்றை அறிய சோழரின் ஓவியங்கள் தலை சிறந்த சான்றுகளாக உள்ளன. பெரும்பான்மையான ஓவியங்கள் யாவும் இராஜராஜ சோழர் காலத்தில் வரையப்பட்டதாகும்.

**சோழர் காலச் சிற்பக்கலை**

சோழர் கால சிற்பக்கலை, ஒரு சிறப்பான மரபை ஏற்படுத்தி யுள்ளது. சோழர்கள் தாங்கள் கட்டிய கோவிலின் சுவர்களிலும், மூலைகளிலும், தளங்களிலும் மரபிற்கேற்றவாறு தெய்வ உருவங்களையும், பிற உருவங்களையும் அமைத்திருப்பது சோழர் கலையில் காணும் சிறப்புத் தன்மையாகும். தெய்வ உருவங்கள், அரசன், அரசியர், இளவரசர்கள், இளவரசிகள், கொடையாளர்கள் ஆகியோரின் உருவங்கள் காணப்படுகின்றன. கருவறைச் சுவரிலுள்ள சுவர்க் கம்பங்களில் புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் புராணக் கதைகளில் வரும் உருவங்களைப் பெற்றிருக்கின்றன.

விமானச் சுவர்களிலும், அதனையடுத்த பகுதிகளிலும் மூலவரின் அவதார உருவங்கள் படைத்திருப்பது சோழர் கால சிற்பக் கலையில் காணும் பொதுவான தன்மையாகும். கருவறையிலும், பக்கவறைகளிலும் பாதுகாப்பாக

வைக்கப்பட்டுள்ள சோழர்கால செப்புத் திருமேனிகள் உலகப் புகழ் பெற்றவையாகும். இந்த செப்புத் திருமேனிகளுள் சிவபெருமானுடைய பல்வேறு உருவங்களைக் கொண்ட செப்புத் திருமேனிகளே அதிகமாகக் காணப்படுகின்றன.

**முதலாம் ஆதித்தன் காலம்**

சோழர் கால சிற்பங்களில் சிறப்புடையது முதலாம் ஆதித்தன் காலத்தில் கட்டப்பட்ட கண்ணனூர் பாலசுப்பிரமணியர் கோவிலில் உள்ள முருகப்பெருமான் யானை ஊர்தி மீது அமர்ந்தள்ள சிற்பமாகும். சங்க காலத்தில் முருகனுக்கு யானை ஊர்தியாக இருந்ததைத் தழுவியே | இந்தச் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இந்தக் கோவிலில் உள்ள விமானத்தின் நான்கு மூலைகளிலும் மயில், யானை உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

முதலாம் ஆதித்தன் காலத்துச் சிற்பங்களில் குறிப்பிடத்தக்கவை திருக்கட்டளையிலுள்ள சுந்தரேசுவரர் கோவில் சிற்பங்களாகும் இந்தக் கோவிலின் தெற்குத் திசையில் தட்சிணாமூர்த்தியும், மேற்கில் வராக மூர்த்தியும், வடக்கில் நான்முகனும், கிழக்கில் இந்திரனும் அமர்ந்துள்ளனர். மேலும் இக்கோவிலில் உள்ள திரிபுராந்தகரின் சிலை நின்ற வண்ணமாக உள்ளது. இரு கைகளில் படைகளை ஏந்தி, கைகளில் வளைகளையும், காதுகளில் குண்டலங்களையும், கழுத்தில் அட்டிகையும் உடைய இந்தச் சிலை பார்ப்பதற்கு பாலமுருகனைப் போல உள்ளது. இதன் தலையிலுள்ள கிரீடம் கூம்பு வடிவில் உள்ளது.

இங்குள்ள மற்றொரு சிலை சேட்டா தேவியின் சிற்பமாகும். இரு கால்களையும் தொங்கவிட்டுக் கொண்டு இடுப்புக்கு மேல் வெறும் மேனியுடன் காணப்படுகிறது. இச்சிலையின் வலப்பக்கத்தில் நந்திதேவர் சிலை உள்ளது. இடப்பக்கத்தில் மற்றொரு தேவதை சிலை உள்ளது. இதன் வலக்கை அபய முத்திரை காட்டுகிறது.

c) முதலாம் ஆதித்தன் காலத்துக் கோவில்களில் காணப்படும் சிற்பங்களில் லால்குடியிலுள்ள சப்பரீஷீசுவரர் கோவிலிலுள்ள மட்சாடணர் சிலை பளிங்கு போன்ற தூய்மைக்கும், கீழையூர் சோழீஸ்வரம் கோவிலில் உள்ள சந்திரசேகரர்,

சுப்ரமணியர், நான்முகன் ஆகிய சிலைகள் தூய்மைக்கும் அணி அழகிற்கும் எடுத்துக்காட்டாக ள்ளன. நான் முகன் சிலைகளும், மாதொரு பாகன் சிலைகளும் முதலாம் ஆதித்தன் கோவில்கள் எல்லாவற்றிலும் காணப்படுகின்றன.

கண்டியூரில் உள்ள மாதொருபாகன் சிலை அமர்ந்த நிலையில் இடக்காலை மடக்கி ஊன்றிய நிலையில் உள்ளது. சிறிது வலப்புறம் சாய்ந்து நந்தியின் கழுத்தில் வலக்கையை ஊன்றியுள்ளார். நந்தி பின்புறம் தலைகுனிந்து படுதது மிக அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

சிலைகளில் மிகவும் சிறப்புடையது கொற்றவையின் சிலையாகும். கூன் போன்ற வடிவில் நான்கு கைகள், கழுத்து, கை மற்றும் மார்:பெயர்றை உடையதாகக் காணப்படுகிறது. மார்கொபத்திற்கிடையே வயிற்றளவில் தொங்கும் மணிமாலை சிறப்பாக அமைந்துள்ளது. திருவல்லத்தில் உள்ள சொற் சிற்பத்தில் காணப்படும் சடை அலங்காரம் சிறப்பானது. தக்கோலம், திருவல்லத்திலுள்ள தட்சிணாமூர்த்தி சில தூய்மைக்கும், நுணுக்கத்திற்கும் பெயர் பெற்றதாக கால தெய்வத்திரு மேனிகள் அல்லாமல் சோழ அரசர் அரசியர்களின் உருவச் சிலைகளையும் கோவிலில் படைக்கும் பழக்கம் முதலாம் ஆதித்தன் காலத்தில் ஆரம்பித்தது. உதாரணமாக குடந்தையிலுள்ள நாகேஸ்வரர் கோவிலில் சோழ அரசர் அரசியர்களின் சிலைகள் மணி முடிதரித்துக் காணப்படுகின்றன.

**முதலாம் பராந்தகன் காலம்**

முதலாம் ஆதித்தனுக்குப் பிறகு சோழர் சிற்பக்கலை மேலும் சிறப்புடையதாக வளர்ச்சியடைந்தது. முதலாம் பராந்தகன் காலத்தில் கட்டப்பட்ட கோவில்களில் சிவபெருமானின் திருவுருவங்கள் எழிலுடன் காணப்படுகிறது. திருப்புகளூர்க் கோவிலில் பல்வே உள்ள கோட்டம் ஒன்றில் லிங்கத்தின் நடுவில் நான்கு கைகளுடன் திருமுடியும், பல ஆபரணங்களுடனும் காட்சியளிக்கும் லிங்க மூர்த்தியைக் காணலாம். மேலும் புள்ளமங்கை மரமபுரீசுவரர் கோவிலில் உள்ள லிங்கத்தின் நடுவில் சிவன் இரண்டு கைகளுடன் நின்ற வண்ணம் உள்ளார். லிங்கத்தின் மூளையில் பறக்கும் தேவதையின் உருவம் காணப்படுகிறது.

இதில் கூத்தரசர் சிலையில் லயம், உவகை, உணர்ச்சிபோன்றவை களைக் காணலாம். இசைக்கருவி, தீச்சுடர், விரிந்தசடை, அதில் காணப்படும் கங்கை, சந்திரன், அவர் காலடியில் மிதிபடும் அசுரனின் முகபாவனை ஆகிய அனைத்தும் வியப்பிற்குரியதாகும். கூத்தரசர் அணிந்திருக்கும் அணிகலன்கள் சோழர்கால அணிகலன்களை நமக்கு நினைவூட்டுகிறது.

இராஜேந்திர சோழன் கட்டியுள்ள கங்கை கொண்ட சோழபுரம் கோவிலில் உள்ள லிங்கம் முப்பது அடி உயரம் உள்ளது. இக்கோவிலின் சுவர்களில் காணப்படும் சிற்ப அணிகள் தென்னகக் கட்டிடக் கலையின் மறுமலர்ச்சியை உணர்த்துகின்றன. இக்கோவிலின் வடபுறச் சுவரில் காணப்படும் சிவபெருமான் சிலை கலைத்திறனுடன் உள்ளது. இதில் சிவனார் ஆடலரசனாகக் காணப்படுகிறார். அரக்கன்மீது வலக்காலை ஊன்றி உடுக்கை ஏந்தி, களிநடனம் புரிகிறார். இதே வடபுறச் சுவரில் சிவனும், பார்வதியும் இணைந்து காணப்படும் காட்சி மிக அழகாக செதுக்கப்பட்டுள்ளது.

அடுத்து சோழர் சிற்பக் கலைக்கு பெயர் பெற்றதாக விளங்குவது இரண்டாம் இராஜராஜன் காலத்தில் தாராசுரத்தில் கட்டப்பட்ட அயராவதி ஈஸ்வரர் கோவிலில் காணப்படும் சிற்பங்களாகும். இங்குள்ள இராவணன் சிலையில் காணப்படும் தூய்மையும், அணி அழகும் பிற்காலச் சோழர் கலையின் வளர்ச்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளன.

இவ்வாறு தென்னக வரலாற்றில் ஒரு சிறந்த பண்பாட்டிற்கும், நாகரிக வளர்ச்சிக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்வது சோழர் காலச் சிற்பங்களேயாகும். சோழர்கால சிற்பக்கலையின் முதிர்ந்த வளர்ச்சியை பிற்காலத்தில் பாண்டியர், விஜய நகர மற்றும் நாயக்க மன்னர்களின் காலத்தில் காணலாம்.

**சோழர் கால இசைக்கலை**

சோழ மன்னர்கள் இசைக் கலையையும் பேணிப் பாதுகாத்து வந்தனர். நாயன்மார்களின் பக்திப் பாடல்கள் சோழ அரசர்களின் ஆதரவுடன் நம்பியாண்டார் நம்பி என்பவரால் தொகுக்கப்பட்டது. தேவாரப் பாடல்களும் இசை வடிவில்

பாடப்பட்டன. கிடாங்கில் என்ற இடத்திலுள்ள திண்டீஸ்வரர் கோவிலில் பாடல்கள் பாடி வீணை இசைத்த பாடகர் ஒருவருக்கு முதலாம் இராஜராஜசோழன் நிலம் தானம் அளித்ததாக திண்டிவனம் கல்வெட்டு தெரிவிக்கிறது.. திருட்டாவதுரையிலுள்ள மகாதேவ கோவிலில் தினசரி திருப்பதிகம் பாடி வந்த இரண்டு பிராமணர்களுக்கு முதலாம் பராந்தகன்

## 3. சோழர் கால சமுதாய, பொருளாதார, பண்பாட்டு நிலை (SOCIAL, ECONOMICAL AND CULTURAL CONDITION UNDER CHOLAS)

சோழர் காலத்தில் காணப்பட்ட சமுதாய, பொருளாதார, பண்பாட்டு நிலையினை விரிவாகக் காணலாம்.

### 1. சமுதாய நிலை

சோழர் கால சமுதாயத்தில் பலவகைப்பட்ட சாதி மக்கள் வாழ்ந்து வந்தனர். முற்கால சோழர் காலத்தில் பிராமணர்கள், வெள்ளாளர்கள், வாணிகர்கள் ஆகியோர் தனித்தனி கிராமங்களில் வசித்து வந்தனர். ஆனால் வெள்ளாளர்கள் தாங்கள் வசித்த பல கிராமங்களை ஒன்று சேர்த்து நாடு என்ற சமூக அமைப்பை ஏற்படுத்தியிருந்தனர். பிராமணர்களும் வெள்ளாளர்களும் ஒரு சமூக உறவை அமைத்துக் கொண்டனர். இதன் மூலம் ஒருவருக்கொருவர் நன்மையடைந்தனர். விவசாயத்தில் ஈடுபட்ட மக்களைக் கட்டுப்படுத்த சில சடங்குகளையும், கடவுள் வழிபாட்டையும் அறிமுகப்படுத்தினார்கள்.

சோழர்கள் காலத்தில் வாணிகர்கள் நகரத்தார் என்று அழைக்கப் பட்டனர். இவர்கள் கிராமங்களுக்குச் சென்று பொருட்களை வாங்கி கிராமச் சந்தைகளில் விற்றனர். இந்த வாணிகர்கள் பணவசதி படைத்த வெள்ளாளர்களுக்கு அடங்கியே வாணிபம் செய்தனர். மேலும் சமுதாயத்தில் தச்சன், கருமான், தட்டான், கன்னான், கொத்தன் போன்ற ஐந்து வகைப்பட்ட கம்மாளர்கள் இருந்தனர். இவர்கள் வெள்ளாளர் களுக்குத் தேவைப்படும் அனைத்துப் பொருட்களையும்

கருவிகளையும் செய்து கொடுத்தனர். இவர்கள் தங்களுக்குப் பல உரிமைகளைப் பெற போராடி வந்தனர். பிராமணர்கள்

சோழர் காலத்தில் சைவ அந்தணர்கள் சமுதாயத்தில் சிறப்பிடம் பெற்றிருந்தார்கள். பூனூல் அணிந்து, வெள்ளை ஆடை அணிந்தனர். இவர்கள் பரம்பரையாக சிவன் கோவில்களில் வேலை பார்த்து வந்தனர். இவர்கள் வீட்டுத் திருமணத்தில் பல வகையான சடங்கு முறைகள் பின்பற்றப்பட்டன. திருமணத்தின் போது சோதிடம் முக்கிய இடம் வகித்தது. சோதிடர்கள் குறித்துக் கொடுத்த நாளிலேயே திருமணங்கள் நடைபெற்றன.

கதாகாலட்டு பிராமணர்கள் வேத சாஸ்திரங்களில் வல்லவர்களாக இருந்தனர். மேலும் கோவில் மண்டபங்களில் அமர்ந்து மகாபாரதம் போன்ற வடமொழி நூல்களைப் பொது மக்களுக்கு எடுத்துக் கூறி சேபம் செய்தனர். அவர்களது புலமையைக் கண்டு மகிழ்ச்சியடைந்த மக்கள் ஊர்ப் பொது நிலங்களுள் சிலவற்றை வேதவிருத்தி, பட்டவிருத்தி, புராண விருத்தி என்ற புனைப் பெயர்களுடன் இறையிலி நிலங்களாகக் கொடுத்து ஆதரித்தனர்.

**அனுலோமர், பிரதிலோமர்**

சோழர்கள் காலத்தில் அனுலோமர், பிரதிலோமர் என்ற வகுப்பினர் இருந்தனர். இவர்கள் கலப்புத் திருமணம் மூலம் தோன்றிய புதிய வகுப்பினர் என்று அறியப்படுகிறது. அனுலோமர் என்பவர்கள் உயர் சாதி ஆணுக்கும், தாழ்ந்த சாதி பெண்ணுக்கும் பிறந்தவர்கள் ஆவர். பிரதிலோமர் என்பவர்கள் உயர்சாதி பெண்ணுக்கும், தாழ்ந்த சாதி ஆணுக்கும் பிறந்தவர்கள் ஆவர். அனுலோமர்கள் கட்டிடங்கள், தேர், ஆடம்பர வண்டி முதலியவற்றைக் கட்டுதல், கோபுரங்கள், மண்டபங்களில் பணி செய்வது, உருவச் சிலைகள் செய்வது போன்ற பணிகளைச் செய்தனர். இவர்கள் ரதகாரர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். உபநயனம் செய்து கொள்ளும் உரிமை பெற்றிருந்தனர். பிரதிலோமர் என்பவர்கள் நெசவுத் தொழில் செய்து வந்தனர். இவர்கள் பிராமணர்களுக்கும், அரசர்களுக்கும், இறைவனுக்கும் சேவைகள் செய்து வந்தனர்.

**இடையர்கள்**

கீரனூர் கல்வெட்டு மூலம் சோழர் காலத்தில் வாழ்ந்து வந்த இடையர்களைப் பற்றி நாம் அறிந்து கொள்ள முடிகிறது. இவர்களுக்கு சோழ மன்னர்கள் சில தனி உரிமைகளை வழங்கியிருந்தனர். இவர்கள் நன்மை தீமை காலங்களில் பேரிகை முழக்கலாம். நன்மைக்கு பல்லக்கில் ஏறிச் செல்லலாம். தீமைக்கு பாடைகட்டி அதன்மேல் சுட்டுக்கட்டிக் கொள்ளலாம். தங்கள் வீடுகளுக்கு இவர்கள் சுண்ணாம்பு அடித்துக் கொள்ளவும், இருபுறமும் வாசற்படிகள் வைத்துக் கொள்ளவும் உரிமை வழங்கப்பட்டது.

சாதிகள் ஒன்றோடொன்று கலந்ததால் பல புதிய சாதிகள் நூற்றுக் கணக்கில் தோன்றின. பறையர் என்ற சாதியினரைப் பற்றிலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் கூறப்பட்டுள்ளது. சில காரியங்களுக்கு இவர்கள் பறையடித்ததால் இந்தப் பெயர் வந்திருக்கக் கூடும். இவர்கள் தனிச் சேரிகளில் வாழ்ந்தனர். புல்லுப் பறிக்கிற பறையரும், ஆவுரித்துத் தின்னும் பறையரும் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்டனர். பிற்காலங்களில் இந்தத் தீண்டாமை என்ற கொடிய பழக்கம் தமிழகத்திற்கு பெரும் இழுக்கை ஏற்படுத்தி விட்டது.

**வலங்கை-இடங்கை பிரிவினர்**

சோழப் பேரரசு காலத்தில் பிராமணர், வெள்ளாளர் ஆகியோர் அல்லாத பிற சாதிகளிடையே பாகுபாடு தோன்றியது. அது வலங்கை இடங்கை என்ற இரண்டு சாதிப் பிரிவுகள் ஆகும். இந்த இரண்டு பிரிவினருக்குமிடையே கடுமையான போராட்டம் ஏற்பட்டது. இந்தப் பூசல்கள் சோழப் பேரரசில் தோன்றி, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரையிலும் காணப்பட்டது.

**தோற்றம்**

இந்த வலங்கை-இடங்கை பிரிவுகளின் தோற்றத்தைப் பற்றி மக்கின்சி நூற்சுவடி என்ற கையெழுத்துப் பிரதி நூலில் பல காரணங்கள் சொல்லப்பட்டுள்ளன. வலங்கைப் பிரிவில் 98 சாதிகளும், இடங்கை பிரிவில் 98 சாதிகளும் இருந்ததாக அந்தச் சுவடியில் குறிப்பிடப் பட்டுள்ளது. கரிகால சோழன்

காலத்தில் தான் இந்தப் பிரிவுகள் தோன்றின என்று ஒரு வரலாறு தெரிவிக்கிறது. இவர் காலத்திய கல்வெட்டு ஒன்றில் இப்பிரிவுகள் பற்றி கூறப்பட்டுள்ளது. காசிபமுனிவர் என்பவர் இயற்றிய வேள்வியை அரக்கர்கள் அழித்தார்கள் என்றும், எனவே தன்னையும் வேள்வியையும் காப்பாற்றிக் கொள்ள 98 சாதிகளை அந்த முனிவர் தோற்றுவித்தார் என்றும் அந்த கல்வெட்டு கூறுகிறது. இதனை வரலாற்றாசிரியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

வரலாற்று முறைப்படி ஆராய்ந்து பார்த்தால், போர்க்களத்தில் அரசனின் வலது புறத்தில் நின்று போர் செய்பவர்கள் வலங்கையர் என்றும், இடது புறத்தில் நின்று போரிட்டவர்கள் இடங்கையர் என்றும் அழைக்கப் பட்டதாக அறியலாம். இந்தப் பிரிவுகள் பின்னர் சமூக உறவிலும் வேரூன்றி விட்டது. காஞ்சிபுரத்தில் இந்தப் பாகுபாடு அதிகமாகக் காணப்பட்டது.

**மோதல்கள்**

தஞ்சை மாவட்டம் நன்னிலம் தாலுகாவிலுள்ள ஒரு கிராமத்தை இந்த இரு பிரிவினரும் தங்களுக்குள் ஏற்பட்ட கலகத்தில்எரித்து அங்குள்ள கோவிலை கொள்ளையடித்ததாக முதலாம் குலோத்துங்கனின் திருவரங்கம் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. - இப்படி இந்த இரு பிரிவினருக்கும் கலகம் ஏற்பட முக்கியக் காரணம் பிரிவினர், இடங்கை பிரிவினரை விட அரசாங்க செல்வாக்கும், வாழ்க்கை வசதிகளையும் பெற்றதேயாகும். மேலும் படையிலும் சிறப்பு சலுகைகளைப் பெற்றிருந்தனர். இடங்கைப் பிரிவினர் போரில்லாத காலங்களில் வணிகர்களாகவும், தொழிலாளர்களாகவும் பிழைப்பு நடத்தி வந்தனர்.

பொதுவாக வலங்கைப் பிரிவினர் மற்றும் பிராமணர், வெள்ளாளர், வன்னியர் போன்ற சாதியினர் இடங்கைப் பிரிவினருக்கு இன்னல்களை ஏற்படுத்தினர். சில சமயங்களில் வலங்கையினர், இடங்கையினர் ஆகிய இரு பிரிவினரும் சேர்ந்து பிராமணர்களையும், வெள்ளாளர்களையும் எதிர்த்துப் போராடினர். தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆடுதுறையில் வெள்ளாளர்களும்,

பிராமணர் களும் தங்கள் நிலங்களை ஆக்கிரமித்த போது இந்த இரு பிரிவினரும் சேர்ந்து அரசிடம் முறையிட்டதாக அறிகிறோம்.

முதலாம் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில் வலங்கை இடங்கை பிரிவினருக்கிடையே பெரிய மோதல் ஏற்பட்டது. இதற்கு முக்கியக் காரணம் இடங்கை பிரிவினர் மட்டும் விதிக்கப்பட்டிருந்த சுங்க வரியே ஆகும். கலகத்தில் ஈடுபட்ட இடங்கை பிரிவினர் கோவில்களை இடித்துத் தீயிட்டனர், கலகம் பரவியது. எனவே முதலாம் குலோத்துங்கன் பண்டைக் காலம் முதல் விதிக்கப்பட்டிருந்த சுங்க வரியை ரத்து செய்தான். இதேபோல பிரிவினருக்கும், கைக்கோளருக்கும் இடையே உரிமைகளுக்காகவும், விருதுகளுக்காகவும் பூசல்கள் தோன்றின.

சோழர் காலத்தில் பிராமணரையும், வெள்ளாளரையும் எதிர்த்து பல கலகங்கள் தோன்றின. இந்தக் கலகக்காரர்களுக்கு - இருபதினாயிரம் காசுகள் அபராதம் விதிக்கப்படும் என்றும், அவர்கள் நிலங்கள் பறிமுதல் செய்யப்படும் என்ற செய்தியை குலோத்துங்க சோழன் காலத்திய கல்வெட்டு தெரிவிக்கிறது. பிராமணர்களுக்குள் கலகம் நடந்ததற்கும் சோழர்களுடைய கல்வெட்டுகளில் ஆதாரங்கள் உள்ளன.

**அடிமை முறை**

சோழர் காலத்தில் அடிமை முறை வழக்கத்தில் இருந்தது. அடிமைகள் பொதுவாக கோவிலையொட்டியே அடிமைப்பட்டனர். கோவிலுக்கு அடிமைகள் விற்கப்பட்டனர். சிலர் தங்கள் விருப்பப்படி தாங்களாகவே கோவில்களுக்கு அடிமையாயினர். சில நேரங்களில் கோவிலுக்குத் திருப்பணி செய்வதற்கு அடிமைகள் வாங்கப்பட்டனர்.

**உணவு**

சோழர் காலத்தில் முக்கியமான உணவுப் பொருளாக விளங்கியது அரிசியேயாகும். அரிசி தவிர சோளம், கம்பு, கேழ்வரகு, பயிறு, உளுந்து, கடலை, எள் முதலியவையும் முக்கிய உணவுப் பொருட்களாக விளங்கின. மக்கள் அவல்,

பொரி, பலா, வாழை பழங்களையும் விரும்பி உண்டனர். பால் சோறு, புளி சோறு போன்ற வகைகளும் இருந்தன. கட்டுச்சோறு உண்ணும் பழக்கமும் இருந்தது. புல்லரிசி, அல்லிக்காயரிசி, மூங்கிலரிசி, தோரை ஆகியவற்றையும் விரும்பி உண்டனர். கள் வகைகளை அருந்தினர். நறுமணம் வீசும் விறகுகள் செல்வர் வீட்டு சமையல் அடுப்பில் எரிக்கப் பட்டன.

**ஆடை**

ஆண்கள் முழந்தாள் வரை ஆடையணிந்தனர். தலையில் தலைப்பாகை அணிந்தனர். வேட்டியைக் கச்சமாகக் கட்டிக் கொண்டனர். பெண்கள் கொசுவம் வைத்து புடவைகள் அணிந்தனர். ஆடைகள் பல வகைப்பட்டிருந்தன. பாலாடை போன்ற மெல்லிய துணி, இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு பட்டுத் துணிகள் ஆகியவை அணிந்தனர். படை வீரர்கள் முழந்தாள் அளவாக வட்டுடை அணிந்தனர். வேடர்கள் செருப்பு அணிந்தனர்.

**திருமணம்**

சோழர் காலத்தில் சமுதாயத்தில் திருமணம் முக்கிய இடம் பெற்றது. திருமணத்திற்கேற்ற நல்ல நாளும் நேரமும் சோதிடர்கள் கணித்துக் கூறினார்கள். ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய முதல் உரிமை பெற்றவன் தாய்மாமன் ஆவான். மணமகன் பெண்ணை நாடி மணமகள் வீட்டிற்கு வரவேண்டும். மணமகன் பெண்ணுக்குப் பரிசம் போட வேண்டும். பெண் வீட்டார் மணமகளுக்கு வரதட்சணை வழங்கும் பழக்கம் இல்லை. பெண்களுக்கு நிலங்கள் மகட்கொடையாகக் கொடுக்கும் வழக்கம் இருந்தது. மனைவியின் சீதனச் சொத்தை செலவு செய்யும் உரிமை கணவனுக்கு இல்லை. திருமணச் சடங்குகளை பிராமணர் மந்திரம் ஓதி நடத்தி வைத்தனர். பெண்ணின் பெற்றோர் மணமகனுக்குத் தம் பெண்ணைத் தாரைவார்த்துக் கொடுப்பர்.

**பொழுதுபோக்கு**

சோழர் காலத்தில் பலவகையான பொழுதுபோக்கு அம்சங்கள் காணப்பட்டன. குதிரைப் பந்தயம், யானைப் பந்தயம், கோழிச்சண்டை முதலியன

பொழுதுபோக்குகளாக காணப்பட்டன. பெண்கள் நீர் விளையாட்டிலும், பந்து விளையாட்டிலும் பங்கு கொண்டனர். விழாக் காலங்களில் பலவேறு பொழுது போக்குகளிலும், விளையாட்டுகளிலும், வேடிக்கைகளிலும் மக்கள் ஈடுபட்டனர். இசை, நாடகம், கூத்து போன்ற பொழுது , போக்குகளிலும் பங்கு கொண்டனர்.

பல மேல்தள மக்கள் பல்லக்கில் பயணம் செய்தனர். நகைகள் யவனர்கள் செய்த பெட்டிகளில் மூடி வைக்கப்பட்டன. மருத்துவமும் சோழ நாட்டில் நன்கு வளர்ச்சியடைந்திருந்தது. நோயை மருந்தினாலும், அறுவையினாலும் மருத்துவர்கள் குணப்படுத்தினர். வாதம், பித்தம், சிலேட்டுமம் என்ற மூன்று நாடிகளை நன்கு ஆராய்ந்திருந்தனர். டங்களில் மருத்துவ சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன.

**சில சமூகப் பழக்கவழக்கங்கள்**

சங்க காலத்தில் காணப்பட்ட சில பழக்கவழக்கங்கள் சோழர் காலத்திலும் காணப்பட்டன. கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நாள் அன்று குன்றின் மேல் விளக்கு வைத்தனர். வெள்ளப் பெருக்கு ஏற்பட்டால் முரசு அறைந்து மக்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மன்னரின் வரலாறு நாடகமாக நடத்தப்பட்டது. குழந்தைகள் பிறந்தவுடன் மண் பொட்டு வைக்கப்பட்டது. அந்த குழந்தைகளுக்கு சாதகம் கணித்து எழுதி வைக்கப்பட்டது. பெயர் சூட்டு விழா நடத்தப்பட்டது. குழந்தைகளுக்கு காவலாக வீட்டில் விடிவிளக்கு நடத்தப்பட்டது. பிணங்களை எரிக்கும் பழக்கம் இருந்தது. பெண்களும் சுடுகாட்டிற்கு செல்லும் வழக்கம் இருந்தது. விருந்தினர் வந்த போது அவர்களுக்கு வெற்றிலை பாக்கு வழங்கப்பட்டது. இவ்வாறு சோழர் காலத்தில் சில சமூக பழக்க வழக்கங்கள் நடைமுறையில் காணப்பட்டன.

**பொருளாதாரநிலை**

சோழர் காலப் பொருளாதாரத்தில் விவசாயமும், வாணிபமும் முக்கியப் பங்கு வகித்தன. சோழர் ஆட்சிக் கால ஆரம்பத்தில் சமூகப் பொருளாதாரமாக

இருந்தது. ஆனால் அவர்கள் ஆட்சியின் இறுதிக் காலத்தில் அது சந்தைப் பொருளாதாரமாக மாறியது.

**நீர்ப்பாசனம்**

சோழர் காலப் பொருளாதாரத்தில் நீர்ப்பாசனம் முக்கியப் பங்கு வகித்தது. சோழ நாட்டைக் காவிரி நாடு எனவும், பொன்னிநாடு எனவும் பூபதி புலவர் பலர் புகழ்ந்துள்ளனர். கரிகாலன் என்ற பெருவேந்தன் காவிரியின் இருமருங்கும் கரையெடுத்து அதனை சோழ நாட்டின் நெல்விளைவிற்குப் பயனுள்ளதாகச் செய்ததை பொன்னிக்கரை கண்ட என்ற பெயரால் ஒட்டக்கூத்தர் குறிப்பிட்டுள்ளார். கரிகாலனுக்குப் பின்பு கி.பி.1068-ல் வீர ராஜேந்திர சோழனும் காவிரியாற்றிற்குக் கரைகள் அமைத்தார். கி.பி.பத்தாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த சோழ மன்னர்கள் பல ஆறுகளையும் ஏரிகளையும் அமைத்தார்கள்.

கொள்ளிடம் அணையிலிருந்து பிரிந்து செல்லும் மதுராந்தக வடவாறும், தஞ்சாவூருக்கு வடபுறத்தில் பாயும் வடவாறும் முதல் பராந்தக சோழன் காலத்தில் அமைக்கப்பட்டன. உய்யங்கொண்டான், கீர்த்திமான் ஆகிய ஆறுகள் முதலாம் இராஜராஜசோழனால் வெட்டப் பட்டன. சிதம்பரத்திற்கருகிலுள்ள வீராணம் ஏரி முதலாம் பராந்தக சோழனால் அமைக்கப்பட்டது. மதுராந்தகத்திலுள்ள ஏரியும், திரிபுவனியிலுள்ள ஏரியும் உத்தம சோழர் ஆட்சியில் வெட்டப்பட்டன. கங்கை கொண்ட சோழபுரத்துக்கு அருகிலுள்ள சோழகங்கம் என்ற ஏரி முதல் இராஜேந்திர சோழன் காலத்தில் அமைக்கப்பட்டது. ஸ்ரீரங்கத்திற்குக் கிழக்கே கோவிலடிக்கு அருகே உள்ள கிராண்ட் அணைக்கட்டு 1063 முதல் 1070 வரை ஆட்சி புரிந்த வீர ராஜேந்திர சோழனால் அமைக்கப்பட்டது. இவ்வாறு சோழ மன்னர்கள் நீர்ப் பாசனத்திற்காக எண்ணற்ற ஆறுகளையும், கால்வாய்களையும், அணைக் கட்டுகளையும் கட்டினர்.

**விவசாயம்**

விவசாயத்திற்கு நிலங்கள் பதப்படுத்தப்பட்டன.' சோழர் காலத்தில் பிரமதேயக் கிராமங்களும் விவசாய வளர்ச்சியைப் பெருக்கியது. நிலங்கள்

விளையும் தரத்திற்கேற்ப நன்செய், புன்செய், நத்தம், திருநந்தவனம், கொல்லை, கண்டம் என்று பலவகையாக வகைப்படுத்தப் பட்டது. வெள்ளாளர்கள் வாழ்ந்த கிராமங்களில் , விவசாயம் அதிகமாக காணப்பட்டது. சில தனி நபர்கள் விவசாய நிலங்களை வாங்கி, விற்று பெருநிலக்கிழார்களாக மாறினார்கள்.

சோழர் காலத்தில் விவசாய விளைச்சல் இரண்டு பங்காகப் பிரிக்கப்பட்டிருந்தது. நிலச் சொந்தக்காரர்களுக்கு ஒரு பங்கு கொடுக்கப் பட்டது. இதற்கு மேல்வாரம் என்று பெயர். மற்றொரு பங்கை குடியானவர்கள் வைத்துக் கொண்டனர். இதற்கு குடிவாரம் என்று பெயர். மன்னர் இந்த இரண்டு பங்கிலிருந்தும் தனக்கு வேண்டிய வரியை வசூலித்துக் கொண்டார்.

**கைத்தொழில்கள்**

விவசாயத்திற்கு அடுத்தபடியாக கைத்தொழில்கள் பல படைபெற்றன. அவைகளில் முக்கியமானது உலோகத் தொழில் ஆகும். தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு, துத்தநாகம் போன்ற லோகங்களைப் பயன்படுத்தி பல பொருட்கள் தயாரிக்கப்பட்டன. தங்கத்தில் பல வகைப்பட்ட ஆபரணங்கள் செய்யப்பட்டன. இரும்பைப் பயன்படுத்தி அம்புகள், குத்தீட்டிகள் செய்யப்பட்டன. நெசவுத் தொழிலும் பரவலாகக் காணப்பட்டது. பல ஊர்களில் தறிகள் காணப்பட்டன. அவைகள் மூலமாக துணி நெய்யப்பட்டது. மதுரை, சிதம்பரம், காஞ்சிபுரம் ஆகிய ஊர்களில் தறி வேலைகள் அதிகமாக நடைபெற்றது. சோழர் காலத்தில் உப்புத் தொழிலும் செழிப்பாக நடைபெற்றது. கப்பல் கட்டுதல், தேர்கள் செய்தல் போன்ற | தொழில்களும் நடைபெற்றன. மேலும் மாடு மேய்ப்பதும், மீன் பிடிப்பதும் முக்கியமான தொழில்களாக இருந்தன. மண்பானை செய்யும் தொழில் இருந்தது. கிராமங்களில் கைவினைப் பொருட்கள் செய்யப்பட்டன.

சோழ மண்டலக் கடற்கரையில் நாகப்பட்டிணம், காரைக்கால், மாமல்லபுரம், வீரசோழப்பட்டிணம், மைலாப்பூர் முதலிய நகர்கள் வாணிகத்தில் சிறந்து விளங்கின. சோழ நாட்டு வாணிகர்கள் மேற்கே உள்ள அராபிய நாட்டினரோடும், பாரசீகரோடும், கிழக்கேயுள்ள சுவர்ண பூமி, ஸ்ரீவிஜயம், சுவர்ணதீபம், ஜாவா,

கம்போஜம், சீனம் ஆகிய நாட்டினருடன் வாணிபம் நடத்தினர். இந்த வணிகர்கள் நானாதேச திசையாயிரத்து ஐநூற்றுவர், மணிக்கிராமத்தார், நகரத்தார், வளஞ்சியர், அஞ்சு வண்ணத்தார் எனப் பல குழுவினர்களாகக் காணப்பட்டனர்.

**வாணிபம்**

இவர்களில் நானாதேச திசையாயிரத்து ஐநூற்றுவர் என்பவர்கள் பல திசைகளுக்கும் சென்று வாணிபம் செய்த ஐநூறு வாணிகர்கள் அடங்கிய குழுவாகும். இவர்களைப் பற்றி சுமத்திராவில் உள்ள கல்வெட்டில் குறிப்பு உள்ளது.

மணிக்கிராமத்தார் என்ற குழுவினர் தலை நகரங்களிலும், கடற்கரைப் பட்டிணங்களிலும் வசித்து வந்தனர். இவர்கள் அயல் நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்தனர். மணிக்கிராமத்தார் பற்றி பல கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நகரத்தார் என்பவர்கள் காஞ்சிபுரம், மாமல்லபுரம், நந்திபுரம், பழையாறை, மைலாப்பூர் முதலிய நகரங்களிலிருந்து வாணிகத் தொழிலை நடத்தி வந்தனர். நகர ஆட்சியிலும் முக்கியப் பங்குவகித்தனர். வளஞ்சியர் என்ற குழுவினர் தென்னிலங்கை வளஞ்சியர் என்று குறிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் ஈழ நாட்டிலிருந்து தமிழ் நாட்டில் குடியேறி வாணிபம் செய்தவர்கள் என்று நாம் அறிந்து கொள்ளலாம். அருப்புக்கோட்டையில் உள்ள சுந்தரேஸ்வரர் கோவிலில் உள்ள கல்வெட்டில், தென்னிலங்கை வளஞ்சியரில் ஒருவராகிய சேவுகத்தேவன் என்பவர் பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது. "திருக்கண்ணபுரத்தில் காணப்படும் கல்வெட்டு ஒன்றிலும் தென்னிலங்கை வளஞ்சியர் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

அடுத்து அஞ்சு வண்ணத்தார்களைப் பற்றியும் சோழர் கால கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. ஆனால் இவர்கள் யார் என்பது பற்றி வரலாற்றாசிரியர்களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. எல்லிஸ் என்ற ஆராய்ச்சியாளர் அஞ்சு வண்ணத்தார் என்ற தொடர் ஐந்து வகையான சாதிகளையும், அவர்கள் உரிமைகளையும் குறிக்கும் என்றார். ஆனால் சதாசிவப்

பண்டாரத்தார் பல்சந்தமாலை என்ற பழைய தமிழ் நூலிலிருந்து சில ஆதாரங்களைக் காட்டி ஆஞ்ச வண்ணத்தார் என்பவர்கள் முகமதிய சமயத்தைச் சார்ந்த வியாபாரக் குழுவினர் என்றார். இவர்கள் மத்திய தரைக்கடல் பிரதேசத்தைச் சார்ந்த யவனர்கள் என்றும், காலிப் ஆட்சிக்கு அடங்கியவர்கள் என்றும், அல்லாவை வணங்கியவர்கள் என்றும் கூறப்படுகிறது. கிழக்கு கடற்கரைப் பகுதியில் உள்ள கீழக்கரையிலும் நாகப்பட்டிணத்திலும் இந்த அஞ்சு வண்ணத்தார் தங்கி வாணிபம் செய்ததற்கு கல்வெட்டுகளில் ஆதாரங்கள் உள்ளன.

**வரி விதிப்பு முறை**

சோழப் பேரரசில் நிலவரியே அரசாங்கத்தின் முக்கிய வரியாக திகழ்ந்தது. இந்த நிலவரி கடமை, காணிக்கடன், இறை என்று அழைக்கப் பட்டது. இந்த வரியை பஞ்சவார வாரியத்தினர் மக்களிடமிருந்து ஆண்டுதோறும் பெற்று தலைநகருக்கு அனுப்பி வைத்தனர். நிலங்களில் விளைந்த விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு வரியாகப் பெறப்பட்டது. இந்த நிலவரி தவிர, தறியிறை, செக்கிறை, மனையிறை, அங்காடிப்பாட்டம், தட்டாரப்பாட்டம், இடைப்பாட்டம், நீர்க்கூலி, நடுகாவல் வரி போன்ற வரிகளும் வசூலிக்கப்பட்டன. இதன் மூலம் சோழப் பேரரசில் நடைபெற்ற எல்லாத் தொழில்களுக்கும் வரி விதிக்கப்பட்டதாக நாம் அறியலாம். ஒவ்வொரு வரியும் அந்தந்த தொழில் செய்தவர்களிடம் மட்டுமே வாங்கப்பட்டன. மேலும் இரவு வரி, போர் வரி, காவிரிக்கரை விநியோகம், சபா விநியோகம் போன்ற வரிகளும் வசூலிக்கப்பட்டன. வாணிகத்திற்காக வெளிநாடுகளிலிருந்து கடல் வழியாகவும், உள் காடுகளிலிருந்து பெருவழி மூலமாகவும் வரும் பொருட்கள் மீது விதிக்கப்பட்ட வரிக்கு சுங்க வரி என்று பெயர்.

சோழப் பேரரசில் கி.பி.1001-ல் முதலாம் இராஜராஜசோழன் பூட்சியிலும், 1086-ல் முதலாம் குலோத்துங்கன் ஆட்சியிலும், 1236-ல் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியிலும் மூன்று தடவைகள் நிலங்கள் அளக்கப்பட்டன. நிலங்கள் 16 சாண் நீளம் உள்ள கோலினால் அளக்கப் பட்டது. அதற்கு உலகளந்த கோல் என்று பெயர். நில அளவை செய்த அதிகாரி உலகளந்தான் என்று அழைக்கப்பட்டார். குழி, மா,

வேலி என்ற முறையில் நிலங்கள் அளக்கப்பட்டன. நிலங்களின் எல்லைகள் நன்றாகத் தெரியும் படி எல்லைக் கற்கள் நடப்பட்டன.

**நில உரிமை**

சோழப் பேரரசில் நிலங்களை அனுபவித்து வந்தோரின் உரிமைகளைக் கொண்டு அந்த நிலங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. உழவுத் தொழிலையே வழிவழியாகக் கொண்டு நிலங்களை அனுபவித்து வந்த குடிகளுக்கே உரிமையுள்ள வெள்ளான் வகை ஒன்றாகும். இந்த வகை நிலங்களை இக்காலத்தில் வழங்கும் ரயத்துவாரி முறை நிலங்களுக்கு ஒப்பிடலாம்.
2. தேவதானம், திருவிடையாட்டம், பள்ளிச்சந்தம், மடப்புறம், சாலாபோகம், பிரமதேயம் என்று தானமாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் அழைக்கப்பட்டன.
3. மூன்றாவது வகை நிலங்கள் சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்ததற்கு அவற்றைச் செய்வோருக்கு கொடுக்கப்பட்டதாகும். இவை ஜீவிதபோகம், விருத்தி, காணி, புறம், பட்டி என்று அழைக்கப்பட்டன. பிற்காலத்தில் இவை மானியம் என்றும் அழைக்கப்பட்டன.

அரசர்களால் தானமாக சீலமும், புலமையும் படைத்த பிராமணர் களுக்கு வழங்கப்பட்ட பிரமதேயக் கிராமங்களில் ஏகபோகம், கணபோகம் என்ற இருவகை உரிமைகள் இருந்தன. ஒரு கிராமம் முழுவதிற்கும் ஒரே பிராமணர் உரிமை பெற்றிருந்தால் அது ஏகபோக பிரமதேயம் என்றும், ஒரு கிராமத்தில் அங்கு வசித்த பல பிராமணர்களுக்கு உரிைைமயிருந்தால் அது கணபோக பிரமதேயம் என்றும் அழைக்கப்பட்டன.

தேவதானம் என்பது சிவன் கோவில்களுக்கு அளிக்கப்பட்ட இறையிலிக் கிராமம் ஆகும். திருமால் கோவில்களுக்கு அளிக்கப்பட்ட நிலம் திருவிடையாட்டம் எனவும், சைன, பௌத்த ஆலயங்களுக்கு விடப்பட்ட நிலங்கள் பள்ளிச்சந்தம் எனவும் அழைக்கப்பட்டன. இலவசமாக உணவு அளிக்கும் அறச்சாலைகளுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் சாலாபோகம் எனப்பட்டன.

திருக்கோவில்களில் சேவை புரிந்தவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் பதியிலார்க்கணி, நட்டுவக்காணி, சாக்கைக்காணி, கூத்தாட்டுக்காணி, வீணைக்காணி என்று அழைக்கப்பட்டன.

உதிரப்பட்டி என்பது போரில் உயிர் நீத்த வீரர்களின் மனைவி மக்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களாகும். வன்னியப்பற்று என்பது படைத் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களாகும். ஏரிப்பட்டி என்பது நீர்ப்பாசன ஏரிகளைப் பாதுகாத்தவர்களுக்கு வழங்கப்பட்ட நிலமாகும்.

**நாணயங்களும்அளவைகளும்**

சோழப் பேரரசில் தங்கம், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களில் செய்யப்பட்ட நாணயங்கள் வழங்கி வந்தன. உத்தம சோழர் காலத்தில் வெளியிடப்பட்ட பொன் நாணயமே மிகவும் பழமை வாய்ந்தது ஆகும். இந்த நாணயத்தில் நடுவில் புலி உருவமும், வலப் பக்கத்தில் மீன் உருவமும் பொறிக்கப்பட்டிருந்தது. இந்த நாணயம் வட்ட வடிவமாக இருந்தது. அடுத்து இராஜராஜசோழன் காலத்திற்கு முன்பும், பின்பும் மாடை, காசு என்ற இருவகை நாணயங்கள் வழக்கத்தில் இருந்தன. மாடை என்பது ஒரு 40 குன்றிமணி எடை கொண்ட செம்பொன் நாணயமாகும். காசு என்பது 120 குன்றிமணி எடை கொண்ட பொன் நாணயமாகும். ஈழக்காசு என்ற ஒரு வகை நாணயமும் வழக்கத்தில் இருந்தது. சோழ நாராயணன், காணம் போன்ற நாணயங்களும் வழக்கத்தில் இருந்ததாகத் தெரிகிறது.

சோழ மன்னர்களின் கல்வெட்டுகளில் கச்சாணம், அக்கம், திரமம் போன்ற நாணயங்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. 12 அக்கம் என்பது ஒரு காசுக்குச் சமமாகும். காஞ்சிபுரம், உடையார்குடி திருப்புகலூர் முதலிய இடங்களில் காணப்பட்ட கல்வெட்டுகளில் திரமம் என்ற நாணயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது டிராக்மா என்ற கிரேக்க நாணயத்தின் மொழி பெயர்ப்பாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். இவ்வாறு சோழர் காலத்திய பொருளாதார நிலை இருந்தது.எண்ணற்ற சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மதுரை

மீனாட்சியம்மன் கோவிலுள்ள மணி மண்டபம், திருப்பத்தூரில் உள்ள திருத்தொண்டத் தொகையின் மண்டபம், திருநெல்வேலி குலசேகரன் மண்டபம் போன்றவை பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்தவையாகும்.

## அலகு - 4

### 1. முதல் பாண்டிய அரசு (கி.பி. 550-950)

**அரசின் தோற்றம்**

இது மதுரையைத் தலைநகரமாக கொண்டு ஏற்பட்டதாகும். இதன் முதல் மன்னர்

(1) 'கடுங்கோன்' (கி.பி. 550-90) ஆவார். இவர் தமிழ்நாட்டை அது வரை ஆண்ட களப்பிரர்களைத் துரத்தி விட்டு பாண்டிய அரசை ஏற்படுத்தினார். இவருக்குப் பின் பதவி யேற்ற மன்னர்

(2) மாறவர்மன் அவனி சூளாமணி (கி.பி.590-620) ஆவார். இவர் கடலைப் போன்ற படையை வைத்திருந்தார் என்று பல தாமிரப் பட்டயங்கள் குறிப்பிடுகின்றன. இவருக்குப் பின்

(3) செழியன் சேந்தன் (கி.பி. 620-650) என்ற மன்னர் பொறுப் பேற்றார். இவர் சேரரை வெற்றி பெற்ற மன்னர் ஆவார். இவருடைய சிறப்பைப் பற்றி 'மலையடிக்குறிச்சிக் கல்வெட்டும் 'மதுரைவைகை'க் கல்வெட்டும் கூறுகின்றன. இம்மன்னருக்குப் பின் பிறகுப் பாண்டிய அரசு வல்லரசாக மாறியது. அந்த வரிசையில். மாறவர்மன் அரிகேசரி முக்கியமான மன்னர் ஆவார். (கி.பி. 650-700) இவர் அடைந்த வெற்றிகளாவது:

1. சாளுக்கியர்களை புதுக்கோட்டைப் பகுதி 'நெல்வேலி ' என்னும் ஊரில் தோற்கடித்தார்.

2. பல்லவர்களை 'சங்கரமங்கை' என்ற இடத்தில் தோற்கடித்தார்.

3. பரதவர்களைத் தோற்கடித்தார்.

4. வலிமை வாய்ந்த 'கேரளர்களை'த் தோற்கடித்து கேரளர்க்கு உதவிய சோழர்களையும் தோற்கடித்தார். தமிழ்நாட்டில் முதன் முதலாக, தமிழ்நாட்டு அரசர்களை யெல்லாம் தோற்கடித்த பெருமை இவருக்கே உண்டு. ஆகையால் இவர் 'வேந்தருக்கு வேந்தர்' என்ற பட்டத்துடன் விளங்கினார். பிராமணீய

முறைபடி இரணியகர்ப்பம் துலாபாரம் போன்ற யாகங்களையும் இந்த மன்னர் செய்தார். இந்த மன்னரே, திருஞான சம்பந்தரால், சைவமதம் மாறிய 'கூன் பாண்டிய' மன்னர் ஆவார்.

**5. கோச்சடையன்ரண தீரன் (கி.பி. 700-730) .**

இவர் பல நாடுகளை வென்றவர் என்று அவருடைய பட்டங்கள் 'வாவைன்' ‘செம்பியன்', 'மதுரகரு நாடகன்' 'கொங்கர் கோமான்' போன்றவைகள் சொல்லுகின்றன. இவர் சேரநாடு, கொங்குநாடு, போன்றவைகளை வெற்றி பெற்றார். இவருடைய படை 'மங்களூர்' வரைச் சென்று கர்நாடகச் சாளுக்கியர்களைத் தோற்கடித்தது. மேலும் இம்மன்னர் பாண்டிநாட்டு ஆய்வேளை மருதூரில் தோற்கடித்தார்.'

**6. அரிகேசரிபராங்குசமாறவர்மன் அல்லது முதலாம் இராசசிம்மன் (கி.பி. 730-768)**

இவர், பல்லவர்களைத் தோற்கடித்ததால், 'பல்லவ பஞ்சனன், என்றழைக்கப்படுகிறார். கொங்கு நாட்டைக் கைப்பற்றினார். கங்க நாட்டு மகள் பூ சுந்தரியை திருமணம் செய்யும் போது, சாளுக்கியர்கள் இந்த மன்னனை எதிர்த்தனர். அவர்களை 'வெண்பை' என்னுமிடத்தில் தோற்கடித்தார். இவர் பல்லவ மன்னன் 'இரண்டாம் நந்திவர்மனைத் தோற்கடித்ததாக 'உதயேந்திரம்' செப்பேடு கூறுகிறது. இவர் சேர, சோழ பல்லவர்களைத் தோற்கடித்த மன்னராகவும் விளங்கினார்.

**7. நெடுஞ்சடையன்பராந்தகன் அல்லது முதலாம் வரகுணன் (கி.பி. 768 - 815)**

இந்த மன்னரின் ஆட்சிக் காலத்தில் பாண்டிய அரசு அதிகமாக விரிவடைந்தது. இவர் அடைந்த வெற்றிகளாவது

1. பல்லவர்களை காவிரிக் கரையில் 'பெண்ணாக கடத்தில் தோற்கடித்தார்.

2. சேர நாட்டிலுள்ள 'ஆய்வேள் குடியினரை' வெற்றிகண்டு 'விழிருத்தை கைப்பற்றினார்.

3. உக்கிரன் கோட்டையில்' ஒரு கோட்டையைக் கட்டி அங்கே ஒரு பெரும் காவற்படையும் அமைத்திருந்தார். இவருக்கு 'மனுசரிதன்' என்றப்பட்ட பெயரும் உண்டு. இந்த மன்னர் வெளியிட்டது தான் 'வேள்விக்குடிச் செப்பேடு 'களும் 'ஸ்ரீவரமங்கலச் செப்பேடுகளும் ஆகும்.

**8. ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் : (கி.பி 815-862)**

இம்மன்னர் இலங்கையுடன் போரிட்டார். அப்போது இலங்கையில் முதல் சேனன்' என்பவர் ஆட்சி செய்தார். பாண்டியர்கள் இலங்கை படைகளை 'மகாதலிதா' என்னுமிடத்தில் தோற்கடித்தனர். பாண்டியப் படை இலங்கையில் புகுந்து, பெருஞ் செல்வத்தை எடுத்துக் கொண்டு வந்தது. பாண்டியர்கள் பல்லவர்களுடன் பல இடங்களில் போர் புரிந்தனர். முதலில் 'ஆனூர்' என்ற இடத்தில் பல்லவ மன்னனைத் தோற்கடித்தனர். பின்னர் கி.பி. 859-ல் 'குடமுக்கு' என்னும் கும்பகோணத்தில் நடைபெற்ற போரில் இம்மன்னர் வெற்றி பெற்றார்.

**பாண்டிய அரசின் வீழ்ச்சி**

**இரண்டாம் வரகுணவர்மன்: (கி.பி. 862 - 885)**

இரண்டாம் வரகுணவர்மன் ஆட்சிக் காலத்தில் முதலாம் பாண்டியப் பேரரசின் வளர்ச்சி குறைந்தது. இம்மன்னனின்காலத்தில் தான் 'திருப்புறம்பியம்' போர் நடந்தது. இதில் பாண்டிய மன்னர் 'இரண்டாம் வரகுண வர்மனுக்கு 'எதிராகப் பல்லவ மன்னர் அபராஜி தவர்மன்' போரிட்டார். அவருக்கு உதவியாக சோழ மன்னர் 'முதலாம் ஆதித்தன்' போர் புரிந்தார். இந்தப் போரில் பாண்டியப் பேரரசு தோற்கடிக்கப்பட்டது.

## 2. இரண்டாம் பாண்டியப்பேரரசு (கி.பி.1190-1310)

முதலாம் இராச இராசன் (கி.பி. 985-1014) காலத்திலிருந்தே பாண்டியர்கள் சோழ அரசுக்கு அடங்கியிருந்தனர். ஆனால் முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070-1120) காலத்திலிருந்து சோழ அரசு வீழ்ச்சி யடையத் துவங்கியது. இதைப் பயன்படுத்தி பாண்டிய அரசர்கள் அவ்வப்போது சோழர்களுடன் மோதினர்.

என்றாலும் அவர்கள் மூன்றாம் குலோத்துங்க சோழன் வரை, (கி.பி. 1178-1217) சோழர்களை எதிர்த்து வெற்றி பெற முடியவில்லை. கடைசியில் பாண்டியர்கள் முதலாம் சடையவர்மன் குலசேகரன் காலத்திலிருந்து எழுச்சி பெறத் துவங்கினர்.

**முதலாம் சடையவர்மன் குலசேகரன் (கி.பி.1190-1217)**

இந்த மன்னரின் ஆட்சியின் போது, பாண்டிய நாடு சோழர்களிடமிருந்து சுதந்திரம் அடைந்திருந்தது. இவர் தனியாக "தன்பேரில் ' கல்வட்டுக்களை வெளியிட்டுக் கொண்டார். சேர இளவரசன் 'கோதை இரவிவர்மன்' இவரின் மைத்துனர் ஆவார். இவ் வருடைய காலத்தில் காலிங்கரையன், முனையதரையன், களவழிநாடாழ்வான் மறச்சக்கரவர்த்தி போன்ற குறுநிலைத்தவர்கள் இம்மன்னருக்குப் பெரிதும் உதவிபுரிந்தனர்.

இவருடைய ஆட்சியின் போது கி.பி. 1265ல் சோழ மன்னர் மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய நாட்டின் மீது போர் செய்தார். இப்போர் இராமநாதபுரம் மட்டியூர், கழிக்கோட்டை, என்ற ஊர்களில் நடைபெற்றது. இதில் பாண்டிய மன்னர் சடையவர்மன் தோற்றுப்போனார். சிறிதும் காலம் கழித்து மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய நாட்டை குலசேகரனுக்கே கொடுத்துவிட்டார்.

## பாண்டிய அரசு விரிவடைந்தகாலம்

**முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்(கி.பி. 1216-1239)**

**சோழர்களுடன்போர்**

இம்மன்னர் விக்கிரமபாண்டியரின் மகன் ஆவார். இவருடைய காலம் பாண்டியர்களின் வெற்றிக் காலமாகும். இவர் சோழமன்னர் மூன்றாம் குலோத்துங்கனைத் தோற்கடித்து, பாண்டிய நாட்டை முழுச் சுதந்திர நாடாக்கினார். இவர் பொன்அமராவதியிலிருக்கும் பொழுது மீண்டும் குலோத்துங்கன் இவரைச் சரண் அடைந்து உயிர்ப்பிச்சையும் தன்னுடைய நாட்டையும் பெற்றுக் கொண்டார்.

இரண்டாம் முறையாக இம்மன்னர் சோழ நாட்டின் மீது ஒரு படையெடுப்பு நடத்தினார். அப்போது சோழ நாட்டு மன்னராக இருந்தவர் 'மூன்றாம் இராசஇராசன்' ஆவார். இவர் பாண்டிய மன்னர் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குக்

கப்பம் கட்ட மறுத்தவர். இதனால், சுந்தரப்பாண்டியர். சோழ நாட்டின் மீது படையெடுத்து வெற்றிபெற்றார்.

**ஹொய்சாளர்களின்தலையீடு**

இம்மன்னரின் ஆட்சியின் போது ஹொய்சாள அரசர்கள் தலையிட்டனர். பாண்டிய அரசர் சோழ மன்னரைத் தோற்கடித்ததால், ஹொய்சாள மன்னர், வீரநரசிம்மன் சோழர்களுக்கு ஆதரவு தந்தார். பாண்டியர்களும், ஹொய்சாளர்களும் மகேந்திரமங்கலம்' என்னுமிடத்தில் போரிட்டனர். அதில் ஹொய்சாளர்கள் பாண்டியர்களைத் தோற்கடித்து வெற்றி பெற்றனர்.

**முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன்** (கி.பி.1261-1271)

இம்மன்னர், இரண்டாம் பாண்டியப் பேரரசின் தலைசிறந்த மன்னர் ஆவார். இவர் செய்த போர்களாவது:

1. இவர் சேரநாட்டை ஆண்ட 'வீரரவி உதயமார்த்தாண்டவர்மன் என்பவரைத் தோற்கடித்து 'ரவி வென்றான்' என்ற விருதைப் பெற்றார்.

2. இரண்டாவதாக இம்மன்னர் சோழ மன்னர் 'மூன்றாம் இராசேந்திரனை' தோற்கடித்தார்.

3. ஹொய்சாள வெற்றிகள்: இம்மன்னரது ஆட்சிக் காலத்தில் ஹொய்சாளர்கள் திருச்சிக்கு அருகில் உள்ள கண்ணனுரைத் தலைநகரமாக வைத்திருந்தனர். அப்போது ஹொய்சாள மன்னராக வீரசோமேச்சுவரன் இருந்தார். அவரைப் பாண்டிய மன்னர் தோற்கடித்தார். ஹொய் சாள மன்னரின் மகன் வீரராமனாதன், மீண்டும் பாண்டியர்களைத் தோற்கடிக்க முயற்சித்தும் தோல்வியடைந்தார்.

4. கோப்பெருஞ்சிங்கன் மீது வெற்றி: இம்மன்னர் அடைந்த மற்றுமொரு வெற்றி கோப்பெரும் சிங்கனை வெற்றிகண்டதாகும். கோப்பெரும் சிங்கன் என்பவர் ஒரு ) பல்லவசிற்றரசர் ஆவார். இவர், சிதம்பரம் பகுதியில் ஆட்சி செய்து வந்தார். சோழ மன்னர் 'மூன்றாம் இராச இராச சோழன் காலத்தில் அவரைக் கைது செய்து சேந்தமங்கலம் என்ற இடத்தில் சிறை வைத்தவர் ஆவார். பிறகு

ஹொய்சாளர்கள் வந்து போரிடவும் சோழ மன்னரை விடுதலை செய்தார். அப்படிப்பட்ட கோப்பெருஞ்சிங்கனின் மீது பாண்டிய மன்னர் போரிட்டார். கோப்பெருஞ்சிங்கனின் தலைநகரம் 'சேந்தமங்கலத்தை' முற்றுகையிட்டு, அங்கிருந்த, யானை குதிரைச் செல்வங்களைக் கைப்பற்றினார்.

5. அடுத்து இம்மன்னர் கொங்கு நாட்டை வென்றார். சேலம், ஆற்காடு, மாவட்டங்களுக்கு இடையேயிருந்த மகதை நாட்டை வென்றார். காஞ்சியில் இருந்த தெலுங்கச்சோழ அரசர் கண்ட கோபலனை வென்றார். இப்படி பல பகுதிகளிலும் வெற்றிகளை பெற்றதால், இவர் 'காஞ்சிபுரவரது கவரர்' எல்லாந்தலையான பெருமாள், என்ற பட்டங்களால் அழைக்கப்பட்டார்.

**முதலாம் மாறவர்மன் குலசேகரன் (கி.பி. 1268-1311)**

இந்த மன்னர் பிற்காலப் பாண்டியர்களில் முக்கியமான கடைசிமன்னர் ஆவார். இவர் பலபோர்களை புரிந்துள்ளார்.

1. இவர் சேரநாடாகிய 'திருவாங்கூர்' பகுதியின் மீது படையெடுத்து 'கொல்லம்' நகரத்தைக் கைப்பற்றினார். அதனாலேயே இவர் 'கொல்லங் கொண்ட பாண்டியன்; என்று அழைக்கப்பட்டார்.

2. இவர். சோழநாடு, சேரநாடு, தொண்டை நாடு ஆகியவைகளையும் வெற்றி பெற்றார்.

3. இம்மன்னர் கி.பி.1284-ல் சிலோன் மீது படையெடுத்தார். அப்போது அதை மூன்றாம் பராக்கிரமபாகு ஆண்டு வந்தார். இம்மன்னர் : ஆரியச் சக்கரவர்த்தியின் தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பினார். இவர் சிலோன் நாட்டு மன்னனை வெற்றி கண்டு திரும்பினார்.

4. இம்மன்னர் 'எம்மண்டலமும் கொண்டருளிய' என்றப் பட்டத்தை கொண்டிருந்தார்.

## பாண்டியப்பேரரசின் வீழ்ச்சியும் முகமதியர் வருகையும்

முதலாம் மாறவர்மன் குலசேகரன் திறமையான மன்னராக இருந்தாலும், அவரது இந்த ஆட்சிக் காலம் குழப்பமாக இருந்தது. இவருக்கு சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் என்று இருமகன்கள். இருந்தனர். இவர்களில் சுந்தரபாண்டியன் பட்டத்தரசியின் மகன், ஆவார். வீரபாண்டியன் வேறு மனைவியின் மகன் ஆவார். இவர்களில் வீரபாண்டியனே திறமை சாலியாக இருந்தார். ஆகவே, வீரபாண்டியனை மன்னராக்க, தந்தை குலசேகரன் முயற்சி செய்தார். இதனால் சுந்தரபாண்டியன் கோபம் அடைந்து தனது தந்தையை கொலைசெய்தார். இதில் வீரபாண்டியன், சுந்தரபாண்டியனோடு 'தலச்சி' என்றும் ஏரிக்கரையில் போர் நடத்தினார். ஆனால் வீரபாண்டியன் காயம் அடைந்து தோற்று ஓடினார். சுந்தரபாண்டியனுக்கு நிறைய பொன்னும் பொருளும் கிடைத்தன. அப்போது வீரபாண்டியனுக்கு கருர்ப்பகுதி ' மன்னர் உதவிபுரிந்தார். இதனால் தோற்ற சுந்தரபாண்டியன் அப்போது தென்னாட்டில் படையெடுப்பு நடத்திக் கொண்டிருந்த அல்லாவுதின் கில்ஜி படைத்தலைவர் மாலிக்கபூரைச் சந்தித்து உதவி கோரினார். அதன் அடிப்படையில் மாலிக்கபூர் மதுரையை நோக்கிப் படையெடுத்தார் இந்த படையெடுப்பினால் பிற்காலப் பாண்டியப் பேரரசு சிதைந்தது.

## 3. முற்காலப்பாண்டியர்களின்கலை மற்றும் கட்டிடக்கலை

முற்காலப் பாண்டியர்கள் காலத்து கோயில்களில் மூன்று வகைகள் உள்ளன. அவைகள் குகைக் கோயில் , ஒற்றைக்கல் கோயில்கள். கட்டுமானக் கோயில்களாகும். பொதுவாக பல்லவ மன்னர்களே குகைக் கோயிலைக் முதலில் கட்டினார், என்ற கருத்து உள்ளது. ஆனாலும் பிள்ளையார்பட்டி குடை வரை கோயில் கல்வெட்டு பாண்டியர்கள் பல்லவர்களுக்கு முன்பு குகைக் கோயில்களைக் கட்டினார்கள் என்று நிரூபிக்கிறது.

**1. குகைக் கோயில்கள்**

பாண்டியர்கள் காலக் குகைக் கோயில்கள் சாளுக்கியர்கள், இராஷ்டிரக்கூடர்கள் ஆகியோர்களின் கலையைப் பிரதிபலிக்கின்றன. இந்த குகை கோயில்கள் 'பல வடிவங்களாக' உள்ளன. சில கோயில்கள் கர்ப்பகிரகத்தை மட்டும் கொண்டுள்ளன. சில கோயில்கள், அர்த்தமண்டபத்தையும், மகா மண்டபுத்தையும் கொண்டுள்ளன. இந்த கோயில்கள் எல்லாமும் மக்கள் பூசை செய்து கும்பிடுவதற்காக, ஆகமவிதிகளின் படி கட்டப்பட்டவையாகும். இந்த கோயில்களில் கடவுளின் உருவங்கள் அதிகமாக வைக்கபட்டுள்ளன. மேலும் இலிங்க உருவமும் இதில் உள்ளது. இக்காலத்தில் கட்டப்பட்ட முக்கியமான குகைக் கோயில்களை நாம் பார்ப்போம்.

**பிள்ளையார்பட்டிகுகைகோயில்**

இது குன்றக்குடி ஊருக்கு அருகில் உள்ளது. இதன் காலம் கி.பி.ஆறாம் நூற்றாண்டாகும். இங்குள்ள குகைகோயிலில் ஒரு கருவறை உள்ளது. கருவறையில் உள்ள பாறையிலே லிங்கம் குடைந்துள்ளது. இக்குகையின் முன்னால் மூன்று தூண்கள் உள்ளன. தூன் எண்கள் களின் நடுப்பகுதியில் எட்டுப்பட்டை உள்ளது. இங்குள்ள தூண்களின் பொதிகை தரங்கப் பொதிகையாக உள்ளது.

**மலையடிக்குறிச்சி**

இந்த குகை கோயில் சங்கரன் கோயில் அருகே உள்ளது. இதன் காலம் கி.பி. 617 ஆம் ஆண்டாகும் இங்கு ஒரு கல்வெட்டு தமிழ் வட்டெழுத்தில் உள்ளது. இங்கே கருவறையில், இலிங்கம் உள்ளது. இதன் தூண்களில் 'சதுரம்' 'கட்டு' என்ற பகுதிகள் காணப்படுகின்றன. 'தூண் கட்டுகளில் தாமரை இதழ்கள் அழகாக வெட்டப்பட்டுள்ளன.

**திருப்பரங்குன்றம்குகைகோயில்**

இந்த குகை கோயிலில் ஒருபெரிய மண்டபம் உள்ளது. இதன் கிழக்கே மூன்று கருவறைகள் உள்ளன. இங்கு சிற்பங்கள் அதிகம் உள்ளன. து 'எல்லோரா'

குகையை போன்று விரிந்த பரப்பில் உள்ளது. இக்கோயிலின் தூண்கள், இருசதுரங்களைக் கொண்டுள்ளன. இதன் பொதிகை தரங்க வடிவாக உள்ளது.

**ஒற்றைக் கல்ரத கோயில்கள்**

**கழுகுமலை வெட்டுவான்கோயில்**

இது பாண்டியர்களுக்கு ஒற்றைக் கல்ரதக் கோயில் ஒன்றே ஒன்று தான் உள்ளது. அது 'கழுகுமலை வெட்டுவான்' கோயிலாகும். பல்லவர்களின் ஒற்றைக் கல் இரதங்களான தருமராசதேர், பீமன்தேர் போன்றவைகளை விட தரம் வாய்ந்ததாக உள்ளது. மேலும் இது எல்லோரோ கைலாச நாதர் கோயிலையும் தோற்கடிக்கும் வண்ணம் கலை உள்ளதாக உள்ளது. இதன் காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

**இந்த கோயிலின் சிறப்பு அம்சங்கள்**

1. ஒரு மலையை சுற்றிலும் குடைந்து நடுப் பகுதியை மட்டும் கோயிலாகச் செய்துள்ளார்கள்.
2. இந்த கோயிலில் ' உண்ணாழீயும்' முன் மண்டமும் உள்ளது.
3. உண்ணாழியின் மீது இரண்டு விமானமும் உள்து. அதன் உச்சியில் 'புட்டு பட்டை சிகரமும்' உள்ளது. சிகரத்தின் உச்சியல் தாமரை மலர் விரிந்த நிலையில் உள்ளது.

**கட்டுமானக் கோயில்கள்**

பாண்டியர் கட்டுமானக் கோயில்களில் பல வகைகள் உள்ளன. சில கோயில்கள் பாதி கல்லாகவும், பாதி செங்கல்லாகவும் உள்ளன. கோயிலின் அதிட்டானத்திலிருந்து கபோதம் யாளி வரி வரைகல், அதற்கு மேல் உள்ள பாகங்கள் சிகரம், விமானம், ஆகியவைகள் செங்ககல்லால் கட்டப் பட்டுள்ளது. சில கோயில்கள் முழுவதும் கற்களால் கட்டப்பட்டுள்ளன.

**மண்டபங்கள்**

இந்த கோயில்களில் 'கருவறை' 'அர்த்த மண்டபம்', மண்டபம்' போன்றவைகள் மட்டுமே உள்ளன. எல்லாமே நடுத்தரமாக கட்டப்பட்டுள்ளன.

இதில் பெரிய மண்டபங்களோ, கோபுரங்களோ கிடையாது. 'அஷ்டாங்க விமானவகைகளைப் பாண்டியர்கள் மிகவும் விரும்பிக் கட்டியுள்ளார்கள். இவர்கள் கட்டிய கோயில்களில், கீரிவம்' எட்டு கோணம் (திராவிட) வடிவாக அமைந்துள்ளது.

**பாண்டியர்களின்முக்கியமானகட்டுமானக்கோயில்கள்**

1. அம்பாசமுத்திரத்தில் எரிச்சாவுடையார் கோயில்
2. திருவாலீஸ்வர கோயில். .
3. மதுரை கூடல் அழகர் கோயில்.
4. ஸ்ரீவில்லிபுத்தூர் வட பத்ர சாயி கோயில்
5. குற்றாலம் - குற்றால நாதர் கோயில் போன்றவையாகும்

அம்பாசமுத்திரத்தில் உள்ள எரிச்சாவுடையார் கோவில், மதுரை கூடலழகர் கோவில், குற்றாலநாதர்கோவில் திருவாலீஸ்வரர் கோவில் ஆகியவை பாண்டியர்களின் முக்கியக் கட்டுமானக் கோவில்களாகும்.

**அலகு – 5**

## 1. தமிழகத்தில் முஸ்லீம் படையெடுப்புகள்(MUSLIM INVASIONS IN TAMILNADU)

இந்திய துணைக்கண்டத்தில் முஸ்லீம் வெற்றிகள் முக்கியமாக 12 முதல் 16 ஆம் நூற்றாண்டு வரை நடந்தன. அலாவுதீன் கல்ஜி 1296 இல் டெல்லியின் சுல்தானானார். 1305 ஆம் ஆண்டின் இறுதியில், நடைமுறையில் முழு வட இந்தியாவும் அவரது கட்டுப்பாட்டின் கீழ் வந்தது, அதைத் தொடர்ந்து அவர் தக்காணத்தை கைப்பற்றுவதில் கவனம் செலுத்தினார். கிரீடத்தை உறுதி செய்ததில் இருந்தே தக்காணத்தை கைப்பற்றுவது அவரது கனவாக இருந்தது. தெற்கில் அவரது பிரச்சாரங்கள் அரசியல் மற்றும் பொருளாதார நோக்கங்களைக் கொண்டிருந்தன. தக்காணத்தின் புகழ்பெற்ற செல்வம் அவரது கவனத்தை ஈர்த்தது. அதுவரை முஸ்லிம்களால் கைப்பற்றப்படாத தென்னிந்தியாவில் தனது கட்டுப்பாட்டை நிலைநாட்ட வேண்டும் என்ற அவரது கனவு, அலாவுதீனை தென்னிந்தியாவைக் கைப்பற்ற நினைக்கத் தூண்டியிருக்க வேண்டும். அந்த நேரத்தில், அந்த பகுதியில் நான்கு வம்சங்கள்/சாம்ராஜ்யங்கள் இருந்தன - ராமச்சந்திர தேவாவின் கீழ் தேவகிரியின் யாதவர்கள், காகதீய வம்சம் அதன் தலைநகரான பிரதாபருத்ரா I இன் கீழ் வாரங்கல் மற்றும் ஹோய்சலாக்கள் III வீர பல்லாலாவின் கீழ் துவாரசமுத்திரத்தில் அதன் தலைநகராக இருந்தது. மதுராவின் பாண்டிய ராஜ்ஜியம் மாறவர்மன் குலசேகரனால் ஆளப்பட்டது. தெற்கின் இந்து ஆட்சியாளர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்ததால், முஸ்லிம் படையெடுப்பாளருக்கு எதிராக ஒன்றுபடும் நிலையில் அவர்கள் இல்லை. அலாவுதீன் கல்ஜி வடமேற்கு எல்லையில் இருந்து உதிரி படை வீரர்களை அழைத்து, ஜெனரல் மாலிக் கஃபூரின் தலைமையில் தக்காணப் படையாக அமைத்தார். சுல்தான் அலாவுதீன் கல்ஜியின் தலைமையில் தென்னிந்தியா முழுவதையும் கைப்பற்ற அவர் விதிக்கப்பட்டிருந்தார். தென்னிந்தியாவில்

முஸ்லீம் படையெடுப்புகளின் வரலாறு மற்றும் பாண்டிய இராச்சியத்தின் வெற்றி பற்றி இந்த பிரிவு விவாதிக்கும். மாலிக் கஃபூர் தலைமையிலான படையெடுப்புகளும் விவரிக்கப்படும்.

**மாலிக்காபூரின்படையெடுப்பு(1307-1311) படையெடுப்பிற்கானகாரணங்கள்**

**1) தென்னிந்தியாவில்நிலவிய குழப்பமான அரசியல் நிலை**

மாலிக்காபூர் தென்னிந்தியாவின் மீது படையெடுத்த போது அங்கு குழப்பமான அரசியல் நிலையே காணப்பட்டது. தென்னிந்தியாவில் நான்கு இந்து அரசுகள் காணப்பட்டன. அவை யாதவ அரசு, காகத்திய அரசு, ஹொய்சாள அரசு மற்றும் பாண்டிய அரசு ஆகியவை ஆகும். இந்த அரசுகள் வலிமையற்றதாகவும், தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்ததாகவும் காணப்பட்டன. முக்கியமாக பாண்டிய நாட்டில் அரசுரிமைப் போட்டியின் விளைவாக ஒரு உள்நாட்டுப் போரே நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்தக் குழப்பமான அரசியல் நிலையே மாலிக்காபூரின் தென்னிந்தியப் படையெடுப்புக்கு முக்கியமான காரணம் ஆகும்.

**2) பாண்டியநாட்டில் நடைபெற்றஉள்நாட்டுப்போர்**

பாண்டிய நாட்டில் நடைபெற்ற உள்நாட்டுப் போர் முஸ்லீம் களின் படையெடுப்புக்கு முக்கியக் காரணமானது. பாண்டிய நாட்டை ஆண்டு வந்த முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனுக்கு சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் என்ற இரண்டு மகன்கள் இருந்தனர். குலசேகரபான் பாண்டியன், வீரபாண்டியனைத் தோற்கடித்து நாட்டை விட்டு விரட்டியடித்த பின் கி.பி.1310-ல் அரியணை ஏறினார்.

ஆனால் வீரபாண்டியன் எப்படியும் சுந்தரபாண்டியனைத் தோற்கடிக்க சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தார். அப்போது தான் சுல்தான் அலாவுதீன் கில்ஜியின் தளபதியான மாலிக்காபூரின் ஆதரவை நாடினார். இச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்ட மாலிக்காபூர் கி.பி.1311-ல் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தார். இவ்வாறு தென்னிந்தியாவின் மீது படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

### 3. தென்னிந்திய அரசுகள் மீது மாலிக்காபூரின்படையெடுப்பு

அப்போது டில்லி சுல்தானாக இருந்த அலாவுதீன் கில்ஜி தென்னிந்தியா மீது படையெடுப்பை மேற்கொள்ளும்படி தனது தளபதி மாலிக்காபூருக்கு உத்தரவிட்டார். மாலிக்காபூரின் தலைமையிலான முஸ்லீம் படைகள் முதலில் தேவகிரி அரசரைத் தோற்கடித்தது. பின்னர் காகத்தியர்களின் நாடு தாக்கப்பட்டது. அதன் தலைநகரான துவாரசமுத்திரம் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. இது சமயத்தில் தான் பாண்டிய நாட்டில் தலையிட மாலிக்காபூருக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.

### 4. பாண்டிய நாட்டின் மீது மாலிக்காபூரின்படையெடுப்பு

அரியணைப் போரில் தோல்வியடைந்த வீரபாண்டியன், அரியணையிலிருந்து சுந்தரபாண்டியனை விரட்டியடிக்க மாலிக்காபூரின் உதவியை நாடினார். எனவே மாலிக்காபூர் ஓர் படையுடன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தார். முஸ்லிம் படைகளுக்கு எதிராகப் போரிட சக்தியற்ற வீரபாண்டியன் ஒடி ஒளிந்தார். முதலாவது சிதம்பரம் நகரம் தாக்கப்பட்டது. அங்கிருந்த கோவில் கொள்ளையடிக்கப்பட்டது. அதன்பின் ஸ்ரீரங்கம் ஆலயமும் சூறையாடப்பட்டது. பின்னர் கி.பி. 1311 ஏப்ரல் மாதம் மதுரை மீது மாலிக்காபூர் படையெடுத்தார். ஆனால் சுந்தரபாண்டியன் கருவூலத்தை எடுத்துக் கொண்டு தனது உறவினர்களுடன் மதுரையை விட்டு ஓடிவிட்டார். மதுரையைக் கைப்பற்றிய மாலிக்காபூர் அங்கிருந்த கோவிலை சூறையாடினான்.

### படையெடுப்பின்முக்கியத்துவம்

தனது தென்னிந்தியப் படை டயெடுப்பு மூலம் சூறையாடப்பட்ட பொருட்களையெல்லாம் டெல்லிக்குக் கொண்டு சென்றார் மாலிக்காபூர். சுமார் ஐநூறு யானைகள், ஐயாயிரம் குதிரைகள் மற்றும் விலைமதிப்பற்ற செல்வத்தை டெல்லி கொண்டு சென்றதாகச் சான்றுகள் உள்ளன.

மாலிக்காபூரின் தென்னிந்தியப் படையெடுப்பால் வலிமை யற்றிருந்த தென்னிந்திய அரசுகள் அதிர்ச்சியடைந்தன. சுல்தானியத்தின் மேலாதிக்கத்தை

ஏற்றுக் கொண்டு கப்பம் கட்ட சம்மதித்தன. எனவே இந்த அரசுகள் சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப் பட்டன. ஆனால் இந்த முதலாவது முஸ்லீம் படை டையெடுப்பினால் கோவில்களும் நகரங்களும் சூறையாடப்பட்டன. ஒரு நிலையான அரசை தென்னிந்தியாவில் அமைக்கும் நோக்கத்துடன் இந்தப் படையெடுப்பு நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. டில்லி

5. **குஸ்ருகானின்தென்னிந்தியப்படையெடுப்பு**

கி.பி.1316-ல் அலாவுதீன் கில்ஜி இறந்துவிடவே டில்லி சுல்தானிய அரசியலில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டது. அலாவுதீன் கில்ஜியின் மூன்றாவது மகனான குத்புதீன் முபாரக் டில்லி சுல்தானாகப் பதவியேற்றார். அப்போது தென்னிந்திய அரசுகள் டில்லி சுல்தானியத்துக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டன. அந்தக் கிளர்ச்சிகளை அடக்குவதற்காக தனது தளபதியான குஸ்ருகான் என்பவரை தென்னிந்தியாவுக்கு அனுப்பினார் முபாரக். குஸ்ருகான் ஒரு படையுடன் தென்னிந்தியா மீது படையெடுத்தார். கஸ்ருகான் முதலில் வாரங்கல் மீது படை டையெடுத்தார். பின்னர் பாண்டிய நாட்டின் மீதும் படையடுத்தார். இதில் பல நகரங்கள் சூறையாடப்பட்டன. இந்தப் படையெடுப்பின் மூலம் மதுரையில் ஒரு முஸ்லீம் அரசை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

6. **துக்ளக் ஆட்சிக்காலத்தில்தென்னிந்தியப்படையெடுப்பு**

கில்ஜி வம்சம் வீழ்ச்சியடைந்த பிறகு டில்லியில் துக்ளக் வம்சத்தினரின் ஆட்சி தொடங்கியது. துக்ளக் வம்சத்தின் முதலாவது சுல்தான் கியாசுதின் துக்ளக் என்பவர் ஆவார். இவர் ஆட்சிக் காலத்தில் தென்னிந்திய அரசுகள் கிளர்ச்சி செய்தன. திறை செலுத்த மறுத்து சுதந்திரமான ஆட்சியை நிறுவ முயன்றனர். இதனால் தென்னிந்தியா மீது அடுத்த படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

**முகமது பின் துக்ளக்கின் முதலாவதுபடையெடுப்பு(1323)**

தென்னிந்திய அரசுகளின் கிளர்ச்சியை அடக்குவதற்கு தனது மகனான உலுக்கான (முகமது பின் துக்ளக்) என்பவரை ஒரு படையுடன் அனுப்பினார்

கியாசுதீன் துக்ளக். உலுக்கான முதலில் வாரங்கள் மீது படையெடுத்தார். ஐந்து மாத முற்றுகைக்குப் பின்னர் வாரங்கல் அடிபணிந்தது. அந்த நகர் சூறையாடப்பட்டது. கோட்டைகள் தகர்க்கப் பட்டன. வாரங்கள் மன்னர் பிரதாபருத்திரர் கைது செய்யப்பட்டு டில்லிக்கு அனுப்பப்பட்டார். வாரங்கல் டில்லி சுல்தானியத்துடன் இணைக்கப் பட்டது.

**முகமது பின் துக்ளக்கின் இரண்டாவதுபடையெடுப்பு(1327)**

கியாசுதீன் துக்ளக் மரணமடைந்த பிறகு அவரது மகன் உலுக்கான் முகமது பின் துக்ளக் என்ற பெயரில் டில்லி சுல்தான் ஆனார். இவர் பதவியேற்ற பின் தென்னிந்தியா மீது படையெடுத்தார், பாண்டிய நாட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதன் அரசன் பராக்கிரம பாண்டியன் தோற்கடிக்கப்பட்டார். அதன் பின் ஒரு கைதியாக டில்லிக்கு அனுப்பப்பட்டார். மதுரை டில்லி சுல்தானியத்தின் ஒரு மாநிலமாக மாற்றப்பட்டது. ஜலாலுதீன் அசன்ஷா அதன் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

**கம்பிலி இணைக்கப்படுதல்**

தென்னிந்தியாவில் கள்ளப்பகுதியில் உள்ள ஒரு சிற்றரசுதான் கம்பிலி ஆகும். அப்போது சுல்தானுக்கெதிராக கலகம் செய்த பகாஉதீன் என்பவல் கம்பிலியில் தஞ்சம் புகுந்தார். இதனால் கோபமடைந்த துக்ளக் கம்பிலிக்கெதிராக ஒரு படையை அனுப்பினார். கம்பிலி மன்னரான கம்பிலித்தேவன் முஸ்லீம் படையை எதிர்த்துப் போரிட்டார். ஆனால் போரில் தோல்வியடைந்து கொல்லப்பட்டார். கம்பிலி நாடு டில்லி சுல்தானியத்துடன் இணைக்கப்பட்டது.

## 2. மதுரை சுல்தானியத்தின்தோற்றம்

முகமது பின் துக்ளக் ஆட்சிக்காலத்தில் மதுரை டில்லி சுல்தானியத்தின் ஒரு மாநிலமாக மாறியது. அதன் ஆளுநராக ஜலாலுதீன் அசன்ஷா என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் மகமதுபின் துக்ளக் ஆட்சிக் காலத்தில் டில்லி

சுல்தானியத்தின் பல்வேறு பகுதிகளில் கலகங்கள் ஏற்பட்டன. சுல்தானியத்திற்கு எதிராகக் கிளர்ச்சிகள் தோன்றின. எனவே இந்த உள் நாட்டுக் குழப்பங்களை அடக்குவதில் கவனம் செலுத்தினார் முகமது பின் துக்ளக்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தன்னை மதுரை சுல்தானாகப் பிரகடனப்படுத்திக் கொண்டார் ஜலாலுதீன் அசன்ஷா. டில்லி சுல்தானியத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். இவ்வாறு 1335-ல் மதுரை சுல்தானியம் தோன்றியது. ஜலாலுதீன் அசன்ஷா தனது பெயரில் நாணயங்களை வெளியிட்டார். மதுரை சுல்தானின் துரோகச் செயலைக் கேள்விப்பட்ட முகமதுபின் துக்ளக், அசன்ஷாவைத் தோற்கடிக்க ஒரு படையை அனுப்பினார். ஆனால், அந்தப் படையினர் நோயினால் பாதிக்கப்பட்டு திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று. இந்த மதுரை சுல்தானியம் 46 ஆண்டுகள் நீடித்தது.

**மதுரை சுல்தான்கள்**

**சுல்தான் ஜலாலுதீன் அசன்ஷா கி.பி. 1335-1340**

இவர் மதுரை சுல்தானியத்தின் முதல் சுல்தான் ஆவார். 1335-ல் சுல்தானாகப் பதவி ஏற்ற இவன் தனது பெயரில் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டார். இவரது பிரபுக்களில் ஒருவரான அலாவுதீன் உதாஜி என்பவரால் கொலை செய்யப்பட்டார் என்று பெரிஷ்டா குறிப்பிடுகிறார்.

**அலாவுதீன் உதாஜி கி.பி. 1340**

முஸ்லீம் மதக் கோட்பாட்டின் படி இந்துக்களின் மீது புனிதப் போர் செய்வதை தமது கடமையாகக் கருதிக் கொண்டிருந்தான். அதன்படி போசள நாட்டு மன்னரான மூன்றாம் வல்லாளனை தோற்கடிக்க திருவாண்ணாமலை நோக்கிப் புறப்பட்டான். 1340-ல் நடைபெற்ற போரில் உதாஜி வெற்றியடைந்தான். ஆனால் தலைக் கவசத்தை கழற்றி விட்டு நீர் அருந்திய போது யாரோ ஒருவன் எய்த அம்பு தலையில் ஏறி அந்த இடத்திலேயே இறந்தான். இதற்குப் பிறகு பதவி ஏற்ற இவனது வீரமருமகன் குத்புதீன் நாற்பது நாட்களே ஆட்சி புரிந்தார். இவர் தனது

பெயரில் சில நாணயங்களை வெளியிட்டார். மக்களின் நல்லெண்ணத்தை இழந்த இவன் கொல்லப்பட்டான்.

**கியாசுதீன் தாமகன்ஷா 1341-42**

குத்புதீன் கொல்லப்பட்ட பிறகு பதவி ஏற்ற கியாசுதீன் ரத்த வெறி பிடித்தவன். இந்துக்களிடம் கடுமையாக நடந்து கொண்டான் அவர்களை இரக்கமில்லாமல் நாயினும் கேவலமாக நடத்தினான் அவர்களைக் கழுகேற்றி ஈவிரக்கமில்லாமல் கொன்று குவித்தான் என்று இபின் பதூதா குறிப்பிடுகிறார். இவனது ஆட்சிக் காலத்தில் பெண்கள், குழந்தைகள் கழுத்து அறுக்கப்பட்டு கொல்லப்பட்டனர் இந்துக்களின் தலைகளை மாலைகளாகக் கட்டி சூலங்களுக்குச் சூட்டி மகிழ்ந்தான்.

மத வெறியால் மயக்கமுற்ற கியாசுதீன் பக்கத்திலிருந்த இந்து அரசுகளை அழிக்கத் திட்டமிட்டான். குரானின் கட்டளைக்கிணங்க முஸ்லீம் அல்லாதோர் மீது புனிதப் போர் தொடுத்தான். எனவே பக்கத்திலிருந்த ஹொய்சள மன்னர் மூன்றாம் பல்லாள தேவன் மீது போர் தொடுத்தார். ஆனால் ஹொய்சாள மன்னரின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத முஸ்லீம் படை நிலை குலைந்தது. கண்ணனூர் கொப்பத்தில் முகமதியப் படை முற்றுகையிடப்பட்டது. தோல்வி நிச்சயம் என்று உணர்ந்த முஸ்லீம் படை சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தது. கோட்டையைத் தன்னிடம் விட்டுவிடுவதானால் முஸ்லீம் படையை திரும்ப அனுமதிப்பதாக வீரபல்லாளன் கூறினான்.

இதனைக் கேள்விப்பட்ட மதுரை சுல்தான் கியாசுதின் கோட்டையை பல்லாளனிடம் ஒப்படைக்கக் கூடாது என்று கருதினான். எனவே சமாதனாப் பேச்சுநடத்திக் கொண்டே ரகசியமாக நான்காயிரம் படைவீரர்களைத் திரட்டிக் கொண்டு கண்ணனூர் சென்றான். கூடாரத்தில் தங்கியிருந்த வீரபல்லாளனின் படைகள் குழப்பத்தில் நிலை குலைந்து ஓடின. குதிரை மீது தப்பிச் செல்ல முயன்ற வீர பல்லாளன் கைது செய்யப்பட்டு மதுரை கொண்டு வரப்பட்டான் கருணையற்ற முறையில் கொல்லப்பட்டான். அவன் தோல் உரிக்கப்பட்டு அதில் வைக்கோல்

அடைக்கப்பட்டு மதுரை மதில் சுவரில் தொங்கவிடப்பட்டது. அதனை தானும் 1342-ல் பார்த்ததாக இபின் பதூதா குறிப்பிடுகிறார். இதன் பிறகு ஹொய்சாளரின் பெருமையும் குன்றியது.

பல்லாள தேவனை கருணையில்லாமல கொன்ற கியாசுதீன் அதிக நள் உயிர் வாழ முடியவில்லை. அப்போது மதுரையில் பரவிய காலரா நோயினால் அவனது ஒரே மகன், மனைவி, தாய் ஆகியோரைப் பறிகொடுத்தான். அடுத்த பதினைந்து நாளில் அவனும் இறந்தான். இவ்வாறு கொடுமையின் பிறப்பிடமாக விளங்கிய கியாசுதீன் இறந்தான். கியாசுதீன் காமன்ஷா தனது பெயரில் நாணயங்கள் வெளியிட்டார். இவரது நாணயங்கள் டாக்டர் ஷில்பாய் சேகரித்தார். அதில் தாமன்ஷா என்ற பெயரும் ஹிஜிரா ஆண்டான 741-ம் குறிக்கப்பட்டுள்ளது.

**சுல்தான் நசிருதீன் கி.பி. 1334**

கியாசுதீன் கொள்ளை நோயால் கொண்டு செல்லப்பட்ட பின்பு, அவனது சகோதரன் மகனான நசுருதீன் மதுரை சுல்தானாகப் பதவியேற்றான். இவன் பிரபுக்களுக்கு பெரும் பொருள் செலவிட்டே பதவியைப் பெற்றான். அப்போது இபின் பதூதா சீனாவை நோக்கிப் பயணம் செய்யத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் இவன் செய்து கொடுத்தான். இவன் தனது ஆட்சியின் நினைவாக நாணயத்தை வெளியிட்டான். அதில் 745 என்று பொறிக்கப்பட்டுள்ளது. இது 1334-ம் ஆண்டைக் குறிக்கிறது. கி.பி. 1334-லிருந்து கி.பி. 1356-ம் ஆண்டு வரை மதுரை சுல்தானிய வரலாற்றில் ஒரு முறிவு ஏற்பட்டுள்ளது. இதனைப் பற்றி வரலாற்றாசிரியர்கள் பலவிதமான கருத்துக்களைக் கொண்டுள்ளார்கள்.

**சுல்தான் அடில்ஷா கி.பி. 1356-61**

அடில் ஷா என்பவன் 1356-ல் மதுரை சுல்தானாகப் பதவி ஏற்றான். இவன் 1364 வரை ஆட்சி புரிந்தான் என்று கருதப்படுகிறது. பக்ருதீன் முபாரக் ஷா அடில் ஷாவுக்குப் (கி.பி. 1361-1370) பிறகு முபாரக் ஷா மதுரை சுல்தான் ஆனார். இவன் வெளியிட்ட நாணயங்கள் துணையுடன் இவனது ஆட்சிக் காலத்தை கணிக்க

முடிகிறது. இவனது ஆட்சிக் காலத்தில் தான் விஜய நகர வீரன் குமார கம்பணா மதுரை மீது படையெடுத்து வென்றான்.

**குமாரகம்பணின்மதுரை படையெடுப்பு**

மதுரையில் நிலைபெற்றிருந்த காலத்தில் இந்துக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. அவர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்துக் கோவில்கள் இடிக்கப்பட்டன. எங்கு நோக்கினும் அனுமதியின்மை, அட்டூழியம், அநியாயம் தாண்டவமாடியது. மதுரை சுல்தானியத்தில் இந்துக்களின் இந்த நிலை பற்றி கங்காதேவி தனது மதுரா விஜயம் என்ற நூலில் கூறியுள்ளார். இதபோன்ற அநியாயத்தை அழிக்கவும், உலகத்தின் எதிரியாக இருந்த சுல்தானை ஒழிக்கவும் புதிதாகத் தோன்றிய பெண் ஒருத்தி புனித வாள் ஒன்றை குமார கம்பணாவிடம் கொடுத்து அனுப்பினாள் என்று மதுரா விஜயம் குறிப்பிடுகிறது.

இவ்வாறு முஸ்லீம்களின் அட்டூழியத்தை ஒழிக்கவே விஜய நகர பேரரசர் முதலாம் புக்கரின் மகன் குமாரகம்பணா மதுரை மீது படையெடுத்தார். குமாரகம்பணரின் மதுரை படையெடுப்பு தமிழக வரலாற்றில் சிறப்பான அத்தியாயமாகும். முஸ்லீம் ஆட்சியை வேரொடு ஒழிக்க உறுதி பூண்டு படையெடுத்து வந்தார். 1371 ஏப்ரல் மாதம் மதுரையை வென்றார். முபாரக் ஷா கொல்லப்பட்டார். மதுரை சுல்தானியத்திற்கு மரண அடி கொடுக்கப்பட்டது.

**விளைவுகள்**

குமாரகம்பணரின் படையெடுப்பின் விளைவாக தமிழகத்தில் இந்துக் கோவில்களை இடித்துத் தள்ளி, தரைமட்டமாக்கி, பொன்னையும் மணியையும் கொள்ளையிட்டு இந்துக்களுக்கு தொல்லை தந்த முஸ்லீம்களின் ஆட்சி மதுரையிலிருந்து அகற்றப்பட்டது. மதுரை கம்பணரின் கைக்கு மாறியது. முஸ்லீம்களின் அட்டூழியத்திற்கு அஞ்சி மறைத்து வைக்கப்பட்டிருந்த அரங்கநாதரின் படிமம் மீண்டும் திருவரங்கக் கோவிலில் வழிபாட்டுக்கு வைக்கப்பட்டது. இந்து தர்மமும் மதக் கோட்பாடுகளும் மீண்டும்

நிலைநாட்டப்பட்டது. இந்துக் கோவில்கள் அழிவிலிருந்து தடுக்கப்பட்டது. விஜய நகரப் பேரரசின் புகழ் தென்னிந்தியாவில் பாதுகாக்கப்பட்டது. .

இவ்வாறு குமாரகம்பணரது மதுரை வெற்றி இந்து மத வரலாற்றிலும் தமிழக வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தமிழர் பண்பாடு காக்கப்பட்டது. தமிழகத்தில் மீண்டும் ஆன்மீகம் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. நாட்டில் அமைதி நிலவியது. முபாரக் ஷா இறந்த பிறகு அலாவுதீன் சிக்கந்தர்ஷா என்பவன் மதுரையின் ஒரு பகுதியில் 1378 வரை ஆட்சி புரிந்தார். 1378-ல் சுல்தானியர் ஆட்சிக்கு சாவு மணி அடிக்கப்பட்டது. மதுரை விஜய நகர அரசரால் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

### 3. முஸ்லீம் படையெடுப்புகளின்தாக்கம், விளைவுகள் அல்லது முக்கியத்தும்

தமிழகத்தில் நடைபெற்ற முஸ்லீம் படையெடுப்புகளும், மதுரை சுல்தானியமும் தமிழக வரலாற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மக்களின் அரசியல், பொருளாதார, சமுதாய வாழ்க்கையில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தியது. கலை

வளர்ச்சியிலும் முஸ்லீம் ஆட்சியின் தாக்கம் காணப்பட்டது. அவை பின்வருமாறு:

1. முஸ்லீம்கள் ஆட்சிக் காலத்தில் கலை, கட்டிடக்கலையில் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டன. இக்காலத்தில் காணப்பட்ட இஸ்லாமியக் கலை இந்துக்கலையைப் போன்று கவர்ச்சியும், அழகும், எளிமையும், தூய்மையும் உடையதாக விளங்கின. இந்து ஆலயங்களில் காணப்பட்டது போன்று இல்லாமல் இஸ்லாமிய ஆலயங்களில் விளைவுகள் அதிகமாகக் காணப்பட்டது. இந்தப் புதியக் கட்டிடக் கலை சரசானிக் கட்டிடக்கலை என்று அழைக்கப்பட்டது. இந்த புதிய சரசானிக் கட்டிடக் கலையில் பாரம்பரிய அம்சங்களான கைவேலைப்பாடுகள் அழகான வடிவமைப்புகள் போன்றவை காணப்பட்டன. இந்தப் புதிய கட்டிடக் கலையைப் பின்பற்றி பல நினைவுச் சின்னங்களும், வீடுகள், தெருக்கள் மற்றும்

ஆலயங்கள் அமைக்கப்பட்டன. இந்த சரசானிக் கலையின் அடிப்படையில் அணிகலன்களும் செய்யப்பட்டன. இவ்வாறு இந்துக் கலையும் இஸ்லாமியக் கலையும் இணைந்து அதன் அடிப்படையில் இந்து, முஸ்லீம் ஆலயங்கள் எழுப்பப்பட்டன.

2. இஸ்லாமியர்கள் மொழி வளர்ச்சிக்கு ஆதரவளித்தனர். இக்காலத்தில் இந்து, இஸ்லாமிய, பிராந்திய மொழி இலக்கியங்கள் வளர்ச்சியடைந்தன. குறிப்பாக இந்து முஸ்லீம் தொடர்பின் காரணமாக புதிய மொழியாகிய உருது தோன்றியது. மிகக் குறுகிய காலத்தில் இந்த உருதுமொழி வளர்ச்சியடைந்தது. இம்மொழியில் பல இலக்கியங்கள் தோன்றின. மேலும் இதே காலத்தில் பாரசீக மொழியிலும் பல வரலாறுகளும், சுயசரிதைகளும், கடிதங்களும் எழுதப்பட்டன. மேலும் இஸ்லாமியர்களின் வருகையால் கால காகிதத்தைப் பயன்படுத்துதல், காகிதங்களில் படங்களைப் பதித்தல் ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டன.

3. முஸ்லீம் ஆட்சியாளர்கள் கற்றறிந்த அறிஞர்களை ஆதரித்தனர். கல்வி கற்றவர்கள் சமூகத்தில் உயர்வாக மதிக்கப்பட்டார்கள். முஸ்லீம் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் கல்வி நிறுவனங்களும் நூல் நிலையங்களும் நிறுவப்பட்டன. கவிஞர்களும், எழுத்தாளர்களும், தத்துவஞானிகளும் முஸ்லீம் ஆட்சியாளர்களின் அவையை அலங்கரித்தனர். அக்காலத்தில் அச்சகங்கள் காணப்படாததால் கையால் எழுதுவதற்கு தனி நபர்கள் நியமிக்கப் பட்டனர். கல்விக் கூடங்களில் சமயக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. மாணவர்களுக்கு அரபி மொழி கட்டாயமாகப் போதிக்கப்பட்டது.

**தமிழ் முஸ்லீம் சமுதாயத்தின்தோற்றம்**

தமிழ் சமுதாயத்தினர் ஆரம்பத்தில் முஸ்லீம்களை எதிரிகளாகவே கருதினர். ஆனால் நாளடைவில் தங்கள் பகைமையை மறந்தனர். இதனால் இவ்விரு கலாச்சாரங்களும் இணைந்தன. இதன் விளைவாகத் தமிழ் முஸ்லீம் சமுதாயம் உருவானது.

**சமூக மற்றும் பொருளாதாரநிலை**

முஸ்லீம் படையெடுப்பு மதுரையின் பொருளாதாரத்தையும் அதன் வளர்ச்சியையும் பாதித்தது. ஆனால், படையெடுப்பு நடந்தவுடன், கி.பி. 1335ல் மதுரை சுல்தானகத்தை மதுரை சுல்தானாக அறிவித்த பிறகு, மதுரையில் ஏற்பட்ட மாற்றங்களை ஆய்வு செய்யும் போது, இந்துக் கோயில்களைக் கொள்ளையடிப்பதும், இடிப்பதும், இந்துக்களை இரும்புக் கூர்முனையில் ஈவு இரக்கமில்லாமல் கொல்லப்படுவதும் நடந்தன. பாண்டியப் பேரரசின் அழிவுக்குப் பிறகு, மதுரைப் பேரரசுக்கு ஏற்பட்ட நிகர இழப்பு மற்றும் மதுரை சுல்தானகத்தின் குடிமக்களின் உணர்வுகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் ஆகியவற்றின் ஒட்டுமொத்தப் படத்தைப் பெறுகிறோம். விஜயநகரப் பேரரசின் குமார கம்பனின் படையெடுப்பிற்குப் பிறகுதான் சேதக் கட்டுப்பாடு தொடங்கியது.

**முஸ்லீம் அரசர்களின் ஆடம்பரம்**

தமிழகத்தை ஆண்டு வந்த அரசர்களின் ஆடம்பர வாழ்க்கையைக் கண்ட முஸ்லீம் சுல்தான்களும் ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டனர். தங்கள் அரசவையை மிக ஆடம்பரமாக நடத்தினர்.

**கலாச்சார இணைப்பு**

இந்து முஸ்லீம் இணைப்பு ஏற்பட்டதன் விளைவாக இந்துக்கள் முஸ்லீம்களின் ஆடை அணியும் முறை மற்றும் சில சமுதாய சடங்குகளைப் பின்பற்றினர். அதேபோல முஸ்லீம்களும் இந்து முறையிலான பண்புகளை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தினர். முக்கியமாக இந்துக்களைப் போன்று திருவிழாக்களை ஆடம்பரமாக நடத்த முற்பட்டனர்.

இறுதியாக, குமாரகம்பணரது மதுரை வெற்றி இந்து மத வரலாற்றிலும் தமிழக வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தமிழர் பண்பாடு காக்கப்பட்டது. தமிழகத்தில் மீண்டும் ஆன்மீகம் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. நாட்டில் அமைதி நிலவியது. முபாரக் ஷா இறந்த பிறகு அலாவுதீன் சிக்கந்தர்ஷா என்பவன் மதுரையின் ஒரு பகுதியில் 1378 வரை ஆட்சி புரிந்தார். 1378-ல் சுல்தானியர்

ஆட்சிக்கு சாவு மணி அடிக்கப்பட்டது. மதுரை விஜய நகர அரசால் நிர்வகிக்கப்பட்டு வந்தது.